# மனமாற்றம்

வரலாற்று நாடகம்

தமிழ்க்குடிமகன், எ

# மனமாற்றம்

[வரலாற்று நாடகம்]


நாடக ஆசிரியர் :

**தமிழ்க்குடிமகன்**, எம். ஏ.,

யாதவர் கல்லூரி, மதுரை-14

மூலக் கதை

**கோவி. மணிசேகரன்**

(செம்பியன் செல்வி)



## அறிவொளி பதிப்பகம்

**338, வடக்குமாசி வீதி மதுரை-1.**

முதற்பதிப்பு : ஜூலை, 1976
இரண்டாம் பதிப்பு : செப்டம்பர், 1977
பதிப்புரிமை : முத்தையா தமிழ்க்குடிமகன் (15—9—1938)

நடுவண் அரசினரால் வழங்கப்பெற்ற சலுகை விலைத்தாளில்
அச்சிடப்பெற்றது

நூற்கள்

**வாசன்சு புத்தக நிலையம்**
வடக்குச்சித்திரை வீதி, மதுரை-1

மற்றும் மதுரை நகர்க் கடைகள் அனைத்திலும்
கிடைக்கும்

இந் நாடகத்தினையோ பாடல்களையோ
நடத்தவும் கையாளவும் விரும்புவோர்
ஆசிரியரின் ஒப்புதலைப் பெறவேண்டும்.

விலை ரூ. 5-00

கோனார் அச்சகம், மதுரை-1

# அணிந்துரை

*பேராசிரியர் தி. அ. சொக்கலிங்கம், எம். ஏ., எம். லிட்.,*
*முதல்வர், யாதவர் கல்லூரி, மதுரை.*

அருமை நண்பர் திரு. மு. தமிழ்க்குடிமகனர் ஒரு சுவைஞர்; கலைஞர்; உணர்ச்சிமிக்க தமிழாசிரியர். மேடையிலே பேசாத நாளெல்லாம் இவருக்குப் பிறவாத நாளே; "இப்படிப் பேசிப் பேசி உங்கள் திறமையெல்லாம் காற்றுப்பட்ட கற்பூரமாகப் போகின்றதே!" என்று பல ஆண்டுகளாகவே நான் சொல்லிச் சொல்லி அலுத்துவிட்டதன் பலன் தான் இந்தநூல்; திரு. தமிழ்க்குடிமகனர் பெற்ற "மனமாற்றமே" இந்த நாடகம்.

இந்நாடகத்தின் முதற்காட்சியிலேயே கதை வளர்ச்சியின் கருவினை அற்புதமாகக் காட்டி விடுகிறார் ஆசிரியர். ஒரு நல்ல நாடகத்திற்கு இருக்கவேண்டிய சிறப்பான அம்சம் அது. இக்கருவினைப் பல நிலைகளில் வளர்த்து, கடைசிக் காட்சியில் உணர்ச்சியின் உச்சத்துக்கே நம்மை அழைத்துச் சென்று அக் 'கொடுமுடியில்' நாடகத்தை முடிக்கின்றார் ஆசிரியர். மொத்தம் ஐம்பத்து மூன்று காட்சிகள்—இதற்குள் தான் எத்தனை உணர்ச்சி மோதல்கள்! வீரம் பேசும் கோழையான அனந்தவர்மன்; அறத்திற்கும் கடமையுணர்வுக்கும் இடையே ஊசலாடும் எங்கராயர்; கலிங்கப் போரின் வித்தை முதற் காட்சியிலேயே தூவி நாடகம் முழுவதும் நடைபோடுகின்ற சூழ்ச்சித் திறன்மிக்க அமைச்சர் புலவர் காலதேவர்; பல்லவத்தின் பெருமையை நினைத்துக் கொண்டே சோழப் பேரரசில் தளபதியாகப் பணிபுரியும் காலிங்கராயர்; வாழ்ந்தால் சோழனுக்காக வாழவேண்டும் - செத்தாலும் சோழனுக்காகவே சாகவேண்டும் என்று நினைக்கும் கருணைமறவன் கருணகரன்; அவசரபுத்தியும் ஆத்திரமும் கொண்டு யாரையும் இனங்கண்டு கொள்ளத் தெரியாத இளங்கன்று விக்கிரமன்; சோழ ரத்தத்தில் 'துரோகக் கிருமி' யைக் கலக்கவிட்ட இராசராசன்; அருள் உள்ளமிக்க மதுராந்தகி; அன்புக்காகவே அன்பு செலுத்தும் அம்மங்கை; பசுத்தோல் போர்த்திய பராக்கிரமப்புலி; கலிங்கத்துத் திறைப் பொருளாகிய தூனியக்காரி அருள்மொழி; காதல் சிட்டாகக் கவலையற்று வாழ்ந்த இளவேணி-இத்தகைய உணர்ச்சிமிக்க அரசியல் சதுரங்கத்தின் அச்சாணியாகத் திகழ்ந்து, ஒற்றை ஒற்றால் வென்று, ஜெயங்கொண்ட நாயகனாக விளங்கும் குலோத்துங்கன் - இப்படிப் பல்வேறு பாத்திரங்களை இந்த நாடகத்தில்

நமக்கு அறிமுகப் படுத்துகிறார் ஆசிரியர். அப்பாத்திரங்களோடு நம்மை ஒன்றி விடும்படியும் செய்கிறார்.

நாடகத்திற்கே உரிய நறுக்குத் தெறித்தது போன்ற உரையாடல்களை இந்நூல் முழுவதும் நாம் காணலாம். கவிதை நடையும், மோனை நடையும் உரைநடையோடு இணைந்து புதுப்பொலிவினை இந்நாடகத்துக்குத் தருகின்றன. பல இடங்களில் ஆசிரியர் கையாண்ட தமிழ் நடையின் வேகம் நம் நெஞ்சில் வீரக் கனலையும் சோகப் புயலையும் தோற்றுவிக்கின்றது. படித்துக் கொண்டு வரும்போதே நம்மையறியாமல் சில இடங்களில் கண்ணீர் விடவும் செய்கிறோம். தமிழ்க்குடிமகனாரின் தமிழாற்றல் வளர்க! வாழ்க!

சிலப்பதிகாரத்தில் மாடலன் என்ற பாத்திரத்தின் மூலமாக இளங்கோவடிகள் தம் கருத்துக்களைச் சொல்வதை நாம் அறியலாம். மாடலன் உருவில் அங்கு இளங்கோவைக் காண்கிறோம். 'Author's level of perception' என்று இதை அழைப்பார்கள். அந்த வகையில் அமைச்சர் காலதேவர் வடிவில் தமிழ்க்குடிமகனார் உலா வருகிறாரோ என்ற ஐயம் எனக்குத் தோன்றுகிறது. படிக்கின்ற நீங்களே இதை முடிவு செய்து கொள்ளுங்கள்.

நாவலை நாடகமாக்கும் போது பல சோதனைகள் ஏற்படும். இச்சோதனைகளை எல்லாம் மிக எளிதாக வெற்றி கொண்டுள்ளார் ஆசிரியர். படிப்பதற்கும் நடிப்பதற்கும் ஏற்ற வகையில் அமைந்துள்ள இந்நாடகத்தைத் தமிழகம் விரும்பி வரவேற்கும் என நம்புகிறேன்.

மதுரை-14 | அன்பன்
1—7—76 | **தி. அ. சொக்கலிங்கம்**

# முகவுரை

## முத்தமிழ் வித்தகர் கோவி. மணிசேகரன்

எனக்குப் புகழ்மாலை சூட்டிய புதினங்களுள் ‘செம்பியன் செல்வி’ யும் ஒன்று. 1956-ல் எழுதப்பட்ட இப் புதினம், வாசகரிடையே மிகப்பெரிய பரபரப்பையுண்டு பண்ணியது. பலர் பலகோணங்களில் விமரிசனங்களை எழுதினர்.

பேராசிரியர் தமிழ்க்குடிமகன், பச்சையப்பன் கல்லூரி மாணவராக இருந்தபோது இப்புதினத்தைப் படித்துத்துய்த்து, பரமக்குடியில் பணியாற்றியபோது நாடகமாக்கி நடிக்கிற அனுமதி வேண்டும் என்று எழுதினுர்கள். அனுமதியின் பேரில் இந்தப் புதினம்‘மனமாற்றம்’என்ற தலைப்பில் நாடகமாக நடத்தப்பெற்றது. மாணவர்க் குழாமும் பேராசிரியர்க் குழாமும் சேர்ந்து நடித்த நாடகம். விமரிசனம் தேவையில்லை. இன்னும் பலமுறை மேடை ஏற்ற விரும்புவதாகவும் அருமை நண்பர் பேராசிரியர் தமிழ்க்குடிமகன் சொல்லிக் கொண்டிருக்கிறுர். இம்முறை மேடை ஏறுகிற போதுதான் நானே கண்டு துய்த்து, விமரிசிக்க வேண்டும்!

இப்போது இந்த ‘மனமாற்றம்’ நாடகத்தை நூல் வடிவாக்க வேண்டும் என்று அனுமதி கேட்டார். அவருடைய துணிச்சலைப் பாராட்ட வேண்டும். என்னுடைய புதினத்தை நாடகமாக்கியது அன்பின் காரணமாக இருக்கலாம். ஆனுல் அதனை நூல்வடிவாக்குவது எதன் காரணமோ?

அது பேரன்பின் காரணமாக அமைந்து விட்டது. இப்போதும் அனுமதி வழங்கி இருக்கிறேன். இப்படி நூலாக்குகிற அனுமதி வழங்கல் என்பது புறம்பான ஒன்ருனாலும், அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்?

'ஆமாம்; நூலைப்பற்றி ஒன்றுமே கூறவில்லையே!' என்கிறீர்களா?

'செம்பியன் செல்வி'யை நானறிவேன். அவள் என் மகள்! அவளை மேடையில் அரங்கேற்ற, அருமை நண்பர் பேராசிரியர் தமிழ்க் குடிமகன் முயன்றிருக்கிருர். நண்பரை நான் நன்கு படித்திருக்கிறேன். அவருடைய இந்த நூலைப் பற்றி அதிகம் எழுதுவானேன்! ஆயினும் சிலவரிகள்—

'செம்பியன் செல்வி' மிகப்பெரிய கதை. பலப்பல பாத்திரங்கள்! அதன் கருவில் தேவையானதை எடுத்துக் கொண்டு, தம்முடைய கைவண்ணத்திற்கேற்ப நாடக ஓவியம்தீட்டியிருக்கிருர்! அவருடையகற்பனை வளத்தைப் பாராட்டுகிறேன்! கனிந்த அன்பை வாழ்த்துகிறேன்!

சென்னை-600093
1-7-76

அன்பன்
கோவி. மணிசேகரன்

# முன்னுரை

பச்சையப்பன் கல்லூரியில் முதுகலை மாணவனாக இருக்கும் போதே பல நூற்களைப் படிக்கின்ற வாய்ப்பும் விருப்பும் மிகுதியாக இருந்தன. அவ்வேளையில் தான் முத்தமிழ் அறிஞர் திரு. கோவி. மணிசேகரன் எழுதிய 'செம்பியன் செல்வி' நூலைப் படிக்க நேர்ந்தது. 'தமிழக வரலாறும் பண்பாடும்' பாடமாகப் பயின்ற என்னை இந்த வரலாற்றுப் புதினம் பெரிதும் கவர்ந்தது. ஆசிரியரது நடையும் அருமையான கற்பனையும் திடுக்கிட வைக்கும் திருப்பங்களும் உண்மையில் என்னை வெகுவாக ஆட்கொண்டன. ஆனால் அதற்குமேல் என் மாணவநிலையில் அந்த நூல் பற்றிய விரிவான திட்டம் எதுவும் என் மனத்தில் தோன்றவில்லை.

1964 ஆம் ஆண்டு, பறம்புக்குடியில் பணியாற்றிய நேரம். தலைமையாசிரியர் திரு. நா. சங்கர நாராயணன் ஒரு நாள் 'செம்பியன் செல்வி' நூலைஎன்கையில் கொடுத்தார். நூலில் திருப்பங்கள் மிக அருமை என்றும் இதை நாடகமாக்கி விட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். இஃதுஎத்தகைய வியப்பைத் தந்திருக்கும்! அவர் தன்னைக் குலோத்துங்கனாகவே கருதி, வரலாற்றுக் குலோத்துங்கன் கருணாகரனை ஏவிக் கலிங்கக் கோட்டையைக் கட்டச் சொல்லியது போலவே, தமிழ்க்குடிமகனை ஏவி நாடகக் கோட்டையை அமைக்கக் கூறினார் என்பது விளங்கி விட்டது. அவரது தூண்டுதல் தான் இந்த நாடகம் உருவானதற்கு முதற்காரணம்.

ஏற்கனவே இந்த நூலோடு எனக்கு ஏற்பட்ட நட்பு, கலிங்கத்துப் பரணியை முதுகலையில் பயின்றறிந்த ஈடுபாடு—இவையெல்லாம் சேர்ந்து நாடகத்தை மிக விரைவிலேயே உருவாக்கி விட உதவின. நாடக உரையாடல்கள் தலைமை ஆசிரியரின் கற்பனைக்குச் சரியான தீனியாக அமைந்தன என்பதை மட்டும் குறிப்பிடத்தான்

வேண்டும். நாடகமான பிறகு அஃது அரங்கேறி முடியும் வரை எத்தனையோ சுவையான நிகழ்ச்சிகள்; நினைத்து மகிழ்வதோடு நிறுத்தி விடுகிறேன். மிகுந்த ஆர்வம் காட்டி நடித்த, துணை செய்த அத்தனை பேரையும் நினைத்து மகிழ்கிறேன். ஒவ்வொருவரும் காட்டிய சிறப்பு முத்திரைகளை ஒரு நொடி மனத்திரையில் ஓடவிட்டுப் பூரிக்கிறேன். எல்லோருடைய பெயரையும் சுட்டி நன்றி கூறமுடியவில்லையே என்ற மனக்குறையோடு தொடர்கிறேன்.

பாடல்களைப் பற்றிக் குறிப்பிடுவது இன்றியமையாதது. பொருத்தம் கருதி ஒரு பாடல் மட்டும் ஒரு திரைப்படப் பண்ணைப் பின்பற்றியது. 'திங்கள் பிறையொன்று' என்ற பாடலின் இசைமட்டும், இசைக்கடல் சிதம்பரம் செயராமன் அவர்கள் சென்னையில்நான் 'பச்சையப்பனு'க நடித்த போது அமைத்துத் தந்தது. இசைக்கேற்பப் பாடலை எழுதிக் கொண்டேன். ஏனைய பாடல்கள் இந்த நாடகத்திற்கென்றே எழுதப்பட்டு நண்பர் திரு. சு. அறவாழி, பி. ஏ. அவர்களால் இசையமைக்கப்பட்டவை. இன்று வெளிவரும் எந்தத் திரைப் படப் பாடல்களுக்கும் இவை கருத்தாலும், இசையாலும் சளைத்தவை அல்ல என்பதைக் கேட்டவர்கள் ஒப்புக் கொள்வார்கள்.

நாடகம் முடிந்தது. நானும் வெவ்வேறு துறைகளில் சில காலத்தைச் செலவிட்டு விட்டு 1969 இல் கல்லூரி விரிவுரையாளனுக வந்தேன். பணி தொடர்ந்தது. ஆனுல் 'மனமாற்றம்' நாடகம் மட்டும் மறக்கப்பட்டுக் கிடந்தது. 1975 ஆம் ஆண்டில் என் அன்புத் தம்பி திரு. இரா. கோதண்டபாணி, எம். ஏ, இந்த நாடக ஏடுகளைக் கண்டு பிடித்து, ஏற்கனவே என் வாயிலாகக் கேள்வியுற்றிருந்த சுவைப்பகுதிகளையும் ஆர்வத்தோடு படித்து முடித்து ஒரு வேகம் காட்டினுர். அந்த வேகம் இந்த நாடக நூல் வடிவில் வெளி வந்திருக்கிறது. அதே நேரத்தில் 'இராசராச சோழன்' நாடகத்தை வகுப்பில் நடத்திக் கொண்டிருந்தேன். அதன் முன்னுரையில் ஆசிரியர் தனது 'மகத்தான மறதி'யைக் குறிப்பிட்டு

# முகவுரை

## முத்தமிழ் வித்தகர் கோவி. மணிசேகரன்

எனக்குப் புகழ்மாலை சூட்டிய புதினங்களுள் 'செம்பியன் செல்வி' யும் ஒன்று. 1956-ல் எழுதப்பட்ட இப் புதினம், வாசகரிடையே மிகப்பெரிய பரபரப்பையுண்டு பண்ணியது. பலர் பலகோணங்களில் விமரிசனங்களை எழுதினர்.

பேராசிரியர் தமிழ்க்குடிமகன், பச்சையப்பன் கல்லூரி மாணவராக இருந்தபோது இப்புதினத்தைப் படித்துத்துய்த்து, பரமக்குடியில் பணியாற்றியபோது நாடகமாக்கி நடிக்கிற அனுமதி வேண்டும் என்று எழுதினுர்கள். அனுமதியின் பேரில் இந்தப் புதினம்'மனமாற்றம்'என்ற தலைப்பில் நாடகமாக நடத்தப்பெற்றது. மாணவர்க் குழாமும் பேராசிரியர்க் குழாமும் சேர்ந்து நடித்த நாடகம். விமரிசனம் தேவையில்லை. இன்னும் பலமுறை மேடை ஏற்ற விரும்புவதாகவும் அருமை நண்பர் பேராசிரியர் தமிழ்க்குடிமகன் சொல்லிக் கொண்டிருக்கிறுர். இம்முறை மேடை ஏறுகிற போதுதான் நானே கண்டு துய்த்து, விமரிசிக்க வேண்டும்!

இப்போது இந்த 'மனமாற்றம்' நாடகத்தை நூல் வடிவாக்க வேண்டும் என்று அனுமதி கேட்டார். அவருடைய துணிச்சலைப் பாராட்ட வேண்டும். என்னுடைய புதினத்தை நாடகமாக்கியது அன்பின் காரணமாக இருக்கலாம். ஆனுல் அதனை நூல்வடிவாக்குவது எதன் காரணமோ?

அது பேரன்பின் காரணமாக அமைந்து விட்டது. இப்போதும் அனுமதி வழங்கி இருக்கிறேன். இப்படி நூலாக்குகிற அனுமதி வழங்கல் என்பது புறம்பான ஒன்ருனுலும், அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்?

'ஆமாம்; நூலைப்பற்றி ஒன்றுமே கூறவில்லையே!' என்கிறீர்களா?

'செம்பியன் செல்வி'யை நானறிவேன். அவள் என் மகள்! அவளை மேடையில் அரங்கேற்ற, அருமை நண்பர் பேராசிரியர் தமிழ்க் குடிமகன் முயன்றிருக்கிருர். நண்பரை நான் நன்கு படித்திருக்கிறேன். அவருடைய இந்த நூலைப் பற்றி அதிகம் எழுதுவானேன்! ஆயினும் சிலவரிகள் —

'செம்பியன் செல்வி' மிகப்பெரிய கதை. பலப்பல பாத்திரங்கள்! அதன் கருவில் தேவையானதை எடுத்துக் கொண்டு, தம்முடைய கைவண்ணத்திற்கேற்ப நாடக ஓவியம்தீட்டியிருக்கிருர்! அவருடையகற்பனை வளத்தைப் பாராட்டுகிறேன்! கனிந்த அன்பை வாழ்த்துகிறேன்!

சென்னை-600093 அன்பன்
1-7-76 கோவி. மணிசேகரன்

# முன்னுரை

பச்சையப்பன் கல்லூரியில் முதுகலை மாணவனாக இருக்கும் போதே பல நூற்களைப் படிக்கின்ற வாய்ப்பும் விருப்பும் மிகுதியாக இருந்தன. அவ்வேளையில் தான் முத்தமிழ் அறிஞர் திரு. கோவி. மணிசேகரன் எழுதிய 'செம்பியன் செல்வி' நூலைப் படிக்க நேர்ந்தது. 'தமிழக வரலாறும் பண்பாடும்' பாடமாகப் பயின்ற என்னை இந்த வரலாற்றுப் புதினம் பெரிதும் கவர்ந்தது. ஆசிரியரது நடையும் அருமையான கற்பனையும் திடுக்கிட வைக்கும் திருப்பங்களும் உண்மையில் என்னை வெகுவாக ஆட்கொண்டன. ஆனால் அதற்குமேல் என் மாணவநிலையில் அந்த நூல் பற்றிய விரிவான திட்டம் எதுவும் என் மனத்தில் தோன்றவில்லை.

1964 ஆம் ஆண்டு, பறம்புக்குடியில் பணியாற்றிய நேரம். தலைமையாசிரியர் திரு. நா. சங்கர நாராயணன் ஒரு நாள் 'செம்பியன் செல்வி' நூலைஎன்கையில் கொடுத்தார். நூலில் திருப்பங்கள் மிக அருமை .என்றும் இதை நாடகமாக்கி விட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். இஃதுஎத்தகைய வியப்பைத் தந்திருக்கும்! அவர் தன்னைக் குலோத்துங்கனாகவே கருதி, வரலாற்றுக் குலோத்துங்கன் கருணாகரனை ஏவிக் கலிங்கக் கோட்டையைக் கட்டச் சொல்லியது போலவே, தமிழ்க்குடிமகனை ஏவி நாடகக் கோட்டையை அமைக்கக் கூறினார் என்பது விளங்கி விட்டது. அவரது தூண்டுதல் தான் இந்த நாடகம் உருவானதற்கு முதற்காரணம்.

ஏற்கனவே இந்த நூலோடு எனக்கு ஏற்பட்ட நட்பு, கலிங்கத்துப் பரணியை முதுகலையில் பயின்றறிந்த ஈடுபாடு—இவையெல்லாம் சேர்ந்து நாடகத்தை மிக விரைவிலேயே உருவாக்கி விட உதவின. நாடக உரையாடல்கள் தலைமை ஆசிரியரின் கற்பனைக்குச் சரியான தீனியாக அமைந்தன என்பதை மட்டும் குறிப்பிடத்தான்

வேண்டும். நாடகமான பிறகு அஃது அரங்கேறி முடியும் வரை எத்தனையோ சுவையான நிகழ்ச்சிகள்; நினைத்து மகிழ்வதோடு நிறுத்தி விடுகிறேன். மிகுந்த ஆர்வம் காட்டி நடித்த, துணை செய்த அத்தனை பேரையும் நினைத்து மகிழ்கிறேன். ஒவ்வொருவரும் காட்டிய சிறப்பு முத்திரைகளை ஒரு நொடி மனத்திரையில் ஓடவிட்டுப் பூரிக்கிறேன். எல்லோருடைய பெயரையும் சுட்டி நன்றி கூறமுடியவில்லையே என்ற மனக்குறையோடு தொடர்கிறேன்.

பாடல்களைப் பற்றிக் குறிப்பிடுவது இன்றியமையாதது' பொருத்தம் கருதி ஒரு பாடல் மட்டும் ஒரு திரைப்படப் பண்ணைப் பின்பற்றியது. 'திங்கள் பிறையொன்று' என்ற பாடலின் இசைமட்டும், இசைக்கடல் சிதம்பரம் செயராமன் அவர்கள் சென்னையில்நான் 'பச்சையப்பனு'க நடித்த போது அமைத்துத் தந்தது. இசைக்கேற்பப் பாடலை எழுதிக் கொண்டேன். ஏனைய பாடல்கள் இந்த நாடகத்திற்கென்றே எழுதப்பட்டு நண்பர் திரு. சு. அறவாழி, பி. ஏ. அவர்களால் இசையமைக்கப்பட்டவை. இன்று வெளிவரும் எந்தத் திரைப் படப் பாடல்களுக்கும் இவை கருத்தாலும், இசையாலும் சளைத்தவை அல்ல என்பதைக் கேட்டவர்கள் ஒப்புக் கொள்வார்கள்.

நாடகம் முடிந்தது. நானும் வெவ்வேறு துறைகளில் சில காலத்தைச் செலவிட்டு விட்டு 1969 இல் கல்லூரி விரிவுரையாளனுக வந்தேன். பணி தொடர்ந்தது. ஆனுல் 'மனமாற்றம்' நாடகம் மட்டும் மறக்கப்பட்டுக் கிடந்தது. 1975 ஆம் ஆண்டில் என் அன்புத் தம்பி திரு. இரா. கோதண்டபாணி, எம். ஏ, இந்த நாடக ஏடுகளைக் கண்டு பிடித்து, ஏற்கனவே என் வாயிலாகக் கேள்வியுற்றிருந்த சுவைப்பகுதிகளையும் ஆர்வத்தோடு படித்து முடித்து ஒரு வேகம் காட்டினுர். அந்த வேகம் இந்த நாடக நூல் வடிவில் வெளி வந்திருக்கிறது. அதே நேரத்தில் 'இராசராச சோழன்' நாடகத்தை வகுப்பில் நடத்திக் கொண்டிருந்தேன். அதன் முன்னுரையில் ஆசிரியர் தனது 'மகத்தான மறதி'யைக் குறிப்பிட்டு

நாடகம் எழுதப்பட்டுப் பத்தாண்டுகட்குப் பின் அதனை எடுத்துப் பார்த்ததைச் சுட்டும்போது எனக்குஎன்னவோ செய்தது. என் நாடகம் 11 ஆண்டுகளாக மிகப் பெரிய மறதிக்குள்ளாகியிருந்ததை நினைத்தேன்.எப்படியும் நூலை வெளிக் கொணர்வது என்று முடிவு செய்தோம். பொருள் இடர்ப்பாடுகட்கிடையில் இடையிடையே தடுமாறினாலும் இறுதியில் வென்று விட்டோம். 'செயங் கொண்டோம்'. இந்நூலுக்கு உணர்ச்சி ததும்பும் அணிந்துரை வழங்கி வாழ்த்திய என் 'தோன்றிய துணை', முதல்வர், பேராசிரியர் தி. அ. சொக்கலிங்கம், எம். ஏ; எம். லிட் அவர்கட்கும், முகவுரை வழங்கிய முத்தமிழ் வல்லுநர், எழுத்து வேந்தர் திரு. கோவி. மணிசேகரன் அவர்கட்கும் என் வணக்கமும் நன்றியும் உரியன. கதையைப் படைத்தவரே நாடக முகவுரை வரைவது பெரிய சிறப்புத்தானே

இதனைப் பாடநூலாகத் தெரிந்தெடுத்துச் சிறப்பித்த மதுரைப் பல்கலைக்கழகப் பாடநூற் குழுவினர், அழகிய ஓவியம் அமைத்துத் தந்த ஓவியர், அன்போடு ஒத்துழைத்து அச்சிட்டுத் தந்த கோனூர் அச்சகத்தார் ஆகியோர்க்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

(குறிப்பு: அருள்கூர்ந்து நாடகத்தைப் படித்து முடித்து விட்டு இந்தப் பிற்பகுதியைத் தொடருங்கள்)

புதின ஆசிரியர் குறிப்பிடுவதுபோல இது மிகப் பெரியகதை; பலப்பல பாத்திரங்கள். என்றாலும் நாடக உத்திக்காகப் பல மாற்றங்களைச் செய்துள்ளேன். அவற்றை ஓரளவு குறிப்பிட்டால்தான் ஒரு கதை நாடகமாகும்போது என்ன வடிவைப் பெறும் என்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

சாளுக்கிய விக்கிரமாதித்தன் பெயரை ஆங்காங்கு சுட்டுவதுதவிர அவனைக் காட்டவில்லை. சாளுக்கிய தளபதியாகிய அனந்த பாலையனே கதையில் அடிக்கடி தலை நீட்டுவதால் கலிங்கத் தளபதி தாமயனை நீக்கி விட்டு அனந்த பாலையனையே தளபதியாக்கி விட்டேன், எனக்கிருந்த அதிகாரத்தைப் பயன் படுத்தி. புலவர் காலதேவர்தான் பரணி பாடிய செயங்கொண்-

டார். அமைச்சர் நாராயணபட்டர் கதையில் சிறப்பிடம் பெறுகிருர். மேடையில் மிகப்பல பாத்திரங்களை நடமாட விடமுடியாது என்பதால் அமைச்சரையும் புலவரையும் ஒருவராக்கி நாடகக் கண்ணேட்டத்தில் காலதேவருக்கு வலுவான ஏற்றம் கொடுத்துள்ளேன்.

கருணுகரன் தென்கலிங்கனிடம் சிறைப்படுவது, விக்கிரமன் சிறைமீட்பது போன்ற நிகழ்ச்சிகளைக் காட்டாமல் ஒரே வரியில் 'தப்பித்து விட்டான்' என்று மட்டும் காட்டியிருக்கிறேன். திரைப்படமென்ருல் பெரும்படையையே திரட்டி, சில நொடிகளில் காட்டி விடலாம். மேடையில் நடக்கமுடியாதே! மேலும் நாடகம் நூல்வடிவில் வரும்போது சற்று மிகுதியாக வருவதில் குற்றமில்லை. ஆனல் மேடையில் மூன்றுமணி நேரத்துக்குள் முடித்துவிட வேண்டும். இது படிப்பதற்கும் நடிப்பதற்கும் உரிய நாடகமாகையால் திரையை அப்படி அமைத்துள்ளேன். ஒருகாட்சி அரண்மனைக் கூடத்தில் நடந்தால் அடுத்த காட்சி முன்புறத்தில் உள்ள சாலையில் நடக்கும். உடனே அடுத்த காட்சிக்கான அணி வரும் அணியமாக உள்ளே நிற்கும்படி திரை அமைந்திருக்கும்.

விக்கிரமன் மனவளர்ச்சிக்காகச் சற்று நீட்டியிருப்பேன். விக்கிரமன் புனைவடிவம் தாங்கி மரக் கிளைகளைப் பற்றி ஏறி மதிற்சுவரைக் கடப்பது—அருள்மொழி மரக்கிளையில் ஏறியமர்ந்து சக்கரயுத்தனைக் கண்காணிப்பது-இவற்றையெல்லாம் மேடையில் காட்ட முடியாதல்லவா? அருள்மொழி சோழ அரண்மனையை விட்டு வெளியேறி விட்டாள்-நானே அவனைக் கொன்றிருக்கிறேன், தூக்குத் தண்டனை வந்தாலும் ஏற்போம் என்ற துணிவில். எல்லா ஆசைகளும் அழிந்து, முயற்சிகள் எல்லாம் முறிந்து போய், காதலனுன கருணுகரனையே பழிவாங்கும் நிலைக்கு ஆளாகி அதிலும் தளர்ந்த அவளை நடைப் பிணமாக உலவ விடாமல் நல்ல முடிவைக் கொடுத்து இரக்க உணர்வுக்கு இடம் வகுத்திருக்கிறேன்.

இளவேணியைக் குருதிக் குளத்தில் சந்தித்த காலிங்கராயர் உணர்ச்சி கொப்புளிக்கப் பேசுவதையும் புலம்புவதையும் என் உச்சகட்ட உரையாடலுடனும் பின்னணிப் பாடலுடனும் சேர்த்து நாடகத்தின் விறு-விறுப்பைச் சுண்டியுள்ளேன். அன்று — 1964இல் இந்தக் காட்சியில் உருக்கமாகநடித்து விட்டு வியர்க்க விறு-விறுக்க வந்து விழுந்த அண்ணன் இரா. அங்குச்சாமி, பி.ஏ.,பி.டி. என்கண்ணில் நிற்கிறார்

கதை 'செம்பியன் செல்வி' என்றாலும், காலிங்கராயர் விக்கிரமன், அருள்மொழி ஆகியோரின் மனமாற்றங்கள் கதைக்கு உயிர் நாடிகள் என்பதால் நாடகத்துக்கு 'மனமாற்றம்' என்று பெயரிட்டேன். முதற்காட்சி முடிந்த பிறகுதான் பின்னணிப் பாடலும் எழுத்துக் காட்டுவதும் இணைந்து நடைபோடுகின்றன. இஃது எடுப்பான தொடக்கம் என்பதைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்திருக்கிறேன்.

உமார்கய்யாம் பாடல்களில் எனக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. அவர்காட்டும் நிலையாமை உணர்வுகள் நெஞ்சிற் குமிழியிடுகின்றன. ஒருவேளை அதன் அழுத்த-மோ என்னவோ? பேச்சிலேயே நீந்திக் கொண்டிருக்-கும் எனக்கு அதன் நிலையாமை புரிந்து. நிலையான எழுத்து வடிவத்தில் பற்றுக் கொள்ளும்படி எனக்குள் ஏற்பட்ட மனமாற்றம்தான் இந்த நூல்.

படைத்தவன் 'மனமாற்றம்' அடைந்தால்தானே என் பாத்திரங்கள் 'மனமாற்றம்'அடையும்?

மதுரை–1 } அன்பன்
27—9—77 } **தமிழ்க்குடிமகன்**

# “மனமாற்றம்”

## நாடக மாந்தர்கள்

| | |
|---|---|
| குலோத்துங்கன் | — சோழப் பேரரசர்; |
| காலதேவர் | — சோழ அமைச்சர்; புலவர்; |
| கருணாகரன் | — சோழர் படைத்தலைவன் |
| விக்கிரமன் | — சோழ இளவரசன் |
| காலிங்கராயர் | — கருணாகரனின் தமையன்; |
| இராசராசன் | — சோழரின் மூத்த புதல்வன்; |
| முடிகொண்டான் | — சோழரின் தலைமை ஒற்றன்; |
| அனந்தவர்மன் | — கலிங்க அரசன் |
| எங்கராயர் | — கலிங்க நாட்டு அமைச்சர் |
| அனந்த பாலையன் | — கலிங்கப் படைத்தலைவன் |
| கார்க்கோடகன் | — கலிங்க ஒற்றன் |
| பராக்கிரமன் | — ஆட்சியிழந்த பாண்டிய மன்னன் |
| பராந்தக பாண்டியன் | — சோழரைச் சார்ந்த பாண்டியன் |
| மதுராந்தகி | — சோழரின் பட்டத்தரசி |
| அம்மங்கை | — சோழரின் புதல்வி; இளவரசி |
| அருள்மொழி | — கலிங்க நாட்டவள்; |
| இளவேணி | — காலிங்கராயர், கருணாகரன் தங்கை |
| சுமித்திரை | — சோழ அரசவையில் ஒற்றாள்; |

மற்றும்

அரசவைக் காவலர்கள், கலிங்கத் தூதுவன், பாண்டிய ஒற்றன், மருத்துவர், கொலையாளி, சிற்றரசர்கள்.

# 1

## காட்சி 1

களம்: கலிங்க அரசவை காலம்: காலை

உறுப்பினர்: அனந்தவர்மன்—காலதேவர்—எங்கராயர் அனந்த பாலையன்—கார்க்கோடகன்

(அவையில் பலர் அமர்ந்திருக்கின்றனர்)

காவலன்: அரவக் கொடியின் கீழ் ஆட்சி புரிந்து வரும் கலிங்கக் காவலர் அனந்தவர்மச் சக்கரவர்த்தி வருகிறார். .........

(அனந்தவர்மன் நுழைகிறான். அனைவரும் எழுந்திருக்கின்றனர். அனந்தவர்மன் உட்கார்ந்து கையமர்த்த-பிறர் அமர்கின்றனர்)

கார்க்: (வந்து வணங்கி) அரசே! சோழநாட்டு அமைச்சரும் அரசவைப் புலவருமாகிய காலதேவர் கங்கை சென்று நீராடி விட்டு இப்போது நம் அரசவை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்.

எங்க: காலதேவரா? புலவர் காலதேவரா? அரசே! வரவேற்க ஏற்பாடு செய்யவா?

அனந்: ஒன்றும் வேண்டா. (கார்க்கோடகனை நோக்கி) போ! ஆளைக் கூட்டிவா. (கார்க்கோடகன் போகிறான்)

எங்க: மன்னா! அவர் சோழ நாட்டின் மதிப்பு வாய்ந்த அமைச்சர் ......!

அனந்: தெரியும் .........

எங்க: அவரை உரிய முறையில் வரவேற்கவேண்டும்.

அனந்: தேவையில்லை!

எங்க: நானாவது சென்று ......

அனந்: வீண் வேலை

# 2

எங்க: அரசே! இது வேதனையை விலை கொடுத்து வாங்குவதாகும். சோழ அமைச்சரை அவமதிப்பதும், சோழ அரசனை அவமதிப்பதும் ஒன்றுதான்.

அனங்: அமைச்சரே! நீர் கூறுவது என்னை அவமதிப்பதாகும்.

எங்க: அல்ல அரசே, அல்ல! குலோத்துங்கசோழரின் ஆற்றலை உணராமல் இவ்வாறு செய்வது பெரிய போரில் வந்து முடிந்தாலும் முடியும். வடக்கில் உள்ள கன்னோசி வேந்தன் சோழரின் நண்பன். வடக்கு ஒரு வாள் எடுத்து, தெற்குக்கும் தோள் தினவெடுத்தால் இந்த இடுக்கில் நாம் எப்படித் தப்புவோம் — அரசே, எப்படித் தப்புவோம்?

அனங்: அமைச்சரே! எனக்கென்னவோ இந்தச் சோழ அரசுக்கு அடங்கி இருப்பது பிடிக்கவில்லை. முதலில் அவர்களுக்குத் திறைசெலுத்தி வருவதை நிறுத்த வேண்டும்.† அதனால், நிலை மீறினால் போருக்குப் புறப்படவேண்டும். என்ன சொல்லுகிறீர்கள்?

எங்க: சோழ அரசை வம்புக்கு இழுக்கும் அளவுக்கு நமக்குத் தெம்பு இருக்கிறதா?

அனங்: அமைச்சரே! போதும். இனி நாட்டைப் பொறுத்தவரையில் வேண்டுமானால் ஏதாவது நல்லது சொல்லுங்கள். போரைப்பொறுத்த வரையில் இதோ நம்படைத்தலைவர் அனந்தபாலையன் இருக்கிறார்...... ஆனது ஆயிற்று ...... அடுத்ததைப் பார்ப்போம்.

---

† *இராசேந்திரசோழர் தன் தங்கை குந்தவியை வேங்கி விமலாதித்தனுக்கு மணம் செய்து கொடுத்தார். அளியன் (மைத்துனன்) விமலாதித்தனுக்கு அப்போது கலிங்கத்தை ஆண்ட குலூதன் என்பவனால் துன்பம் நேர, இராசேந்திரசோழர் படையெடுத்துச் சென்று கலிங்கனை அடக்கித் திரும்பினார். அந்நாள் முதற்கொண்டே கலிங்கர் சோழருக்குத் திறைசெலுத்தும் சிற்றரசாயினர்.*

(காலதேவர் வருகிறார்...அனந்தவர்மன் மதிப்பற்ற முறையில் பார்க்கிறான். எங்கராயர் துடிக்கிறார்.)

காலா: (ஒரு கணம் வெறித்து நோக்கிவிட்டு) கலிங்க வேந்தனே நீ! காலதேவன் வந்து நிற்பது உன்கண்-களில் படவில்லையோ?

அனங்: ஓ...வாருங்கள்...உட்காருங்கள்...(காலதேவர் அமர்கிறார்) காலதேவரே! உங்கள் சக்கரவர்த்தி நலமா?

காலா: அனந்தவர்மா! 'எங்கள் சக்கரவர்த்தியா'? அப்படியானால் உனக்கு யார் சக்கரவர்த்தி?

அனங்: எனக்கு நானேசக்கரவர்த்தி...பாவம்! கங்கை-யில் குளித்த குற்றம்உங்களைக் கலிங்கத்தில் கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. எனக்கிருக்கும் ஆசையை உங்களிடம் தீர்த்துக்கொள்ளலாமல்லவா?

காலா: கலிங்கனே! காவதங்கள் பல கடந்து வாழ்கி-றோம் என்றுகருவம் கொள்ளாதே! கருவம்உன்னையே அழிக்கும்.

அனங்: அப்படியானால் என் கருவமுள்ள பெருமையை வைத்து ஒரு பரணிபாடுங்கள். இந்தப்பார் அறியாத பொன்னையும் யானை முதுகு ஒடியப் பொருளையும் கொடுக்கிறேன்.

காலா: ம்...ம்...பரணியா வேண்டும்? அதை நான் பாடத்தான் போகிறேன்...ஆனால் இப்போதல்ல... காலம் கொஞ்சம் செல்லட்டும் ... அப்போது

அனங்: (பெரிதாகச் சிரித்து) ஏன் காலதேவரே பிறகு பாடப்போகிறீர்? இப்போது பரணி பாடுவதற்கு அறிவு போதாதோ?

காலா: (வெகுண்டு) கலிங்கனே! பரணி பாடும் நேரம் பக்கம் நெருங்குகிறது...நீ எந்தப் பரணியை விரும்பி-

ளுயோ, அதேபரணிஉன் அழிவின் மீது பாடப்படும். உன் கல்லறைமேல் நின்று சொல்லருவி கொட்டப்-போகும் கவிதை வெள்ளத்தின் பெயரும் கலிங்கத்துப் பரணி தான்.

அனங்: (கிண்டலாக) ஆகா...ஆகா...கா...

கால: அழிவை விலைக்கு வாங்கும் அனந்தவர்மனே! நான் இங்கு நாடி வந்தது நட்புரிமையோடு ... ஆனால் உங்கள் நடைமுறையில் நான் காண்பது ஒருமனமாற்றம். நான் இந்த அரசவையில் அடைந்தது ஏமாற்றம்—எனவே நானும் பெற்று விட்டேன் ஒரு மனமாற்றம்...! மனமாற்றம்!

(வெண்திரை மெல்ல இறங்குகிறது)

அனந்தவர்மா! துடிக்கும் மானத்தால் தூய என் தமிழின் குருதியால் வஞ்சினம் கூறுகிறேன்...

பரணிபாடப் போவது உறுதி—அந்தநாள்
பான்மை கெட்ட உனக்கு இறுதி—இது என்
பாட்டு வல்லமை தரும் அறுதி...வருகிறேன்.

[திரை]

(கதைமாந்தர்களையும் கதைப்போக்கினையும் அறிமுகப்படுத்தும் பின்னணிப் பாடல்)

எடுப்பு

ஆட்படையும் கரிபரியும் அழியக் கண்டே
அசோகன் பெற்றதொரு மனமாற்றம்
உண்மை விளங்கியதும் உள்ளம் தெளிவடைந்து
உருவாகி நிற்பதுமோர் மனமாற்றம்
பின்விளைவை ஆராய்ந்து பிழைகள் அகற்றிவிடும்
பெருமை உடையதிந்த மனமாற்றம்.

தொடுப்பு—கண்ணிகள்

1. அமைச்சரும் அரசி மதுராந்தகியும்
அமைத்துக் கொண்டனர் மனமாற்றம்
ஆட்சி நாட்டும்உயர் சோழ மன்னன்செயல்
அனைத்தும் திடுக்கிடும் மனமாற்றம்
(அமைச்சரும்)

2. காஞ்சி ஆளும்வெறி கண்ணை மூடிநின்ற
காலிங்கராயரின் மனமாற்றம்
காதல் முடிவில் கண்ட ஏமாற்றம் -அது
கன்னியின் வாழ்வில் பெருமாற்றம்
(அமைச்சரும்)

3. இளவரசன் உள்ளம் ஏற்க வேண்டுவது
எல்லாம் புரிந்த மனமாற்றம் -அது
தளபதி மேலுள்ள தடுமாற்றம் -தனைத்
தவிடு பொடியாக்கும் மனமாற்றம்
(அமைச்சரும்)

முடிப்பு

4. அன்னைத் தமிழ்வாழ மனம்நாடி -நாம்
அதற்கே உழைப்பது மனத்தேற்றம் -இனி
நன்மை பலநாடி நாளும் உயர்வதே
நாம் கொள்ள வேண்டிய மனமாற்றம்
மனமாற்றம் —இனிய மனமாற்றம்— எங்கள் மனமாற்றம்
நல்ல மனமாற்றம்......!

## காட்சி 2

களம்: சோழ அரசவை காலம்: காலை

உறுப்பினர்: குலோத்துங்கர் — காலிங்கராயர் — இராசராசன் — விக்கிரமன் —மதுராந்தகி — கருணாகரன் — பராந்தக பாண்டியன் — வாயிற்காவலர்

வாயில்: வடக்கே மகாநதி முதல் தெற்கே குமரிமுனை வரை ஒரு குடை நிழலில் ஆட்சி புரியும் விருதராச பயங்கரர் — அபயர் — திரிபுவனசக்கரவர்த்தி குலோத்துங்கர் வருகிறார்.......

(குலோத்துங்கர் வருகிறார்—அனைவரும் எழுகின்றனர் — குலோத்துங்கர் அமர்ந்து கையமர்த்த அனைவரும் அமர்கின்றனர்)

குலோ: அவையோரே! இன்று அனைவருமே இந்த அவையில் கூடியிருக்கிறோம், அமைச்சர் காலதேவ புலவரைத் தவிர. இதோ பாண்டியர் கலகம் ஒடுக்கியமாவீரர் காலிங்கராயர். மீன் கொடியைச் சார்ந்தவர் ஆனாலும் சோழரின் சிறப்பறிந்து நம்மோடு ஒன்றுபட்ட பராந்தக பாண்டியர். இளவரசப் பட்டம் கொண்ட விக்கிரமன்! இராசராசன் (காலிங்கராயர் அருகில் கருணாகரன் நிற்பதைக் கண்டும் காணாதவர் போல) ஊம் படைத்தலைவரே! இன்று ஆராய வேண்டிய சிக்கல் ஏதேனும் உண்டா?

காலிங்: உண்டு மன்னவா! இதோ என் அருகில் நிற்கும் கருணாகரன் என் தம்பி! அவன் படையிலே சேர்ந்து தன் உடைவாள் வீச்சினால் பகைவர் பலரை எமனுலகை நோக்கி நடை கட்டச் செய்தவன். அவன் தகுதியறிந்து ஏதேனும் ஒரு பதவி அளிக்கக் கோருகிறேன்.

குலோத்: காலிங்கராயரே! கருணாகரன் தகுதியறிவேன். என் மனத்திலும் அவனைப் பற்றிய எண்ணம் உண்டு. (விக்கிரமன் பக்கம் பார்த்து) விக்கிரமா! இந்த இளைஞன் யார் தெரிகிறதா? நம் படைத்தலைவரின் தம்பி. போர் முறைப் பயிற்சிகளில் தேர்ச்சியும் நேர்த்தியும் உண்டு. உனக்குத் துணையாக இருக்க, இவனுக்குத் துணைத்தளபதி பதவியளிக்கலாம் என்று கருதுகிறேன்.

விக்கிர: (சினத்துடன் எழுந்து) வருந்துகிறேன் தந்தையே! பல்லவர்களின் அடியே இந்த அரண்மனையில் படக்கூடாது என்பது என் எண்ணம். இருக்கும் காலிங்கராயர் ஒருவரே போதும். இனி எந்தப் பல்லவர்க்கும் இடம் ஒதுக்க முடியாது. வரவு கூறினால், கரவுளம் கொண்டு நம் ஆட்சியையே கவர்ந்து கொள்ளப் பார்ப்பார்கள். அதனால் வந்த இளைஞனை வழி பார்த்துப்போகச் சொல்லுங்கள் ...... (கருணாகரனை நோக்கி) ஊம்...இந்த இடுப்புக்கு வாள் ஒரு கேடா?...

(கருணாகரன் துடிக்கிறான்)

இராச: விக்கிரமன் சொல்வது சரி! சரி! சரிக்குச்சரி!

(காலிங்கராயர் கருணாகரனை வெளியே கூட்டிச் செல்கிறார் ...குலோத்துங்கர் விக்கிரமனை வெறித்து நோக்கிவிட்டு இராச ராசனை அறைந்துவிட்டு வெளியேறுகிறார். விக்கிரமன் இராசராசன் இருவரும் தனித்துவிடப் படுகின்றனர்)

விக்: என்ன அண்ணா? சிந்தனை பலமா? அல்லது அடி பலமா? (சிரிக்கிறான்)

இராச: நீ சிரிக்கிறாய், எனக்கோ வயிறு எரிகிறது. பார்த்தாயா விக்கிரமா, இந்தக் காலிங்கராயன் வேலையை. நான் தான் நேற்றே சொன்னேனே! அவனுக்குப் பல்லவப் பித்தம் ஏறிப்போயிருக்கிறது. அவனது முன்னோர்களான மகேந்திர பல்லவனின் பெருமையும் நரசிம்மபல்லவனின் பெயரும் தான் அவனுக்குப் பாட்டு. தம்பி! சோழர் ஆட்சியில் நம் முன்னோர்கள் தம் தந்தைமாரைக் கொன்றுதான் ஆட்சியைக் கைப்பற்றினார்களாம். அந்தக் காலிங்கராயன் கதைக்கிறான். அதுமட்டுமா? காலிங்கராயன்தான் நம் தந்தைக்கே ஆட்சி உரிமையை வாங்கிக் கொடுத்தானும். இப்படியெல்லாம் அந்தக்

கயவன் சொல்லித் திரிகிறன். தம்பி நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

காலிங்கராயன் மெல்ல, மெல்லத் தன் ஆட்களை இங்கு நிரப்பி ஒரு நாள் நம்மைக் கவிழ்த்து விட்டு, மீண்டும் பல்லவத்தை உருவாக்கப் போகிறன்.

தம்பி...நீ...டே...நீ ஆட்சிக்கு வந்து விட்டாயே என்று நான் வருத்தப்படவில்லை. நீ ஆண்டாலும் நான் ஆண்டதுபோலத்தான்.இருந்தாலும் பல்லவப் பயல்களை ஒழித்துவிட வேண்டும்...அப்போது தான் எனக்கு...இல்லை இல்லை...உனக்கு நல்லது.

விக்: கவனிக்க வேண்டியதுதான்!

[திரை]

## காட்சி 3

களம்: சோழ கங்கம் ஏரிக்கரை காலம்: மாலை

உறுப்பினர்: கருணுகரன்

(கருணுகரன் கவலை தோய்ந்த முகத்துடன் ஒரு பாறையில் அமர்ந்திருக்கிறன். காலையில் அரசவையில் நடந்த நிகழ்ச்சிகளின் நினைவோட்டத்தில் ஆழ்ந்துள்ளான்).

—விக்கிரமன் கூறிய சொற்கள் ஒலிக்கின்றன—

"இந்த இடுப்புக்கு வாள்ஒரு கேடா?"

"இந்த இடுப்புக்கு வாள்ஒரு கேடா?"

கருணு: (பாறையிலிருந்து குதித்து இறங்கி) சே! என்ன மனித வாழ்வு! காலையில் அரும்பிப் பகலில் போதாகி மாலையில் உதிரப் போகும் இந்த வாழ்க்கையை மானம்போன பின்பும் தொடர வேண்டுமா?

(எழுந்து நடக்கிறான்) இதோ, சோழகங்கம் ஏரி. ஆழ்ந்து கற்ற அறிஞர்போல அமைதியாகக் கிடக்கிறது இந்த ஏரி. ஆனால் என் உள்ளமோ கடல்போல் நினைவலைகளை எழுப்பி, தன்மானப் பாறையில் மோதிச் சிதறடிக்கின்றது. (தலையைப் பிடித்துக் கொண்டு)

சே! என்ன துடுக்காகக் கேட்டுவிட்டான். இந்த இடுப்புக்கு வாள்ஒரு கேடா? (வாளை உருவி எடுத்து) வலிமை இருந்தும் வாய்ப்பும் மதிப்பும் இழந்த வாளே!... போய்த்தொலை. (வாளை எறிந்து விட்டுக் கரையோரமாக நடந்து செல்கிறான்)

இளவரசன் ,விக்கிரமன் நம்மையும் நம் இனத்தையும் எவ்வளவு அவமதித்துப் பேசி விட்டான்?இனி நாம் எப்படி இந்த உடலைக் கொண்டு ஊரில் நடமாடுவது?

பின்குரல்: ஏன் விக்கிரமனைப் பழி வாங்கினால் என்ன?

கருணா; பழி:.........பழி வாங்குவதால் என்ன பயன்? என் அண்ணனுக்குத்தான் இழிவும் தீங்கும் ஏற்படும் அதைவிடச் சாவதே மேல்!

(விரைவாக நடக்கிறான்) சாவதே மேல்! சாவதே!

குரல்: (காலிங்கர் குரல் ஒலிக்கிறது) தம்பீ...!

கருணா: அண்ணா...!

(இளவேணி குரல் ஒலிக்கிறது)

குரல்: அண்ணா!

கருணா: இளவேணி...உங்களையெல்லாம் விட்டு எப்படிப் பிரிவேன்? வாளும் நாளுமாக வாழ்க்கையை அமைத்துக் கொண்ட எனக்கு மானம் போன பின்பு வாழவேண்டுமென்ற மனம் வரவில்லை தங்கையே, மனம் வரவில்லை. சோழருக்குப் பல்லவர் தொண்ட

ராயிருப்பதையே தூற்றும் போது அதை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் இளைஞன் எனக்கு இன்-னும் வரவில்லை. அண்ணா! சோழருக்கு உங்கள் அன்பு ஒரு பக்கம். பல்லவருக்குத் தாழ்வு ஒரு பக்கம், இருதலைக்கொள்ளிக்கு இடைப்பட்ட எறும்புசாவைத் தானே தேடவேண்டியதிருக்கிறது. என்னை மன்னித்து விடுங்கள் அண்ணா! இளவேணி நீயுந்தான்.

(ஏரிக்குள் இறங்கி நடக்கிறான். பின்னால் 'ஐயோ! காப்பாற்றுங்கள்' என்ற குரல் ஒன்று கேட்கிறது)

கருணா: ஐயோ! யாரோ படகிலிருந்து ஏரிக்குள் விழுந்து விட்டார்களே! சாகுமுன்பு ஓர் உயிரைச் சாவிலிருந்து காப்பாற்றுவோம். (கவிழ்ந்த படகை நோக்கித் திரும்பிச் செல்கிறான். நீரில் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருந்த பெண் ஒருத்தியைக் காப்பாற்றிக் கரை சேர்க்கிறான்.)

(திரை)

## காட்சி 4

களம்: அரண்மனைக் கூடம் காலம்: அந்திப் பொழுது.

உறுப்பினர்: காலதேவர்— குலோத்துங்கர்- மதுராந்தகி. விக்கிரமன்- கருணாகரன்- அம்மங்கை— காலிங்கராயர்- மருத்துவர்

(கருணாகரன் நோய்ப்படுக்கையில் படுத்திருக்க குலோத்துங்கர் உலாவிக் கொண்டிருக்கிறார். கால-தேவர் வருகிறார். கருணாகரன் உடலைத் தொட்டுப் பார்த்து 'ஆ' எனல்... ... ...)

கால : குலோத்துங்கா! இது என்ன கூத்து? கருணா-கரன் உடல் கனலாய்க் கொதிக்கிறது. மருத்து-

வரை விட்டுக் கவனிக்காமல் எல்லாரும் நாடகம் நடத்துகிறீர்களா?

குலோ: அமைச்சரே! இதற்குவிடை விக்கிரமன்தான் தர வேண்டும்.

கால: ஏன்? விக்கிரமன் என்ன செய்தான்?

குலோ: யார் யார் நமக்கு உண்மையுள்ளவர்களோ அவர்கள்எல்லாம் விக்கிரமனுக்குப் பகைவர்களாகத் தெரிகின்றனர்.

கால: நம்பமுடியாது குலோத்துங்கா!

குலோ: அமைச்சரே! வீணுக என் சினத்தில் தீயை இடாதீர்கள். நேற்று விக்கிரமன் கருணுகரனைத் தன்மையற்ற முறையில் ஏசிவிட்டான். அவமானம் தாங்காமல்தற்கொலைக்கு முயன்றிருக்கிருன் அந்தத் தூய வீரன். இதற்கிடையில் படகில் சென்ற பட்டத்தரசி மதுராந்தகி, பாண்டிய ஒற்றனின் சூழ்ச்சியால் திடுமென நீரில் கவிழ, நீந்திச்சென்று மதுராந்தகியின் உயிரை மீட்டிருக்கிருன் கருணு-கரன். நீரில் பாண்டியஒற்றனேடு சண்டைபோட வேண்டிய நிலை ஒருபுறம்; மதுராந்தகியைக் காப்-பாற்றித் தீர வேண்டிய நிலை மறுபுறம். இந்தப் போராட்டத்தால் கருணுகரனுக்குக் காய்ச்சல் கண்-டிருக்கிறது. இந்த நல்லவனிடம் விக்கிரமன் மன்-னிப்புக் கேட்கட்டும் அல்லது கருணுகரன் உயிர் போகட்டும்.

விக்கிரமன் போன்ற மனக் கூர்மையற்ற இளைஞர்-களுக்குக் கருணுகரன் சாவு ஒரு படிப்பினையாக இருக்கட்டும்.

கால: சரி, சரி! இளமைத் துடிப்பில் ஏதோ நடந்தி-ருக்கலாம். அதற்காகக் கருணுகரன் உயிரைக் காணிக்கையாக்க வேண்டாமே!

காலிங்: வேந்தே! என் தம்பியை என்னிடமே ஒப்படைத்து விடுங்கள். எல்லாருமே இவனுடைய உயிரை வைத்து விளையாடிக் கொண்டிருப்பதை என்னுல் பொறுத்துக் கொள்ள முடியாது.

மதுரா: விக்கிரமா! மகனே! கருணுகரன் இல்லையென்ருல் உன் தாய் மதுராந்தகி இந்நேரம் சோழகங்கம் ஏரியின் அடித்தளத்தில் தூங்கிக் கொண்டிருப்பாள். அந்த நன்றிக்காகவாவது நீ அவனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்; சக்கரவர்த்தியின் மகன் என்ற தருக்கு உனக்கு வேண்டா; மருத்துவரை அதிக நேரம் காக்க வைக்க நான் விரும்பவில்லை; என்ன சொல்லுகிருய்?

(விக்கிரமன் போய்விடுகிருன்)

கால: விக்கிரமா!

மதுரா: போகட்டும் விட்டுவிடுங்கள்.

சக்கரவர்த்தி! உங்கள் மீது ஆணை. இன்று முதல் கருணுகரன் என்னுல் தத்து எடுத்துக் கொள்ளப்படுகிருன். இனி அவன் அரசகுலச் சொத்து. காலிங்கராயரே! கருணுகரனுக்கு இன்று முதல் உமக்குச் சமமான படைத்தலைவர் பதவியை அளிக்கிறேன்.மருத்துவரே! நடக்கட்டும் உங்கள் வேலை.

(மருத்துவர் கருணுகரனை நெருங்குகிருர். மதுராந்தகி சென்று, மறுபடியும் திரும்பி மருத்துவரை நோக்கி)

மருத்துவரே! உங்கள் வேலை முடிந்ததும் நீங்கள் போய் விடலாம். கருணுகரனுக்குத் தனிமை தேவை. வேளையறிந்து மருந்து கொடுக்க வேலைத் திறமையுள்ள ஒருத்தியை அனுப்புவேன்.

(அனைவரும் சென்றுவிட மருத்துவர் மருந்து தடவுகிருர்-அந்த நேரத்தில் அம் மங்கைவருகிருள்-மருத்-

துவர் விழிக்கிருர்-அம்மங்கை சைகை காட்ட மருத்-துவர் போகிருர்.)

(அம்மங்கை மருந்து தடவ-கருணுகரன் விழித்து எழுந்து வியப்புடன் அம்மங்கையை நோக்குகிருன்)

அம்: மருத்துவர் தானே! அவர் போய் இரண்டுநாழி-கை ஆகிறது. போகட்டுமே! நோய்க்கு மருந்து தர வேறு ஆள் கிடையாதா என்ன? பெண்களே ஒரு வகையில் நோய்க்கு மருந்து தானே!

(கருணுகரன் எங்கோ கவனமாக இருக்க)

உலகளந்த பெருமாளே! நான் சொன்னது தங்-கள் காதில் விழவில்லையோ...?

கருணு: நான் கருணுகரப் பெருமாள் - பெண்ணே! நான் யாரென்று தெரியாமலேயே என்னேடு விளை-யாடுகிருய் - நான் யார் தெரியுமா?

அம்: (அவள் சரேலென எழுந்து) அம்மாடியோ! நீங்-கள் அவ்வளவு பெரிய ஆளா? எனக்குத்தெரியாதே!

கருணு: போகட்டும்! ...நீ யார்? உன் பெயர்? ஏன் ... இங்கு

அம்: நானு? அரண்மனைப் பணிப்பெண். உங்களுக்குப் பணிவிடை செய்ய வந்தேன். பெயர் கருணுகரி.

கருணு: கருணுகரி......! விசித்திரமான பெண்ணுக இருக்கிருய்?

அம்: சித்திரமான பெண்ணுக இல்லையா?

கருணு: அழகு மட்டுமா? அறிவும் சுடர் விடுகிறதே!

அம்: அறிவும் அழகும் அணங்கின் அணிகலன்கள்.

கருணு: அருமையாகப் பேசுகிருய். உன்னைப்போல் நான்கு பெண்கள் என் பக்கத்தில் இருந்து விட்டால் நோய்க்கு மருத்துவனே தேவை இல்லை.

அம்: நான்கு பெண்கள் தேவைப்படுகிறதா? நல்ல ஆள் தான் நீங்கள்...ஏன் தளபதியாரே! நோய்க்குத் தானே நான்கு பெண்கள். வாழ்க்கைக்கு இல்லையே

கால: (வந்துகொண்டே) இளவரசி! (கருணாகரன் வியக்கிறான். அம்மங்கை ஓடிவிடுகிறாள்)

கருணா: இளவரசியா......?

(திரை)

## காட்சி 5

களம்: அரண்மனைக் கூடம் காலம்: காலை

உறுப்பினர்: குலோத்துங்கர் —மதுராந்தகி — காலதேவர் முடிகொண்டான் —கலிங்கத்தூதுவன்.

முடி: அரசே! கலிங்கத்திலிருந்து தூதுவர் வந்திருக்கிறார்.

குலோ: வரச்சொல் (முடிகொண்டான் போகிறான். கலிங்கத் தூதுவன் வருகின்றான்).

கலி: வணக்கம்.

குலோ: செய்தி என்ன? அனந்தவர்மன் நலந்தானே!

கலி: அரசே!ஓலை தங்கள் அமைச்சர் காலதேவருக்கு. அவரிடம் தர இசைவு தர வேண்டுகிறேன்.

குலோ: ஓ ! (தூதுவன் காலதேவரிடம் ஓலை தர அதனை வாங்கிப் படிக்கிறார். தூதுவன் போய்விடுகிறான்).

கால: இது எங்கராயர் எழுதியது. நான் கலிங்கம் சென்றபோது எனக்கும் அனந்தவர்மனுக்கும் இடை-

யில் நடந்த மனக்கசப்பை மாற்ற முயன்றிருக்கிறார் அவர்.

குலோ: உண்மையில் அனந்தவர்மன் இந்த ஓலை அனுப்ப ஒத்துக் கொண்டிருக்கமாட்டான். போர் மூளாவண்ணம் தடுக்க எங்கராயர் செய்த முயற்சி இது. கிடக்கட்டும்! நாமும் அவனுடைய போக்கு எதுவரை செல்கிறது என்று பார்ப்போம். நம்மிடம் தோற்றசாளுக்கியனும் அவன்படைத்தலைவன் தாமயனும் இப்போது கலிங்க வேந்தனோடு சேர்ந்து கொண்டிருக்கிறார்களாம். அனந்தவர்மன் என்னென்னவோ சூழ்ச்சி செய்கிறான். காலம் வரும்போது கவனிப்போம்!

கால: (எழுந்து) குலோத்துங்கா! அந்தக் காலம் இந்தக் காலதேவர் காலத்திற்குள்ளேயே வரவேண்டும். இது என் வஞ்சினம்!

குலோ: கலிங்கத்துப் போர்க்களத்தை உங்கள் கண் முன்னேயே நடத்துவோம். சரிதானே புலவரே.

கால: என் மனத்தேர் வலம் வந்தே தீரும். அதை எண்ணி என் சிந்தையெல்லாம் தேன் பாய்கிறது குலோத்துங்கா! சிந்தையெல்லாம் தேன் பாய்கிறது!

குலோ: காலதேவரே! உங்கள் மனத்தேர் மட்டுமா? இதில் உங்களை முந்திவிட்டாள் மதுராந்தகி.

கால: என்ன! மதுராந்தகியின் மனத்தேரா!

மதுராந்: ஆமாம்! உங்களுடைய மனத்தேர் இன்று உருவானது. என் மனத்தேர் காலூன்றத் தொடங்கிப் பல காலம் ஆகிவிட்டது. கலிங்கன் அனந்தவர்மன் நம் மன்னர்மேல் வீண்பழி சுமத்தி வீம்பு பேசிக்கொண்டிருக்கிறான் என்று கேள்விப்பட்டேன். அவனுக்குச் சரியான பாடம் கற்பிக்க நினைத்தேன். ஆனால் என் மனத்தேர் வலம் வர ஒரு சிறு தடை.

கால: என்ன தேவி அது?

மதுராந்: விக்கிரமனின் மனநிலை தான். கருணாகரனின் ஆற்றலை நானேபலமுறை நேரில்கண்டு வியந்தேன். அந்த வியப்பும் ஆற்று நீரில் மூழ்கவிருந்த என்னைக் காத்துக் கரை சேர்த்த வீரமும் என் மனத்தேர்க்கு அச்சாணிகள். அப்புறம்.........

குலோ: ஊம்! அப்புறம்?

மதுராந்: நம்மகள் அம்மங்கையும் கருணாகரனின் இளமையும் வீரமும் கண்டு நெஞ்சைப் பறிகொடுத்தாள். இதுவும் என் மனத்தேரில்...

குலோ: மணி முடியானதோ?

கால: குலோத்துங்கா! இறைவன் தான் கருணாகரனை அனுப்பி மதுராந்தகியைக் காப்பாற்றச் சொல்லியிருக்கிறான்.

மதுராந்: நானும் அப்படித்தான் நினைக்கிறேன். சக்கரவர்த்திக்கு ஒரு வேண்டுகோள். ஒருவேளை என் காலத்திற்குப் பிறகுகலிங்கப்போர் நடைபெறுமானால் என்மனத்தேரை வலம் வர வைப்பீர்களா?

குலோ: உறுதியாகச் செய்து வைப்பேன் தேவி!

மதுராந்: ஆனால் ஒன்று. என்று கருணாகரனும் விக்கிரமனும் கருத்தொருமித்து நட்புடன்விளங்கி நடக்கத் தொடங்குகிறார்களோ அன்றுதான் கலிங்கப்போர் நிகழவேண்டும். அப்படி நடந்தால் அத்தகைய போர் இதுவரை நடந்திருக்காது. இனி நடக்கப் போவதுமில்லை- ஒருநாள் இவ்வுலகமே நம்முடைய போர்க்களத்தின் பரணி கண்டு வியக்கப் போகிறது

கால: நம் பெருமையை நிலைநாட்டிக் கலிங்கனின் சிறுமையைப் பறைசாற்றும் கலிங்கத்துப் பரணியை நானே பாடப் போகிறேன்.

குலோ: அந்தப் போரில் கலிங்கரின் மாவாயிரமும் செத்து மடிய, அக் களப்போர் உரைப்போர்க்கு நா-ஆயிரம் வேண்டும்; உங்கள் பரணி கேட்க நாள் ஆயிரம் வேண்டும்.

கால: கலிங்கப் போர் வெற்றியாகவே முடியும்.

(மதுராந்தகி ஏதோ சொல்ல முனைகிறள்)

குலோ: என்ன மதுராந்தகி? ஏதோ சொல்லத் தயங்கு கிருய். இவ்வளவு கூறிய நீ, எதையுமே மறைக்க வேண்டா. ஊம்......சொல் தேவி!

மதுராந்: புவனேசுவரா! இறைவன் அருளால் கலிங்கப் போர் வெற்றியாகவே முடியும். அந்த வெற்றிக்குப் பிறகு......

குலோ: உன் மனத்தில் இருப்பதை நான் சொல்லவா? கருணுகரனுக்குப் பட்டமும் பதவியும் தரும்போது நம்முடைய அம்மங்கையையும் சேர்த்துத் தர வேண்டும். அப்படித்தானே மதுராந்தகி...?

மதுராந்: உங்களுக்கு இணை நீங்கள்தான்...அந்த விருப்பத்தில்தான் அம்மங்கையையும்கருணுகரனேடு பழக விட்டிருக்கிறேன்.

கால: என்றலும் காதல் விருப்பத்தால் கருணுகரன் கடமையை மறந்துவிட்டு எதிரியின் கோட்டையை இடிப்பதற்குப் பதிலாக நம் கோட்டையையே இடித்துவிடக் கூடாதே......அதனுல்......

மதுராந்: அதனுல்......

கால: நான் கருணுகரனும் அம்மங்கையும் பழகு-வதைத் தடுக்க விரும்புகிறேன். ஆசை தலையெடுத் தால் அறிவு தடுமாறிவிடும் பட்டத்தரசி.

குலோ: இரண்டு பேருக்கும் நோக்கு ஒன்று தான். போக்கிலேதான் வேறுபாடு......

கால: அவ்வளவு தான்!

[திரை]

## காட்சி 6

களம்: அரண்மனைக் கூடம் காலம்: பிற்பகல்

உறுப்பினர்: குலோத்துங்கன்—காலதேவர்—கருணாகரன் காலிங்கராயர் - அம்மங்கை.

காலிங்: மன்னா! நம் நெஞ்சை அறுக்கும் செய்தி!

குலோ: எதையும் தாங்கும் நெஞ்சம்தான் நம் சொத்து...சொல்லுங்கள்.

காலிங்: கலிங்கவேந்தன் அனந்தவர்மன் தன் கோட்டையைக் கட்டி எழுப்ப நம் சோழ நாட்டில் ஆட்களைத் தேடச் சொல்லியிருக்கிறான். வேலை செய்ய ஆட்களையும், வீரச் சிற்பிகளையும் விலைபேசிக் கொண்டிருக்கிறான் படைத்தலைவன் அனந்தபாலையன். நம் வணிகர்களும் சில செல்வர்களும் இந்த இரண்டகச் செயலுக்குத் துணை.

குலோ: ஊம்...அப்புறம்

காலிங்: ஆட்களைத் திரட்ட முந்நூறு ஒற்றர்களோடு அனந்தபாலையன் வந்திருக்கிறான்: விலைபேசி வாங்கக் கலிங்கத்துப் பொற்காசுகள். எல்லாத்திறமையும் கொண்ட ஒரு சிற்பிக்கு வலைவீச்சு... கேவலம்... கூலிக்கும் கும்பிநிரப்பும் ஆசைக்கும் அடிமைப் பட்டுச் சில கேவலப் பிறவிகளின் ஆட்டம்...இத்தனையும் மொத்தமாக நடக்கின்றன.

குலோ: இத்தனையும் நடக்கின்றன...தடுக்க உங்களால் முடியவில்லை. அப்படித்தானே!

காலிங்: அது தான் இல்லை...எல்லா ஏற்பாடுகளையும் செய்துள்ளேன். இன்றிரவு முறியடிப்பேன்.

குலோ: இன்றிரவா...?

காலிங்: ஆம்! அனந்தபாலையன் தான் பிடித்த ஆட்களோடும் சிற்பிகளோடும் இன்றிரவு புறப்படுகிறான். எப்படியும் மடக்கி விடுவேன்.

(குலோத்துங்கர் உறுமிக் கொண்டே உலவுகிறார். அனைவரும் அமைதியாக நிற்கின்றனர். குறுந்தாடியுடன் நிற்கும் கருணாகரனை அம்மங்கை பார்வையால் மேய்கிறாள்-துங்கன் வியர்வையைத் துடைத்துக் கொள்கிறார்)

குலோ: அனந்தவர்மனுக்கு அழிவு காலம் நெருங்கி விட்டது. அவன் எழுப்பவிருக்கும் கோட்டை அவனை எதிரியிடமிருந்து காப்பாற்றும் பாதுகாப்புக் கோட்டை அல்ல. அவனுக்காக அவனே எழுப்பிக் கொள்ளும் பிணமேடு. அந்த மேட்டை நானே கட்டி நானே அழிக்கிறேன்.

கால: குலோத்துங்கா! கொந்தளிக்கும் உன் சினத்தின் முன் அனந்தவர்மன் ஒரு கொசு. வலிய வந்து மோதுகிறான், வரவேற்கக் கூடியதே. என்றாலும் கோட்டைபற்றி ஏதோ சொன்னாயே-நீயே கட்டி ...நீயே...

குலோ: சொல்கிறேன்...சொல்கிறேன்.

(கருணாகரனை நோக்கிப் பெருமிதத்தோடு முகம் மலர்கிறார்...காலிங்கராயரை நோக்கி)

காலிங்கராயரே! கருணாகரன், பட்டத்தரசி மதுராந்தகியின் வளர்ப்புச் செல்வன் அல்லவா?

காலிங்: ஆம் சக்கரவர்த்தி!

குலோ: அதனால், நான் எத்தகைய பணிக்கு அவனை அனுப்பினாலும் அதற்கு நானே பொறுப்பாளி, இல்லையா?

காலிங்: உண்மை தான்.

குலோ: சுருங்கச் சொன்னால் கருணாகரன் உயிருக்கு ஈடானவர் குலோத்துங்கச் சக்கரவர்த்தி...அப்படித் தானே!

காலிங்: ...(அமைதி)

குலோ; ஏன் காலிங்கராயரே, ஏன் பேச்சில்லே?
(காலிங்கராயர் மெல்லப் புன்னகைக்கிருர்)

குலோ: ஏன் தயக்கம்? கருணுகரன் நீர் நினைப்பது போல் சிறுவனல்ல; எனக்குத் தெரியும். மதுராந்தகியும் ஒப்புக் கொண்டாள். கருணுகரன் கலிங்கம் சென்று,சிற்பியாக இருந்து கலிங்கக் கோட்டையைக் கட்டி முடித்துத் திரும்பட்டும்; அக் கோட்டையை நாமே அழிப்பதில் தான் பெருமையிருக்கிறது. என்ன சொல்லுகிறீர்?

காலிங்: தலைவரின் சொல்லுக்கு நானென்ன மறுப்புக் கூறப் போகிறேன்?

குலோ: நல்லது! இனி யாவும் நன்மைதான். காலதேவரே உங்கள் கருத்து...?

கால: கருணுகரன் சென்று, அக்கோட்டையைக் கட்டி முடிப்பதால் உண்டாகும் நன்மை?

குலோ: நன்மை மட்டுமல்ல; உண்மையான வீரனின் கடமை அதிலே ஒளிந்திருக்கிறது. முயல் வேட்டையாட முந்நூறுபேர் வேலேயும், வில்லேயும் தூக்கித் திரிவதைவிட ஒரு யானையை வேட்டையாட முயன்று வெறுங்கையோடு திரும்புவதுதான் பெருமை என்பது நம் வள்ளுவர் தந்த தெள்ளு தமிழ்க் கருத்தல்லவா? கலிங்க வேந்தன் கால்புழுதி கூடப்பெற மாட்டான். அவனுக்குக் கோட்டை கட்டிக்கொடுத்து நம் போல் வலிமை படைத்தவனுக்கிப் பிறகுபோரிட்டு வெல்வதே பெருமை;அதுவே குலோத்துங்கனுக்குப் புகழ். கோட்டையை எந்தக் கருணுகரன் கட்டிவருகிருனே அவனே அடுத்துச் சென்று அதை இடித்துத்திரும்ப வேண்டியது தான்.

கால: குலோத்துங்கா! வரலாற்றில் இல்லாத புதுமை. வரவேற்கக் கூடியதுதான் உன் திட்டம். நல்லது; கருணுகரன் கலிங்கம் செல்வது எப்படி?

குலோ: இதோ, (காலிங்கராயரை நோக்கி) காலிங்கராயரே! இன்றிரவு அனந்த பாலையனையும் அவனது வீரர்களையும் மடக்கப் போகிறீர்... அல்லவா!

கலிங்: உறுதியாக!......

குலோ: ஆனால்... ஒரு திருப்பம்... நீர் அனந்த பாலையன் ஆட்களையும் நம் சோனாட்டுப் புல்லுருவிகளையும் பிடித்துக் கொள்ள வேண்டும். அந்த நேரத்தில் கருணாகரன் புனைவடிவத்தில் வந்து அனந்தபாலையனையும் அவனது ஒற்றர்களையும் மட்டும் காப்பாற்ற வேண்டும். அவர்களோடு கருணாகரன் கலிங்க நாட்டுக்குப் போய் விடட்டும். காட்டிக் கொடுப்பான்களை மட்டும் நீர் பிடித்துக் கொண்டு வந்து விடலாம்.

கால: அந்தப் பதர்கள் நாம் உருவாக்கப் போகும் குலோத்துங்க விண்ணகரத்திற்குப் பாறை உருட்டவும் கல்லுடைக்கவும் பயன்படட்டும். அதுவே அவர்களுக்குச் சரியான தண்டனை.

[திரை]

## காட்சி 7

களம்: மாளிகை காலம்: பகல்

உறுப்பினர்: மதுராந்தகி, கருணாகரன்

கருணா: (கருணாகரன் நுழைகிறான்) உடனே வருமாறு அழைத்ததாக...

மதுரா: ஆம் கருணாகரா! இப்படி உட்கார் (அவன் அமரவில்லை)

கருணாகரா! இன்றிரவு நீ கலிங்கம் நோக்கிப் புறப்படுவதாக அறிந்தேன்!

கருணா: ஆம் தாயே! சக்கரவர்த்தியின் கட்டளை அப்படித் தான்.

மது: (எழுந்து கொண்டு) சக்கரவர்த்திக்குத்தான் உன் மேல் எவ்வளவு அன்பு. எத்தனை நம்பிக்கை.

இந்தப் பெரும்பணிக்கு உன்னைத் தேர்ந்தெடுத்தார் என்றால் உன்னுடைய எதிர்காலம் குன்றின் மேலிட்ட விளக்கு, கருணாகரா.

கருணா: எல்லாம் தங்கள் அன்பு, தாயே!

மது: என் அன்பு என்றுமே உனக்கிருக்கும். நிலவில் குளிர் மாறலாம்; நெருப்பில் கனல் தேயலாம்; உலகில் உண்மை அழியலாம். ஆனால் என் அன்பு மாறவே மாறாது மகனே!

கருணா: அது, தவமிருக்காமல் நான் பெற்ற வரம் தாயே!

மது: இல்லை, கருணாகரா! பொறிகளை ஒடுக்கி, புலன்களை ஒருமுகப் படுத்திக் கண்ணை மூடிக் காட்டில் தவமிருப்பதைவிட, ஓர் உயிரைக் காப்பாற்றுவதில் பெரும்பலன் இருக்கிறது. நீயோ, உன்னுயிரை மதிக்காமல் உலகைவிட்டு ஓட நினைத்தபோது என்னுயிரை மதித்துப் காப்பாற்றினாய்.

கருணா: அது எனக்குக் கிடைத்த வாய்ப்பு; என் வாழ்வில் ஏற்பட்ட திருப்பம்.

மது: கருணாகரா! நீ கலிங்கம் செல்லுமுன் நான் ஏதேனும் கேட்கலாமா?

கருணா: மகனிடம் தாய் வேண்டுகோள் விடுவது முறையாகாது. கட்டளை இடலாம், காத்திருக்கிறேன் நிறைவேற்ற...!

மது: அறிவேன் கருணாகரா! கலிங்கம் சென்றால் உன்னுடைய கவனம் எதில் இருக்க வேண்டும் தெரியுமா?

கருணா: கோட்டையைக் கட்டுவதில்; அதாவது குலோத்துங்கப் பேரரசரின் மனக்கோட்டையைக் கட்டுவதில்...

மது: ஆம்! சோழநாட்டின் பெருமைக்குத் தூணாக நிற்பதில் ... அதன் காரணமாக எனக்கு இரண்டு வாக்குறுதிகள் தரமுடியுமா?

கருணு: தாயே...!

மது: ஆம், கருணுகரா, தருவாயா?

கருணு: இரண்டென்ன? எத்தனை கோடி வாக்குறுதிகள் கேட்டாலும் கருணுகரன் உங்கள் கட்டளையை மீறமாட்டான் அம்மா!

மது: மகிழ்கிறேன் மகனே! என்றாலும் என் மன அமைதிக்காக வாக்குறுதி தேவைப்படுகிறது. வாக்குறுதி ஒருமுறை மனிதனைப் பணிய வைத்து விட்டால் பகலிலும் இரவிலும் கனவிலும் நினைவிலும் அது அவனைக் கண்காணித்துக் கொண்டே இருக்கும். கருணுகரா! அரசர் உன்பேரில் என்னென்ன எண்ணியிருக்கிருரோ அதே போல் நானும் ஒன்றை எண்ணிஇருக்கிறேன். அது நிறைவேறி என்கண்ணுல் காண வேண்டும் என்ற என் கனவுத் தேர்க்கு உன் வாக்குறுதி தான் அச்சாணி. தரலாமா?

கருணு: இன்னுமா என்மீது நம்பிக்கை பிறக்கவில்லை? சொல்லுங்கள்! சொல்லுங்கள்.

மது: ஒன்று! கலிங்கம் சென்றதும் நீ ஒரு சோழர் படைத் தலைவன் என்பதை மறவாமல் பணியாற்றி விட்டு வரவேண்டும். அடுத்து எந்தப் பெண்ணையும் கையால் தீண்டாமல் திரும்ப வேண்டும். இவ்விரண்டையும் கடைப்பிடிப்பாயா, கருணுகரா?

கருணு: இறைவன் மீது ஆணையாக இவற்றைக் கடைப்பிடிப்பேன். இது உறுதி; என் தாயே!

மது: பெற்ற வயிற்றினும் பெரிதும் மகிழ்கிறேன், கருணுகரா. நீ, கால் வைக்கப் போவது கலிங்கத்தில்: வயிற்றில் பால் வார்ப்பது போல் அமைய வேண்டும் உன் பயணம்; வேல் போன்ற விழி வைத்திருக்கும் மங்கையரிடம் மயக்கம் கொண்டு விடாமல் இந்த நாள் தொட்டுச் சோழ நாட்டின் நன்மையை மட்டும் நெஞ்சில் வைத்து வென்றுவா; சென்றுவா! (கருணுகரன் தாள் பணிந்து விடைபெறுகிருன்)

[திரை]

## காட்சி 8

களம்: காலிங்கராயர் வீடு காலம்: காலை

உறுப்பினர்: காலிங்கராயர், கருணாகரன், இளவேணி
(காலிங்கராயரும் கருணாகரனும் அமர்ந்திருக்கின்றனர்)

கருணா: என்ன அண்ணா! பேசாமல் இருக்கிறீர்கள்?

காலி: ஒன்றுமில்லை... நினைவுகள்... (இளவேணி பால் கொண்டு தருகிறாள்... கருணாகரன் குடிக்கிறான்)

கருணா: இளவேணி! பால் நல்ல சூடு...

காலி: எனக்கும் தான்...

இள: குடிங்களண்ணா! ஆறிவிடப் போகிறது.

காலி: ஆறாது! இளவேணி! என் மனப்புண் ஆறவே ஆறாது.

கருணா: என்ன அண்ணா இப்படிப் பேசுகிறீர்கள்...

காலி: (எழுந்து) கருணாகரா! இன்று கலிங்கத்துக்குப் போகப் போகிறாய்... நீ வெற்றியோடு திரும்பவேண்டும்... ஆனால்...

கருணா: சொல்லுங்கள் அண்ணா...!

காலி: நந்திக் கொடியைப் பறக்கவிட்ட பல்லவகுலத்தின் கடைசித் தோன்றல்கள் நாம். வரலாறு புகழும் மகேந்திர பல்லவன்; வாதாபி கொண்ட நரசிம்ம பல்லவன்!... மாமல்லபுரம் கண்ட கலையின் காவலர்கள்! இவர்களெல்லாம் ஒவ்வொரு நாளும் நினைவில் தோன்றி என்னை நெருக்குகிறார்களடா, தம்பி நெருக்குகிறார்கள்.

கருணா; அண்ணா! கலையின் தொட்டிலே பல்லவர்களால் தான் தாலாட்டப் பெற்றது. வரலாறு மறக்கவில்லை... ஆனால்...

காலி: ஆனால்... இன்று நம் நிலை என்ன? பாண்டியர் கலகம் ஒடுக்கக் குலோத்துங்கனுக்கு வெற்றி தேடித்

தந்தேன். அதற்குக் காலிங்கராயன் என்ற பட்டம்... இந்த மாளிகை பரிசு...நீ கலிங்கக் கோட்டையைக் கட்டி முடிப்பாய்...உனக்கு ஏதோ ஒரு பட்டம். கருணாகரா! இதுதான் நம் வாழ்வின் முடிவா?

கருணா: ஆம்! சோழகுலத்துக்குத் தொண்டாற்றுவதே நம் வாழ்வின் முடிவு. அதுவே வரலாற்றுச் சிறப்பு

காலி: இல்லை; மீண்டும் காஞ்சியை நாம் ஆளவேண்டும். அங்கே நந்திக் கொடி பறக்க வேண்டும்.

கருணா: இல்லை; என்றும் உள்ளவை சேர, சோழ, பாண்டிய அரசுகள். பல்லவம் இடையில் தோன்றி இடையில் முறிந்தது. மீண்டும் நாம் பழமையை எண்ணிப் பயன்?

காலி: இருக்கிறது. குலோத்துங்கசோழன் உன்னிடம் வைத்திருக்கும் பற்றும் மதுராந்தகி தேவியின் பாசமும் உண்மையானால் இன்றிரவே...கலிங்கத்துக்குப் புறப்படு முன்பே ஒன்றைக் கேட்டுவிடு.

கருணா: என்ன அண்ணா?

காலி: கலிங்கம் சென்று எண்ணிய கருத்தைச் செவ்வனே முடித்து வந்தால் காஞ்சிநகரை நமக்கே உரிமையாகத் தர வேண்டும் என்று கேள்,

கருணா: அண்ணா! தொண்டு என்பது துளியளவு தன்னலமும் கருதாதது.கடமையைச் செய்யுமுன்பே கைக்கூலி கேட்பது...

காலி: கேவலம் என்பாய் ...ஆனால் நாம் கேட்பது உரிமை ... கேட்பாயா... மாட்டாயா ... சொல்.

கருணா: என்னை மன்னியுங்கள். இன்று மூன்றாம் சாமத்தில் நீங்கள் அனந்த பாலையன் கூட்டத்தை வளைக்க வேண்டும். நான் அனந்தபாலையனைக் காப்பாற்றுவது போல் நடித்துக் கலிங்கம் செல்ல வேண்டும். இதற்குள் ஏன் இந்த வேகம்...?

காலி: சரி! இருக்கட்டும். என் கனவுகள் காலம் வரும் போது கனிந்தாலும் சரி, வெம்பி விழுந்தாலும் சரி...

(இந்நேரம் கதவோரமிருந்து ஏதோ உருளல்... காலிங்கர் ஓடிப்பார்க்கிறார்...திரும்பி வந்து)

காலி: எவனோ ஒட்டுக்கேட்டுக் கொண்டிருந்து ஓடி விட்டான். சரி! புறப்படு. (காலிங்கராயர் உள்ளே போகிறார்)

கருணு: இளவேணி!

இள: அண்ணா! என்னை விட்டுப் பிரியப்போகிறாயா?

கருணு: ஒரு தமிழ் மறவனின் கடமை உனக்குத் தெரியாதா அம்மா?

இள: போய் வாருங்கள் அண்ணா (அவனது கை-களைப் பற்றிக் கொண்டு) வரும் போது அண்ணி-யோடு வாருங்கள்.

கருணு: ஓ! கலிங்கத்திலேயே ஒரு பெண்ணைப் பார்த்துக் கட்டிக் கொண்டு வந்து விடுகிறேன். ... சரிதானே!

இள: ஐயய்யோ! அப்படியெல்லாம் செய்து விடா-தீர்கள். வரும்போது வெற்றித் திருமகளை மணந்து வாருங்கள் என்றேன்.

கருணு: வீரம் துணைக்கொண்டு, வேந்தனின் ஆணை தலைக்கொண்டு பட்டத்தரசியின் ஆசையை நினை-வில் கொண்டு, உன் அன்பை நெஞ்சில் கொண்டு வெற்றித் திருமகளை மணந்து கொண்டு வருவேன்.

(திரை)

## காட்சி 9

களம்: காடு | காலம்: நண்பகல்

உறுப்பினர்: பராக்கிரமன், இராசராசன்

(பராக்கிரமனும் இராசராசனும் எதிரெதிரே வந்து சந்தித்துக் கொள்கின்றனர்)

இராச: அடடா!...பராக்கிரமர் அல்லவா?

பரா: சுருக்காதே! திரிபுவன சக்கரவர்த்தி பராக்கிரம பாண்டியன் என்று சொல். உன் தந்தை நாட்டுக்கு அரசனாக இருக்கலாம். நான் இந்தக் காட்டுக்குச் சக்கரவர்த்தி... இன்னும் சில நாளில் நான் நாட்டுக்கு அரசன். உன் தந்தை காட்டுக்கு அரசன். ...அதாவது சுடுகாட்டுக்கு?

இராச: நம்கனவு நிறைவேறி விடும் என்கிறீர்கள்

பரா: கட்டாயம். உன் தந்தையும் விக்கிரமனும் தொலையவேண்டும். ஆட்சி நம் கைக்கு வந்து விடும். என்ன, வேலையெல்லாம் ஒழுங்காக நடக்கிறதா?

இராச: கண்ணிலே எண்ணெய் ஊற்றிக்கொண்டு செய்கிறேன். இப்போது ஒரு நல்ல செய்தி. அதைச் சொல்லத்தான் ஓடி வந்தேன். அடேயப்பா! இந்தக் காட்டில் உங்களை எங்கெல்லாம் தேடுவது?

பரா: உன் தந்தைதான் எனக்குரிய பாண்டிய நாட்டாட்சியைக் கவர்ந்து கொண்டு இந்தக் காட்டில் அலையும்படி செய்துவிட்டார். இருக்கட்டும்... இருக்கட்டும்...சரி! செய்தி என்ன?

இராச: சோழ நாட்டின் புதிய படைத்தலைவன் கருணாகரனே கலிங்கக் கோட்டையைக் கட்டுவதற்குச் சிற்பி வடிவத்தில் செல்கிறான். பின்னால் அவனைக் கொண்டே அக்கோட்டையை இடித்து விடுவார்களாம்.

பரா: அப்படியா! கருணாகரன் போய்விட்டானா?

இராச: இல்லை! இன்றிரவு அனந்த பாலையன் கூட்டத்தை மறிக்கப் போகிறார் காலிங்கராயர்; கருணாகரன் எல்லாரையும் ஏமாற்றி அந்தக் கூட்டத்தில் போகப் போகிறான்.

பரா: இதெல்லாம் உண்மைதானா?

இராச: இதை நானே காலிங்கராயர் வீட்டில் ஒளிந்திருந்து ஒட்டுக்கேட்டேன். இராசராசன் எப்போதும் உண்மைதான் கூறுவான்.

பரா: உன் தந்தையிடம் கூடவா?

இராச: சே! சே! சொன்னால் தொலைந்தேன்.

பரா: ஊம் கவனமாக இரு... அங்கு நடக்கும் எல்லாச் செய்திகளையும் இங்கு வந்து சொல். அப்போது தான் சோழ நாட்டாட்சியை உன்னிடம் ஒப் படைப்பேன்.

இராச: அப்படியே செய்கிறேன்.
(திடுமெனப் பராக்கிரமன் யாரோ ஒளிவதைக் காண்கிறான்)

பரா: யாரோ ஒளிகிறார்கள் (கத்தியை எறிதல்) ... ஊம்... ஓடி விட்டான் ...கத்தியும் குறி தவறி விட்டது...

இராச: இப்படித்தான் குறி தவறி விடுகிறது.

பரா:சீ! வாயை மூடு...சரி! நீபோ... அரண்மனையிலிருந்து சரியான செய்திகளைத் துப்பறிந்து வந்து சொல்லு. (இராசராசன் போகிறான்)

பரா: (தனிமொழி) பேடிப்பயல்! தந்தையும்,இளவரசுப் பட்டம் பெற்றதம்பியும் இருக்கும் போதுதனக்குச் சோழ ஆட்சி வேண்டுமென்று அலைகிறான்; அதுவும் ஆட்சியை இழந்த நான் வாங்கிக் கொடுக்க வேண்டுமாம். அப்படியே வாங்கிக் கொடுத்தாலும் ஒரு நாளைக்கு வைத்துக் காப்பாற்ற முடியுமா? இருக்கட்டும். இவனை விட்டு விடக் கூடாது. நன்கு பயன் படுத்திக் கொண்டு இறுதியில் கொன்று விடலாம். ஊம்...கருணாகரன் கலிங்கத்தில் கால் வைக்கிறான்... அவனை உடனே கொன்று விடும்படி ஓலை அனுப்ப வேண்டியது தான்.

[திரை]

## காட்சி 10

களம்: அரண்மனைச் சோலை காலம்: மாலை

உறுப்பினர்: குலோத்துங்கன் முடிகொண்டான்
(குலோத்துங்கன் உலாவிக்கொண்டிருக்கிறன் —முடிகொண்டான் வருகிறன்)

முடி: வணக்கம் மன்னவா!

குலோ: என்ன செய்தி?

முடி: வேந்தே! கருணாகரன் கலிங்கம் போவதன் உள் நோக்கம் பராக்கிரம பாண்டியனுக்குத் தெரிந்து விட்டது.

குலோ: தெரிந்து விட்டதா? நம் ஆட்சியில் இந்தச் செய்தியைக் கூடப் பறையடிக்கும் துரோகிகள் யார்? அதைக் கண்டு பிடித்தாயா?

முடி: .............

குலோ: ஏன் பேச்சில்லை? தெரிந்து கொண்டாயா? இல்லையா?

முடி: அரசே! என் நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறது. தலைசுற்றுகிறது· பேச நா...

குலோ: ஒட்டிக் கொண்டதா...? உள்ளதைச்சொல். குற்றமில்லை.

முடி: தங்கள் மகன் இராசராசன்...!

குலோ: ஆ! இராசராசன்! பிற்காலச் சோழர் ஆட்சியைத் தமிழ் நாட்டின் பொற்காலமாக மாற்றிய அந்த பேரரசரின் பெயரைத் தாங்கி இழுக்குத்தேடும் என்மகன் இராசராசன் இன்று கோடரிக் காம்பாகி விட்டானு? ஒருநாள் இராசராசன் என் கையாலேயே சாகப்போகிறுன்...ஊம்...பிறகு...

முடி: இராசராசனும் பராக்கிரமனும் பேசுவதை நானே என் காதால் கேட்டேன். அதன்படி பாண்டிய ஒற்றன் கலிங்கத்துக்கு ஓலை கொண்டு போகின்றான். அந்த ஒற்றன் இன்னும் இரண்டு நாழிகை நேரத்தில் நம் கோட்டைக்கு வெளியே ஐந்து கல்தொலைவில் உள்ள தங்கும் விடுதியைத் தாண்டி வேங்கிக்குச் செல்லும் பாதையில் திரும்புவான்.

குலோ: முடிகொண்டான்! அருமையான செய்தி... (சிந்தனையுடன் உலாவுகின்றான்) சரி! இந்த ஓலை போனால் நம் எண்ணங்கள் மண்ணாகி விடும். கலிங்கக் கோட்டையைக் கட்டி முடிக்கும் வரை அனந்தவர்மன் கருணாகரனை இம்மியும் ஐயப்படக்கூடாது. ஊம்...(அருகில் அழைத்து முடிகொண்டான் காதில் ஏதோ சொல்லுகிறான்)

முடி: (வியப்புடன்)நீங்களா?

குலோ: உம்ம்...... நீஅந்த விடுதியில் காத்திரு. நான் வந்து சேருகிறேன் ...ஓடு...நேரமாகிவிட்டது.

(திரை)

## காட்சி 11

களம்: காலதேவர் அறை காலம் : மாலை

உறுப்பினர்: காலதேவர், முடிகொண்டான், சுமித்திரை.

கால: சுமித்திரை ......... (அதட்டலுடன்) சுமித்திரை!

சுமித்: (வந்து கொண்டே) வணக்கம் ஐயா! கூப்பிட்டீங்களா?

கால: யாராயிருந்தாலும் சரி, நான் கூப்பிட்டால் கூப்பிட்ட உடனேயே வந்து நிற்கவேண்டும்.

சுமித்: அதாவது...... நீங்க கற்பனையைக் கூப்பிட்-டதும் அது கவிதை வடிவிலே வந்து நிற்பது போல ......

கால: உனக்கும் மூளை இருக்கிறது. சரி! இன்றிலி-ருந்து உனக்குக் கொஞ்சம் புதுவேலை தரப்போ-கிறேன். அரசவைக் காரியங்களில் சிலவற்றைத் துப்பறிந்து வந்து சொல்ல வேண்டும். இது சக்கர-வர்த்திக்கும் கூடத் தெரியக்கூடாது.

சுமித்: அப்படியே செய்கிறேன்.

கால: நீ இப்போது போய் நம் சிறுதரத் தளபதியும் தலைமை ஒற்றனுமான முடிகொண்டான் என்ன செய்கிறன் என்று பார்த்து வர வேண்டும்.

சுமித்: பார்த்தென்ன? வாயைப் பிடுங்கிக் கொண்டு வந்து விடுகிறேன்.

கால: செல்......ஆனல் அவனிடமே வாயைக் கொடுத்து விட்டு வந்து விடாதே!

(திரை — அடுத்த களம்-சாலை)

(சுமித்திரை பாடி ஆடிக் கொண்டே வருகிருள்—முடிகொண்டான் எதிரே வருகிருன்)

மங்கை உனக்கு இனிப்புத் தந்தா பசி பறந்திடுமா? —நல்ல
பசுவின் பாலைக் கலக்கித் தந்தா சுவை குறைந்திடுமா?
வயிறு நிறையச் சோறு போட்டா மனம் குளிர்ந்திடுமா? —இல்லை
வாய் நிறைய முத்தம் தந்தால் சுகம் நிறைந்திடுமா?

(கண்ணை மூடிக் கொண்டு கையை நீட்டிக் கொண்டு-ஆடித்திரும்பி முடிகொண்டான் கையிலே முத்தமிடல்)

சுமி: ஆகா! அகப்பட்டியா! அகப்பட்டியா!

முடி: (பேசாமல் நிற்கிருன்)

சுமி: (கண்ணைத் திறந்து) அடப்பாவி! இது என்ன அநியாயம்யா... ... ...?

முடி: இதிலே அநியாயம் ஒன்றுமில்லையே! நியாயம் தானே!

சுமி: எதுயா நியாயம்? ஒரு பொண்ணு தனியே ஆடிப்பாடிக்கிட்டிருந்தா இப்படி வந்து வம்பு பண்றது தான் நியாயமா?

முடி: அநியாயமே இங்கேதாம்மா ஆரம்பமாகுது.

சுமி: அப்படிச் சொல்லு!

முடி: என்னத்தைச் சொல்றது? அரண்மனைத் தோட்டத்திலே ஓர் ஆடவன் வரும்போது திடீரென்று ஒருத்தி அவன் கையைத் தொட்டு ... தொட்டதுமில்லாமல் (கையில்முத்தமிட்டுக் காட்டி) ... நியாயமா-

சுமி: ஏய்யா, காலையிலே வந்து வம்பு பண்றே!

முடி: வம்பா? நானு?அப்போ... என்னைப்பிடிக்கலே...?

சுமி: ஆமா, ஆமா, ஆமா,...

முடி: சரி ஒரு ஒப்பந்தத்துக்கு வருவோம்...

சுமி: சீக்கிரமாக வாய்யா! (முடிகொண்டான்நெருங்கி வருகிருன்.) யோ... யோ... அங்கேயே நின்னு பேசய்யா!

முடி: வரச்சொன்னே... வந்தேன்...சரி நான் போகணும். உனக்குப் பிடிக்கல்லேன்னு நீ வாங்கிக்கோ!

சுமி: என்னத்தையா...?

முடி: நீ கையிலே கொடுத்தாயல்லவா ஒன்று... அதை வாங்கிக்கோ எனக்கு வேணும்.

சுமி: என்னய்யா விளையாடுறியா...?

முடி: விளையாட்டே இப்பத்தானே தொடங்கியிருக்கு! முதல்லே மரியாதையா நீ கொடுத்ததை வாங்கிக்கிறியா இல்லையா...!

சுமி: அடச்சே... (போகிருள்... ... அவனும்போக...... அவள் திரும்பி வந்து)

சுமி: ஐயய்யே! உன்னைத் தான்யா தேடிவந்தேன்.

முடி: என்னையா...? அதுவும் என்னைத் தேடியா...? ஐயோ! எனக்குத் தலைகால் புரியலையே... மயக்கம் வருதே!

சுமி: ஏய்யா, கழுத்தை அறுக்கிறே...!

முடி: கழுத்தை அறுக்கிறதா... ஊஊம்... கழுத்தை இறுக்கிறது...

சுமி: இறுக்கிறதா...! சுருக்குக் கயிற்றைப்போட்டா...

முடி: சே, சே... மஞ்சள் கயிற்ருலே உன்கழுத்தை இறுக்கி... உன்னைக் கொள்ளை அடிச்சு...

(சுமித்திரை பக்கத்திலிருந்த பூந் தொட்டியை எடுத்து ஓங்க அவன் ஓட- சுமித்திரை போய்த் திரும்பி)

சுமி: நில்லுய்யா... நில்லுய்யா...

முடி: என்ன நீ கெஞ்சிளு மிஞ்சிறே ... மிஞ்சிளு கெஞ்சுறே... விளையாடுறியா...?

சுமி: ஐயா, எங்கேபோவுது? ...சாயங்காலம் பார்க்கலாமா...?

முடி: ஐயா இப்போ சக்கரவர்த்திக்குத் துணையா ஒரு இடத்துக்குப் போவுது... ஒருவேளை அங்கிருந்து வெளியூருக்குப் போனலும் போவுது ... போய்ட்டு வந்து பார்க்குது...

[திரை]

## காட்சி 12

களம்: காடு. காலம்: மாலை.

உறுப்பினர்: குலோத்துங்கன், பாண்டியஒற்றன், முடி கொண்டான்,

(குலோத்துங்கன் புனைவடிவத்தில் கையில் வே-லோடு நிற்கிறார். எதிரே பாண்டியஒற்றன் வேகமாக வருகிறான்... கத்தியற்றவேலை மன்னன், ஒற்றன் தோளில் குத்த — அவன் விழ — உடனே குலோத்-துங்கன் பிடித்துக்கொண்டு)

குலோ: ஏய்! யார் நீ?

ஒற்: நான் வழிப் போக்கன்...

குலோ: எங்கு நோக்கிச் செல்கிறாய்...?

ஒற்: வேங்கியை நோக்கி...

குலோ: எதற்காக?

ஒற்: தேவையில்லாத கேள்வி. வழிப்பறிக் கொள்ளைக் காரனான உனக்குத் தேவையான எதுவும் என்னிட-மில்லை. என்னை விட்டுவிடு...

குலோ: [சிரித்து] வழிப்பறிக் கொள்ளைக்காரன்! குலோத்துங்கர் ஆட்சியில்முதன் முதலாகக்கேள்விப் படும் சொற்கள்.

ஒற்: பின்னென்ன? இப்படி நிகழ்வதும் அவருடைய ஆட்சியில் இதுதான் முதல்தடவை.

குலோ: இரண்டகக் காளான்கள் முளைக்கும் போது கள்ளரும் காவலரும் ஒன்றுதான் ...சரி, உன்னிடம் என்னென்ன இருக்கின்றனவோ அவற்றை என்னிடம் காட்டிவிடு.

ஒற்: என்னிடம் ஒன்றுமில்லை.

குலோ: பொய்க்கும் போர்வையோ? [அவன் மூடி-யிருக்கும் போர்வையை நீக்கி, இடுப்பை ஆராய்ந்து ஓர் ஓலையை எடுக்கிறான்]...இது என்ன?

ஒற்: செய்தி.

குலோ: யாருக்கு?

ஒற்: வேங்கியிலிருக்கும் சோழ இளவரசர் விக்கிர-மர்க்கு!

குலோ: ஓ! சோழ இளவரசர்க்கா? யாரது? [பாண்டிய ஒற்றன் திரும்பிப் பார்க்கிறான். அந்தநேரத்தில் குலோத்துங்கன் ஓலையை மாற்றி விடுகிறார்] இதை யேன்முன்னமே கூறவில்லை...இதோ உன் ஓலை... பாதுகாப்பாகப்போய் வா... [சற்றுப் போய்] நடந்தா போகிறாய்?

ஒற்: இல்லை. இன்னும் கொஞ்ச தொலைவில் குதிரை பெற்றுக் கொள்வேன்.

குலோ: போ...போ... [அவன் போனதும்] ஏமாளி! ஓலை மாறியதைக் கூடக் 'கவனிக்காமல் போகிறான். சரி! ஓலையைப் படித்துப் பார்க்க வேண்டும்.

(எதிரே முடிகொண்டான் வருகிறான்) முடிகொண்-டவா? என்ன விளக்கோடு... ...

முடி: தங்கள் குறிப்பறிந்து கொண்டு வந்தேன்.

குலோ: விடுதியில் அல்லவா இருக்கச் சொன்னேன்!

முடி: இருந்தாலும் மனம் கேட்கவில்லை. உங்களை நிழல் போலத் தொடர்ந்தேன்.

குலோ: ஊம்......உன் அன்பே அன்பு......சரி! விளக்கைக் காட்டு (ஓலையைப்பிரித்துப் படிக்கிறார்)

''கலிங்க வேந்தர் அறிவது......

சோழரின் புதிய படைத் தலைவன் கருணாகரனே கோட்டை கட்ட வருகிறான். அவனைச் சோழச் சக்கரவர்த்தியே அனுப்பி வைக்கிறார். பின்னால்

அவனைக் கொண்டே அக்கோட்டையை இடித்தெறிய எண்ணியிருக்கிறார். உடனே, கருணாகரனைக் கொன்று குலோத்துங்கனுக்குச் சினமூட்டிப் போர்க்களத்திற்கு ஆயத்தமாகுங்கள். மற்றவற்றை இங்கிருந்து நானே கவனிக்கிறேன். நாம் போருக்கான பணியில் தீவிரமாக ஈடுபட்டால் இதுசமயம் வெற்றி உறுதி. குலோத்துங்கன் மகன் இராசராசன் நம்கையாள்.''

—பராக்கிரம பாண்டியன்—

ஊம்......சோழப் புலியின் பிள்ளை துரோக எலியாகி விட்டது. சரி! நான் எழுதித்தரும் ஓலையைக் கலிங்க வேந்தன் அனந்தவர்மனிடம் சேர்த்து விடு.........
வா.........

[திரை]

## காட்சி 13

களம்: கலிங்க அரசவை காலம்: முற்பகல்.

உறுப்பினர்: அனந்தவர்மன், அனந்த பாலையன், எங்கராயர், கருணாகரன், முடிகொண்டான், அருள் மொழி, பாண்டிய ஒற்றன், வீரன், கார்க்கோடகன், வாயிற் காவலன்.

அனந்: கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து குலோத்துங்கனுக்குத் தெரிந்து, காஞ்சிக்கு வந்து உங்களை மடக்குமளவிற்கு மடத்தனமாக நீங்கள் நடந்து கொண்டிருக்கிறீர்கள்...அப்படித்தானே?

அ. பாலை: இல்லை வேந்தே! அதிகப்படியான ஒற்றர்களை அங்கு இறக்குமதி செய்ததுதான் சிக்கலுக்கு இடம் தேடித் தந்து விட்டது.

அனந்: அதுசரி; கோட்டையைக் கட்ட நீர் கொண்டு

வந்த கருணாகரன் எனும் பல்லவத் தளபதியே போதுமானவன் என்கிறீரா?

அ. பாலே: ஆம்! கருணாகரர் என்னைக் காப்பாற்றிய தீரம் அவருடைய பண்பு இவற்றைப் பார்க்கும் போது, எனக்கு நம்பிக்கைதான். சோழ அரண்மனையில் அவமானப்பட்டு விட்டாராம். கலிங்க ஒற்றர் மூலம் கேள்விப்பட்டு என்னைக் காண வந்த போதுதான் என்னைக் காப்பாற்றினார். உண்மையில் கருணாகரர் ஒரு வீரர்தான்.

அனந்: பல்லவர் சிற்பத்திறனை மல்லையே சொல்லும். ஆயிரம் நிலவுகளைக் கண்ட மாமல்லபுரம், பல்லவரின் அருமையான திறமைதான். இருந்தாலும் காட்டிக் கொடுக்கும் மனப்பான்மையில் கருணாகரன் வந்திருந்தால்......?

அ.பாலே: இல்லை, நம்முடன் சேர்ந்து சோழராட்சியை முறியடித்து, அதற்குப் பரிசாகக் காஞ்சியை உங்களிடமிருந்து பெறுவதுதான் அவர் திட்டம்.

அனந்: எப்படியோ! கோட்டை பலமற்ற நமக்குப் புதுமையான, போர்த்தாக்குதலைத் தாங்கும் கோட்டை வேண்டும். அதைப் பல்லவக் கருணாகரனே முடிக்கட்டும். ஆனால், நல்லவன் போல் நடித்து நமக்கே புல்லுருவியானால் உடனே கொல்லவும் தயங்க மாட்டேன். சொல்லிவையும் அவனிடம்.

எங்க: வேந்தே! வீரர்கள் தேவையென்றால் மகேந்திர மலை வேடுவக் கூட்டத்தை வயப்படுத்தலாம். அங்கே இரண்டு பிள்ளைகள் உள்ள வீட்டில் ஒருவனைத் தேர்ந்து எடுக்கலாம்.

அனந்: ஊம்... சரி ... நல்ல திட்டம்தான் ... அனந்த பாலையா! முதலில் நான் கருணாகரனைப் பார்க்க வேண்டும்.

கார்க்: (கார்க்கோடகன் வருகிருன்) அரசே! பாண்டியர் தூதுவர் வந்திருக்கிருர்...

அனந்: வரட்டும்....

(கார்க்கோடகன் போகிருன். பாண்டியர் தூதுவன் வருகிருன்)

பாண் ஒற்: வணங்குகிறேன் கலிங்க வேந்தே! நான் பாண்டிய வேந்தர் திரிபுவன சக்கரவர்த்தி பராக்கிரம பாண்டியரின் தூதுவன். இதோ திருமுகம்.

(அவன் ஓலையைக் கொடுத்துவிட்டுப் போகிருன். அனந்தவர்மன் ஓலையைப் படிக்கிருன்)

"கலிங்க வேந்தர் அறிவது....

கருணுகரன் அங்கு வந்திருக்கிருன். மிகவும் திறமை வாய்ந்தவன்; போர் முறைகளில் புலி என்ருலும் நம்முடைய பகைவனிடமிருந்து வந்திருப்பவன் என்ற முறையில் அவன்மீது எப்போதும் ஒரு கண் இருக்கட்டும். தங்களுக்கு ஆக வேண்டிய செயலை அவனைக் கொண்டே முடித்து, கடைசியில் கொன்று விடுவதே நல்லது. குலோத்துங்கன் மகன் இராசராசன் நம் பக்கம்தான்."

—பராக்கிரம பாண்டியன்—

(ஓலையை எங்கராயரிடம் கொடுத்துவிட்டு)

நல்லது அனந்தபாலையா! நீரே சென்று கருணுகரனை அழைத்து வாரும்.

(பாலையன் போய்ப் பின் கருணுகரனேடு வருகிருன். கருணுகரன் தலைகுனிந்து வணங்குகிருன்)

அனந்: கருணுகரரே! உம்மைப் பற்றிக் கேள்விப் பட்டேன். நான் நாடியதும் உம்மைப் போன்ற வீரரைத்தான். உம்...கோட்டை அமைப்பை உருவாக்கி, நம் நாட்டுச் சிற்பிகளின் மூலம் எழுப்ப முடியுமல்லவா?

கருணா: கலிங்கக் காவலரே! வடக்கிலும் சரி, தெற்கிலும் சரி! எவரும் காணாத அற்புதக் கோட்டையை உருவாக்க என்னால் முடியும். தங்களின் ஒத்துழைப்பும், நல்லாதரவும் எனக்கிருக்குமானால் நான்காண்டுகளிலேயே கோட்டையை முழுமை பெறச் செய்கிறேன்.

அனந்: நல்லதுதான்......ஒரே ஒரு கேள்வி.

கருணா: தாராளமாகக் கேளுங்கள். தயங்காமல் விடை தருகிறேன்.

அனந்: சோழநாட்டை விட்டு இங்கு வந்தது ஏன்?

கருணா: அது ஒரு வெறியாட்டம். இங்கு வந்தபின் நான் ஆற்றப்போகும் செயலில்தான் இருக்கிறது அதன் வெற்றியும்-வெகுமதியும்.

அனந்: அப்படியா? சோழர் ஒரு தன்னல வாதியா?

கருணா: என்னைப் பொறுத்தவரை அவரால்தான் நான் இந்த நிலைக்கு ஆளாகி இருக்கிறேன். என் எண்ணம் ஈடேறினால் உங்களின் மீது பாடப்படும் கலிங்கத்துப்பரணிக்கு நானே காரணமாக இருப்பேன்.

அனந்: நல்லது. நாளைக்கே வேலையைத் தொடங்கலாம். உமக்குத் துணையாக அமைச்சர் எங்கராயர், படைத்தலைவர் அனந்த பாலையன் இருவரும் இருப்பர்.

இப்போது...[வீரன் ஒருவன் தள்ளிவிட முடிகொண்டான் வந்து விழுகிறான்]

எங்க: ஏன்? என்ன? யாரிவன்?

வீரன்: யாரோ ஒற்றனாம்! நேர்வழியே வராமல் அங்கங்கே சுற்றிக் கொண்டிருந்தான்.

எங்க: அடிபட்டிருக்கிறானே...அந்த அளவுக்கு...?

வீரன்: முரண்டு பிடித்தான்...அதனால்...

[அனந்தவர்மன் காலால் புரட்டுகிறான்— வீரன் போகிறான்...கருணாகரன் விழுந்தவன் முகத்தைப் பார்த்து "ஆ" என்று கூறிப் பின் உணர்ச்சியை மறைத்து விடுகிறான்]

அனந்: யார் நீ?

முடி: நான்...நான்...[உடனே ஓர் ஓலையை நீட்டு-கிறான்]

[அனந்தவர்மன் ஓலையைப் பார்த்துவிட்டுப் பாலை-யனிடம் தருகிறான். அருள் மொழி நுழைகிறாள்--கருணாகரன்மீது கண்களை ஓட விடுகிறாள்]

அருள்: வேந்தர் மன்னிக்க வேண்டும். வந்த நேரம் சரியல்லவென்று நினைக்கிறேன்...[திரும்பிப் போக முயல்கிறாள்]

அனந்: அருள்மொழி...... [அவள் திரும்பி வந்து, மீண்டும் கருணாகரனைப் பார்க்கிறாள்]

ஏதேனும் செய்தி உண்டா? [அருள்மொழி கருணா-கரனைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்]

யாரங்கே?... (வீரன் ஒருவன் வருகிறான்)

கருணாகரரை அவர் மாளிகைக்கு அழைத்துச் செல். இந்தத் தூதுவனையும்கூட்டிப்போ![அவர்கள் போகி-றார்கள்]

அருள்மொழி! ...ஏதேனும் செய்தி இருந்தால் சொல்லலாமே...

அருள்: நீங்களே சொல்லுங்கள்...

அனந்: பாலையா...! கருணாகரன் கைத் திறமையை நாம் கடைசிவரை பயன்படுத்த வேண்டும். அப்-போதுதான் திட்டம் நிறைவேறும். ஆனால் அவ-னுடைய உண்மையான நோக்கத்தைக் கண்டு பிடிக்கத் துப்பும் அறிய வேண்டும்.

பாலே: ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?

அனங்: கடிதத்தை நீயே படி!

அ.பாலே: "கலிங்க வேந்தர்க்கு......

இப்போதைய நிலேயில் பராக்கிரம பாண்டியரையோ பிறரையோ நம்புவதைவிடக் கருணைகரனே நம்புவ-தில் நன்மை இருக்கிறது. சரியான மூலபலத்துடன் போரைத் தொடங்கும்போது என்னுடைய ஆதரவு உங்களுக்கு உறுதியாகக் கிடைக்கும். அதனுல் கருணைகரனே வயப்படுத்தப் பாருங்கள்"

—இராசராசன்—

(பாலேயன் படித்துவிட்டு எங்கராயரிடம் தருகிருன்)

அ.பாலே: பராக்கிரம பாண்டியரோ கடைசியில் கொன்று விடச் சொல்கிருர். இந்த இராச-ராசனே வயப்படுத்தச் சொல்கிருன். இரண்டுமே சரிதான்.... இப்போது என்ன செய்யலாம் என்று நினைக்கிறீர்கள்?

எங்க: நினைப்பதென்ன? கருணைகரனேத் தேர்ந்துதெளி வதுதான் நல்லது. இல்லாவிட்டால் தீராத துன்பம் வந்து சேரும். கருணைகரன் நம்மை ஏமாற்றுவதும், நாம்ஏமாருமலிருப்பதும் நம்கையில்தான் இருக்கிறது

அனங்: நம் கையில் எதுவுமில்லே. எல்லாம் அருள் மொழி கையில் தான்.

அருள்: என் கையிலா? (கைகளே உற்றுப் பார்த்து) என்கைகளிலும் பத்துவிரல்கள் தானே இருக்கின்றன.

அனங்: இந்தத் திறமை போதும்... அருள்மொழி! கன்னேசி இளவரசன் கோவிந்தசந்திரன் கலிங்கத்-தின் மீது படையெடுத்த போது அவனேடு போ-ரிட்டு வென்றுகலிங்கத்தைக் காப்பாற்றியவன் உன் அண்ணன். நம்முடைய போதாத காலம் அவன் உலகை விட்டுப் போய்விட்டான். உன்வாழ்வைச்

சிறக்கச் செய்ய வேண்டியது என்பொறுப்பு. அதே நேரத்தில் அரசுப்பணிகளில் அல்லல்படும் எங்க-ளுக்கு ஆறுதல் தரும் சில உதவிகளை நீ செய்ய-லாமா?

அருள்: என்னால் முடிந்த எதையும் செய்யத் தயங்க மாட்டேன்.

அனங்: அருள்மொழி! இந்தக் கருணாகரன் இருக்-கிறானே ... ...

அருள்: யாரது... ...?

அனங்: சற்று நேரத்திற்கு முன்னால்இங்கு நீ சந்திக்க வில்லை?

அருள்: ஓ! அந்த ஆளா! நான்சரியாகப் பாரக்க-வில்லையே!

அனங்: இப்போது நீ அவனைத் தனியாகப் பார்க்கப் போகிறாய்.

அருள்: தனியாக என்றால்... ...

அனங்: அதாவது! கருணாகரன் உண்மையாகவே சோழ நாட்டை வெறுத்து இங்கு வந்து சேர்ந்திருக் கிறானா அல்லது உள் நோக்கம் ஏதாவது வைத்துக் கொண்டு நம்மோடு உறவாடுகிறானா......... இதைக் கண்டு பிடிக்க வேண்டும்.........

அருள்: இந்த நோக்கமெல்லாம் அவருடைய நெஞ்சத் தில் அல்லவா இருக்கும்.

அனங்: அதைத்தான் கண்டு பிடிக்கவேண்டும்.

அருள்: ஊம்......! பார்க்கிறேன். அவர் நெஞ்சத்தைக் களவாடிக் கொண்டே வந்து விடுகிறேன். சரிதானா?

அனங்: எதுவும் உன்திறமை...உன்னால் முடியாதது இந்தநாட்டில் எதுவுமில்லை. கலிங்கத்துக்கு உன் கடமையைச் செய்யக் கருணாகரனோடு பழகப்

போகிருய். கவனமாக, அதிலும் பக்குவமாகப் பழகி உண்மையைத் தெரிந்துகொண்டுவா ...... போ-

(அருள் மொழி போகிருள்)

அனங்: அனந்த பாலையா! இனி நமக்குவெற்றி தான்.

அ·பாலை: ஒரே ஒரு இடம் கவனிக்க வேண்டும்.

அனங்: என்ன இடம்?

அ·பாலை: ஒன்றுமில்லை. அருள்மொழி, கருணுகரனை வயப்படுத்தப்போய் அவன் இவளை வயப்படுத்தி விட்டால்......

அனங்: நடக்கவே நடக்காது......! அருள்மொழி திறமைமிக்கவள். அப்படியே காரியம் மிஞ்சிஞல் இரண்டாவது திட்டமும் வைத்திருக்கிறேன்.

[திரை]

## காட்சி 14

களம்: கடற்கரை காலம்: முற்பகல்

உறுப்பினர் : கருணுகரன், அனந்தவர்மன், எங்கராயர்.

[கருணுகரன் கூடாரம் ஒன்றில் அமர்ந்திருக்கிருன். அனந்தவர்மன், எங்கராயர் நுழைகின்றனர்]

கருணு: ஏது நீங்களே வந்து விட்டீர்கள்! என்ன அப்-படி அவசர காரியம்? கூப்பிட்டு இருந்தால் நானே வந்திருக்க மாட்டேனு? உட்காருங்கள்..........

அனங்: ஒன்றுமில்லை. கோட்டையைப் பற்றிய திட்டத்-தைப் பார்க்க வேண்டுமென்று ஆசை வந்தது. உடனே ஓடிவந்தோம்.

எங்: கோட்டை பற்றிய விளக்கப்படம், திட்டம் எல்லாம் தயாராகி விட்டனவா?

கருணு: பின்னே? திட்டம்இல்லாமல் செயலில் இறங்கு வேனு! தயாராக வைத்திருக்கிறேன். உட்காருங்கள்...

[அவர்கள் உட்காருகின்றனர்- கருணுகரன் எடுத்துக் கொடுக்கிருன்-இருவரும் பார்க்கின்றனர்.]

அனங்: பல்லவத் தளபதியே! இந்த அமைப்பே பூரிப்பைத் தருகின்றது. அமைப்பைப் போல் கோட்டையை உருவாக்க முடியுமா?

கருணு: கொட்டிக் கிடக்கும் செங்கல்லேப் பார்த்தே இவ்வளவு வியப்படைகின்றீர்கள். அதுவே கட்டி முடித்த கோபுரமாகி விட்டால் ...... வேந்தே! கோட்டையின் சிறப்பு தாங்கள் என்னிடம் கொடுக்கும் ஆட்களேப் பொறுத்தது.

அனங்: ஆட்கள் என்ருல்......?

கருணு: அதாவது வழிமுறைகளேப் பகைவர்களிடம் சொல்லிவிடாத ஆட்கள்......

எங்: நீங்களே ஒரு வழி சொல்லுங்கள்......

கருணு: முதலில் அகழி வேலே; பிறகு அரண்; அதன் பிறகு தான் உள்வேலே. அதாவது சுரங்கப்பாதை...... இதில் வேலே செய்யும் ஆட்களின் கண்களேக் கட்டி விட வேண்டும்; பாதாளச் சிறையில் பூட்டப்பட்டி-ருக்கும் ஆட்களேயே இந்தப் பணிக்குப் பயன்படுத்-தலாம்......

எங்: ஆகா! தனிமனிதனுக்கு விடுதலே கொடுத்தது போலவும் இருக்கும்.

கருணு: இந்த ஆட்கள் மட்டும் போதாது; அதனுல் வெளியிலிருந்து சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களே வேலே வாங்கிக் கொண்டு பிறகு பாதாளச் சிறையில் தள்ளி விடலாம் ......

எங்: இது நேர்மையாகாது. நம்மைப் பற்றிக் கேவல-மாகப் பேசுவார்கள்......

அனங்: அந்தக் கவலே நமக்குவேண்டா. கருணுகரரே உங்கள் நோக்கப்படியே செய்யுங்கள். அப்புறம்...

கருணு: இந்த முறையில் ஆட்களைத் தேர்ந்தெடுத்-தால் நம் கோட்டையும் போட்ட திட்டமும் மெல்ல மெல்ல ஆனுல் உறுதியாக நிறைவேறிவிடும்...

எங்: சரி! கோட்டையின் வடப்புற வாசலில்ஒருகிணறு இருக்கின்றதே, எதற்காக?

கருணு: அறுபதடி ஆழமுள்ள இந்தக் கிணற்றில் இறங்கினுல் நேரேநிலத்திற்கு அடியில் உள்ள சுரங்-கத்தில் கொண்டுபோய்விடும். மிகவும் இக்கட்டான நிலை ஏற்பட்டுவிட்டால் கோட்டையைவிட்டு வெளி யேற இந்த வழியைப் பயன்படுத்தலாம். இதில் இறங்கினுல் நேரே மகேந்திர மலைக்குக் கொண்டு போய் விடும்...

அனங்: ஆகா...! ஆகா...! என்னதிறமை ...! என்ன திட்டம்...!

எங்க: ஆமாம் ... கோட்டை என்ருல் அதற்கு நான்கு வாயில்கள் தானே?

கருணு: ஆமாம்...

எங்க: பின், நம் கோட்டைக்கு மட்டும் ஏன் எட்டு வாயில்கள்?

கருணு: அதுதான் நம் திறமை! குணக்கு, குடக்கு, வடக்கு, தெற்கு ஆகிய திசைகளிலும் வேறு மூன்று திசைகளிலும் தெரியும் வாயில்கள் போலிவாயில்கள். வடகுடக்கில் உள்ள ஒன்று மட்டுமே உண்மை-யானது.

அனங்: அது ஏன்?

கருணு: பகைவர் படையெடுத்தால் இந்த எட்டாவது வாயிலைக் கருங்கல் சுவரால் அடைத்துவிடலாம். வரும் பகைவர்கள் முதலில் குணக்கு வாயிலையும் அடுத்து குடக்கு வாயிலையும்தான் இடிப்பது வழக் கம். வடகுடக்கில் ஒரு வாயில் இருப்பதாகக் கற்பனை

கூடச் செய்து பார்க்கமாட்டார்கள். பிறவாயில்களை உடைத்து உள்ளே பார்த்தால் வழி இருக்காது. நீண்ட நெடுஞ்சுவர்தான் நிற்கும். இந்த ஏழுவாயில் களையும் சுற்றிச்சுற்றி அலைந்து இடித்து, இடித்து அலுத்து எட்டாவது வாயிலில் வந்து மோதினுல் கட்டோடு அழிக்கவும் ஒரு திட்டமுண்டு.

அனங்: அது என்ன?

கருணு: எட்டாவது வாயிலுக்கு முன்னுல் அறுபது அடி ஆழத்தில் அகழி. அகழிக்குள் பசியால்அலறித் துடிக்கும் ஆயிரம் முதலைகள்; அந்த இடத்தில் பகைவர்கள் விழுந்தால், சுழற்றி எறியப் பயங்கர-மான சுழிப்பள்ளம்; பள்ளத்தில் வீழ்ந்தும் பணி-யாமல் பாய்ந்து மேலே வரும் பகைவர்களை மீண்-டும் வெள்ளத்திலே தள்ளி மென்னியை முறிக்க வழுக்குப்பாறைகள். இன்னும்.........

அனங்: போதும்! போதும்! எங்களுக்கே மயக்கம் வருகின்றது. இனிக் கேட்கவே வேண்டா. கட்டும் போது நேரில் கண்டால் போதும். வேலையை உடனே தொடங்குங்கள். உம்மை முழு மனதுடன் நம்புகின்றேம்.

[இருவரும் போகின்றனர்]

கருணு: [தனிமொழி] கருணுகரா! குலோத்துங்கர் அமைத்துத்தந்த கோட்டை அமைப்பைக் காட்டிக் கலிங்கனை மயக்கிவிட்டாய். அதை வெற்றியுடன் நிறைவேற்ற வேண்டும். வேந்தனின் சிந்தனையை மறந்து விடாதே...

ஊம்... இரண்டு சுரங்கப் பாதைகளைப் பற்றிக் கலிங்க வேந்தனுக்கு விளக்கம் சொல்லிவிட்டேன். மூன்ருவது சுரங்கப் பாதை... ஊம்! அதுதான் நமது பாதை...ஆகட்டும் பார்க்கலாம்...

[திரை]

# காட்சி 15

களம்: கருணுகரன்கூடாரம் காலம்: பகல்

உறுப்பினர்: கருணுகரன், முடிகொண்டான், அருள் மொழி, வாயிற்காவலன்

[சிந்தனையிலிருக்கும் கருணுகரன் தானே சிரித்துக்கொள்ளுகிருன்.]

காவலன்: ஐயா...!

கருணு: ஊம்...ஊம்...ஓ! நீயா! என்ன?

காவ: யாரோ தங்களைப் பார்க்கவேண்டுமாம். காவி யுடை; கையில் சுக்குமாந்தடி...வரச்சொல்லவா?

கருணு: உள்ளே அனுப்பிவை...

[காவலன் போகிருன். முடிகொண்டான் துறவிக் கோலத்தில் நுழைகிருன்.]

முடி: நமப் பார்வதீபதே...கோவிந்தநாம சங்கீர்த்தனம்! கோவிந்தா! கோவிந்தா!

கருணு: சுவாமிகள் எதை நம்பி இங்கு வந்ததோ?

முடி: யானையை நம்பலாம்......வீட்டுப்
பூனையை நம்பலாம்......காட்டு
மானையும் நம்பலாம்......தலைப்
பேனையும் நம்பலாம்......சட்டி
பானையை நம்பலாம்........ஆனல்
சேலைகட்டிய மாதரை நம்பினுல்......
''தந்தனுப் பாட்டுப் பாடனும்...தைத்தோம்
தாளம் போடனும்...தந்தன...தந்தன...

கருணு: அடப்பாவி! முடிகொண்டவா? நீதானு? உன் குரலே காட்டி விட்டதே...என்ன இது கோலம்?

முடி: எல்லாம் தங்கள் மேல் வைத்த நாட்டம் தான்.

கருணு: முடிகொண்டவா! உன்னைப் பற்றித்தான்

சிந்தித்துக் கொண்டிருந்தேன். நான் தேடிச் சென்ற தெய்வம் என்னையே நாடி வந்தது போல்...

முடி: என்னையா நினைத்தாய்? எங்கே மறந்து போய் விட்டதோ என்று நினைத்தேன்.

கருணு: மறப்பதா...?

முடி: ஊம் ...கலிங்கனின் அவையிலே வந்து விழுந்த என்னைக் கூடக் கவனிக்காமல் ஒரு பெண்ணின் கண்ணையே கவனித்து...

கருணு: மூடு வாயை! ஏனடா இல்லாததெல்லாம் சொல்லுகிருய்?

முடி: நண்பா! பெண்கள் உலகத்தின் கண்கள்தான். முறை தவறிய பாண்டிய இறைவன்முன் தன் குறை-யை வெளியிட்டு நிறைவு கண்ட கண்ணகி! தந்தை-யும் தமையனும் தன் கணவனும் போர்க் களத்தில் மடிந்தபோது தன் குழந்தைக்கு வாள் தந்து போர்க் களத்திற்கு விடுத்தாளே புறநானூற்றுத் தாய்! இவர்கள் எல்லாம் ஒருவகை. ஆனுல் சிலர்.

கருணு: ஊம் ... சிலர் ...

முடி: கருணுகரா! சில பெண்கள் இருக்கிருர்கள். அவர்களின் அலைஅலையான கூந்தல் அழகைப் பார்த்திருக்கிருயா? ஆடவர்தம் கொள்கைகளையும் எண்ணங்களையும் ஒவ்வொன்ருக உருவித் தம் கூந்தலின் பின்னலாக்கி முதுகிலே புரளவிட்டிருக்-கிருர்கள். அது மட்டுமா? அவர்கள் கூந்தலிலே சூடிய பூ இருக்கிறதே அது பூ அல்ல. பல ஆடவர் களின் உயிரைக் கொத்தி எடுத்துக் கொத்தாகத் தொடுத்துச் சூடியிருக்கிருர்கள். அவர்கள் கண்ணுக்-குத் தீட்டும்மை ஆடவர்களின் நெஞ்சாங்குலையை எடுத்து அம்மியில் வைத்து அரைத்து அதன் குழம்-பைக் கொண்டு தீட்டியது.

கருணு: போதும்! போதும்! நிறுத்து.

முடி: நண்பா! நடக்க வேண்டியதைப் பேசுவோம். நான் சக்கரவர்த்தியின் தலைமை ஒற்றன். ஆணை தவறக் கூடாதவன். என்னுடைய வாய்க்கு வேலை கொடுத்து விடாதே.

கருணு: சொல்ல வேண்டியதைச் சொல்லு...

முடி: உன்னைச் சந்திப்பதற்காகவே இன்னும் போகாமலிருக்கிறேன். உன்னை நால்வகைப் படையும், வேல்களும், வாள்களும் மின்னும் போர்க்களத்தின் நடுவே துணிந்து அனுப்பிவிட்டுத் துயரம் சிறிதுமின்றி ஊர் திரும்புவேன். ஆனால்...வேல் விழிகள் இரண்டுக்கு முன்னால் உன் வீரம் மண்டியிட்டு விடுமோ என்று தயங்கித் தயங்கி நிற்கிறேன். கருணாகரா! நிலைமையை நினைத்துப்பார்...கலிங்கனிடம் கவனமாக இரு! ஆபத்து தலைகாட்டும் போது அந்த நொடியே தப்பித்துக் கொள்...நீ நிற்குமிடம் நெருப்பாற்றுக்கு மேலே உள்ள மயிர்ப் பாலம். பக்குவமாக நட...இதுவே நம் சக்கரவர்த்தியின் எண்ணமும் கூட.

கருணு: உண்மையில் சோழச் சக்கரவர்த்தியின் சிந்தனை ஓர் அரசியல் சதுரங்கம் தான்...

முடி: அதை வெற்றி பெறச் செய்வது நம் கடமையல்லவா?...

கருணு: ஆம்! நமது கடமைதான்.

முடி: அதனால்தான் 'கவனம்' என்று முதலில் எச்சரித்தேன். கருணாகரா! கலிங்கன் என்னைக் காலால் புரட்டும்போதுகூட நான் கவலைப்படவில்லை. ஆனால், அந்தக் காரிகை உன்னைக் கண்களால் புரட்டும்போதுதான் பெரிதும் வருத்தப் பட்டேன். மதுராந்தகி தேவியாரிடம் நீ கொடுத்த வாக்குறுதி...

கருணா: மறக்கவில்லை... மறக்கமாட்டேன்.

முடி: இருந்தாலும் நினைவூட்ட வேண்டியது என் கடமை. கலிங்கத்தில் எந்தப் பெண்ணையும் தீண்டாமல் திரும்ப வேண்டும். நினைவிருக்கிறதா?

கருணா: "கைகளால் தானே தீண்டக்கூடாது" கண்களால் பார்க்கவும் கூடாதா...

முடி: கண்கள் கைகளாக மாற நெடுநேரம் பிடிக்காது. சரி! விடை கொடு. நான் புறப்படுகிறேன்.

கருணா: யாரிடமும் அகப்பட்டுக் கொள்ளாமல் போய்வா!

முடி: [போய்த் திரும்பி] கவனம்...

(கதவைத்திறக்கிறான் ... அருள்மொழி நிற்கிறாள் ... முடிகொண்டான் பின்னே வருகின்றான்)

அருள்: சோழநாட்டு ஒற்றரே! என்னைப் பற்றிய பேச்சு நடக்கிறது போலிருக்கிறதே.........

முடி: இல்லையே! ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்ல மாட்டோமே நாங்கள்...

அருள்: சரி! போகட்டும்! யாரிடமும் அகப்படாமல் போக இதோ நாகம் பொறித்த இலச்சினை! இந்தக் கலிங்கம் முழுவதும் கவலையின்றி நடக்கலாம்.

(கருணாகரனை நோக்குகிறாள் ... கருணாகரன் தலையாட்டி வாங்கச் சொல்கிறான் ... முடிகொண்டான் வாங்கிச் செல்லுகிறான்!)

(கருணாகரன் வாளை உருவுகிறான்)

அருள்: வாளென்ன செய்தது? வீணாக ஏன் அதை மிரட்டுகிறீர்கள்?

கருணா: இவ்வளவு நேரம் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த உங்களுக்கு வழங்க வேண்டிய தண்டனையை இந்த வாள் நினைவூட்டுகிறது.

அருள்: ஐயோ பாவம்! உங்களைப்பற்றிய விவரங்களை ஒட்டுக் கேட்டுத் தான் தெரிந்து கொள்ள வேண்டுமென்றில்லை. இதைவிட இன்னும் முக்கியமான செய்தியெல்லாம் முன்பே தெரியும்; முழுமையாகத் தெரியும்.

கருணு: என்னதான் அப்படி முக்கியமோ?

அருள்: சொல்கிறேன் . . . .தண்ணீர் இருக்கிறதா . .?

கருணு: ஏன், தொண்டை அடைத்துக் கொண்டதோ . . . .!

அருள்: இல்லை . . . நான் சொல்லப் போவதைக்-கேட்டு நீங்கள் மயக்கம் அடைந்து கீழே விழுந்தால் உங்கள் முகத்தில் தெளிக்க . . .

கருணு: விளையாட வேண்டாம்; சொல்லுங்கள்

அருள்: சோழ சக்கரவர்த்தி குலோத்துங்கரே உங்களை அனுப்பி வைத்த மறைமுகத்தை நான் அறிவேன்.

கருணு: ஆங் . . .

அருள்: அதுமட்டுமா? உங்கள் அண்ணன் காலிங்க-ராயர், தங்கை இளவேணி எல்லோரையும் தெரியும்.

கருணு: சதிகாரர்களே!

அருள்: சதிகாரர்கள்...! நாங்களா? நீங்களா?...

கருணு: யாராக வேண்டுமானலும் இருக்கட்டும்... உங்கள் குறும்புக்கும் ஒருமுடிவு வரும்.

அருள்: வரட்டும்... வரட்டும்! எந்தக் கதையும் முடிந்துதானே தீரவேண்டும்.

கருணு: ஒன்று கேட்கிறேன் சொல்ல முடியுமா?

அருள்: ஊம்...

கருணு: என்னைப் பற்றிய செய்திகள் உங்களுக்கு எப்படித் தெரியும்?

அருள்: அதெப்படிச் சொல்ல முடியும்? அது அரசாங்க மறைமுகம் அல்லவா?

கருணா: நாம் என்ன அரசாங்கச் சார்பிலா சந்தித்துக்கொள்கிறோம்? கலிங்கவேந்தனுக்கு முன்னால் என்னை விழுங்கி விடுவதுபோல் பார்த்தீர்களே அது கூட அரசாங்கச் சார்பில் விட்ட தூதுதானா?

அருள்: ஓ! அதுவா! (நாணத்தோடு தலைகுனிகிறாள்)

கருணா: நான் உங்களுக்கு மிகவும் வேண்டியவன் என்ற நம்பிக்கையோடு சொல்லுங்கள்.

அருள்: சொல்கிறேன்! என்னிடம் உள்ள கையாள் உலகத்தையே பந்தாடிவிடக் கூடியவன். அவன் அறிந்து வந்ததை என்னிடம் கூறுவான். பிறகுதான் வேந்தரிடம் கூறுவான்.

கருணா: அந்த அளவுக்கு அறிந்து கூறும் வன்மையாளன் யார்?

அருள்: அவன்தான் கலிங்க நாட்டுக்கே தலைமை ஒற்றன். பெயர் கார்க்கோடகன்.

கருணா: என்னைப்பற்றி எல்லாமே... சொல்லி விட்டீர்களா?

அருள்: அச்சமா?... கவலைப்படாதீர்கள். இது வரையில் சொல்லவில்லை. இனிமேல் சொல்லவேண்டியது தானே!

கருணா: இனிமேல்... சொல்வதா! ஊம்... சரி! சொல்லத்தான் போகிறீர்கள்!

அருள்: ஊம்...ஊம்...

கருணா: என்முகத்தைப் பார்த்துச் சொல்லுங்கள்... நன்றாக என்னைப் பார்த்துச் சொல்லுங்கள்

நன்றாக...இன்னும்...நன்றாக...கொஞ்சம்......(இருவரது கண்களும் கூர்மையாகச் சந்திக்கின்றன)

அருள்: ஆ! உங்கள் கண்கள்...என்னல் தாங்க முடியவில்லை... என் கண்கள் சுழல்கின்றன... நெஞ்சு நடுங்குகிறது. கால்கள் தள்ளாடுகின்றன... என்னல் நிற்க முடியவில்லை. நிற்க (மயங்கி விழுந்து விடுகிருள்)

கருணு: ஐயய்யோ! மயங்கி விழுந்துவிட்டாளே... (ஓடித்தூக்கப் போகிருன்- மதுராந்தகியின் குரல் ஒலிக்கிறது)

குரல்: ''கலிங்கத்தில் எந்தப் பெண்ணையும் தீண்டாதே!''

கருணு: பட்டத்தரசியின் ஆணை......(திகைக்கிருன்) இருந்தாலும் ஆபத்துக்குப் பாவமில்லை

(தண்ணீர் எடுத்து முகத்தில் தெளிக்கிருன்)

எனக்குத் தெளிக்கத் தண்ணீர் கேட்டாள். அது தனக்கே தேவைப்படும் என்பதை அவள் அறியவில்லையே!

(அவளது தலையைத் தூக்கி நிமிர்த்துகிருன். அவள் மெல்லக் கண் விழிக்கிருள்.)

அருள்! ஆ! எங்கிருக்கிறேன்... என்ன நடந்தது?

கருணு: மெல்ல உன் அந்தப்புரத்திற்குப் போ! மெதுவாக நினைத்துப்பார்... தெரியும்.

(திரும்பிப் பார்த்துக் கொண்டே தளர்ச்சியுடன் நடந்து செல்கிருள்)

கருணு: (தனிமொழி) ஊம்... வல்லவனுக்கு வல்லவன் உண்டு என்பது எவ்வளவு உண்மை. உள் நோக்கத்தையே கண்டுபிடிக்கும் ஒற்றர்களும் இருக்கிருர்கள். எப்படியோ அருள்மொழி நம் உண்மை நோக்கத்தைத் தெரிந்து கொண்டாள். ஆனல் எதிர் பாராமல் என்னிடம் மயங்கியிருக்கிருள். என் காரியம் முடியும் வரை இந்த மயக்கம் தீர விடக்-

கூடாது. அவளோடு பழகி அவளை மயக்கி... தாயே! கடமையை ஆபத்து எதுவுமின்றி நிறைவேற்றக் காதலிப்பது போல் நடிக்கப் போகிறேன். என்னை மன்னியுங்கள்.

[திரை]

## காட்சி 16

களம்: சோலை காலம்: மாலை

உறுப்பினர்: கருணாகரன், அருள்மொழி

பண்: மோகனம்

ஆண்: சலசல சலவெனும் அருவி—அதில்
தன்னை மறந்தாடி மறுகி—உன்
தளதள உடலினை மருவி—நான்
தனிமை நிலைமாறி இனிமை மிகநாடித்
தணலிடை மெழுகாய் உருகி
தணலிடை மெழுகாய் உருகி... (சலசல)

பெண்: நினைக்க நினைக்க இதுஇன்பம்...ஓகோ...பிரிவு
நினைந்துவிட்டால் பெருந்துன்பம்... ஊஹூம்— இது

நெடுநாள் தொடர்ந்திடும் அன்பாம்—நான்
கனிந்து முதிர்ந்தாலும் மலர்ந்து மணந்தாலும்
காதலர் உமக்கே சொந்தம்
காதலர் உமக்கே சொந்தம் (சலசல)

ஆண்: இளமை துடித்து வரும் பருவம்...ஓகோ —எனை
ஏங்க வைக்கும் எழில் உருவம் - ஊஹூம்— நெஞ்சில்
ஓங்கி வளருதே கருவம்...நாம்
நிலவில் குளிர்தேடி நெகிழ்ந்து இசைபாடிக்
கடலில் விளையாடி வருவோம் - இன்பக்
கடலில் விளையாடி வருவோம். (சலசல)

## காட்சி 17

களம்: காலதேவர் மாளிகை காலம்: காலை

உறுப்பினர்: காலதேவர், விக்கிரமன், இளவேணி, முடி-கொண்டான், காவலர்

(காலதேவர் சிவபூசைக்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்க முடிகொண்டான் வருகிறான்)

கால: வானாகி...மண்ணாகி...வளியாகி...ஒளியாகி...

முடி: ஐயா! வணக்கம்..........

கால: வா! வா! நலந்தானா முடிகொண்டான்?

முடி: நலந்தான். என்ன ஏதோ பூசை ஏற்பாடு.

கால: ஒன்றுமில்லை. சிவ பூசை....

முடி: நான் ஒன்றும் கரடியில்லையே......

கால: அதெல்லாம் ஒன்றுமில்லை.... நெடுந் தொலைவு போய் வந்திருக்கிறாய்.... ஆர, அமர, நீ அறிந்து வந்துள்ள செய்தியைச் சொல்....

முடி: கலிங்கம் சென்று வர எவ்வளவோ தொல்லைகள் உற்றேன். இருந்தாலும் கடமை எல்லாத் துன்பங்களையும் மறந்துவிடச் செய்து விடுகிறது.

கால: மன்னர் குலோத்துங்கரைக் கண்டு செய்தியைச் சொல்லி விட்டாயா?

முடி: சொல்லி விட்டேன். அரசரிடம் சொல்ல வேண்டாத ஓரிரு செய்திகளுண்டு. அவற்றைச் சொல்லவே வந்தேன்.

கால: கருணாகரன் நலந்தானே...!

முடி: கருணாகரர் திட்டப்படி செயலாற்றி வருகிறார். திறமையாக நடித்து வருகிறார்; ஆனால்...

கால: ஊம்....

முடி: அருள்மொழி நங்கை என்று ஓர் அணங்கு அரசவையில் இருக்கிறாள். அவளது கண்பார்வை பட்டு, கருணாகரனின் கடமைக்குக் கால் ஒடிந்து விடக் கூடாதே என்பதுதான் என் கவலை...

கால: கருணாகரன் கெட்டிக்காரன்; இல்லாவிட்டால் குலோத்துங்கர் ஒரு பெரும் பொறுப்பை அவனை நம்பி ஒப்படைத்திருப்பாரா?

முடி: உண்மை தான்; இளவரசர் விக்கிரம சோழரிடம் இல்லாத நம்பிக்கை கருணாகரரிடம் இருக்கிறது.

கால: இந்த நம்பிக்கை விக்கிரமனுக்கு ஏற்படவில்லையே. விக்கிரமன் இளைஞன்; உலக அனுபவம் போதாது. நல்லதும் தீயதும் நாடி ஆராய்ந்து உள்ளது தெளியும் உள்ளொளி அவனிடம் வளரவில்லை. ஊம் ...விக்கிரமனும், கருணாகரனும் ஒற்றுமைப் படும் நாள் ஒன்று வரும்... வரவேண்டும்......

முடி: வேங்கி நாட்டிற்குச் சென்றிருந்த இளவரசர் திரும்பி வந்து விட்டாரா?

கால: பட்டத்து அரசி மதுராந்தகியின் உடல்நிலை மோசமாகி விட்டதாம்: இளவரசன் திரும்பி விட்டான். அவன் மட்டும் மதுராந்தகியின் உயிர் உள்ள போதே கருணாகரனை விரும்பி விட்டால்......

முடி: கருணாகரர் கலிங்கம் சென்றிருப்பது விக்கிரமனுக்குத் தெரியுமா?

கால: தெரியாது. நமக்கு மட்டுமே தெரிந்த இந்த மறைமுகம் இளவரசனுக்குத் தெரியாது.

முடி: சரி! நான் விடை பெற்றுக் கொள்கிறேன். தங்கள் பூசைக்கு நேரமாகிறது ......

(முடிகொண்டான் போகிறான்)

கால: இளவேணி!

இள: இதோ, வந்து விட்டேன் ..........

கால: பூசைக்கு வேண்டிய பொருள்களெல்லாம் எடுத்து வைத்து விட்டாயா?

இள: எல்லாம் தயார். சிவலிங்கத்தை நீராட்ட வேண்டியது தான்.........

கால: சரி! தண்ணீர் கொண்டு வா!

(இளவேணி உள்ளே சென்று குடத்து நீரோடு வருகிருள். சிவலிங்கத்தை நீராட்டி நீரை ஒரு தட்டில் பிடிக்கிருள்)

கால: இந்த நீரை வெளியில் ஊற்றிவிடு.

(இளவேணி எடுத்துப்போய் வெளியே ஊற்ற, நீர் விக்கிரமன் மீது பட்டுவிடுகிறது...இளவேணி அஞ்சி உள்ளே ஓடி வருகிருள். விக்கிரமன் நனைந்தபடியே உள்ளே வருகிருன்.)

கால: என்னம்மா? ஏன் ஓடிவருகிருய்? வா! விக்கிரமா! என்ன ஆடைமுழுவதும் நனைந்து போயிருக்கிறது? வரும்போது ஏரியில் குளித்துவிட்டு வருகிருயா?

விக்: வீட்டுக்கு வருபவர்களைப் பன்னீர் தெளித்து வரவேற்பார்கள் என்றுதான் கேள்விப்பட்டிருக்கி-றேன். தண்ணீரை முகத்திலடித்து வரவேற்கும் புதுமையைப் புலவர் வீட்டில்தான் பார்க்கிறேன் ஐயா! யார் அந்தப் பதுமை? கழுவடை நீரை மேலே ஊற்றும் அந்தக் கண்ணில்லாப் பெண் யார்?

கால: கண்ணிருந்துதான் செய்திருக்கிருள்; அது கழு வடை நீரல்ல காளையே...கங்கைவார் சடையார் உருவமான இலிங்கத்தைக் குளிப்பாட்டிய நீரைத்-தான் மங்கை உன்மேல் கொட்டியிருக்கிருள் . . . . புண்ணியந்தான் போ . . . . .

விக்: அது சரி, அடிகளே! அந்தப் பெண் யார்?

கால: சொல்கிறேன் . . . . முதலில் ஆடையை அவிழ்த்து உலரப்போடு...

விக்: இருக்கட்டும் .... உங்களிடம் சில முக்கியமான செய்திகளைத் தெரிந்து கொள்ள வந்தேன். வந்த இடத்தில் வரவேற்பும் தடபுடல்; அந்தப் பெண் யாரென்று தெரிந்தால் நான் மனம்விட்டுப் பேசலாம்.

கால: அவளா? என் நண்பரின் புதல்வி. என் வீட்டில்தான் வளருகிறுள். நல்லவுள்; தன்னைப் பற்றியே இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளாதவள் ... ஊம்! வந்த செய்தியைச் சொல், விக்கிரமா

விக்: அடிகளே! கருணுகரனைப்பற்றிய செய்தி ஏதேனும் தங்களுக்குத் தெரியுமா?

கால: ஏன்? தெரியும்!

விக்: எங்கு போயிருக்கிருர்? எதற்காக?

கால: உன்னுடைய தந்தையார் குணம்தான் உனக்கு நன்கு தெரியுமே! வெளிநாட்டுத் தொடர்பு கொள்வதற்காகக் கருணுகரனை வடக்கே பாரசீகத்திற்கு அனுப்பி வைத்திருக்கிருர். அங்கிருந்து வங்கம் வந்து, பின் கலிங்கத்தைக் கண்டு வழிமுறைகள் எப்படி இருக்கின்றனவென்று அறிந்து கொண்டு திரும்பலாம் -பெரும்பாலும் இன்னும் சில நாட்களில் திரும்பலாம்.

விக்: மூன்ருண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதே என்று தான் எனக்கு ஐயம் தோன்றியது. என்ன இருந்தாலும் நேற்று முளைத்தவர்மேல் தந்தையாருக்கு இவ்வளவு நம்பிக்கை வளரக்கூடாது! பல்லவர்கள்... பல்லைப் பிடுங்காமல் விடப்பட்ட பாம்பிற்கு ஒப்பானவர்கள் என்பது என் கருத்து....

கால: அதே நேரத்தில் பல்லவர்களுள் மூன்ரும் நந்திவர்மனையும் அவனுடைய பெயரன் அபராசிதவர்-

மனையும் நாம் மறந்துவிட முடியாது. அபராசிதனுடைய அன்பு மட்டும் இருந்திரா விட்டால் இந்நேரம் சோழ பூமி மண்ணோடு மண்ணாகியிருக்கும். பாண்டியரை முறியடித்துச் சோழநாட்டை நமக்கு வாங்கிக் கொடுத்த அபராசிதனை வஞ்சகமாக வேல் பாய்ச்சிக் கொன்றவன் ஒரு சோழன் தானே!

விக்: தாங்கள் பேசுவதன் நோக்கம்...

கால: விக்கிரமா! ஆட்சியும், அதிகாரமும் என்றும் ஒரு சாராரிடமே நிலைப்பதில்லை. பல்லவர்கள் கொடி கட்டி ஆண்டகாலம் ஒன்று நேற்று இருந்தது... இன்றில்லை...அவ்வளவு தானே! ஆனால், பல்லவர்களுள் நல்லவர்களும், வல்லவர்களும் உண்டு. மேலும் பிற்காலப் பல்லவர்கள் தமிழுக்காகவும், தமிழ்க் கலை மேம்பாட்டுக்காகவும் தொண்டாற்றியிருக்கிறார்கள் என்பதை மறக்கக் கூடாது. அப்படிப் பட்ட பல்லவ மரபில் தோன்றிய கருணாகரனும் மாசு மருவற்ற தூய நெஞ்சு படைத்தவன் தான். இதை நீ அறியவேண்டும். நீ இதை மனமார உணர்ந்தால் அதுவே நோய்ப் படுக்கையிலிருக்கும் உன் தாய்க்கு மருந்தாகும்.

விக்: ஐயா! தாயை நினைவூட்டி விட்டீர்கள்...என்ன செய்வேன்? என் தாயின் உடல் தேறவே தேருதா? அரச பிள்ளை தோன்றி அறுவை மருத்துவம் செய்த பிறகும், ஆண்டு ஒன்றாகியும் குணமாகவில்லையே!

[இந்நேரம் தூதுவன் வருகிறான்]

தூது: பட்டத்தரசி மதுராந்தகி தேவியின் உடல்நிலை மிகவும் சீர் கேடாகி விட்டது. உடனே தங்களை அழைத்து வரும்படி அரசர் கட்டளை.

[காலதேவர் —விக்கிரமன் விரைகின்றனர்]

[திரை]

## காட்சி 18

**களம்: அரச மாளிகை** **காலம்: பகல்**

**உறுப்பினர்: மதுராந்தகி, விக்கிரமன், குலோத்துங்கர், காலதேவர், அம்மங்கை, மருத்துவர்.**

[மதுராந்தகி படுக்கை அருகில் குலோத்துங்கர் அமர்ந்திருக்கிறார். அம்மங்கையும் மருத்துவரும் நிற்கின்றனர். காலதேவர், விக்கிரமன் வருகின்றனர்]

**விக்:** அம்மா...-!

**மதுரா:** வா, விக்கிரமா! உனக்காகத்தான் இந்த உயிர் இது வரை ஒட்டிக் கொண்டிருக்கிறது. பிரியும் போது, பெற்ற பிள்ளையைப் பார்க்க முடியாமல் போய் விடுமோ என்று கலங்கினேன். கடைசியாக என்னிடம் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் சொல்லிவிடு மகனே!

**விக்:** நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? நீங்கள் சொல்லுங்கள் அம்மா! என்னுடைய கடமை ஏதேனும் இருந்தால் சொல்லுங்கள் அம்மா.

**மதுரா:** மகனே! நெஞ்சம் ஏனோ நடுங்குகிறது. இன்னும் சிறிது நேரத்தில் எமன் என்னை அழைத்துக் கொள்வான். அதற்குள் என் நெஞ்சிலிருக்கும் ஒன்றை உன்னிடம் சொல்ல விரும்புகிறேன் விக்கிரமா.

**விக்:** சொல்லுங்களம்மா. நிறைவேற்றி வைக்கிறேன்

**மதுரா:** கலிங்கன் அனந்தவர்மன் சாளுக்கிய விக்கிரமாதித்தனுடன் சேர்ந்து கொண்டு உன்னுடைய தந்தையை அவமதிப்பாகப் பேசி வருவது உனக்குத் தெரியுமா?

**விக்:** தெரியும் அம்மா!

மதுரா: அடங்காமல் திரியும் அந்த அனந்தவர் மனைத் தேர்க்காலில் கட்டியிழுத்து வந்து உன் தந்தை முன் நிறுத்த வேண்டும்.

விக்: ஆணையாக நிறைவேற்றுவேன், தாயே!

மதுரா: இவ்வளவும் செய்வதற்கு நீ கருணாகரனைத் துணைக்கொள்ள வேண்டும், செய்வாயா?

விக்: ............

மதுரா: என்ன? செய்வாயா?...... விருப்பமில்லையா?

விக்: அப்படியெல்லாம், இல்லையம்மா!

தங்கள் விருப்பப்படியே செய்வேன்.

மதுரா: இப்போதுதான் என் மனம் குளிர்ந்தது! விக்கிரமா! கருணாகரனை உன்னுடைய உயிர்த் தோழனாகக் கொள்ள வேண்டும். உன் எதிர் காலத்திற்கே விடி வெள்ளி அவன்தான். இதை மனதில் கொள்...என் மனத் தேர் வலம் வரும் ............என் மனத் தேர்............

[இருமுகிருள். உயிர்பிரிகிறது]

விக்: அம்மா!........
[அனைவர் கண்களிலும் கண்ணீர் வடிகிறது.]

[திரை]

## காட்சி 19

களம்: கலிங்கச் சோலை. காலம்: மாலை

உறுப்பினர்: அருள்மொழி, கருணாகரன், அனந்தவர்மன்.

[அருள்மொழியும் கருணாகரனும் பேசிக்கொண்டி-ருக்கின்றனர்]

கருணா: நங்கை! நான்காண்டுகள் எப்படித்தான் நகர்ந்தனவோ? நனவா, கனவா? நடந்ததெல்லாம் உண்மைதானா?

அருள்: நம்பி, உங்களை நான் மயக்க வந்ததுவும், நானே மயங்கியதும், வந்த நோக்கம் மறந்து, சொந்த நோக்கத்திற்காக உங்களையே சுற்றிச் சுற்றி வருவதும் உண்மைதான்.

கருணு: அருள்மொழி! அறியாச் சிறுவனாய் இங்கு வந்து உன்னிடம் ஆயிரம் பாடங்கள் படித்து விட்-டேன். புரியாத பலவற்றிற்கு இப்போது தான் பொருள் புரிகின்றது.

அருள்: ஊம் . . . என்ன புரிகின்றது? . . .

கருணு: கடல் தன் ஆயிரமாயிரம் அலைக் கைகளை நீட்டி நிலவை அணைப்பதற்காகத் துடிப்பதும், ஆனால் நிலவோ நிலமகள் மேல் கொண்ட காத-லால் அவளைத் தேடி ஓடுவதும், மண்மகளோ விண்மீன்களின் கண்சிமிட்டலில் மயங்கித் தன் மனதை இழந்ததும், விண்மீன்களோ முகிற் கூட்-டங்களை மணந்து கடலையும், நிலவையும், நிலத்-தையும் ஏங்க வைத்து விட்டதும்...

அருள்: எனக்குக்கூட இப்போதுதான் புரிகிறது . . .

கருணு: நான் சொன்னதெல்லாம் உனக்குப் புரிகிறதா?

அருள்: புரிகிறது . . . கவிஞர்களும், காதலர்களும் பைத்தியக்காரர்கள் என்பதுதான் புரிகிறது.

கருணு: உளறுகிறேனு?

அருள்: இல்லை . . . உதிர்க்கிறீர்கள் . . . இன்னும் பேசுங்கள். கேட்டுக் கேட்டு நான் கிறுகிறுக்கும் வரை பேசுங்கள், பேசுங்கள் . . .

கருணு: இருண்ட முகில்,அதனிடையே சுழிக் காற்றுப் போல் சுருண்டு நெளிந்து கிடக்கும் அலை அலையான கூந்தல்; மூச்சை அடக்கிக் கடலில் மூழ்கி முத்தெடுக்கப் போகும் போது ஒளி வீச்சைக் கண்டு உயர வந்துவிட்ட வலம்புரிச் சங்கைப் போன்ற உன்

கழுத்து, அன்றலர்ந்த தாமரையை வென்றுயர்ந்த முகம், அதிலே வளைந்த பிறை போன்ற நெற்றி; மை-யுண்ட இமைகள்; வாள் போன்றகண்கள்; மாங்கனி போன்ற கன்னங்கள்; பவளம் போன்ற வாய்; மல்-லிகை மொட்டுப் போன்ற பற்கள்; பாகில் ஊறிய பலாச்சுளை போல் இதழ்கள் ......

அருள்: போதும்! நிறுத்துங்கள்; இனி என்னுல் பொறுக்க முடியாது.

கருணு: ஏன்? ஏதாவது தவருகக் கூறி விட்டேனு ...

அருள்: இல்லை; இந்த வருணனையால் ஏற்படும் போதையை என்னுல் தாங்கவே முடியாது. ஊம்...! கோட்டை கட்டத்தான் தெரியும் என்று நினைத்-தேன்; பாட்டும் கட்டுகிறீர்கள். . . இன்னும் ஒன்று தான் கட்டவேண்டும்?

கருணு: என்ன?

அருள்! என்னை. . . .

கருணு: உன்னையா?

அருள்: ஆம். என்னைக் கட்டிக் கொள்ள வேண்டும். அந்த நாள் வரவேண்டும்.

கருணு: உண்மை தானு?

அருள்; என் உடல், பொருள், ஆவியெல்லாம் உங்-களிடம் ஒப்படைக்கத் துடிக்கிறேன் ...... (நெருங்கி அவன் கையைத் தொட வருகிருள். அவன் தள்ளிச் செல்கிருன்)

கருணு: அருள்மொழி! உன் துடிப்பை உணர்கிறேன். உன்னைப் பார்க்கப் பார்க்க எனக்கே ஒரு மயக்கம் உண்டாகிறது. வேல் விழியால் என்றன் விலாப் புறத்தைக் கொத்துகிருய்; பால் போல் மொழியால் பதைக்கஉயிர் வாங்குகிருய்.ஆனுல்.... நம்கொள்கை நிறை வேறும் வரை நம்காதல் உள்ளத்தளவிலேயே

நிற்க வேண்டும் ..... கோட்டை முடியட்டும்; பிறகு நம் கனவுகளை நிறைவேற்றுவோம். சரி! நெடுநேரம் போக்கிவிட்டோம்; அங்கே கல் பிளக்கும் ஓசை காதைப் பிளக்கிறது; கோட்டையின் கடைசிக் கட்ட வேலை நடந்து கொண்டிருக்கிறது....... நான் நடை கட்டவா?

(மெல்ல நகர்கிருன்-அவள் பார்த்துக் கொண்டே நிற்கிருள். அனந்தவர்மன் அவள் பின்னே வந்து நிற்கிருன்.)

அனங்: அருள் மொழி....

அருள்: ஆ... ! நீங்களா?

அனங்: எதிர்பார்த்திருக்க மாட்டாய்......

அருள்: இல்லை. ...

அனங்: இதை மட்டுமல்ல. படமெடுத்துப் பாய்ந்து கருணுகரனைப் பதற அடித்துவிட்டு வந்துவிடுகிறேன் என்று பாம்பு போல் வந்தாயே, அப் பாம்பு தன் பல்லைக் கழற்றிவிட்டு இன்று பெட்டிப் பாம்பாக அடங்கி ஒடுங்கி விடும் என்று கூட ..... நீ ... எதிர்பார்த்திருக்க மாட்டாய் .....

அருள்: என்கடமையை ஒழுங்காகத்தான் செய்கிறேன்.

அனங்: கடமை! காதலிக்கச் சொல்லி அனுப்பினேனு?

அருள்: கருணுகரரின் உண்மையான நோக்கைக் கண்டு பிடித்து வரத்தான் வந்தேன் .... வந்து பார்த்த போது அவர் உண்மையானவர் என்றும், ஒரு குற்றமும் சூழ்ச்சியும் இல்லாதவர் என்றும் அறிந்தேன்; வியந்தேன்; மயங்கினேன்.

அனங்: இன்று காதல் பாட்டு வரைக்கும் துணிந்தாய்; நீ கலிங்கத்துப் பெண் என்பதையே மறந்தாய்..... அருள்மொழி! உன்னை வெட்டிக் கொன்று விடலாமா என்று தான் வந்தேன், ஆனுல் நீ கருணுகரனிடம் மயங்கியது போலவே நானும் இப்போது உன்னிடம் மயங்கி நிற்கிறேன்.

அருள்: என்ன சொல்கிறீர்கள்?

அனங்: ஒன்றுமில்லை; அந்த நாளில் கலிங்க நாட்டைக் காப்பாற்றிக் கொடுத்தவன் உன் அண்ணன்; அவன் இறந்தது என்கையொடிந்தது போல! அவன் பொறுப்பில் நின்று உன்னைப் பாதுகாத்து வளர்த்த நான் உன் அண்ணன் விருப்பப்படி ஏதாவது ஓர் அரசனுக்குத் தான் உன்னை மணமுடிக்க வேண்டும். சில நேரங்களில் நானே மணந்து கொள்ளலாம் ...... என்று

அருள்: என்னது?

அனங்: இப்போது நினைக்கவில்லை ... முன்னால் நினைத்தேன். உன் விருப்பப்படியே எதுவும் நடக்கட்டும் நீ கருணாகரனை ஒற்றறியும் வேலையையாவது சரியாகச் செய்வாய் என நினைத்தேன். ஏமாந்து விட்டாய்; கருணாகரன் உன்னைக் களவாடும் வரை மயங்கியிருக்கிறாய் .......

அருள்: அவர் தூயவர். மணமாகும் வரை கையாலும் தீண்டமாட்டேன் என்ற உறுதியுள்ளவர்.

அனங்: கோட்டை கட்டி முடிந்து விட்டது. இனிச் சோழ நாட்டின் மேல் போர் தொடுக்க வேண்டும். இந்த நேரத்தில் கருணாகரன் பழைய பாசத்தை நினைத்துச் சோழநாட்டுடன் சேர்ந்து விட்டால் நம் கோட்டையை அவனே இடித்து விடுவான். அதனால் ஒரு திட்டம் செய்திருக்கிறேன். இதையாவது நிறை வேற்றுவாயா?

அருள்: சொல்லுங்கள்!

அனங்: கருணாகரனுக்கே உன்னை மணம் முடித்து விட்டால் ....

அருள்: கரும்பு தின்னக் கூலியா கேட்பேன்!

அனங்: முடித்து விடுவோம்; அப்படி முடித்து விட்டால் கருணகரன் காலமெல்லாம் உன் காலடியிலேயே கலந்து விடுவான்; கலிங்கம் வெற்றி பெறும்; பிறகு காஞ்சியைக் கருணகரனுக்குக் கொடுத்து அவனையும் ஓர் அரசனுக்கி விடுவோம்.

அருள்: திட்டப்படியே செய்யுங்கள்; உங்களுக்குக் கால மெல்லாம் கடமையுள்ளவளாக இருப்பேன்.

அனங்: சரி! போகிறேன்! இங்கு வரும் போது உன்னைச் சீறலாமென்றுதான் வந்தேன்; நானே பல் பிடுங்கப்பட்ட பாம்பைப் போல் அடங்கிப் போகிறேன். காரியம் மிஞ்சி விட்டது. உன் விருப்பம் நிறைவேறி விட்டது. கலிங்கமும் இனிச் சோழ நாட்டை முறியடிக்கும் .....?

(அனந்தன் போகிருன்)

அருள்: நானே என் கணவருக்குத் துணையாக வாளெடுத்துப் போர்புரிந்து அந்தக் குலோத்துங்கன் தலையை வெட்டுவேன்......

(திரை)

## காட்சி 20

களம்: சோலை காலம் : மாலை

உறுப்பினர்: விக்கிரமன், இளவேணி

[இளவேணி அமர்ந்திருக்கிருள். விக்கிரமன் பின்னே வந்து நிற்கும் காலடி ஓசை கேட்கிறது]

இள: [திரும்பிப் பார்க்கிருள்] ஓ...! நீங்களா? என்ன நடந்து விட்டது? எதை நினைத்து...?

விக்: தாயை நினைத்து...

இள: அன்று பதற்றத்தோடு போனீர்களே...!

விக்: பதற்றத்தோடு போய் விட்டாள் என் அன்னை. பக்குவமாக நடக்கத் தெரியாத என்னைப் பார்த்து நடக்கச் சொல்லிவிட்டுப் போய்விட்டாள் என்

அன்னை! மனத்தேரைச் செய்து மகன் கையில் கொடுத்து 'வலம் வரச் செய்யடா மகனே' என்று வாயாரச் சொல்லிப் போய்விட்டாள் என் அன்னை

இள: மனத்தேரா?

விக்: ஆம்! என் அன்னை பிரியும் போது பேசிய பேச்சு! அவளின் இறுதி மூச்சு...கலிங்கன் அனந்தவர்மனைத் தேர்க்காலில் கட்டி இழுத்துக் கொண்டு வரவேண்டும் நான்...அதற்குக் கருணாகரத் தளபதியைத் துணைக்கொள்ள வேண்டும் நான்...

இள: ஆங்...

விக்: தாங்க முடியாத பொறுப்பை என் தலையில் கட்டி விட்டாள் என் தாய்... [கண் கலங்குகிறான்]

இள: கலங்காதீர்கள்! வீரர்கள் கண் கலங்குவதா?

விக்: தாயன்புக்குமுன் வீரமாவது, காதலாவது...

இள: [அவள் தலை குனிகிறாள்]

விக்: என்ன தலை கவிழ்ந்து விட்டது

ஓ! காதல் என்றதாலா...

இள: [அவள் நிமிர்ந்து நோக்குகிறாள்]

விக்: ஏனோ தெரியவில்லை. உன்னிடத்தில் வரும் போது மட்டும் இனம் புரியாத ஆறுதல்...தாயிடம் காண முடியாத அன்பை, ஒரு வேளை காணத்தவறிய அன்பைத் தன்...

இள: தன்...

விக்: மனத்தைக் கவர்ந்த மங்கையிடம்தான் காணமுடியும் போலும்! ஏன் அப்படி?

இள: [கைகளை விரிக்கிறாள்]

விக்: இளவேணி, உன்னை ஒன்று கேட்கவா?

இள: ஊம்...

விக்: நீ...

இள: நான்...

விக்: நீ யார் மகள்?

[அவள் ஓடிவிடுகிருள்]

[திரை]

## காட்சி 21

களம்: அரண்மனைக் கூடம் காலம்: காலை

உறுப்பினர்: குலோத்துங்கர், முடிகொண்டான்

குலோ: என் தலையை நானே வெட்டிக் கொள்வது தான் முறை...... போட்ட திட்டத்தை நிறைவேற்ற முடியாவிட்டால் திட்டம் எதற்கு? வரப்பேறி உட்-காரமுடியாதவனுக்கு மலையேற மனமிருந்து என்ன பயன்?......... முடிகொண்டவா! தெரியுமா செய்தி?

முடி: தெரியும் மன்னவா! ... பட்டத்தரசி மதுராந்தகி தேவியார் இறந்து விட்டது தானே ......

குலோ: அதுமுடிந்த கதை; அழ வேண்டியவர்கள் அழுது விட்டோம்; கருணுகரன் தான் அறிய வேண்-டும். அது கிடக்கட்டும் ...... பாசத்தின் பிணிப்பால் மோசம் போன கதை தெரியுமா!

முடி: மோசம் போனேமா? விளங்கவில்லையே!

குலோ: இது வரைக்கும் எங்கோ மறைந்து கொண்டு சூழ்ச்சி செய்துவரும் பராக்கிரம பாண்டியன் கலிங்-கன் அனந்தவர்மனுக்கு அனுப்பி வரும் ஓலைகளை யெல்லாம் கைப்பற்றி நம்திட்டப்படி மாற்றி அனந்த வர்மனுக்கு அனுப்பியிருக்கிறேம். இதனுல் கருணு கரனும் தன் திட்டப்படி கோட்டையை முடித்துவிட்-டான்.

ஆயிற்று! இப்போது அவன் தப்பி வரவேண்டும். ஆனுல் பால் பொங்கிவரும்பொழுது பானைஉடைவது

போல மதுராந்தகி இறந்தபோது நமக்கிருந்த சோகத்துக்கிடையில் வழக்கம்போலப் பாண்டிய ஒற்றனை வழிமறிக்காமல் விட்டு விட்டோம்.

முடி; ஆ! அப்படியானால் நம் திட்டம் தெரிந்து விட்டால் கருணாகரன் நிலை......

குலோ: நிலை என்ன? தலையே போய்விடும். அதுமட்டுமல்ல. பராக்கிரம பாண்டியன் நம் சூழ்ச்சியைத் தெரிந்து கொண்டு கலிங்க நாட்டை நோக்கிப் புறப்பட்டு விட்டானும்; கேள்விப்பட்டேன்.

முடி: ஐயய்யோ! எனக்கு உடலெல்லாம் பதறுகிறதே? என்ன வேந்தே! பேசாமல் நிற்கிறீர்கள் ......

குலோ: மலையே இடிந்து வீழ்ந்தாலும் நிலைகுலையாதவன் இந்தக் குலோத்துங்கன். சரி! நீ உடனே கலிங்க நாட்டை நோக்கிப் புறப்படு. சென்றதும் அனந்தவர்மனிடம் இந்த ஓலையைப் பாண்டிய ஒற்றனைப் போல் நடித்துக் கொடுத்து விடு. போ! ......

முடி: நான் போவதற்குள் பராக்கிரம பாண்டியன் வெள்ளம் போல் விரைவாகச் சென்றுவிட்டால் ......

குலோ: அதற்கு அணைபோடத்தான் உன்னை அனுப்புகிறேன். கருணாகரனுக்குத் துணை நிற்கத்தான் உன்னை அனுப்புகிறேன். போ! தலைக்குமேல் வெள்ளம் போய்விட்டால் .........

முடி: வேந்தே!

குலோ: போர்! கலிங்கத்தின் மீது போர்!

மதுராந்தகியின் மனத்தேரும், காலதேவரின் கனவுத் தேரும் வலம் வரும் போர்!

முடி: நான் புறப்படுகிறேன் வேந்தே!

குலோ: கவனமாக, சூழ்நிலையைக் கவனித்து நடந்து கொள்; கருணாகரனைக் காப்பாற்றி அழைத்து வருவதில் இம்மியும் தவருதே! இன்றைக்கு நான்காம்

நான் காலை எழுந்ததும் உன்னை எதிர்பார்ப்பேன். வரத் தவறினால் கருணாகரனின் வாழ்வு விழுந்து விட்டதாகவே கருதுவேன்.

கருணாகரன் வாழ்வு விழுந்து விட்டால்... ...

விழுந்து விட்டால்... ...

(பின்னால் திரும்பி அழுகிறார். கையைப் பின்னே காட்டி) போ! போய் வா! (முடி கொண்டான் போகிறான்)

(திரை)

## காட்சி 22

களம்: கலிங்க அரசவை. காலம்: முற்பகல்

உறுப்பினர்: அனந்தவர்மன் - அனந்த பாலைபன் - பராக்கிரம பாண்டியன் - கார்க்கோடகன்- முடிகொண்டான்- எங்கராயர்-வாயிற்காவலர்.

[அவை கூடியிருக்கிறது]

எங்க: கதம்ப நாட்டரசர், ஒய்சலர், சாளுக்கிய விக்கிரமாதித்தர், வத்தவர் அனைவருமே வந்து விட்டீர்கள். மெத்த மகிழ்ச்சி. கலிங்கக் கோட்டை கட்டி முடிக்கபபட்டு விட்டதை அறிவீர்கள்; விரைவில் திறப்புவிழா... அது குறித்தும் நம் எதிர்காலத் திட்டத்தைப் பற்றியும் கலந்து முடிவு செய்ய வேண்டும்.

அனந்: அதற்குமுன் ஒரு திருப்பம் செய்ய வேண்டும். என்னவென்றால்...

கார்க்: (வந்து) அரசே! பாண்டிய நாட்டிலிருந்து தூதுவன்.

அனந்: உடனே உள்ளே அனுப்பி வை.

[அவன் போகிறான்-முடி கொண்டான் வருகிறான்]

முடி: வேந்தே! திரிபுவன சக்கரவர்த்தியின் ஓலை.

அனங்: எதிர்பார்த்தேன்; ஓலையைத் தரலாம்.

[ஓலையை நீட்டுகிருன்]

எங்க: பாண்டியர் என்ன அறிவித்து இருக்கிருர்?

அனங்: இன்றைய மந்திராலோசனையைப் பற்றி ஏதும் குறிப்பிடவில்லை. நான் அனுப்பிய ஓலை அவருக்குக் கிடைக்கவில்லையா? ஊம்... இடையில் ஏதாவது சூழ்ச்சி...!

[எங்கராயர் கனைக்கிருர்— அனந்தவர்மன் திரும்பிப் பார்க்கிருன்-எங்கராயர் முடிகொண்டானைச் சுட்டிக் காட்டுகிருர்]

அனங்: நல்லது. நீ அரண்மனைக்குச் சென்று தங்கியிரு . . .

[முடிகொண்டான் போகிருன்]

அனங்: சரி! நான் சொல்ல வந்த திருப்பம் என்னவென்ருல்...

கார்க்: [ஓடிவந்து] வேந்தே! திரிபுவன, பராக்கிரம பாண்டியர் திரிபுரமெரித்த சிவனைப் போன்றுசினக்கோலத்தில் வருகிருர்.

அனங்: வருக திரிபுவன பாண்டிய வேந்தரே, வருக! [பாண்டியன் வந்து அமர்கிருன்]

பராக்: அனந்தவர்மரே! கோட்டையின் வளர்ச்சி எப்படி இருக்கிறது?

அனங்: முற்றுப் பெற்று விட்டது பாண்டிய வேந்தரே...!

பராக்: முடிந்து விட்டதா? மகிழ்ச்சி! திறப்புவிழா...?

அனங்: அதைக் கலக்கவே இன்று மந்திராலோசனைக் கூட்டம் கூட்டியிருக்கிறேன்! தங்களுடைய வருகை எதிர்பாராதது.

பராக்: ஆம்! என்னுடைய வருகை எதிர்பாராதது தான்; ஏனென்றால், நான்வருவதாக ஒன்றும்செய்தி அனுப்பவில்லை அல்லவா?

[அனைவரும் சிரிக்கின்றனர்]

பராக்: சிரிக்க வேண்டியது தான்; அனந்தவர்மரே! பராக்கிரமன் இனிமேலும் ஏமாந்து விடமாட்டான். இந்தப் பதினெட்டு ஆண்டுகளில் நான் பெற்ற அனுபவத்தோடு இப்போது புதிய அனுபவம் ஒன்றையும் பெற்றிருக்கிறேன். அதைப் பெறும்படி செய்திருக்கிறது உங்கள் கவனக் குறைவு. காடுகளிலும் மலைகளிலும் மறைந்துவாழும் நான்கவனக் குறைவாக நடந்து விடலாம். கண்ணையும், கருத்தையும் வெளியுலகத்திலேயே நடமாடவிட்டு வரும் நீரும் ஏமாந்து விட்டீரே!

அனங்: ஏமாந்து விட்டேனு?

பராக்: அனந்தவர்மரே! இதுவரை நான் அனுப்பிய ஓலைகளையெல்லாம் பாதுகாப்பாக வைத்திருக்கிறீர்களா?

அனங்: ... ... ... ...

பராக்: தயங்காமல் சொல்லுங்கள், இருக்கின்றனவா?

அனங்: சிலவற்றை வைத்திருக்கிறேன். இதோ,இருக்கும் ஓலை தாங்கள் வருவதற்குச் சற்று முன்புதான் வரப் பெற்றேன்.

[அவனிடம் தர அவன் படித்துப் பார்க்கிருன்].

பராக்: குலோத்துங்கனை நான் போரில்தான் புலி என்று கருதினேன். அரச தந்திரத்திலும் சாணக்கியனை மிஞ்சியிருக்கிருன்.

எங்க: காரணம்?

பராக்: காரணமா? கேளுங்கள். என்னிடமிருந்துவரும் ஓலைகளையும் கலிங்கத்திலிருந்து எனக்கு வரும்ஓலை-

களையும் வழிமறித்துப் பறித்துத் தன்னுடைய ஒற்-றர்கள் மூலம்திருத்தி அனுப்பியிருக்கிருன் குலோத்-துங்கன்.

[அனைவரும் வியப்புடன் எழுகின்றனர்]

இவற்றின் மூலம் நாம் எத்தனை பேர், நம் படை பலம் என்ன என்பதையெல்லாம் தெரிந்து கொண்டான். கோட்டையின் மறைமுகத்தையும் தெரிந்து கொள்ளத்தான் தன்னுடைய தானைத் தலைவன் கருணுகரனையே அனுப்பி வைத்திருக்கிருன். இதில் நீங்கள் எல்லாருமே ஏமாந்து விட்டீர்கள்! என்னு-டைய முதல் ஓலையிலேயே கருணுகரனைக் கொன்று-விடும்படி எழுதியிருந்தேன்.

அனங்; சே! சே![தலையைப் பிடித்துக் கொள்ளுகிருன்]

பராக்: கலிங்கரே! வருத்தப்பட்டு இனி எதுவும் வராது. வரப் போவதை வகையோடு செய்வோம்.

அனங்: அனந்த பாலையா!

பாலை: வேந்தே!

அனங்: போ! உடனே வீரர்களுடன் சென்று அந்தக் கயவன் கருணுகரனைச் சிறைப்படுத்திக் கொண்டு வா ......

[அவன் போகிருன்]

அனங்: சரி! இன்று இந்த அவை கலையட்டும்...... மீண்டும் நாளை கூடுவோம்.

*[திரை]*

## காட்சி 23

களம்: கருணுகரன் கூடாரம் காலம்: நண்பகல்

உறுப்பினர்: கருணுகரன் — முடிகொண்டான் —அனந்த பாலையன்—பராக்கிரமன் —அனந்தவர்மன் — அருள்-மொழி

[கருணுகரன் சிந்தனையிலிருக்கிருன் — யாரோ பின்-வந்து விழ — கருணுகரன் வாளை உருவுகிருன்]

முடி: அமைதி! அமைதி!

கருணு: [வாளை உறையில் போடுகிருன்]முடி கொண்-டவா! நல்லவேளை! குரலைக் காட்டிவிட்டாய்.

முடி: இல்லாவிட்டால் என் குடலையல்லவா எடுத்துக் காட்டியிருப்பாய். [கருணுகரன் சிரிக்கிருன்]

முடி: கருணுகரா! இது சிரிக்கும் நேரமன்று! வீரர்கள் நாலாபுறமும் தேடும் நேரம் வந்து விட்டது. அத-ஞல்தான் நூலேணி ஏற்பாடு செய்து கொண்டு பலகணியின் வழியாக வந்திருக்கிறேன். வெளியில் நிற்கும் காவலனுக்குக் கூடத் தெரியக்கூடாது. அதற்குள் நாம் கீழே இறங்கி நமக்காகக் காத்துக் கொண்டிருக்கும் குதிரையில் பயணமாகவேண்டும். புறப்படு!

கருணு: புறப்படுவோம் ......முதலில், நடந்ததைக் கூருமல் இப்படிப் புறப்படத் தூண்டிஞல்...

முடி: போச்சு, போ! ஏது வெற்றிலை, பாக்கு வைத்து விவரமெல்லாம் சொல்லு என்பாய் போலிருக்கே! இதோ பார்! இப்போது நீ புறப்படுகிருயா? இல்லை நான் புறப்படட்டுமா?

கருணு: முடிகொண்டவா! இப்போது என்ன அவசரம்

முடி; விளையாட இது நேரமில்லை; இன்னும் கொஞ்சம் நேரத்தில் பெரிய தீங்கு நடக்கப் போகிறது'.

கருணு: வருணித்துக் கொண்டே போவதை விடஇந்-நேரம் நடந்ததை விளக்கியிருக்கலாமே!

முடி: அகோ கேளும் பிள்ளாய்: கருணுகரத் தளபதி! இன்று கலிங்க அரண்மனையில் கதம்பன், ஒய்சலன், சாளுக்கியன், வத்தவன் எல்லோரும் கூடியிருக்-

கிருர்கள். பராக்கிரம பாண்டியனும் வந்துவிட்டான். இனி நம் குட்டு வெளிப்பட்டு விடும். சோழ பூமியில் சோக நிகழ்ச்சி நடந்துவிட்டது. அதனுல் ஏற்பட்ட ஒரு சிறு தவறினுல் நமது நாடகம் அம்பலமாகப் போகிறது.

கருணு: அம்பலம் என்ருல்?

முடி: உன் தலைக்குக் கத்தி வரப்போகிறது. கலிங்கக் கோட்டைக்கு நாமே பலியாகப் போகிருேம்.

கருணு: அது சரி! சோழநாட்டில் நிகழ்ந்த சோக நிகழ்ச்சி என்ன? கூறு. புறப்படுவோம்.

முடி: அதைக்கூற இப்போது நேரமில்லை.புறப்படு..... வழியில் சொல்லுகிறேன்.

கருணு: முடிகொண்டவா! செய்தியைச் சொல்!இல்லா விட்டால் என் தலை வெடித்துவிடும்.

பின்குரல்! [தனிமொழி] முடிகொண்டவா! செய்தியைச் சொல்லாதே! சொன்னுல் கருணுகரனின் தலை வெடித்துவிடும்.

கருணு: சொல் முடிகொண்டவா!நான்உடனே சென்று அருள்மொழியைக் காணவேண்டும். தாமதிக்காதே.

முடி: கருணுகரா! நான் சொல்வதைக் கேள். கலிங்கர் நம்மைச் சிறைப்பிடிக்குமுன் தப்பிக்க வேண்டும். இந்த நேரம் காதலை எண்ணி உருகினுல் சக்கரவர்த்தியின் திட்டம் தவிடுபொடியாகி விடும்; தேவையற்ற ஒரு பெண்ணுக்காக நாட்டைக் காட்டிக் கொடுத்த குற்றத்துக்கு நீ ஆளாகாதே! விசயாலயச் சோழர் உண்டுபண்ணிய பிற்காலச் சோழ மரபு இராசராசரால் பெருத்து, இராசேந்திரரால் வளர்ந்து குலோத்துங்கரால் புகழடையப் போவதைத் தடுக்காதே! கருணுகரா! புறப்படு! புறப்படு?

கருணு: முடிகொண்டவா! இதுவரை உன் நண்பன்

கேட்டு வந்தான். இப்போது சோழநாட்டுப் படைத்தலைவன் கட்டளையிடுகிறேன். நடந்ததென்ன? கூறு.

முடி: [மெல்ல] மதுராந்தகி தேவியார் மறைந்து விட்டார்.

கருணு: என்ன? என்ன? இறந்துவிட்டார்களா என் அன்னை ...... அம்மா! [கீழே விழுகிருன்]

மறு காட்சி

[அனந்தவர்மன், பராக்கிரமன், 2 வீரர்கள் வருகின்றனர்]

பராக்: என்ன ஆனைக் காரனே... . . ஊம் . . . ஓடிவிட்டானே?

[எதிரே அனந்த பாலையன் வருகிருன்]

அனங்: என்ன சிறைப்படுத்தி விட்டாயா?

பாலை: வேந்தே! கருணுகரன் தப்பிவிட்டான்!

அனங்: தப்பி விட்டானு? தப்பி விட்டான் என்று கூறவா என்னிடம் வந்திருக்கிருய்? அனந்தபாலையா! போ! போய் நாலாபுறத்திலும் நம் வீரர்களை ஏவி அவனைச் சிறைப்படுத்திக் கொண்டுவா. அவனில்லாமல் நீதிரும்பக் கூடாது. போ! [அவன் போகிருன்]

பராக்: நில். [அனந்த பாலையன் நிற்கிருன்] அனந்த பாலையா! இனிப் பதறிப்பயனில்லை. போய் அருள்மொழியை அழைத்துவா.

[அனந்தபாலையன் அனந்தவர்மனை நோக்க- அவன் தலையசைக்கிருன்-பின் போகிருன்.]

பராக்: அனந்தவர்மரே! கருணுகரன் சோழ நாட்டுக்குத்தானே போவான். கவனித்துக் கொள்வோம். இனிமேல் அவனை இங்கேயே சிறைப்படுத்த முடியாது. இப்போது எனக்கொரு வழி தோன்றுகிறது.

அனங்: என்ன வழி?

பராக்: முதலில் நம்பக்கம் உள்ளவர்களை எல்லாம் ஒன்றாகத் திரட்ட வேண்டும். படை பலத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். பிறகு போருக்குத் தயாராக வேண்டும். அதற்குள் சோழ நாட்டில் கருணாகரனைக் கவனித்து விடுவோம். அவன் தொலைந்து விட்டால் பிறகு நமக்கே வெற்றி. அதற்கும் திட்டம் உள்ளது.

[அனந்தவர்மன் காதில் ஏதோ சொல்லுகிறான்- இந்நேரம் அருள்மொழி வருகிறாள்]

பராக்: அருள்மொழி! நடந்த செயலுக்காக வருந்துவது கோழைத்தனம். என்ன செய்வது? தாமரை போன்ற உன் தூய காதலைச் சேற்றைப் போன்ற கருணாகரன் உணரவில்லை.

அருள்: வெறும் கற்பனை வேறு. காதல் வேறு.

பராக்: காதலும் ஒரு கற்பனை தானே?

அருள்: அப்படியானால் தாங்களும் நானும் பேசுவதும் கற்பனை தானே? தாங்கள் பாண்டிய நாட்டை மீண்டும் கைப்பற்ற நினைப்பதும் ஒரு கற்பனை தானே? [பராக்கிரமன் சினம் கொள்ளுகிறான்]

அனந்: அருள்மொழி கொஞ்சம் படபடப்புக்காரி பாண்டியரே! திறமையானவளும் கூட......போகட்டும்! அருள்மொழி! கருணாகரன் பெரும் நயவஞ்சகன் என்று இப்போது எனக்குத் தெரிய வருகிறது.

அருள்: ஆனால் எனக்குத் தெரியவில்லை.

அனந்: பேதைப் பெண்ணே! உங்களை ஒன்று சேர்க்க நான் உறுதி கொண்டிருந்தேன் என்பதுதான் உனக்குத் தெரியுமே? என் முடிவான எண்ணத்தை முறித்தது மட்டுமில்லாமல் உன் கனிந்த காதலையும் கழுத்தை நெரித்து விட்டானே, காதகன். உனக்காக அவனிடம் போரிட்டுச் சிறைபிடித்தும் வரலாம்.........ஆனாலும் பயன்?

அருள்: ஏன்?

அனங்: அவன் உன்னை விரும்பினான் என்பதே வெறும் கனவு.

அருள்: இல்லை; நான் நம்பவில்லை! நான் நம்ப மாட்டேன்

அனங்: நானும்தான் நம்பவில்லை. தீர ஆராய்ந்த பிறகே இந்த முடிவுக்கு வந்தேன். அருள்மொழி! சோழன் சூழ்ச்சி என்ன தெரியுமா? கருணாகரனுக்கு அவனுடைய புதல்வி அம்மங்கையை மணமுடிப்பது தான்.

அருள்: என்ன? அரசகுமாரியைக் கொடுக்கவா? உண்மையாகவா?

அனங்: உன் அண்ணன் மேல் ஆணையாகச் சொல்கிறேன்; உண்மைதான்.

அருள்: [கலங்குகிறாள்—சிறிதுநேரம் சென்று] துரோகி!

பராக்: இப்போதும் ஒன்றும் குடிமுழுகிப் போய்விட-வில்லை. என்ன முடிவு கூறப் போகிறாய்?

அருள்: முடிவு கூற என்ன இருக்கிறது? நானே நேரில் சென்று உண்மையைக் கண்டுபிடிப்பேன்.

பராக்: அதுதான் நல்ல முடிவு; நான் இதை வரவேற்-கிறேன். [பராக்கிரமன் அனந்தவர்மனைப் பார்த்துக் கண்சிமிட்டுகிறான்] சென்று கவனித்ததில் உண்மை என்று தெரியவந்தால்...

அருள்: என்னுடைய கட்டாரியே என்னைக் கொன்று விடும்.

அனங்: நீ சாவதால் பயன்?

அருள்: என்னுடைய ஒற்றன் கார்க்கோடகன் கருணாகரனைப் பழி வாங்குவான்.

அனங்: மிகச் சரி! கார்க்கோடகனே உனக்குத் துணை ஆனால் நீ சாகக் கூடாது. நான் ஒரு முடிவைக் கூறுகிறேன். அதன்படி உன்னுடைய காரியமும் வெற்றியாகும். கலிங்கத்திற்கும் நன்மை கிடைக்கும்

அருள்: ஏமாற்றம் அடைந்த நான் இனி எதில் துணிந்தால் என்ன? சொல்லுங்கள்.

அனங்: அருள்மொழி! குலோத்துங்க சோழனின் மண்ணுமங்கலத் திருநாள் அடுத்து நடைபெறவிருக் கிறது. அப்போது நீ சோழநாடு சென்று மீண்டும் கருணாகரனை வயப்படுத்து! அவன் உண்மையாக இருந்து உன்னை மணம் செய்து கொண்டால் கலிங்க நாடும் சோழநாடும் அமைதி உடன்படிக்கை செய்து கொண்டு வாழட்டும்.

பராக்: இது முடியவில்லையென்றால் அந்தத் துரோகி-களைப் பழிவாங்க வேண்டியதுதான்.

அருள்; அதையும் கூறிவிடுங்கள்.

அனங்: அப்படிக்கேள்! நல்லமுறையில் உனக்காகக் கூறும் நல்வழி இது. இந்தமுறையில் நடைபெற முடியாமல் போய்விட்டால் எனக்காக — கலிங்க நாட்டுக்காக நீ தியாகம் செய்ய வேண்டும். செய்-வாயா?

அருள்: செய்வேன்! கட்டாயம் செய்வேன்! கனிந்து விட்டதாக நான் கருதிய காதலே இப்படி ஆன பிறகு இனிநான் எதைச் செய்தால் என்ன?

அனங்: கருணாகரன் உன்னை மறந்து அம்மங்கையை மணக்க ஆசை கொண்டு விட்டால், அவனை ஒன்-றும் செய்து விடாதே! எப்படியாவது அரண்மனை யில் இடம் பிடித்து விடு. அப்படி முயற்சி செய்து இடம் கிடைத்ததும் ஒற்றர்கள்மூலம் நமதுபோருக்கு ஆவன செய்! போர் தொடங்கும் நேரத்தில் கருணாகரன் மீது ஏதாவது பழி சுமத்தி அவன்

கலிங்கப் போருக்கு வராமலேயே செய்து விடு. பிறகு சமயம் பார்த்து அம்மங்கையைக் கொன்றுவிடு. பிறகு போரில் நமக்கு வெற்றி. கருணாகரன் உன்னை மணம் செய்து கொண்டே ஆக வேண்டும். அவன் உன் காலடியில் கிடப்பான். நீ விரும்பினால் கருணாகரனோடு நீயும் காஞ்சியை ஆளலாம். இதன்படி நடப்பாயா அருள்மொழி?

அருள்: இது ஒரு பெரிய காரியமல்ல எனக்கு-ஆனால்?

பராக்: தயக்கமென்ன? கூறலாம்?

அருள்: அரண்மனையில் புகுந்து விடலாம். ஆனால் சோழ சக்கரவர்த்தியின் அரசதந்திரப் பார்வையிலிருந்து தப்பமுடியாதே!

பராக்: அங்கே உன் நடிப்புக் கலையைக் கையாண்டு பார். முதுமை அடைந்துவரும் கிழச்சோழன் உன் இளம் அழகில் ஊமையாகி விடுவான்.

அருள்! சரி! ஏற்றுக்கொள்கிறேன்.

அனந்: அம்மங்கை உனக்குத் தடை. அவள் சாக வேண்டும். கருணாகரன் நம் கலிங்கத்துக்குத் தடை. அவன் உன் வசம் ஆக வேண்டும். நமக்கு இருபுறமும் வெற்றி.

அருள்: ஒருவேளை கருணாகரன் என்னை மணக்க அனைவரும் ஒத்துக் கொண்டால்... ... ... ...

அனந்: ஒத்துக் கொண்டால் உன்பொருட்டு அமைதி ...மறுத்தால் கலிங்கப் போர்... ... ... ... மறந்து விடாதே.

*[திரை]*

## காட்சி 24

களம்: சோழநாட்டு அரசவை. காலம்: காலை.

உறுப்பினர்: குலோத்துங்கர், காலதேவர், காலிங்கராயர் கருணாகரன், விக்கிரமன், அருள்மொழி, கார்க்கோடகன், இராசராசன், பராந்தகர், காவலர் இருவர்.

**கால:** மதிப்பிற்குரியவர்களே! நம்மன்னர் முடிசூட்டிக் கொண்டதை நினைவு கொள்ளும் மண்ணுமங்கலத் திருநாள் இன்று. வழக்கம் போல் உள்ள கொண்டாட்டங்களுடன் இன்று வரலாற்றில் பொறிக்கத் தக்க நிகழ்ச்சியும் சேர்கிறது. இதை நம் மன்னர் தொடங்கிவைப்பார்.

குலோ: பெருமக்களே! இந்த விழாவிலே கலிங்க நாடு சென்று ஒரு புதிய ஏற்பாட்டை முடித்துத் திரும்பிய உங்கள் புதிய படைத்தலைவர் கருணாகரரைச் சிறப்பிக்கப் போகிறோம்.

மக்கள்: கருணாகரத் தளபதி வாழ்க! வீர வேல்! வெற்றி வேல்.

குலோ: இதோ, உங்கள் தளபதி கருணாகரரை அழைக்கிறேன்.

[கருணாகரன் எழுந்து வருகிறான்]

குலோ: கலிங்கம் சென்று, கடமையை மட்டும் கவனித்து நமது வெற்றிக்கு நிலைக்களமான செயலை முடித்துத் திரும்பிய தளபதி கருணாகரருக்கு "வேள்" என்ற பட்டமளிக்கிறேன்...

[வாள் ஒன்றைத் தருகிறார்]

மக்கள்: கருணாகரவேள் வாழ்க! கருணாகரவேள்!... வாழ்க!

[கருணாகரன் கண்களைத் துடைத்துக் கொள்ளுகிறான்]

குலோ: தளபதியே! இந்த நேரத்தில் உன் நெஞ்சைக் குளிரச் செய்வது என்னுடைய கடமை! கலக்கமில்லாமல் எதைக் கேட்டாலும் உறுதியாகத் தருகிறேன்.

[கருணாகரன் காலிங்கராயரை நோக்குகிறான்]

குலோ: ஏன்? காலிங்கராயரை ஏதேனும் கேட்க வேண்டுமா? அப்படி என்றால் கேட்க முடியாத

ஒன்றுனல், காலிங்கராயர் கூறட்டும்! ஏன்காலிங்க-ராயரே!

காலிங்: [காலிங்கராயர் எழுந்து] ஆம் சோழ தேவா! இதுவரை நானும் என் தம்பியும் இச் சோழப் பேரர-சுக்காக எவ்வளவோ பாடுபட்டோம். எவ்வளவோ தியாகம் செய்தோம். எங்களுக்கு வேண்டிய பயனை இப்போது கேட்கத்தான் போகிருேம். எங்களுக்கு வேண்டியது பல்லவநாடு. தொண்டை மண்டலத்தில் எங்கள் நந்திக் கொடியை மீண்டும் உரிமையுடன் பறக்க விடவேண்டும். தலைநகராம் காஞ்சியை எங்க ளுக்கே தந்து விட வேண்டும்,

[அனைவரும் அதிர்ச்சியடைகின்றனர். விக்கிரமன் துடித்து எழுந்து அமர்கிருன். குலோத்துங்கன் எழுந்து கருணுகரன் பக்கம் சென்று]

குலோ: கருணுகரா! உன் அண்ணன் கேட்பது நீ எதிர் பார்ப்பது தானு?

கருணு: சோழ மன்னு! நான் எதிர் பார்த்ததை முன்பே பெற்று விட்டேன். உங்கள் பழுதில்லா அன்பை என்று பெற்றேனே, அன்றே நான் பெறற் கரியபேறு பெற்றவனுனேன்! அது ஒன்றே எனக்-குப் போதுமானது.

குலோ: [கருணுகரன் கைகளைப் பிடித்துக் கொண்டு] கருணுகரா; இப்போது தான் என்னுடைய உண்-மையான கனவு பலித்திருக்கிறது. நீ தந்த மறு-மொழியே மதுராந்தகியின் மனத்தேர்க்குக் கடை-யாணி. காலிங்கராயரே! பார்த்தீர்களா?

விக்: [எழுந்து] திரிபுவன சக்கரவர்த்தி! என்னைப் பொறுத்தருள வேண்டும். காலிங்கராயருடன் பேச அனுமதி கோருகிறேன். அதே நேரத்தில் எனக்-குள்ள அதிகாரத்திற்கு இங்கு இடமளிக்கவும் வேண்டுகிறேன்.

குலோ: அப்படியே ஆகட்டும்...... விக்கிரமா!

விக்: [காலிங்கராயரை நெருங்கி] காலிங்கராயரே!

காலிங்: திருத்திக் கொள்ளுங்கள்! நீங்கள் கொடுத்த 'காலிங்கராயர்' என்றபட்டமும் எனக்கு வேண்டா. என் உண்மைப் பெயராகிய 'கூத்தன்' என்றே அழைக்கலாம். $

விக்: மணவிற் கூத்தரே! நான் எதுபற்றியதில் ஐயம் கொண்டேனே, அது இன்று மெய்ப்பிக்கப் பட்டு விட்டது. பல்லவனைக் காட்டிலும் பாம்பு எவ்வளவோ உயர்ந்தது என்று சக்கரவர்த்தியிடம் கூறினேன். அது பலித்துவிட்டது.

காலிங்: இளவரசே! வீணுகச் சொற்களை விடுகிறீர்கள். பல்லவனே, பாம்பு? இதைக்கேட்டு இதோ நிற்கிறனே என் உடன் பிறந்த உதவாக்கரை, இந்தக் கருணுகரன் கல்லாகலாம். என்ருல் முடியாது. யாரைப் பார்த்துப் பாம்பு என்று குறிப்பிட்டீர்கள்? அபராசித பல்லவனை மறந்து இப்படிப் பேசப்பல்லவ குலம் ஒன்றும் தாழ்ந்ததல்ல. விசயாலயச் சோழர் வீரத்துக்கு மெச்சிஅபராசிதர் தஞ்சையை முத்தரையர்களிடமிருந்து கைப்பற்றித் தந்தார். அதன் பிறகு தானே பராந்தகரும், பொன்னியின் செல்வனுன அருள்மொழி வர்மரும், வேங்கையின் மைந்தனுன இராசேந்திரரும் இச்சோழப் பேரரசைப் பெருக்க முடிந்தது. ஆனுல், நாட்டைத் திருப்பிக் கொடுத்தவன் மார்பிலேயே வேலைப்பாய்ச்சிக் கொன்ற சோழ

---

$தொண்டை மண்டலம் இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மூன்ருங் கோட்டம் மணவிற்கோட்டம். காலிங்கராயரின் இயற்பெயர் கூத்தன் என்பதே. அவர் பாண்டியர் கலகமொடுக்கிய பொழுது மணவிற்கோட்டத்தைக் கொடுத்ததால் மணவிற் கூத்தன் என்று அழைக்கப்பட்டார் காலிங்கராயர் என்பதும் அப்போது கொடுத்த பட்டமே ஆகும்.

மரபைப் போல் நான் நடந்து கொள்ள மாட்டேன் பல்லவத்தைத் திருப்பிக் கொடுப்பதால்! இதையறியாத நீங்கள் பல்லவனைப் பாம்புக்கு ஒப்பிட்டீர்களே விந்தையிலும் விந்தை! விசித்திரமான விந்தை!

விக்: இந்த நேரத்திலிருந்து உம்மைப் பதவியிலிருந்து விலக்குகிறேன். இது சக்கரவர்த்தியின் சார்பில் இளவரசன் இடும் கட்டளை (அமர்கிறான்)

(காலிங்கராயர் வாளை உருவ -விக்கிரமனும் உருவுகிறான் - காலிங்கராயர் வாளை எறிந்துவிட்டு வெளியேறுகிறார். அவையோர் அதிர்ச்சி அடைகின்றனர்]

குலோ: ஊம்... எப்படியோ தொடங்கி எப்படியோ முடிந்து விட்டது. இருக்கட்டும்; அமைச்சர் பெருமானே! இன்று நமக்குத் திறை செலுத்த வேண்டிய சிற்றரசர்கள் எல்லோரும் முறைப்படி செய்து விட்டார்களா?

கால: ஆம் மன்னவா! இதோ கங்க நாட்டு அரசன் அனுப்பிய களிறுகள் நூறு; சோணக நாட்டு வேந்தன் அனுப்பிய குதிரைகள் இருநூறு. மற்றும் நவரத்தின வரிசைகள், முத்துச் சிவிகைகள், வடமலைப் பிறந்த மணியும் பொன்னும், குடமலைப் பிறந்த ஆரமும், அகிலும் எல்லாம் வந்து குவிந்திருக்கின்றன. கங்கர், சோணகர், வத்தவர், ஒய்சலர், சாளுக்கியர் ஆகிய எல்லாருமே திறை செலுத்தியிருக்கிறார்கள்.

குலோ: கலிங்கன் பெயரைக் காணவில்லையே! கலிங்கனுக்குக் காலம் கெட்டுவிட்டது போலும் ...... ஊம்... திறை செலுத்தத்தவறிய கலிங்கனுக்குத் திருத்தமான பாடம் கற்பிக்க வேண்டும் காலதேவரே! ...

[அருள்மொழி வருகிறாள்]

அருள்: கலிங்க வேந்தர் அனுப்பிய திறைப் பொருளைக் காணாமல் பேசக் கூடாது சோழவேந்தரே!

குலோ: பெண்ணே! இப்படி இங்கே வா!

[அருள்மொழி கருணாகரனை நோக்குகிருள்]

குலோ: பெண்ணே! கலிங்கனுடைய திறைப் பொருளை நீ கொண்டு வந்திருக்கிருயா?

அருள்: ஆம் சோழ தேவா! கொண்டுவந்திருக்கிறேன்

கால: அதை எதிரே கொண்டுவந்து வைத்துப் பட்டியலில் பெயர் தந்திருந்தால் இந்தக் குழப்பம் வந்திருக்காதே!

அருள்: காலச்சுணக்கமே காரணம்.

குலோ: நல்லது பெண்ணே! திறைப் பொருளைக் கொண்டு வந்து செலுத்தலாம்.

அருள்: திறைப் பொருள் உங்கள் எதிரிலேயே இருக்கிறது சோழ தேவா!

குலோ: எதைக் குறிப்பிடுகிருய்?

அருள்: என்னைத்தான்!

குலோ: உன்னையா திறைப் பொருளாகக் கலிங்க வேந்தன் அனுப்பி வைத்தான்?

அருள்: ஏன்? எனக்கென்ன? எல்லோரும் செலுத்தும் திறையைத் தானும் எதற்காகச் செலுத்த வேண்டும் என்று சிந்தித்து, எங்கள் வேந்தர் புதுமையான முறையில் என்னை அனுப்பி வைத்திருக்கிருர் புவனேசுவரா! இங்குள்ள நவரத்தினங்களோ, கரி, பரி, ஒட்டைப் பரிவாரங்களோ என்னுடைய அழகிற்கு இணையாகுமா?

[விக்கிரமன், பராந்தகர் எழுகின்றனர்]

குலோ: அமைதி! உட்காருங்கள்! பெண்ணே! அறிவோடு பேசுகிருய். உன் பெயர்?

அருள்: அருள் மொழி நங்கை.

குலோ: 'மருள் கயற் கண்ணி' என்று வைத்திருக்கலாம். மாற்றி வைத்துவிட்டார்கள்.

கால: அருள்மொழி! கோல நிலவையே கிண்டல் செய்பவர்கள் எங்கள் சோழநாட்டுப் பெண்கள். ஒருவேளை நீ நிலவையே படைத்தவளாக இருக்கலாம்; இருந்தாலும் சோழ சக்கரவர்த்தி... ...

அருள்: என்னுடைய அழகை விலை பேச முடியாது. ஏனென்றால் ஏனைய திறைப் பொருள்கள் விலை மதிப்பிற்கு உட்பட்டவை.

குலோ: துணிவு நிறைந்த பெண்ணாக இருக்கிறாய்!

அருள்: கலிங்க நாட்டில் பிறந்த எவரும் கோழைகளாகப் பிறப்பதில்லை.

குலோ: ஆனால் ஏமாளிகளாகப் பிறப்பதுண்டு. இல்லாவிட்டால் எங்கள் படைத்தலைவர் உங்கள் நாட்டுக்கு வந்து கோட்டையைக் கட்டி முடித்திருக்க முடியுமா?

அருள்: அனைவரும் ஏமாந்தாலும் ஒரே ஒருத்தி மட்டும் ஏமாந்து விடவில்லை.

குலோ: அந்த ஒருத்தியும் சோழநாட்டில் வந்து ஏமாந்து போகத்தான் கலிங்கன் உன்னை அனுப்பி வைத்திருக்கிறான் ... போகட்டும். இந்த நவரத்தினங்கள், கரி, பரி, ஒட்டைப் பரிவாரங்கள் எல்லாம் விலை மதிப்பிற்கு உட்பட்டவை. ஆனால் ஒரு வகையில் அழியாதவை. ஆனால் உன் அழகும், இளமையும் எவ்வளவு காலம் நீடிக்கும்? நீடிக்கத் தக்க திறமை ஏதாவது உன்னிடம் இருக்குமானால் பாராட்டுவேன். அப்படியொன்றும் காணோமே.

கால: கலிங்க நாட்டவரின் மண்டைக்குள் களிமண்ணைத் தவிர வேறெதுவும் இருக்காது என்று நினைக்கிறேன்.

அருள்: சோழவேந்தரே! கலிங்கரை அவ்வளவு மதிப் பற்ற முறையில் யாரும் நினைக்க வேண்டா. இதோ பாருங்கள்... ...

[அவள் திரும்பிட கார்க்கோடகன் இசைக்கருவி தருகிறான்... அருள்மொழி அமர்ந்து இசை மீட்டிப் பாடுகிறாள்.]

பாட்டு

பண்: சாருகேசி

திங்கள் பிறையொன்று
எங்களிடை வந்து
தங்கி ஒளி வீசுதே — அலை
பொங்கிப் பரந்தோடும்
பொன்னி விளையாடும்
மண்ணில் புகழ் கொண்டதே — எங்கள்
கண்ணின் மணி ஆனதே ...... [திங்கள்]

குமுறும் மனம் கொண்ட
குடிகள் குறை வென்ற
புலியின் கொடி வேந்தனே — நீயே
புவியின் தலை மாந்தனே — உயர்

பாடல் பல தேர்ந்து
பாவின் நயம் ஓர்ந்து
இசையில் திறம் எய்தினாய் — நானும்
இசைந்து மனம் நாடினேன். [திங்கள்]

[பாடலின் போது குலோத்துங்கர் காலதேவரைப் பார்க்கிறார் — காலதேவர் தலையாட்டுகிறார் — இந் நேரம் கருணாகரனும் அருள்மொழியும் பார்த்துக் கொள்கின்றனர் — காலதேவர் கனைக்கின்றார்]

குலோ: [எழுந்து] ஏழிசை வல்லி! உன்னுடைய இசைக்கு நான்தான் தலைவன் என்றாய்.

அருள்: ஆமாம்! என் இசைக்குத் தாங்கள்தான் தலைவர்.

குலோ: இசைக்கு மட்டுமல்ல அருள்மொழி! உன் வாழ்விற்கும் நான்தான் தலைவன்.

அருள்: என்ன? [அதிர்ச்சி அடைதல்].

குலோ: ஆம்! இன்று நான் உன்னைத் திருமணம் செய்து கொண்டு என் தேவியாக்கிக் கொள்கிறேன்.

[அனைவரும் அதிர்ச்சியடைகின்றனர்]

அமைச்சர் பெருமானே! இந்த நேரமே திருமணம் நடை பெற வேண்டும். ஆவனவற்றை உடன் கவனிக்கவும் [காலதேவர் மெல்லச் சிரிக்கிறார்]

[கருணாகரன் முகத்தில் ஈயாடவில்லை]

[விக்கிரமன் வேகமாக எழுந்து செல்கிறான்]

(திரை)

## காட்சி 25

களம்: சோலை காலம்: காலை

உறுப்பினர்: விக்கிரமன், காலதேவர்.

[விக்கிரமன் உலவிக் கொண்டிருக்க - காலதேவர் வருகிறார்]

விக்: அமைச்சர் பெருமானே! நெஞ்சோடு சொல்லுங்கள்; தந்தையாருக்கு இந்த அகவையில் ஓர் இளம் பெண் தேவையா? இவருடைய திருமணத்தால் நகரிலும் நாட்டிலும் மறுப்புக்கள் எழலாம்; நட்புரிமை மாறுபடலாம்; எதிரிகள் எக்காளம் போடலாம். அந்த இளம் பெண்ணால்..........

கால: விக்கிரமா?

விக்: இவருக்கு என்ன நன்மை? அந்தப் பெண்ணின் அழகுக்கும் இளமைக்கும் இவர் எழுப்பப்போகும் பிணமேடு......

கால: விக்கிரமா! நானும் அதை அறிவேன். இருந்தாலும் எப்போது அருள்மொழி உன்னுடைய தந்தையாருக்குத் தேவியாய் விட்டாரோ அப்போது உன்னுடைய சிற்றன்னை ஆகிவிடுகிறார். அதை மறந்து

'அவள்' 'இவள்' என்று பேசலாமா? இது எவ்வளவு பெரிய குற்றம் என்பதை மறந்தாயா?

விக்: அமைச்சரே! எனக்கு இதுபிடிக்கவில்லை. நான் எங்காவது போய்விடலாம் என்று நினைக்கிறேன்.

கால: வீரனுக்குப் படபடப்பு இருந்து பயனில்லை விக்கிரமா? பொறுமை இருக்க வேண்டும்.பொறுமையுள்ள வீரன்தான் பெரும் பேரரசைக் கட்டியாண்டு வெற்றி பெறமுடியும்.

விக்: அமைச்சரே! இன்று நடந்த நிகழ்ச்சிக்குமா பொறுமை தேவைப்படுகிறது? அப்படியானல் உண்மையை விளக்குங்கள், தந்தையார் செயல் சரியா?

கால: ஐயமில்லை விக்கிரமா! சோழ மன்னர் ஒருசெயலில் இறங்கினுல் அது திட்டவட்டமாகத் தெளிந்த முடிவாகத்தான்இருக்கும்.அவருடைய நிருவாகத்தின் அருமையை உணர்ந்தவன் நான். இதுவும் அப்படித் தான். இதனுல் சோழப் பேரரசையே காக்க முடிந்தது.

விக்: எப்படி?

கால: விக்கிரமா! நீமட்டும் தெரிந்து கொள்ள வேண்டியது தான். அருள்மொழி நங்கை கருணுகரனுக்கு அறிமுகமானவர். கருணுகரன் ஒருவேளை அவரை விரும்பி அவருக்கு அடிமையாகி விட்டால் சோழ நாட்டின் எதிர்காலமே கெட்டுவிடும். இனிஅவரைக் கனவிலும் நினைக்க முடியாதபடியும், கருணுகரன் இனிக் கடமையிலேயே கருத்தாக இருக்கும் படியும் குலோத்துங்கன் செய்த துணிவான செயல் இது. ஒருவேளை வேறு ஏதாவது திட்டத்தோடு வந்திருந்தாலும் அது இந்நேரம் மண்ணுய்ப் போயிருக்கும்.

விக்: அப்படியா? என் தந்தையை என்னுல் புரிந்து கொள்ளவே முடியவில்லை... ...

(திரை)

# காட்சி 26

களம்: புதுமாளிகை. காலம்: பகல்.

உறுப்பினர்: கார்க்கோடகன்-இராசராசன்-அருள்மொழி.

[அருள்மொழி அழுதுகொண்டே கண்களைத் துடைத்துக் கொள்கிருள்]

கார்க்: அம்மா! இனிக் கண் கலங்கி......?

அருள்: கார்க்கோடகா! கடைசியில் எப்படி ஆகிவிட்டது என்று பார்த்தாயா? கருணுகரரைச் சந்தித்து அவருடைய உள்ளத்தைத் தெரிந்து கொண்டு பிறகு நம் திட்டப்படி செய்யலாம் என்று நினைத்தேன். எல்லாவற்றையும் தகர்த்து விட்டாரே அந்தக் குலோத்துங்கர்.

கார்க்; திறைப் பொருளாக வந்த நாம் மறுத்துப் பேசவும் வாயில்லாமல் போய்விட்டது.

அருள்: இப்போது என்ன செய்வது? என் வாழ்வு போய் விட்டது. காட்டில் எரித்த நிலவாய், கடலில் பெய்த மழையாய், என் வாழ்வு பாழாகிவிட்டது.

கார்க்: இனி அழுது பயன் இல்லையம்மா! நடக்க வேண்டியதை.........

அருள்: (வெறுமை உணர்வுடன்)நடக்க வேண்டியது......ஊம்...இனி எனக்கு நடக்க வேண்டியது இறுதிச் சடங்கு ஒன்றுதான்......

கார்க்: அம்மா!மனம் நொந்து பேசக்கூடாது. கருணுகரரை இனி நீங்கள் நினைக்க முடியாது.உங்கள் நினைவிலும் நம்பிக்கையிலும் திரை விழுந்து விட்டது.இனி நம் ஒரே குறிக்கோள் கலிங்க நாட்டுக்கு நம் கடமையைச் செய்வது. அரண்மனையில் இடம் பிடிக்க நினைத்தோம். அது...

அருள்: சுடுகாட்டில் கொண்டு போய்விட்டது.

கார்க்: சோர்வுகொள்ளாதீர்கள் தாயே! இனி, குலோத்துங்கரிடமிருந்து நமக்கு வேண்டிய செய்திகளை அறிந்து கலிங்கவேந்தருக்குத்தெரிவிக்க வேண்டும்.. கண்ணீரைத் துடையுங்கள்! கடமையின் கதவைத் திறவுங்கள்.

[இந்நேரம் யாரோ கதவைத் தட்டும் ஓசை கேட்கிறது]

அருள்: கார்க்கோடகா! யாரென்று பார் அவராக இருக்கும்

[கார்க்கோடகன் கதவைத் திறக்கிறான்-இராசராசன் வருகிறான்]

இராச: வணக்கம் தாயே...

அருள்: வாருங்கள்...

கார்க்: அம்மா, நான் சொன்னேனே! இராசராசர்...... குலோத்துங்கரின் மூத்தபுதல்வர்......

இராச; நானும் உங்கள் ஆள் தான்...... உங்கள் நோக்கங்களைப் பராக்கிரம பாண்டியர் வாயிலாக அறிந்தேன். உங்கள் உதவிக்கு நான் எப்போதும் தயார்

அருள்: உங்கள் ஆசைப்படியே நடக்கட்டும்.

இராச: பாருங்களேன்! மமதை பிடித்த என் தந்தையையும் வெறிபிடித்த விக்கிரமனையும் உருட்டி விடுவோம். பிறகு நான்தான் சோழ நாட்டு வேந்தன். நீங்கள் தான்.... இல்லை.... இல்லை.... நீங்கள் எதுவேண்டுமானாலும் அதிகாரம் செய்யலாம்......கலிங்க வேந்தர் கனவும் நிறைவேறும்.. அதுவும் நீங்கள் இப்போது அரசியாகிவிட்டீர்கள் ......

கார்க்: ஏதாவது நோக்கத்தோடு மன்னர் இதைச் செய்திருப்பாரா?

இராச: ஊம்...... அது ஒரு கிறுக்கு. எதையாவது நினைத்துக் கொண்டு எதையாவது செய்யும்...சரி! நம்ம வேலையாத்தான் ஓர் இடத்திற்குப்போகிறேன்- திரும்பி வந்து சேதியைச் சொல்கிறேன்.

அருள்: போய் வாங்க......

[திரை]

## காட்சி 27

களம்: புதுமாளிகை காலம்: மாலை

உறுப்பினர்: அருள்மொழி, கார்க்கோடகன், கருணுகரன் (அருள்மொழி எதையோ எதிர் பார்த்து நிற்கிருள், கார்க்கோடகன் வருகிருன்)

அருள்: என்ன?

கார்க்: இன்னும் கொஞ்ச நேரத்தில் அவர் வருகிறேன் என்று சொன்ஞர்.

(திருமுகக் கழுகு வருகிறது, கார்க்கோடகன் எழுந்து அதன் கால்களில் கட்டப்பட்டிருக்கும் ஓலையை எடுத்துக் கொடுக்க அருள்மொழி படிக்கிருள்)

கார்க்: தேவி! முகமும் மலர்கிறது.... அதே நேரத்தில் கண்ணும்....

அருள்: எல்லாம் நல்ல செய்திதான். அதனுல் ஏற்பட்ட மகிழ்ச்சிக் கண்ணீர். போகட்டும் கார்க் கோடகா! கருணுகரரின் தமையன் காலிங்கராயர் மாவீரரல்லவா? அவர் பராக்கிரம பாண்டியனிடம் சேர்ந்து கொண்டாராம்.

கார்க்: தேவி! பாண்டியர் இருக்குமிடம் நமக்கும் தெரிந்தால் நல்லது. திடீரென்று ஏதாவது ஏற்பட்டால் நாஞே அல்லது நாமோ ஓடி மறையலாம் அல்லவா?

(கருணுகரன் அவர்கள் பேச்சைக் கேட்டு விட்டு மறைகிருன்)

அருள்: கார்க்கோடகா! கழுகை ஆயத்தப் படுத்து. அடுத்து அனுப்பும் செய்தியில் பாண்டியரின் இடம் கேட்டு எழுதுகிறேன். தெரிந்துகொண்டால் நன்மையே கிடைக்கும். சரி. நீபோ! கருணாகரர் வருகிற சமயம்......

(பிறகு திரும்பி நிலவைப் பார்த்துக் கொண்டிருக்கிருள். கருணாகரன் வந்து நிற்கிருன்-திரும்பிய அருள் மொழி அழுது கொண்டே கண்ணீரைத் துடைத்துக் கொள்கிருள்கருணாகரனும் கண்ணீரைத் துடைத்துக் கொள்கிருன்)

அருள்: ஏன் இப்படியே நிற்கவேண்டும்? உட்காரவும் மனமில்லையோ?....?

(கருணாகரன் நின்று கொண்டேயிருக்கிருன்)

அருள்: என் மீது உங்களுக்கு இப்போது வருத்தமில்லையே....?

கருண: தேவி! என்ன சொல்லைச் சொன்னீர்கள்? யார் மீது யார் வருத்தப்படுவது? நான் தாங்கள் இட்ட கட்டளையைத் தலைமேல் தாங்கிச் செய்ய வேண்டியவன். சோழ தேவியான தங்கள் பேரில் நான் சினந்து என்ன செய்ய முடியும்?

அருள்: இப்படிக் கூரிய சொற்களால் என்னைக் கொல்ல வேண்டா. படைத்தலைவரே! உங்களிடம் மன்னிப்புக் கேட்கத்தான் ஆளை அனுப்பி வைத்தேன். நீங்கள் குறிப்பிட்டது போல் நான் சோழதேவி தான். ஆனல் என் கட்டளையைத் தாங்கக் கூடியது தங்கள் தலையல்ல, குலோத்துங்க சோழருடைய தலைதான்.....

கருண: தேவி! என்ன கொடுமையான சொல்லைச் சொன்னீர்கள்?

அருள்: சொல்லியதில் தவறில்லை, கேளுங்கள்; அரண்மனையில் பணிப் பெண்ணுக அமர்ந்து உங்களுடைய காதலைப் பெற எண்ணினேன். உங்கள்

வாழ்வுக்குத் துணை நின்று காஞ்சியை ஆளவும் கனவு கண்டேன். கலிங்க வேந்தர்தான் இப்படிப்பட்ட கனவுக்கு நீரூற்றி வளர்த்தார். ஆனால் திறைப்பொருளாகிக் கலிங்க நாட்டுக்கு நேரவிருந்த கறைநீக்க வந்த என்னைச் சோழ சக்கரவர்த்தி மனைவியாகவே ஏற்கத் துணிந்து விட்டார். என் அழகின் போதையோ! இளமையின் குறுகுறுப்போ? அல்லது இசையின் சுவையோ? எதுவென்று தெரியவில்லை. நீங்கள் காலமெல்லாம் போற்றும் தந்தை போன்ற குலோத்துங்கர், மகள் போன்ற என்னை மனைவியாக்கிக் கொண்டார். நீங்கள் நெஞ்சில் வைத்துப் போற்றிய விருதராச பயங்கரர் என்னும் பட்டம் கொண்ட சக்கரவர்த்தி, கொஞ்சிக் குலவ வந்த நம் காதலுக்கே பயங்கரராகிப் பாதியில் தீயிட்டார். என் மீது குற்றமில்லை என்று தெரிவிக்கவே உங்களை வரச் சொன்னேன்.

கருணா: ... ... ... ... ...

அருள்: ஏன்? நான் சொல்லி வந்தது தங்கள் காதுகளுக்கு இனிக்கவில்லையோ?

கருணா: சோழ தேவி! இனிமேல் இப்படி யெல்லாம் என்னிடம் பேச மாட்டீர்கள் என எதிர்பார்க்கிறேன். காலத்தால் நேர்ந்த சில கனவுகள் கனவுகளாகவே போகட்டும். கலைந்த வண்ணங்கள் மீண்டும் ஓவியமாக முடியாது. இனி என்னைப் படைத்தலைவனாகவே நடத்துவது நல்லது. அதே நேரத்தில் தாங்கள் சோழதேவரின் பத்தினி என்பதை மறக்காமல் நடந்து கொண்டால் போதும்.

ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த உலகின் எந்த ஒரு மூலையில் சக்கரவர்த்திக்குத் துரோகம் நடந்தாலும் சரி, இந்த வாள் குருதியில் குளித்தே தீரும் ... ...

[கருணாகரன் விரைவாகப் போய்விடுகிறான்]

[திரை]

# காட்சி 28

களம்: சாலை காலம்: காலை

உறுப்பினர்: முடிகொண்டான்- சுமித்திரை- அம்மங்கை

[சுமித்திரை, முடிகொண்டான் எதிர் எதிரே சந்தித்துக் கொள்கின்றனர்]

சுமி: அடடே யார் நீங்க? எங்கேயோ பார்த்த மாதிரி...

சுமி: இருக்கும் ... இருக்கும் ... நீங்க பெரிய இடம் ... எங்களையெல்லாம் நினைவு இருக்குமா என்ன!

முடி: நீங்க சொன்னாலும் சொல்லாவிட்டாலும் பெரிய இடந்தான் ......அருள்மொழி நங்கைக்குத் தோழி......அம்மங்கை தேவிக்கும் தோழி ...... கால தேவருக்கு ஒற்றாள் ......

முடி: எனக்கு.........

சுமி: ஏன், ஏதாவது வேணுமா......?

முடி: பொருத்தமாத்தான் பேசுறே ...நீயும் ஒற்று வேலை ... நானும் அதே......நானும் அஃதே...

சுமி: என்னையா அத்தேங்கிறே ...என்னைப் பார்த்தா அத்தை மாதிரித் தெரியுதா ...,

முடி: ஊம்......அத்தை மகள் மாதிரித்தான் தெரியுது ஊம்......நான் எதைச் சொல்ல வந்தேன்னு இரண்டு பேருமே இந்த அரசாங்கத்திலே ஒற்றுப் பார்க்கிற வேலை செய்யுறோம்......நல்ல பொருத்தம் இருக்கு......

சுமி: நெருங்குறியே,......

முடி: கருணாகரர் அருள்மொழியம்மாவைக் காதலித்-தார்,...... கதை பாதியிலே ...... பக்.... அம்மங்கை தேவி கருணாகரரை விரும்புகிறார் போலே இருக்கு... ஊம் அதெல்லாம் பெரிய இடம்... இப்ப நாம் இரண்டு பேரும்தான் சும்மா இருக்கோம்.......

சுமி: ஏது கொஞ்சநேரம் போனல் ஆளைத் தலையிலே தூக்கி வைச்சிருவாய் போலேருக்கே.......

முடி: செய்யுறேன் ...... சிவபெருமான் கங்காதேவியை முடியிலே உட்கார வைச்சிருக்கார்......அவர் முடி கொண்டார். நானும் முடிகொண்டான்.

சுமி: அம்மாடி! உன் பேராயா இது?

முடி: ஆமா! முடிகொண்டான்......

சுமி: அப்ப! தலையை மொட்டை அடிச்சிருவே...

முடி: சே சே! முடிகொண்டான்னு கேவலம், தலைமுடியையா? காந்தளூர்ச் சாலைப் போரில் பாண்டியர் படைகளோடு நாம் கைகலக்க, காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை ஆகிய நாற்படையும் வந்து மோத... அங்கு அடியேன் வாளெடுத்து வீச...

சுமி: வால் எடுத்தா...?

முடி: சே; வாளெடுத்துவீசப் பாண்டியரில் முக்கியமான நாலுபேர் தலையை நான் உருட்ட, அதனுல் முடிகொண்டான் என்னும் பெயர் பெற்றேன்.

சுமி: ஊம்! தேவலையே! அப்ப நம்பலாம்!

முடி: நம்பலாம்! இப்ப என்னை நம்பலாம்! நம்பி எதையும் செய்யலாம். அதனுலே ஏதாவது முக்கிய செய்தி...

[அம்மங்கை வந்து மறைந்து நிற்கிருள்]

சுமி: இருக்கு! அருள்மொழி தேவியைக் கருணுகரர் சந்தித்தார்.

முடி: ஐயய்யோ!

சுமி: ஏய்யா அலர்றே! ஒன்னும் ஆகலே. கருணுகரர் வேகமாய்ப் பேசி விட்டுப் போனுர் ... அவ்வளவு தான்.

மூடி: அப்ப, ஏதோ இருக்கு! நான் வர்றேன்... நம்ம கோரிக்கையைக் கொஞ்சம் கவனி...

சுமி: கவனிச்சுக்கிட்டுத்தானே வர்ரேன்!

[இருவரும் போகின்றனர்]

அம்: [வெளியே வந்து] சுமித்திரை! சுமித்திரை!

சுமி: என்னம்மா!

அம்: ஓடிப்போய் தளபதி கருணுகரரை...

சுமி: அழைத்து வரட்டுமா அம்மா...

அம்: ஊம்...[அவள் ஓடுகிருள்]

அம்: இறைவா! கருணுகரரை எனக்கே கொடுத்து விடு. அவர் இல்லாவிடடால் அம்மங்கையில்லை. போர்க்களத்தில் மடிந்து விட்டாலாவது காலமெல்லாம் கன்னியாக இருந்து விடலாம். அவர் வேறு எந்தப் பெண்ணிடமாவது அடங்கி விட்டால் அப்புறம் என்னுயிர் எனக்கில்லை.

[திரை]

## காட்சி 29

களம்: புதுமாளிகை காலம்: மாலை

உறுப்பினர்: கருணுகரன், அம்மங்கை

அம்: வாருங்கள்......

கருணு: .........

அம்: பேசுங்கள்......

கருணு: .........

அம்: கலிங்கநாடு உருவத்தைத்தான் மாற்றியிருக்கிறது என்ருல் வாயையும் மூடிவைத்து விட்டதோ? சோழநாட்டின் படைத் தலைவர் அமரலாம்!......

கருணு: இளவரசி! இங்கு வந்ததே குற்றத்தில் பெருங்குற்றம்......இதையும் மீறி இளவரசியார் முன்

இருக்கையில் அமர்வது முறை கேடானது.

அம்: முறை கேடானது எது என்று முடிவு செய்ய வேண்டியவள் நான். அம்மங்கை சோழ சக்கர-வர்த்தியின் திருப் புதல்வி. மதுராந்தகி தேவியின் குருதியில் ஊறியவள். கரிகால் பெருவளத்தார் மரபில் வந்தவள். நாயகரே! அம்மங்கை எப்போதும் முறை தவறி நடக்க மாட்டாள்; அமரலாம்......

கருணு: இளவரசி என் பேச்சில் ஏதேனும் தவறு கண்டிருந்தால் பொறுத்தருள வேண்டும்.

அம்: முடியாது......

கருணு: இளவரசி......

அம்: நான் உங்களை மன்னிப்பதென்பது பொறுக்க முடியாத குற்றம்... எனக்கு அருள வேண்டியவர் தாங்கள்....

கருணு, .........

அம்: அமர்ந்து சிந்தியுங்களேன்.

கருணு: நின்று கொண்டு பேசுவதில் ஒருநிறைவு இருப்பதாக நினைக்கிறேன், இளவரசி...

அம்: பிறகு உங்கள் விருப்பம்...அதை மேலும் கெடுக்க நான் விரும்பவில்லை; இந்த நேரத்தில் எங்கே போய் வருகிறீர்கள்...

கருணு: இளைய தேவியார் அழைத்திருந்தார்.........
அதனால்...

அம்: ஏனோ?

கருணு: ...

அம்: துணிவாகச் சொல்லுங்கள்;உங்களுக்கு நோய் வந்தால் தானே நான்கு பெண்கள் தேவை; வாழ்க்கைக்கு ஒருத்திதானே? அழைத்த காரணம் தான் எனக்குத் தேவை...

கருணு:...

அம்: சொல்ல விருப்பமில்லையென்ருல் வேண்டா... ஏனென்ருல், நான் இளவரசியானுலும் உங்களை அதட்டிக்கேட்கும் அதிகாரமோஉரிமையோ எனக்கு

கருணு: உண்டு இளவரசியாரே! உண்டு; கலிங்கத்தில் கொஞ்சம் பழக்கம் உண்டு. அதனுல் நலம் கேட்க அழைத்தார். வேறென்றுமில்லை இளவரசி!...

அம்: ஓகோ! அப்படியா! அது போகட்டும்! அடிக்கடி இப்படி இளவரசி, இளவரசி என்று அழைப்பதை நான் விரும்பவில்லை. தனிமையில், நீங்கள் விரும்பினுல் பெயரிட்டே அழைக்கலாம்.

கருணு: அதற்கான தகுதி என்னிடம் இருப்பதாக எண்ணுகிறீர்களா?

அம்: அதைவிட மேலான தகுதியிருப்பதாக எண்ணுகிறேன் ... என்னைவிட அதிகமாக எண்ணியவர்கள் என்னுடைய தாயாரும் தந்தையாரும். மாவீரரே! மண்ணுக்குப் பொன்னருமையும், கடலுக்கு முத் தருமையும் தெரிவது கடினம்தான். அதோ இருக்கும் [கருணுகரனைச் சுட்டிக்காட்டி] யாழின் அருமை எனக்குத் தான் தெரியுமே யொழிய அதற்கெப்படித் தெரியும் ... ?

கருணு: எந்த யாழைச் சொல்கிறீர்கள் ...

அம்: ஓ! கை, உங்கள் பக்கம் திரும்பியிருக்கிறதா ... நீங்கள் தான் அந்த யாழ் என்று வைத்துக் கொள்ளுங்களேன்! ...

கருணு: இளவரசி! நிலவையும் விண் மீன்களையும் முத்துக்களையும் வைடூரியங்களையும் பொடியாக்கி உருக்கி வார்க்கப்பட்ட சிலைக்குப் பேசும் திறனளித்தால் அது உங்களைப் போல்தான் இருக்கும் ...

அம்: காலதேவரின் பழக்கம் இருப்பதனுல் கற்பனை வாடை வீசுகிறது போலும்!

**கருணு:** (சிரிப்போடு) அதெல்லாம் இல்லே! உங்கள் விழிகள் கற்றுக் கொடுத்த இரண்டு பாடங்களில் காவியம் ஒன்று.

**அம்:** அப்படியா? மற்றொன்று

**கருணு:** களம் ..., வேலேயும், வாளேயும் நினைவுபடுத்தும் வெற்றிப் பாடம்.

**அம்:** ஆண்களிலேயெ உங்கள் தலே கொஞ்சம் கனத்தது தான்.

**கருணு:** அதனுல்தான் இளவரசி, ...

**அம்:** என்ன?

**கருணு:** இல்லே, இல்லே ...... அதனுல்தான் கருணுகரி சில சமயங்களில் கழுத்து நோகிறது ......

**அம்:** நாயகரே! (தன்னே மறந்து கையைத் தொடுகிருள்.)

(இருவரும் ஒரு கணம் மெய் மறக்கின்றனர் — அந்த மயக்கத்தில் இனம்புரியாத, ஆனுல் விட்டுப் பிரிய மனமில்லாத ஏதோ ஓர் உலகில் பறக்கிருர்கள் —கற்பனே சிறகடித்துப் பறக்கிறது —காவியம் பிறக்கிறது.)

பாடல்

**கருணு:** உன்றன் இடையினில் வாழ்க்கையின்
வளேவையும் நெளிவையும்
இன்றே நான் படித்தேன் — எழில்
நடையினில் அன்னமும் அழகிய மானும்
நாணிடும்; நான் களித்தேன்

**அம்:** கை இடையினில் உன்னேயும் என்னேயும்
மறந்திடும்
இன்பத்தில் நான் திளேத்தேன் — உன்
நடையினில் யானேயின் அசைவையும் வலிவையும்
கண்டே நான் சிரித்தேன்.

கருணு: பின்னலில் பாம்பின் தோற்றமும் நெளிவும்
கண்டே நான் பதைத்தேன் — மொழிக்
கன்னலிலே நல்ல கரும்பும் தேனும்
கசப்பதை நான் உணர்ந்தேன்.

அம்: உடலினை உன்னிடம் தந்ததனுலே
உணர்வினை நான் இழந்தேன் — இன்பக்
கடலினை நீந்திடக் காலமெல்லாம் நான்
காத்தே தவங் கிடந்தேன்.

கருணு: படைகொண்டு வந்தே பகைவனை வெல்லும்
பார்வையில் நான் திகைத்தேன் — இதழ்க்
கடையினில் நெளிந்திடும் கள்வெறிப் புன்னகை
கண்டே நான் தவித்தேன் — தேன்
இருவரும்: உண்டே நாம் சுவைத்தோம்

*[திரை]*

## காட்சி 30

களம்: குகை காலம்: பகல்

உறுப்பினர்: பராக்கிரமன், காலிங்கராயர், இராசராசன் பாண்டியஒற்றன், சோழவீரன், கொலையாளி.

(காலிங்கராயர், இராசராசன் குகையில் நுழைகின்றனர். ஒருவன் காவல் நிற்கிறுன். இராசராசன் கைகளைக் குவித்துச் சைகை காட்டுகிறுன்)

பாண்: வானளாவும்......

இராச: மீனக்கொடி...... மீனக்கொடி...

(உடனே அவன் சீழ்க்கை அடிக்கிறுன். உள்ளிருந்து மறு சீழ்க்கை வர வழிவிடுகிறுன். உள்ளே செல்கின்றனர்].

பராக்: வருக! இராசராசரே வருக! சொன்னது போல்

முடித்துக்கொண்டு வந்திருக்கிறீர்கள். வெற்றி நமக்குத்தான் என்று நம்புகின்றேன்.

இராச: திரிபுவனரே! இவர்தான் காலிங்கராயர் பட்டம் கொண்ட பல்லவக் கூத்தனுர்......

பராக்: எனக்குத் தெரியாதா! காலிங்கராயரே! நடந்ததெல்லாம் என் காதுக்கு வந்தது. எல்லாம் நன்மைக்கே: ... உமக்கு நல்லகாலம் வந்ததனுல் தான் இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு நம்மை நாடியிருக்கிறீர்.

காலி: பராக்கிரமரே! துணிவுடன் தான் உம்மை நாடியிருக்கின்றேன். என்னைத் தாராளமாக நம்ப-லாம். இனி, சோழன் என் பகைவன். என்னுடைய வஞ்சினத்தைத் தீர்த்துக் கொண்டு மாண்ட பல்லவத்தை மீண்டும் அடைந்து ஆள்வதே என் குறிக்கோள்......அதற்குத் தங்களுடைய உதவி முழுமையாகத் தேவை.

பராக்: ஆகா ......!...அப்படியே ஆகட்டும்................ காந்தளூர்ச் சாலைப் போரில் என்னையும் கலங்கடித்து வெற்றிகண்ட மாவீரர் ... இன்று எனக்கே துணையாக வந்தார் என்றால் இதைவிட வேறு என்ன சிறப்பு இருக்க முடியும்? வந்தது வந்தீர்!... அந்த விக்கிரமனை உங்கள் வாளால் வெட்டி வீழ்த்தி விட்டு வந்திருக்கலாம் . . . .

காலி: விக்கிரமனை வீழ்த்துவது எனக்கு வாழை மரத்தை வெட்டுவது போல! ... இருந்தாலும்...

பராக்: தயங்காமல் சொல்லுங்கள்...

காலி: என்னுடைய தங்கை, இளவேணி அவனுடைய காதலியாக இருக்கிருள்...அதனுல்தான் அமைதி-யாக வந்துவிட்டேன்.

இராச: காலிங்கராயரே!...தங்கை, தாரம் என்றெல்-லாம் அரச காரியங்களில் கவனிப்பது நமக்கு ஒத்து-

வராது ...விக்கிரமனை வெட்டியிருந்தால் ... நமக்குப் பல நன்மைகள் உண்டாகியிருக்கும் ... நான் தானே பிறகு இளவரசன்...

பராக்: ஆம்! காலிங்கராயரே! — உம்மைப் போன்ற வீரர்கள் கடமையிலும், அதை நிறைவேற்றும் வழி முறையிலும்தான் கண்ணோட்டம் செலுத்த வேண்டும் ... தவறினால் தரையில் போட்ட கோலத்தைத் தாம்பாலத்தில் எடுக்க நினைத்த கதையாகிவிடும் ...

காலி: ஒப்புக் கொள்கிறேன் ... பாண்டியரே! கடமையைக் கருதித்தான் இங்கு வந்தேன் ... இனிக்கடமை தான் எனக்குப் பெரிது ... வெறிகொண்ட குறிக்-கோள்தான் எனக்கு இனி உண்ணும் உணவு உடுக்கும் ஆடை ... படுக்கும் பஞ்சணை ... காணும் கனவு ... திரிபுவனா! இப்போது சோழநாடு குழப்-பத்தில் உள்ளது ... நாம் மேலும் குழப்பத்தை உண்டாக்கினால் பாதிப் பலன் கைமேல் கிடைத்து விடும் ...

பராக்: நானும் தான் அப்படி நினைக்கிறேன். ஆனால்...

[சீழ்க்கை ஒலி கேட்கிறது. பாண்டியன் மறு சீழ்க்கைஅடிக்கிறான். பாண்டிய ஒற்றன் திருமுகக் கழுகோடு வருகிறான். பாண்டியன் கழுகு கொண்டு வந்த ஓலையைப்படிக்கிறான்.]

பராக்: எல்லாம் ஒரு வகையில் இனி வெற்றியாகும் அருள்மொழி நங்கை அருள் புரிவாள்,

இராச: அருள் மொழியை நானும் சந்தித்தேன். . . . . நம்பலாமா? . . . நம்முடைய கையாள் தானா?

பராக்: அவளை நாங்கள் தானே அரண்மனையில் இடம் பிடிக்கச் சொல்லி அனுப்பி வைத்தோம். அவளோ மன்னனையே பிடித்து விட்டாள் ... நண்பர்களே! இனி நடப்பது தான் போர். நாங்கள் ஒன்பது பேர்... உதவிக்கு உங்களைப் போன்ற வீரர்கள். அந்தப்-

பக்கம் ஒரேஒரு குலோத்துங்கன் ...அவனை அருள்-மொழியே மயக்கிவிடுவாள். அந்தப் பொடிப்பயல் விக்கிரமன் ... பிறகு யார் ... கருணாகரன்— தடிப் பயல்—இன்னொன்று தெரியுமா? அருள்மொழி கருணா கரனின்காதலி. அவன் ஏமாற்றியதற்குப் பழி வாங்கத் தான் அருள்மொழி வந்திருக்கிறாள் . . . . .

இராச: திரிபுவனரே?... இதை ஏன் சொன்னீர்கள் ... தங்கையின் காதலன் என்பதற்காக விக்கிரமன் மீது பாசம் காட்டிய காலிங்கராயர் ...தம்பி கருணாகரனுக்-காக ஏதாவது செய்து விட்டால் . . . .

பராக்: நடக்காது . . . .கருணாகரன் காதலியைக் குலோத்துங்கன் கவர்ந்து கொண்டானே என்பதற்-காகச் சினம் தான் வரவேண்டும்.

காலி: எனக்கு இப்போது எதைப்பற்றியும் கவலை யில்லை . . . . காஞ்சிக் கோட்டையில் நந்திக்கொடி பறக்க வேண்டும்.

பராக்: கட்டாயம் உமது மனத்தேர் நிறைவேறும் . . . . சரி ... இந்த நேரத்தில் குருதியில் வஞ்சினம் எடுத்துக் கொள்வோமாக. கொற்றவைக்குப் பலி கொடுத்துக் குருதியில் குளிப்போம்.

காலி: பலியா?

பராக்: ஏன் அச்சமா? ... களத்துக்கு வந்து விட்டால் ... கணக்கற்ற தலைகளைச் சீவி எறியும் காலிங்கராயரா இப்படிச் சொல்வது? . . .

காலி: இல்லை . . . அது போர் அறம் ... நடை முறை-யில் நரபலி தருவது நாகரிகமாகாது ...

பராக்: கேளுங்கள் ... என்று வீரபாண்டியன் தலையை ஆதித்த கரிகால் சோழன் வெட்டி எடுத்து விழாக் கொண்டாடினானே ... அன்று முதல் சோழ வீரர் எவர் அகப்பட்டாலும் பலிதான் ... குலோத்துங்க

னின் தலையைக் கொற்றவை முன் பலியிடும் வரை என் வஞ்சினம் நீடிக்கும் ... ஏய்! யாரங்கே கொண்டுவா அந்தச் சோழ வீரனை ...

[சோழ வீரன் ஒருவனைஇழுத்து வருகின்றனர், அவன் காலிங்கராயரையும் இராசராசனையும் கண்டு தலை கவிழ்கிருன்.]

பராக்: காலிங்கராயரே! ... இந்தக் கணம் முதல் நீர் என் நண்பர். குறிக்கோளை நிறைவேற்றத் துணையிருப்பேன் என்று கொற்றவை முன் வாக்களிக்கிறீர் ... ஊம் ... நடக்கட்டும்.

[கொலையாளி வாளை ஓங்குகிருன். கதறல் ஒலி; ஒரு கதை முடிகிறது]

[திரை]

## காட்சி 31

களம்: சோலை. காலம்: மாலை.

உறுப்பினர்: குலோத்துங்கர், காலதேவர், கருணாகரன், முடிகொண்டான்.

கால: குலோத்துங்கா! ... உன்னுடைய முடிவை நான் வரவேற்கிறேன் ... அந்த நேரத்தில்நீ அருள்மொழியை மணக்காவிட்டால் ... கருணாகரனைநாம் நம்புவதில் பயனில்லாமல் போயிருக்கும் ... அப்படிச் செய்தபோது அரசவையில் பலர் தலையைத்திருப்பிக் கொண்டதை நான் கவனித்தேன்.

குலோ: காலதேவரே! ... அனைத்தும் நான் அறிவேன் ... ஒன்பதுபேர் கலிங்கனேடு சேர்ந்து விட்டதற்காக குலோத்துங்கன் சோர்ந்துவிடமாட்டான். சோழ மறவர்கள் எல்லாம் முரசு முழங்கினுல் போருக்கு முனைந்து எழத் துடித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் எல்லோரையும் வகைப் படுத்திப் பகைப்

புலத்தை வேரறுக்கும் கருணாகரன் இருக்கவே இருக்கிறான் ... அச்சமென்ன! காலதேவரே!!

கால: உன்னைவெல்லயாரால் முடியும், குலோத்துங்கா இந்த நிலம் அளந்த நெடுமாலின் பலம் உன்னிடம் இருக்கிறது ... இருந்தாலும் அறிவுரையாகச் சிலவற்றைக் கூற நான் கடமைப் பட்டவனல்லவா? ...

குலோ: நன்றாகச் சொன்னீர்கள் ...காலதேவர் இல்லாமலா? கலிங்கப்போரே காலதேவரின் வஞ்சினத்திற்காகவும், மதுராந்தகியின் மனத்தேருக்காகவும் தானே நடக்கப் போகிறது ... ஊம் ... இருக்கும் பரபரப்பைப்பார்த்தால் அடுத்தஆண்டு போர்மூண்டே தீரும்

[இந்நேரம் யாரோ இருவர் பாடும் பாடல் கேட்கிறது. குலோத்துங்கன் பார்க்கிறார். காலதேவரும் வந்து பார்க்கிறார்.]

குலோ: பார்த்தீர்களா! ...... யார் என்று ......?

கால: இளவேணியும் விக்கிரமனும் இசையில் ஈடுபட்டிருக்கின்றனர் போலும்.

குலோ: அமைச்சரே!...கருணாகரன் தங்கைதான் இளவேணி என்பது விக்கிரமனுக்குத் தெரியுமா? ...

கால: தெரியாது ... தெரியக் கூடாதபடி செய்திருக்கிறேன். [குலோத்துங்கர் பேசாமல் இருக்கின்றார்.]

கால: ஏன் குலோத்துங்கா! ...... இப்போது பார்த்த காட்சி உனக்குப் பிடிக்கவில்லையா?

குலோ: இளவேணி மீது எனக்கு எந்த வெறுப்பும் இல்லை. கருணாகரனுக்கு என் மகள் அம்மங்கையை மணமுடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் பலருடைய வெறுப்புக்கும் இடையில் அருள்மொழியை நான்மணந்தேன். விக்கிரமனுக்குஇளவேணியை மணமுடித்தால் மேலும் நன்மையே உண்டாகலாம் ...... அதற்குத் தடையாக இருப்பது ஒன்றே ஒன்று தான்.

**கால:** தடையா? ......

**குலோ:** ஆம் ...... என் தங்கை குந்தவையின் மகள் பூங்கோதையை விக்கிரமனுக்கு மனைவியாக்குவதாக நான் வாக்குறுதி யளித்து விட்டேன். அதனால் இளவேணியை என் மருமகளாக ஏற்றுக்கொள்ள முடியாது, என் தங்கைக்குக் கொடுத்த வாக்குறுதியை எவ்வாறு மீறுவேன்? சோழமரபில் வாக்குத் தூய்மை தான் இதுவரை பெருமை தந்து கொண்டிருப்பது.

**கால:** நீ வாக்குத் தவற வேண்டா குலோத்துங்கா! உன் தங்கை மகளையே விக்கிரமனுக்கு மணமுடித்துப் பட்டத்தரசி ஆக்கு. ஆனால் இளவேணி... .

**குலோ:** இளவேணி. . ...

**கால:** இளவேணியை விக்கிரமனுக்கு இரண்டாவது மனைவியாகச் செய்தால் போதும்; இரண்டாவது பட்டத்தரசியாக ஏற்க முடியுமா உன்னால்? . ...

**குலோ:** அப்படியானால் மன மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். இப்போது உண்மையிலே என் மனம் குளிர்ந்து விட்டது. இளவேணியை நான் எங்கே ஏமாற்றி விடுவேனோ என்று அஞ்சினேன். இன்று என்னைப் புகழ்ந்து பேசுகின்ற வாய் திடீரென ஒரு நாள் என்னை இகழ்ந்து ஏசிவிடக் கூடாதே என்று ஏங்கினேன்; போற்றிப் பேசுகின்ற வாய் தூற்றிப் பேசும்நிலை வந்துவிடக் கூடாதே என்று துடித்தேன். இப்போது தான் அமைதி பிறந்தது. ஆனால் ஒரே ஒரு குறை தான் ஆறாத வடுவாகி விட்டது.

**கால:** அதையும் கூறிவிடு, குலோத்துங்கா! ...

**குலோ:** காலிங்கராயன் கதைதான்! எத்தனை நன்றியுடையவனாக இருந்தவன் இப்போது எதிரிகளிடம் சேர்ந்து கொண்டு இன்னல் விளைவிக்க முற்பட்டிருக்கிறான் பார்த்தீர்களா? வைத்துச் சுமந்த வயிற்றையே வாளால் கீறத் துணிந்து விட்டான் வஞ்சகன்.

**கால:** கவலைப்பட வேண்டா அபயா!... ஒரு நாள் காலிங்கராயன் தன்னுடைய குற்றத்தை உணர்ந்து கண்ணீர் விடுவான். அந்த நாள் மிக அண்மையில் தானிருக்கிறது. ஆனால் ஒன்றை மட்டும் என்னால் பொறுக்கவே முடியாது, திரிபுவனா! ....

குலோ: எனக்கு மகனாகப் பிறந்து இரண்டகம் செய்து வரும் இராசராசனைத் தானே குறிப்பிடுகிறீர்கள்? அவனை இறைவனே மன்னிக்க மாட்டான் என்பது எனக்குத் தெரியும், புலவரே. தெரியும்... . .

[கண் கலங்குகிறான்— கருணாகரன் வந்து நின்று தலை வணங்குகிறான்.]

**கால:** வா, கருணாகரா, வா! . . ...

குலோ: என்ன . . ,இன்னும் வீட்டுக்குப் போகவில்லையா? உன்னுடைய தங்கை காத்துக் கொண்டிருப்பாளே! .. ... அவளைத் தனிமையில் விட்டு இந்நேரம் வரை நீ இங்கு இருக்கலாமா? . . . . .

**கருணா:** சோழ தேவா! ...... அதைப்பற்றி நான் என்றும் கவலைப்பட்டதில்லை. என் கவலையெல்லாம் கலிங்கப் போரைப் பற்றித்தான்.

குலோ: அப்படியானால், கலிங்கப்போர் எப்போது?....

**கருணா:** சோழ தந்தையே! அடுத்து வரும் மண்ணுமங்கல விழாவின் போது போர் மூளப் போகிறது என்பது உறுதி. அதற்கான ஆணையைப் பெறவே நான் காத்துக் கொண்டிருக்கிறேன்...

**கால:** அடுத்த விழாவிலா? அதை எப்படி உறுதியாகக் கூறமுடியும்?

**கருணா:** போன முறைதான் திறை எனும் பெயரால் முறையே மாறியிருந்தது. இந்த முறையும் கலிங்கன் திறை 'செலுத்தத் தவறிவிடுவானேயானால், தினவெடுக்கும் என் தோள்களுக்குத் தீனி போட்டே ஆக வேண்டும்...போர் முரசு கொட்டியே தீர்வேன்.

குலோ: இதைக் கேட்கும் போது என் சிந்தையெல்லாம், தோள்களெல்லாம் பூரிக்குதடடா!

கருணு: ஆனுல் மன்னவா! மன்னரின் மகன் என்பதையும் மறந்து, நமது இராசராசன் . . .

குலோ: எதிரிகளுக்கு ஏவல் பணி செய்து வருகிருன், அவ்வளவுதானே! . . . எல்லாம் தெரியும்; ஒருநாள் அதற்கும் ஒரு முடிவு காண்போம் . . .ஊம் . . . சரி! . . . அருள்மொழிதேவி அழைத்தால் மதிக்க மறுக்கிருயாமே. . . ! இதை அவள் என்னிடம் கூறி எவ்வளவு வருத்தப்படுகிருள் தெரியுமா? . . .

கருணு: சக்கரவர்த்தி கட்டளையிட்டால் நாளைமுதல் அவ்வாறே நடந்து கொள்கிறேன். இளைய தேவியார் இடும் கட்டளையைத் தலைமேல் தாங்கித் தவருது முடிக்கிறேன் . . .

குலோ: வேண்டா; வேண்டா; என்னுடைய தலையை எடுத்து வரும்படி கட்டளையிட்டால், அதைத் தலைமேல் தாங்கி என் கழுத்தில் கத்தியை வீசிவிடப் போகிருய் . . .

[முடிகொண்டான் கையில் இறந்த கழுகுடன் வருகிருன்]

குலோ: என்ன முடி கொண்டவா, இது . . .? . . .

முடி: இது இளைய பிராட்டி அருள்மொழி தேவியின் திருமுகக் கழுகு என்று சொல்லவே நா நடுங்குகின்றது ...இன்று இது அரண்மனையை நோக்கிப் பறந்து வந்த போது ஏற்கனவே இதைப் பற்றி அறிந்து ஐயப்பாடும் கொண்டு இருந்ததால், அம்பெறிந்து. கொன்று விட்டேன் . . . கொன்று விட்டதற்காக மன்னிக்க வேண்டும் . . .அதன் காலிலிருந்த ஓலை இதுதான் . . .

குலோ (வாங்கிப் படித்துப் பார்த்து விட்டு)நீ போகலாம் . . . . .

[முடிகொண்டான் போகிருன் ...... வேந்தர் சிரிக்கின்ருர்.

காலதேவரே!. . . பாண்டியன் பராக்கிரமன் ஒளிந்திருக்கும் குகை நமக்குத் தெரிந்து விட்டது.

கருணு: (துள்ளிக் குதித்து)ஆணையிடுங்கள் அரசே... அடுத்தநொடியே அனைவரையும் சிறைப்படுத்திக் கொண்டு வருகிறேன்.

குலோ: வேண்டா!...... பகைவரை இனி விட்டுப் பிடித்தால்தான் நம் திட்டத்தைத் தட்டுத் தடங்கலின்றி நிறைவேற்ற முடியும்...நீ நாளை முதல் போருக்கான படை சேர்க்கும் பணியில் ஈடுபட ஆணையிடுகிறேன்....,நம்மிடத்தில் ஏராளமான படைகள் இருக்க வேண்டும்.......

கால: இவ்வளவு பேருக்கும் முறையான பயிற்சி கொடுக்கப் பல ஆண்டுகள் ஆகுமே...!...

குலோ: நான் ஒன்பது மாதத்தில் முடித்துவிடலாம் என்கிறேன்.

கருணு: ஒன்பது மாதத்தில் முடித்துவிட முயல்வேன்....

கால: நினைவிருக்கட்டும். போர் முறைப் பயிற்சிகள் புதுமையுடன் அமைந்திருக்க வேண்டும். உன்னுடைய கற்பனை வலிமையை இதன் மூலம் காட்டுவதிலிருந்துதான் கலிங்கத்தின் கணக்கையே எங்களால் கணிக்க முடியும். அது வரை நீ எந்தச்செயலிலும் தலையிடாமல் உன்னை நீயே காப்பாற்றிக் கொள்வதிலும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

கருணு: அப்படியே செய்வேன்! இதற்கெல்லாம் நிறையச் செலவு ஆகுமே!

குலோ: கருவூலத்தையே திறந்து விடுகிறேன்...... போதுமா! இறுதியாக, இந்த ஒன்பது மாதத்தில் நான் மன்னுர் குடிக்கும் நாகைப் பட்டினம் கூடா-

மணி விகாரத்திற்கும், திருக்கழுக்குன்றத்திற்கும் மாமல்ல புரத்திற்கும் சென்று பார்த்து விட்டுக் காஞ்சி திரும்பலாம் என்றிருக்கிறேன்.

கருணாகரா! கங்கை கொண்ட சோழபுரத்தில் தானே படைப்பயிற்சி கொடுக்கப் போகிறாய்?

**கருணா:** ஆம், வேந்தே!....

**குலோ:** அமைச்சர் காலதேவர் தஞ்சையில் இருந்து அரசுப் பணிகளைக் கவனிக்கட்டும்.

**கால:** சரி, குலோத்துங்கா!

(திரை)

## காட்சி 32

**களம்: காஞ்சி அரச மாளிகை. காலம்: இரவு.**

**உறுப்பினர்: அருள்மொழி, கார்க்கோடகன், பராக்கிரமன், குலோத்துங்கர், சுமித்திரை.**

[அருள்மொழி தனி அறையில் இருக்கிறாள். குலோத்துங்கர் வருகிறார்]

**குலோ:** என்ன இளையதேவி! காஞ்சி நகரம் பிடித்திருக்கிறதா?

**அருள்:** சிற்பங்களும் கற்கோவில்களும் நிரம்பிய இடமல்லவா!...நன்றாகப் பிடித்திருக்கிறது. ஏற்கனவே காஞ்சியைப் பற்றிக் கனவும் கண்டிருக்கிறேன்.

**குலோ:** இவற்றையெல்லாம் நீபார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் உன்னைக் கூட்டி வந்தேன். எல்லோரும் ஏதோ ஒருவகையான பார்வை பார்க்கிறார்கள்...

என்ன அருள்மொழி! பேசாமலிருக்கிறாய்? ஓ! பயணக் களைப்பால் தூக்கம் வருவதுபோல் இருக்கிறதா? நாமும் ஏழெட்டு மாதங்கள் சுற்றுப் பயணம்

செய்து கடைசியில் அல்லவா காஞ்சிக்கு வந்திருக்கிறோம்! சரி! நீ தூங்கு. நான் பார்க்கிறேன். [போய் விடுகிறான்]

[சற்று நேரத்தில் கார்க்கோடகன் பதுங்கி வருகிறான். பின்னேக்கிச் சைகை காட்டுகிறான், அடுத்த உருவமும் வருகிறது.][மூன்றாவது உருவமும் வந்து மறைகிறது.]

பராக்: தெரியுமா செய்தி? எங்களுடைய இருப்பிடமான குகை சோழர்க்குத் தெரிந்து விட்டது...

அருள்: ஒருபுறம் உங்களைச் சந்தித்தது எவ்வளவோ ஆறுதலாக இருக்கிறது மறுபுறம் நீங்கள் அனுப்பிய திருமுகக் கழுகு என்னிடம் வந்து சேரவில்லை என்பது அச்சமாகவுமிருக்கிறது. ஒரு வேளை கழுகு கலிங்கத்திற்குப் போயிருந்தால்...

பராக்: ஓர் இடத்தில் பழக்கப்பட்டுவிட்ட கழுகு வேற்றிடத்துக்குப் போகவே போகாது...

கார்க்: சோழருக்கு இது தெரிந்திருந்தால் இந்நேரம் உங்கள் குகையை முற்றுகை இட்டிருக்கவேண்டுமே. அதுவும் இல்லையே! ...

அருள்: எது எப்படியோ, சோழ நாட்டின்மேல் எனக்கிருந்த கொஞ்சநஞ்சமுள்ள உறவு கூடச் செத்து விட்டது. ஏமாற்றுக்காதலால் என் வாழ்வே பலியாய் விட்டது. இனிச் சோழ நாட்டையே பழிவாங்கினால் தான் என் மனம் அமைதியடையும். என்னுடைய அண்ணனால் காக்கப்பட்ட கலிங்கநாடு, எனக்காகக் கண்ணீர் வடிக்கக் கூடாது என்பதை நன்றாக உணர்கிறேன்.

பராக்: தேவி! முக்கியமான செயல் நினைவிருக்கிறதா?...

அருள்: எதைச் சொல்கிறீர்கள்? ...

பராக்: குலோத்துங்கனை எப்படியாவது மடக்கி அவனிடம் சாசனம் எழுதி வாங்கிக் கொள்ளும்படி கலிங்கவேந்தர் கூறிய செய்திதான் ... நினைவிருக்கி-கிறதா? ...

அருள்: நன்ருக நினைவிருக்கிறது ...

பராக்: இந்தப் பத்து மாதத்திற்குள் நீங்கள் வாங்கி-யிருக்கலாம். ஆர்வம் காட்டாமல் இருந்துவிட்டீர்-கள். எந்தநேரத்தில் குலோத்துங்கன் உண்மையைத் தெரிந்து கொள்வாரோ தெரியாது. இனி நீங்கள் சுணங்கக்கூடாது. அவனைத் தனியாகச் சந்தித்துச் சாகசமாக உரையாடித் தந்திரமாய்ச் சாசனத்தை எழுதி வாங்கிக் கொள்ள வேண்டும். என்ன சொல்-கிறீர்கள்? ...

அருள்: இதுவரை நான் கூண்டுக் கிளியாகத்தான் அடைபட்டுக் கிடக்கிறேன். நீங்களோ வேகப் படு-கிறீர்கள் ... வாய்ப்பு என்னை நாடி வரும் போது வாங்கி விடுகிறேன் ... போதுமா? ...

பராக்: ஊம் ... ஊம் ...போர் எந்த நேரத்திலும் மூளு-மென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நேரத்தில் நாம்தான் வாய்ப்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

அருள்: வாய்ப்பென்ன ... நிலாச்சோரு? நினைத்த-வுடன் சமைத்துச் சாப்பிட? ... பாண்டியரே! போர் நடக்கப் போவது நடக்கப்போவதுதான். சென்ற ஆண்டே போர் நடந்திருக்கும். நான்தான் பாவத்-தைச் சுமந்து பழிக்கும் ஆளாகிப் போர் நடப்பதை-யும் தடுத்துவிட்டேன். பாவி, அந்தக் கருணாகரன் மட்டும் என்னைப் பழிவாங்கவில்லை என்ருல் நான் இந்தச்சூதாட்டத்திற்குச் சொக்கட்டான் காயாகி இருக்கவேண்டியதில்லை ....

கார்க்: தேவி! நாமெல்லாம் ஒரே நோக்கத்தையே நாட்டமாக வைத்து நாடுவிட்டு நாடு வந்திருக்கிறோம்.. இனி மனச்சோர்வு கொள்ளக்கூடாது ....

அருள்: போகட்டும்.பாண்டியரே! சோழர் படையைக் கவனித்தீர்களா?

பராக்: ஆமாம் ...... கங்கை கொண்ட சோழபுரத்துக்கே சென்று படையின் அளவைக் கவனித்தோம்.

அருள்: இதற்குச் சமமான படை நம்மிடமிருக்கிறதா?. . .

பராக்! கலிங்கவேந்தர் அனுப்பிய புள்ளிவிவரத்தைக் காணும் போது இந்தச் சோழர் படையை விட அரைப் பங்குக்கு மேலேயே நம்மிடம் இருக்கிறது. மேலும் நமது பாண்டிய நாட்டுப் படையையும் சேர்த்துக் கொண்டால் ஒரு மடங்கு நம்மிடம் அதிகம்.

அருள்: அப்படியானால் இந்தப்போர் ஒருகொடுமையான வரலாற்றுப் போர் தான்.

பராக்: என்ன இருந்தாலும், நாங்கள் எத்தனை பேர் சேர்ந்தாலும் இந்தப் போரின் வெற்றி உங்கள் கையில் தான் இருப்பதாகக் கலிங்கவேந்தர் நம்பு கிறார்.

அருள்: என் கையிலா...?

பராக்: கருணாகரனை . . .

அருள்: ஓ! அதுவா? அதைநான் கவனித்துக்கொள்வேன். கவலை வேண்டா . . . சரி! நேரமாகிறது. . என் தோழி சுமித்திரை வந்து விடுவாள். நீங்கள் விடை பெற்றுக் கொள்ளலாம். கார்க்கோடகா நீயும் போகிறாயா? . . . . .

கார்க்: ஆமாம்! கங்கை கொண்ட சோழ புரத்தில் கருணாகரன் என்ன செய்கிறான் என்று . . .

அருள்: என்ன செய்கிறூர் . . . . . என்று

கார்க்: மன்னிக்கவும் தேவி ...

அருள்: என்னை ஏமாற்றினுலும் என்முன்னுல் அவரை இழிவு படுத்தக் கூடாது.

பராக்: சரி, நாங்கள் புறப்படுகிறேூம். நினைவிருக்கட்டும். சாசனம்... கருணுகரன்...

[தீர்த்து விடும்படி சைகை காட்டிச் செல்கிறுன். அருள்மொழியும் கார்க்கோடகனும் போகிறுர்கள். மறைந்திருந்த குலோத்துங்கன் வாளை உருவுகிறுன், சுமித்திரை தடுக்கிறுள்].

[திரை]

## காட்சி 33

களம்: தஞ்சை அரண்மனைக் கூடம் காலம்: இரவு

உறுப்பினர்: அருள்மொழி, கார்க்கோடகன், குலோத்துங்கன் சுமித்திரை.

சுமி: அம்மா! இன்று சக்கரவர்த்தி உங்களைப்பார்க்க வரப் போகிறுராம் ... சொல்லி யனுப்பினுர் ...

அருள்: அப்படியா? ஓடு! அறையை ஒழுங்கு செய்! என்னுடைய ஒப்பனைக்குரிய பொருள்களெல்லாம் எடுத்துக் கொண்டு வா. (அவள் எடுத்து வருகிறுள்)

அருள்: சரி! நீ உன் இருப்பிடத்திற்குப் போ! கூப்பிடும் போது வா . . . !

(சுமித்திரை போகிறுள்) (கார்க்கோடகன் வருகிறுன்)

அருள்: கார்க்கோடகா! தெரியுமா செய்தி?

கார்க்: கேட்டுக் கொண்டுதானே வந்தேன் . . . .

அருள்: பார்த்தாயா?காஞ்சியிலிருந்து தஞ்சாவூர்க்குத் திரும்பிய முதல் நாளிலேயே நாம் எதிர் பார்த்த வாய்ப்புக் கிடைத்து விட்டது . . . . இது என் இறைவனின் ஏற்பாடு . . . .

கார்க்: நான் இங்கேயே மறைந்திருக்கவா? . . .

அருள்: ஆமாம் . . . மறைந்திரு, எப்படியும் சாச-னத்தை எழுதி வாங்கி விடுகிறேன். உடனே நீ சாசனத்தை எடுத்துக் கொண்டு கலிங்கநாட்டுக்குப் புறப்பட வேண்டும். ஆயத்தமாக இரு . . . (அவன் போகிருன். அவள் ஒப்பனை செய்ய முனைகிருள்)

குலோ: (குலோத்துங்கர் வருகிருர்) அருள் மொழி ! ! !

அருள்: சக்கரவர்த்தி, வரவேண்டும்! இத்தனை மாதங்-களுக்குப் பிறகு இன்றைக்காவது என் நினைவு வந்ததே, என் புண்ணியம் தான்....

குலோ: ஏழிசை வல்லபி! இன்று நீ இசையைப் போல் இனிமையாகவும், இளநீரைப்போல் குளுமையாகவும் தோற்றமளிக்கிருய்...,

அருள்: எல்லாம் தங்களால்தான் ............பெண்களை இனிக்கச் செய்பவர் கணவர்தானே....

குலோ: உண்மைதான்! உன்னுடைய மனநிலையை அறியவே சுற்றுப்பயணம் தொடங்கினேன். அதில் வெற்றியும் கண்டேன். மேலும் முதுமையான என்னை நீ மனமார ஏற்பாயா என்ற எண்ணமும் என்னை வாட்டியது. அந்த வாட்டம் தீர்ந்து உன்மேல் நாட் டம் பிறக்க இத்தனை நாளாகிவிட்டது...

அருள்: சக்கரவர்த்தி! தாங்களா முதியவர்? யார் அப்-படிக் கூறினுர்கள்? அவர்களை என் முன்னுல் கொண்டு வந்தால் நானே தண்டனை வழங்குவேன். இளமையின் வனப்பு இன்னும் தங்களிடம் மாருமல் இருக்கிறது.

குலோ தேவி! உள்ளம் பூரிக்கிறேன்! தண்டனை வழங்கக் கூடிய அளவுக்கு நீ உரிமை கொண்டாடு வதை நினைத்து உள்ளம் பூரிக்கிறது. அதோடு, கண்-

ணுக்கினிய உன் கட்டழகைக் காணும்போது என் கண்கள் பூரிக்கின்றன...கைதேர்ந்த ஒப்பனைக்கலை...

அருள்: தமிழகத்துப் பெண்களைவிடக் கைதேர்ந்த ஒப்பனைக் கலை தெரியா விட்டாலும் ஏதோ கலிங்கம் கற்றுக் கொடுத்ததைக் கையாண்டு வருகிறேன், தங்கள் முன்னோரான பொன்னியின் செல்வர் இராச ராசரின் தமக்கை குந்தவ்வையின் அழகுக்கு யார் தான் இணை! ஏன்? தங்கள் புதல்வி அம்மங்கையின் அழகுக்குத்தான் நான் இணையாவேனு, என்ன?

குலோ: அருள்மொழி! பிறரை உயர்த்தி உன்னையே நீ தாழ்த்திப் பேசி, அதனுல் ஒருபடி உயர்ந்து விட்டாய் ...... குலோத்துங்கனுக்கு மனைவியான எவருமே அறிவில் சளைத்தவர்களல்ல!......

அருள்: தங்கள் பாராட்டே எனக்குப் பெருமை... இருங்கள் பால் கொண்டு வருகிறேன். (அவள் போகிருள்)

குலோ: (தனிமொழி) இவள் ஒரு மதுக்கிண்ணம்! இதன் பக்கத்தில் வரும்போது எனக்கே மதி மயங்கு கிறது; காளையான கருணுகரன் காதல் வயப்பட்டதில் என்ன வியப்பு?

நல்லவேளை; நான் மணந்துகொண்டு அழிவைத் தடுத்தேன். திருந்திஞல் திருந்தட்டும், இல்லை பழி வாங்க முடிவு செய்திருப்பாளாஞல் பார்த்து விடு-வோம் அதையும் (அருள்மொழி பாலுடன் வரு கிருள்)

அருள்: சக்கரவர்த்தி, இதை அருந்துங்கள்......

குலோ: நான் மட்டும் தனியாக அருந்துவதா? தேவி! நீயும் அருந்திஞல்தான் எனக்கும் ஆறுதலாக இருக்கும்.

அருள்: சரி...இன்ஞெரு குவளையில் எனக்கும் ஊற்றிக்

கொண்டு வருகிறேன்.

(அவள்போக, குலோத்துங்கன் கையைத் தொட்டி ழுக்கிறார்)

குலோ: அருள்மொழி! தலைவனும் தலைவியும் உடலால் வேறுபட்டவர்களென்றாலும், உள்ளத்தால் ஒன்று பட்டவர்கள் அல்லவா?

அருள்: ஆமாம்.....

குலோ: அப்படியானால் நம் இருவருக்கும் இந்த ஒரு குவளைப் பாலே போதும்... இதோ! இதை உன் அமுத வாய் சுவைத்து மேலும் சுவை உண்டாக்கட்டும்.. (அவள் பாதிகுடிக்கிறாள். மீதியைமன்னர் குடிக்கிறார்)

குலோ: அருள் மொழி! உன்னுடைய உண்மையான உள்ளத்தைத் தெரிந்து கொள்ள என்னை எவ்வளவு காலம் காக்க வைத்து விட்டாய்?

அருள்: நானா காக்க வைத்து விட்டேன்? நீங்கள் அல்லவா என்னைச் சந்திக்காமலேயே பலமாதங்கள் காக்க வைத்து விட்டீர்கள். நான் ஒரு நாட்டின் பட்டத்தரசியாகத் திகழ வேண்டுமென்று பல நாட்கள் கனவு கண்டேன்; ஆனால் ஒரு பேரரசின் மாமன்னரின் தேவிகளில் ஒருத்தி ஆகும் பேறு எனக்குக் கிடைத்தது. அது நான் செய்த தவப்பயன்...

குலோ: (சுற்று முற்றும் நோக்குகிறார்) தேவி இத்தனை விளக்குகள் எதற்கு?

அருள்: நம்முடைய உள்ளங்களில் ஒளிவிடும் இன்ப விளக்குகளின் முன் இந்த எண்ணெய் விளக்குகள் தேவை இல்லைதான். அணைத்து விடலாம். அணைக்கு முன் அடியாளின் கோரிக்கை ஒன்றை நிறைவேற்ற வேண்டும் ...

குலோ: எந்தக் கோரிக்கையானாலும் நீயாகவே நிறைவேற்றிக் கொள்ளலாமே! நான் எதற்கு?

அருள்: இல்லை, இந்தக் கோரிக்கையைத் தாங்கள் தான் நிறைவேற்றித் தரவேண்டும்.

குலோ: அப்படி என்ருல் அட்டியில்லை. கேட்க வேண்டியதைத் துணிவாகக் கேள்...

அருள்: நான் கேட்கப் போவதற்கு என்னிடம் சினந்து கொள்ள மாட்டீர்கள் என்று நம்புகிறேன். அதனுல் துணிவாகவே கேட்கிறேன். நான் ஒரு நாட்டின் பட்டத்தரசியாக வேண்டும்என்று கனவு கண்டதாக...

குலோ: ஊம்....சொன்னுய்...

அருள்: பட்டத்தரசியாவதற்கு நான் ஏன் ஆசைப்படவேண்டும்?

குலோ: சொன்னுல் தானே தெரியும்...

அருள்: சொல்லுகிறேன்: பட்டத்தரசியின் வயிற்றில் பிறந்தவன் தான்அரசுரிமை ஏற்க முடியும் என்பதை நான் அறிவேன். என் வயிற்றில் பிறக்கும் மகன் அரசனுவான் என நான் முன்னெரு முறை கலிங்கன் அனந்தவர்மனிடம் வஞ்சினம் கூறினேன்... அவனே பேய்ச் சிரிப்புச் சிரித்தான். அது நிறை வேறுமா சக்கரவர்த்தி?

குலோ: எது? அவன் சிரித்த பேய்ச்சிரிப்பா?...

அருள்: இல்லை. நான் கூறிய வஞ்சினம்...

குலோ: அது எப்படி முடியும் அருள்மொழி? விக்கிரமன் இளவரசப் பட்டம் கொண்டிருப்பது தான் உனக்குத் தெரியுமே? மூத்தவன் இராசராசனிருக்க விக்கிரமனை இளவரசனுக்கினேன் என்ருல் அதற்குக் காரணமுண்டு....

அருள்: விக்கிரமனை நான் புறக்கணிக்கச் சொல்லவில்லை. மேலும், இனி என் வயிற்றில் புதல்வன் பிறந்து அவன் வளர்ந்து பெரியவனுகும் வரை

காத்திருக்கத்தான் முடியுமா என்ன? நான் என்ன அரசியல் நடப்புகளை அறியாதவளா?

குலோ: யார் சொன்னார்கள்? சாணக்கியனின் அர்த்த சாத்திரத்துக்கே நீதானே அருமையான உரை எழுதமுடியும்?

அருள்: அதிகமான புகழ்ச்சி; நான் கேட்பதுஎன்ன-வென்றால் விக்கிரமனுக்குப் பிறகு என் வயிற்றில் பிறக்கும் தங்கள் புதல்வன் இச்சோழப் பேரரசை ஆள முடியுமா?

குலோ: அருள் மொழி! இவ்வளவு பேசுகிறாய்! இதை உன்னால் சிந்திக்க முடியவில்லையா? விக்கிரமனுக்குப் பின்னால் அவன் மகன் தானே ஆட்சிக்கு வரமுடி-யும். அதுதானே மரபு; சோழரின் மரபை மாற்றி விட முடியுமா?

அருள்: நான் சிந்திக்காமல் எதையும் கூறவில்லை. தாங்கள் இயற்றிய இசைமுறையையே அறிந்தவள், வரலாற்றை அறியாமல் இருப்பேனா? தங்களுக்கு முன்னே ஆண்ட சில தலைமுறைகளையே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இருந்தாலும் அது உங்க-ளுக்குத் தெரியும். ஏன் நீங்களே, இராசராசனை விட்டு விட்டு விக்கிரமனுக்குத் தானே பட்டம் கொடுத்து இருக்கிறீர்கள்; இதிலேயே தங்கள்மரபு தடம் புரண்டு விட்டதே!

குலோ: ஊம் .....

அருள்: நான் கூறியதில் தவறு இருந்தால் என்னை மன்னிக்க வேண்டும்.

குலோ: ஊம் . . . உன்னைச் சோதித்துப் பார்த்தேன்; வேறொன்றுமில்லை. . . . அருள் மொழி! உன் விருப்-பத்தை ஏற்றுக் கொள்கிறேன்.

அருள்: வாய் மொழியாகக் கூறினால் . . . நானை அது

என்னை நட்டாற்றில் விட்டு விடும். சாசனமாக எழுதிக்கொடுங்கள்... அடியாளின் கோரிக்கையை நிறைவேற்ற அரை நாழிகை கூட ஆகாது.

குலோ: ஊம்...சரி! ஓலை, எழுத்தாணி எடு... இப்போதே எழுதித் தருகிறேன்.

அருள்: சக்கரவர்த்தி! திருமந்திர ஓலை நாயகருக்கு முன்னால் எழுதப்படுகின்ற சாசனம் தானே முறை-யானது... அவரையே கூப்பிட்டு.......

குலோ: நீ அளவுகடந்த அறிவாளி! உன் வயிற்றில் பிறப்பவன் கட்டாயம் இந்த நாட்டை நல்ல அறி-வோடு ஆளுவான் [கைதட்டி] யாரங்கே..... [சுமித்திரையும், கார்க்கோடகனும் வருகின்றனர்].

குலோ: [கார்க்கோடகனை நோக்கி]
ஓ...! நீ இங்கேதான் இருக்கிறாயா?

கார்க்: பத்து மாதமாக நான் இந்தத் தஞ்சையை விட்டு எங்குமே போகவில்லை சக்கரவர்த்தி...

குலோ: சரி, போய்த் திருமந்திர ஓலை நாயகத்தை நான் சொன்னதாக அழைத்துக் கொண்டு வா [அவன் போகிறான்.] [குலோத்துங்கன் சுமித்-திரைக்குச் சைகை காட்ட அவள் போகிறாள்.]

மறுகாட்சி

[அருள்மொழி நிற்கிறாள்—கார்க்கோடகன் வருகிறான்]

அருள்: கார்க்கோடகா, வந்து விட்டாயா?..இன்று பகல் முழுதும் உன்னை எதிர்பார்த்தேன். சாசனம் நேற்றிரவே எழுதி வாங்கி விட்டேன். இன்றிரவே கலிங்கத்துக்குப் புறப்படு....

கார்க்: ஊம்.... இன்றிரவு கோட்டை மதிலைக் கடக்க முடியாது...!

அருள்: ஏன்?

**கார்க்:** என்னகாரணமோ தெரியவில்லை; கோட்டைக் கதவுகளை எல்லாம் அடைத்து விட்டார்கள். ஒரு வேளை நம்முடைய மறைமுகத் திட்டம் யாருக்காவது தெரிந்திருக்குமோ? . . . .

**அருள்:** இருக்கவே இருக்காது . . . . சரி, கருணாகரர் வந்து விட்டாரா?

**கார்க்:** இன்று காலையில்தான் திரும்பியிருக்கிறார் . . .

**அருள்:** சரி, இருக்கட்டும்; நீ நேரே காளி கோயிலுக்குச் செல். அங்கே சிங்கமுகக் கிணறு இருக்கிறதல்லவா?

**கார்க்:** ஆமாம் . . . .

**அருள்:** சிங்கமுகக் கிணற்றின் அருகே ஒரு பிள்ளையார் சிலை இருக்கும். அதைத் திருகினால் சுரங்க வழி தெரியும். அதன் வழியே போய்ச் சேர். இந்தச் சாசனத்தையும், திருமுகத்தையும் கலிங்க வேந்தனிடம் சேர்ப்பித்து விடு. ஓரிரு நாட்களில் திரும்பி விடு! தெரிகிறதா!

**கார்க்:** தெரிகிறது, தேவி!

**அருள்:** புறப்படு! இதைச்சரியாகச் செய்து முடிப்பதில் தான் நம் வருங்காலமே இருக்கிறது. கவனம்..

**கார்க்:** கவனமாகச் செய்து முடிப்பேன் . . . போய் வருகிறேன்.

[திரை]

## காட்சி 34

**களம்:** அரண்மனைக்கூடம் **காலம்:** மாலை

**உறுப்பினர்:** காலதேவர், கருணாகரன், முடிகொண்டான்,.

**கால:** கருணாகரா ஒன்பது மாதங்கள் ஓடிவிட்டன...

படைப்பயிற்சி எந்த அளவில் பக்குவம் பெற்றிருக்கிறது?

கருணா: ஐயா! எண்ணியபடியே முடித்திருக்கிறேன். இரவு பகல் பாராமல் இமை இரண்டும் மூடாமல் புதுமை அமைப்பும், புரட்சி உள்ளமும் தோன்று மாறு படைகளுக்குப் பயிற்சி தந்து முடித்திருக்கிறேன்.

கால: காலதேவன் எண்ணினான்; குலோத்துங்கன் கோடுகளைப் போட்டான்; கருணாகரன் கண்ணைக் கவரும் வண்ண ஓவியமாக்கி விட்டான்; இருந்தாலும்

கருணா: சொல்லுங்கள் ... ... ... ... ...

கால: நம்மை விட அரை மடங்கு அதிகமான படை-யைக் கலிங்கன் பெற்றிருக்கிறானும், மேலும் பாண்-டியனும், கண்ணில் மண்ணை வாரிப் போட்டுக்-கொண்டு காட்டில் அலையும் ... ... நம் ... ... காலிங்க ராயனும் சேர்த்து வைத்துள்ள படையையும் இணைத்து வைத்துக் கொண்டால் நம்மைப் போல் இரண்டு பங்கு வலிமை அல்லவா அந்த நரிகளுக்கு வந்து விடும் ... ... ... ... ... ...

கருணா: ஐயா! கருணாகரன் தோள்வலிமை படைத்துத் துடிப்புள்ள இளைஞனாகவும் இருக்கலாம்; ஆனால் மூளை வலிமை படைத்த தங்கள் நுண்ணிய உணர்-வுக்குப் புலப்படாத உண்மைதான் என்ன இருக்க முடியும் ... ...? விரைவில் இன்னும் அதிகமான படையைத் திரட்டிவிடுவேன் ... ...

கால: சரி! உன் செயலை நிலை நாட்டி விட்டாய் நாளைப் பொழுது எப்படி விடியுமோ தெரியவில்லை

[முடிகொண்டான் வருகிறான்]

முடி: எப்படி விடியும் ...? எல்லோரும் துண்டை உதறித் தோளிலே போட்டுக் கொண்டு விடிவ-

தற்கு முன்னுல் எங்காவது வேற்று நாட்டுக்கு ஓடி விட வேண்டியதுதான்............

கால: என்ன துடிக்கிருய்.........?

முடி: பாம்பு கடித்து விட்டது; நஞ்சு மெல்ல மெல்ல ஏறுகிறது; கைகாலெல்லாம் கடுக்கிறது...?

கருணு: பாம்பா?

முடி: ஆமாம்... அருள்மொழி எனும் பெயரில் இந்த அரண்மனையில் புகுந்த அரவம்.

கருணு: உம்...இளைய தேவி அவர்! எண்ணிப்பேசு!

கால: என்ன முடிகொண்டவா?

முடி: ஐயா, விக்கிரமனுக்குப் பின் அருள்மொழி தேவி வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்குத்தான் அரசுரிமை-யாம்...-அரசர் சாசனம் எழுதிக் கொடுத்து...

கருணு: ஆ...! சாசனம்...? நடந்து விடுமா அது...? [காலதேவரை நோக்கி] என்ன பேசாமல் இருக்-கிறீர்கள்...?

கால: நடந்து விட்டதே அது....

கருணு: தெரிந்து கொண்டுதான் சிரித்துக் கொண்டு இருக்கிறீர்களா...?

கால: கருணுகரா! உனக்குள்ள துடிப்பு எனக்கும் இருக்கிறது. ஆனுல் நீறுபூத்த நெருப்பாக இருக்-கிறது. சாசனம் எழுதப்பட்டு விட்டது.பள்ளியறைப் பாவை பார்வேந்தன் உள்ளத்தை மயக்கி இருக்-கிருள்....

முடி: சாசனம் இன்று இரவு கலிங்க நாட்டை நோக்கிப் போகிறது. கார்க் கோடகன் புறப்படத் தொடங்கி விட்டான்.

கால: கவலைப் படாதீர்கள்; கார்க் கோடகன் இன்று

போய் விட முடியாது...கோட்டைக் கதவுகளையெல்லாம் சாத்தச் சொல்லி விட்டேன்....

கருணு: அப்படியானல் தப்பிக்க முடியாது...இருந்தாலும் சாசனத்தை நாம் பறித்துவிட முடியுமா?

கால: இந்தச் சாசனமும் சரி; நீ கலிங்கத்திலே வெட்டி விட்ட அகழியும் அதிலே விட்டு வந்த முதலையும், அதற்குள்ளே கட்டி வைத்த வழுக்குப் பாறைகளும் சரி; இரண்டும் ஒன்றுதான். சாசனம் கலிங்க நாட்டை அணுகுமானல் காலன் சோழ நாட்டை அணுகுவான்..., நம் கனவுகள் கறையான் அரித்துக் கந்தல் கந்தலாகி விடும்...

கருணு: என்ன செய்ய வேண்டும் என்று ஆணையிடுங்கள்...

கால: ஒரு வேளை சுரங்க வழி தெரிந்து இருந்தால் அதன் வழியே தப்பித்து வெளியே போக முயல்வான் கார்க்கோடகன். அப்போது மடக்கிவிட வேண்டும்.

கருணு: அப்படியானல் சுரங்க வழியில் முன்னமே சென்று காத்துக் கொண்டு இருந்து கார்க் கோடகனைத் தாக்கிச் சாசனத்தைக் கைப் பற்றிக் கொண்டு வந்து விடுகிறேன்.

முடி: இப்படிச் செய்தால் மன்னர் நம்மை ஏதேனும் தவருக நினைக்க மாட்டாரா?

கால: நாடாளும் மன்னனுக்குத் தெரியாமலே நாம் சில நன்மைகளைச் செய்யலாம்· தண்டனை வந்தாலும் ஏற்போம். சாசனம் ஒரு முள்செடி. இது கலிங்கத்துக்குச் சென்று வளர்ந்து விட்டால், நம் கையைக் குத்தும் பெரிய முள் மரமாகி விடும்... புறப்படு; சாசனமும் கையுமாக என்னை வந்து பார். [இருவரும் போதல்]

[திரை]

## காட்சி 35

**களம்:** சுரங்க வழி **காலம்:** இரவு

**உறுப்பினர்:** கருணகரன், கார்க்கோடகன், வாயில் காப்போர்...

[கார்க்கோடகன் நிற்க, யாளிவழியே கருணகரன் தீப்பந்தத்துடன் வருகிருன். கார்க்கோடகன் மறைகிருன்]

**கருண:** கார்க்கோடகா! உயிர்மேல் ஆசையிருந்தால் நீயாக வெளியே வந்து, செய்த தவற்றுக்குக் கழுவாய் தேடிக்கொள்; இல்லையென்ருல் இந்தப் பாதாளச் சுரங்கத்திலேயே மடிந்து கிடக்க நேரும். நீ தூய வீரன் தான். எனக்காக நீ கலிங்கத்தில் செய்த உதவியின் பேரில் உன்னை அமைதியாக அழைக்கிறேன். வா, கார்க்கோடகா, வா, வெளியே! [கார்க்கோடகன் உருவிய வாளுடன் வெளியே வருகிருன்]

**கருண:** கார்க்கோடகா! எங்கே சாசனம்? இப்படிக் கொடுத்து விட்டு என்னுடன் வா. உன் உயிரைக் காப்பாற்றுவேன்...... கொடுத்து விடு. கார்க்கோடகா!......

**கார்க்:** ஊம்.......!

**கருண:** சிந்திப்பதில் பயனில்லை, கார்க்கோடகா! வீணுக என்னுடைய வாளுக்கு இரையாகாதே! அப்படி என்னுடைய வாளுக்கு இரையாகி நீ உயிர் துறப்பது தான் உனக்கு நல்லது என்ருல், நான் தடை சொல்லவில்லை.!......

**கார்க்:** [சிரிக்கிருன்]......

**கருண:** கார்க்கோடகா! உன்னுடைய சிரிப்பைக் கேட்டு இந்தச் சுரங்கத்தில் இருக்கும் வௌவால்-

களும் பெருச்சாளிகளும் தடுமாறலாம். ஆனால், இந்த இடிச் சிரிப்பு என்னிடம் செல்லாது...... அஞ்சுபவனாக இருந்திருந்தால் கலிங்கத்திற்கே வந்து என் எண்ணத்தைச் சாதித்துக் கொண்டிருக்க முடியுமா?

**கார்க்:** தூ...துரோகி! கலிங்க மரபுக்கே பலவகையிலும் துரோகம் செய்த உன்னைக் காண்பதே பாவம். இந்த இலட்சணத்தில் உனக்குப் பணியவும் வேண்டுமோ...?

**கருணா:** அந்தப் பாவத்தைத் துடைக்கத்தான் அம்மாவும் நீயும் சோழ அரண்மனையையே குத்தகை எடுத்துக் கொண்டிருக்கிறீர்களே! போதாதா...? போதாக்குறைக்கு, நாடாளும் ஆசையால் சாசனம் வேறு எழுதி வாங்கிக் கொண்டீர்கள். இன்னும் என்ன தான் செய்யத் திட்டமிட்டு இருக்கிறீர்கள்...?

**கார்க்:** சோழ நாட்டையே மண்ணோடு மண்ணாக்கத் திட்டமிட்டிருக்கிறோம்...

**கருணா:** அப்போதுங்கூட, அருள்மொழி தேவியின் வயிற்றில் பிறப்பவன் சோழநாட்டான் தானே...!

**கார்க்:** அது தெரியும். அரியணையில் அந்தப் புலிக்குட்டி உட்காருகிறதோ...

**கருணா:** அல்லது கழுகுக் குஞ்சு உட்காருகிறதோ, என்கிறாயா...?அது தான் முடியாது...இந்தக்கருணாகரன் உயிருடன் இருக்கும் வரை உங்கள் மூடுமந்திரம் எதுவும் பலிக்காது...

**கார்க்:** உயிருடன் உன்னை விட்டால்தானே! நீ தான் இங்கேயே சாகப் போகிறாயே ...?

*[கருணாகரன் உடனே வாளைச் சுழற்றுகிறான்-வாட்போர் நடக்கிறது-கார்க்கோடகன் வாள் கீழேவிழ...]*

**கருணா:** இப்போது கொஞ்சம் சிரி பார்க்கலாம்...!

கார்க்: ஊம்... [உறுமுகிருன்]...

கருணு: உம்... சாசனத்தை எடு...

கார்க்: முடியாது...

கருணு: [சோதனை செய்து எடுத்துக் கொண்டு, வாளை முதுகில் வைத்து நடத்திக்கொண்டு போகிருன் .மீண்டும் யாளியின் பின் நின்று ...] கடம்பா! சுரங்கக்கதவைத் திறக்கப் போகிறேன் கவனம்...

[கதவைத் திறக்க-கோடகன் முன்னே போக அவன் கழுத்தில் சுருக்குக்கயிறு போட்டு இழுத்துக் கொண்டார்கள். கருணுகரன் தீப்பந்தத்தை அணைத்து விட்டுத் திரும்புகிருன். யாரோ இருவர் புனைவடிவத்தில் வந்து கருணுகரனைக் கன்னத்தில் குத்தி வீழ்த்துகின்றனர்.]

ஒருவன்: ஊம்... பாதாளச்சிறை ... இவனுக்கு [கார்க்கோடகனைச்சுட்டுதல்] மருத்துவரிடம் ... (கருணுகரனைச்சுட்டுதல்)

[திரை]

## காட்சி 36

களம்: அரண்மனைக் கூடம் காலம்: மாலை

உறுப்பினர்: குலோத்துங்கர், காலதேவர், கருணுகரன், அம்மங்கை, இளவேணி.

கருணு: [படுக்கையிலிருந்துஎழுந்து]இளவரசி

அம்: ஊம்!எழுந்திருக்க முடிகிறதா?மயக்கம் தெளிந்து விட்டதா?

கருணு: கொஞ்ச நேரத்திற்கு முன்ஞல் நான் ஒரு குகைக்குள் அல்லவா இருந்தேன்.

அம்: கொஞ்ச நேரமா?ஆறு நாளாக இந்த இடத்தில் அசையாமல் படுத்திருக்கிறீர்கள்...

கருணு: ஆறு நாளாகவா?...வியப்பாக இருக்கிறதே...?அந்த ஆறு நாளும் நீ...

அம்: அங்குமிங்கும் அகலாமல் உங்கள் அருகிலேயே இருந்து..

கருணு: இளவரசி...!

அம்: பார்த்தீர்களா?இன்னும் உங்களுக்கு முழுக்குணம் ஆகவில்லை...

கருணு: இல்லையே...குணமாகி விட்டதே!...

அம்: அப்படியானல் இன்னும் ஏன் இளவரசி இளவரசி என்று இழுக்கிறீர்கள்..., கருணகரி என்றே கூப்பிடலாமே...

கருணு: நீ எட்டாத உயரத்தில் இருக்கிருய். நான் உன்னை அணுக முடியாத அளவுக்கு அடித்தளத்தில் இருக்கிறேன்.

அம்: இல்லை; நீங்கள் என் நெஞ்சத்தின் அடித்தளத்தில் இறைவனுக இருக்கிறீர்கள். இனி நீங்கள் வேறு எந்தநெஞ்சுக்கும் புகுந்து விடாமல் இறுக்கப்பூட்டப் பட்டிருக்கிறீர்கள்......

கருணு: கருணகரி [கையைத் தொடுகிருன்]

அம்: இல்லை... காஞ்சியின் பட்டத்தரசி...

கருணு: இதற்குத்தான் கருணகரி என்று புனை பெயர் வைத்துக் கொண்டாயா....?

அம்: ஊம்....சரி! நிறையப் பேசிவிட்டீர்கள்.... இருங்கள். [போய்ப் பால் கொண்டு வருகிருள்]

அம்: சூடான பால்! அருந்துங்கள்! பிறகு பேசுவோம்.

கருணு: (குவளையை வாங்கிக் கொண்டு அவள் முகத்தை உற்றுப் பார்க்கிருன்.)
முதலில் நீ கொஞ்சம் குடி. நீ தொண்டை மண்டலத்தின் பட்டத்தரசி அல்லவா? உன் தொண்டை உலரக் கூடாது...குடி....

அம்: ஊஊம் . . . . குடிக்கமாட்டேன் . . . .

கருணு: ஏன் . . . . .? காரணம் . . . .

அம்: இந்தச் சூடான பால் தொண்டையில் இறங்கிஞல் நேரே நெஞ்சுக்குள் போய்அங்கே குடியிருக்கும் என் தெய்வத்துக்குச் சுட்டுவிடும். . . . .

கருணு: (சிரித்து) வாயில் போடுவதெல்லாம் நேரே வயிற்றுக்குத்தான் போகுமென்று நினைத்தேன். . . .நீ சாப்பிடும் எதுவும் நெஞ்சுக்குத்தான் போகும் போலிருக்கிறதே . . .

அம்: ஆமாம்! என் தெய்வம் அங்கே தானே இருக்கிறது . . . .அதற்குத்தானே நான் உண்ணுவதும் உயிரோடு இருப்பதும். . . . .

கருணு: அதுஎன்ன தெய்வம், அப்பேர்ப்பட்ட தெய்வம்

அம்: இந்தத் தெய்வம்தான் (அவன் கைகளைப் பற்றிக் கொள்கிருள்) யாரோ வருகிருர்கள் போலிருக்கிறதே . . . . !(அம்மங்கை ஓடிவிட — அவன் படுத்துக் கொள்கிருன்—குலோத்துங்கர் முதலானோர் வருகின்றனர்)

குலோ: உடல் சூடில்லை....என்ன? அம்மங்கையைக் காணும். . . .! அம்மங்கை . . . அம்மங்கை . . . . (அவள் வருகிருள்)

குலோ: இவ்வளவு நேரம் இங்கே இல்லையாம்மா?

அம்: இல்லையப்பா . . . . நானும் இப்போதுதான் வந்தேன். . மயக்கம் எப்படியிருக்கிறதென்று பார்க்க

கால: நாங்களும் அதற்காகத்தான் வந்தோம் . . . . மயக்கம் எப்படியிருக்கிறதென்று . . . . . .பார்க்க. . .

[அம் மங்கை நாணுகிருள்]

குலோ: அம்மங்கை! நீ நம் தளபதியை நன்ருகக் கவனிக்கிருய் போல் இருக்கிறதே! . . .

கால: சோழநாடு நல்ல வீரனை இழந்து விடக்கூடாது என்பதற்காகவும் கலிங்கப்போர் வெற்றி பெறவேண்டும் என்ற காரணத்திற்காகவும் தானே இளவரசி... அளவறிந்து,.... கவனித்து வருகிறாள்....

குலோ: ஏன் அமைச்சரே! கருணாகரனுக்கு இப்படி அடிக்கடி உடற் கோளாறு வருகிறதே! காரணம் எதுவாயிருக்கும்....!

கால: நானும் அதைப்பற்றித்தான் சிந்திக்கிறேன் குலோத்துங்கா!

குலோ; கலிங்கப் போர்...,. (கருணாகரன் அசைந்து எழுந்திருக்க முயல்கிறான்) அடடே! தளபதிக்கு மயக்கம் தெளிந்து விட்டதே....

கருணா: கலிங்கப் போர் ....,.என்று காதில் விழுந்ததே

கால: கலிங்கப் போர் முடியும் வரை மயக்கம் உண்டாகக்கூடாது என்றுதானே நானும் கவனித்து வருகிறேன் ... [அம்மங்கையைப்பார்க்க, அவள் நாணுகிறாள்].

குலோ: இளவேணி உன்அண்ணனுக்கு இனிப் பேச முடியும் ... நீ உட்கார்ந்து பேசு....

[அவள் நாணுகிறாள்]

கால: நாமெல்லாம் இருக்கும் போது பேசுவாளா? அதுவும் பெண்களோ பேசு என்றால் பேசமாட்டார்கள். அவர்களாகப் பேசினால் பிறகு அடக்கவே முடியாது....குலோத்துங்கா! ஒரு பெண் பேசினால் இந்தப் பூமி அதிரும்!....இரண்டு பெண்கள் பேசினால்....விண் மீன்கள் உதிரும்...!

குலோ: மூன்று பெண்கள் பேசினால்....

கால: அந்த மூன்று பேர் விடும் மூச்சில் இந்த மூவுலகமும் புகைந்து போகும்

குலோ; புலவர்க்கு எந்த நேரமும் வேடிக்கை-தான் .....வந்த வேலை .....

கால: வந்த வேலை யென்ன? மண்ணுமங்கலத் திரு-நாள் நெருங்குகிறது......

கருணு: அப்படியானுல் இந்த முறை கலிங்க வேந்-தனின் நிலை இரண்டில் ஒன்று தெரியும்......

குலோ: ஆமாம்.....தெரிந்துவிடும். அமைச்சரே! இந்த முறை மண்ணுமங்கலத் திருநாளைக் காஞ்சி யில் ஏற்பாடு செய்யுங்கள். சிற்றரசர்கள் காஞ்சிக்கு வந்து திறைப் பொருள் செலுத்தட்டும்......

கால: நல்லது. ஓலைகள் அனுப்பி வைக்கிறேன். ஒரு வேளை கலிங்கன் அனந்தவர்மன் திறை செலுத்தத் தவறி விட்டால்....

கருணு: (உணர்ச்சியுடன்) முரசு முழங்கும்; கலிங்கக் கோட்டை அந்தக் கணமே ஆட்டங் கொடுக்கும்; அசைந்து கலங்கும்.......

கால: குலோத்துங்கா! விக்கிரமனும் கருணகரனும் ஒருமைப்படும்போதுதானே நாம் கலிங்கத்தில் கால் வைக்கலாம்....

குலோ: ஊம்......அதுதான்....இன்னும் என்னை வாட்டிக் கொண்டிருக்கிறது.சரி...இளவேணி! நீ உன் அண்ணனுடன் பேசி விட்டு வா. அம்மங்கை! இளவேணியை நன்கு கவனி! அவள் யார் தெரியு-மல்லவா?.....

[அம்மங்கை சிரிக்கிருள் —அவர்கள் போகிருர்கள்]

இள: அண்ணு! உங்களைப் பார்க்க இடையிலே ஒரு நாள் வந்திருந்தேன்.மயக்கம் தெளியவில்லை...இள வரசி அரும்பாடுபட்டு மயக்கத்தைத் தெளியவைத்து விட்டார்கள்.

கருணு: பொய்! பொய்! இங்கே இருந்தாலே மயக்கம் அதிகமாகுமே தவிர, எளிதில் குறையாது....

அம்: நன்ருக அடிபட்டால் மயக்கம் வராமல் என்ன செய்யும்?

இள: காயமெல்லாம் ஆறிவிட்டதா, அண்ணு!

கருணு: எந்தக் காயத்தைச் சொல்லுகிருய்...?ஓ!உடல் காயமா? நன்ருக ஊறிவிட்டதம்மா...?

இள: ஐயய்யோ! ஆறவே இல்லையா அண்ணு!

அம்: நீ பதருதே இளவேணி! ஆறிவிட்டதைத் தான் ஊறிவிட்டது என்கிருர் ....மயக்கம் வந்தா-லே வாய் உளறும் போலிருக்கிறது ··.

கருணு: இளவேணி! நீ தனியாக எப்படியம்மா இருந்-தாய்? நானும் வராமல் போய்விட்டேன்....

அம்: இனி, அரண்மனையிலேயே இருந்து விடலாம் இளவேணி!

இள: அரண்மனைக்குத்தான் வரப்போகிறேன்..ஆனுல் கொஞ்சம் நாள் செல்ல வேண்டும்.... அண்ணு! இன்று வீட்டுக்குப் போவோமா....!

அம்: இன்று உனக்கு விருந்து இளவேணி!

கருணு: எனக்கு...?

அம்: மருந்து! அப்போது தான் மயக்கம் தெளியும்.

இள: கொடுக்க வேண்டியது தான்.

அம்: விருந்து முடித்து விட்டு, என்னேடு தங்கி விட்டு, நாளைக் காலையில் போகலாம் இளவேணி...

இள: இளவரசியின் கட்டளை! இளவேணி மறுக்க முடியுமா! [சிரிக்கின்றனர்]

[திரை]

# காட்சி 37

**களம்: இளவேணி வீடு** **காலம்: இரவு**

**உறுப்பினர்: காலிங்கராயர், பராக்கிரமன், இளவேணி இராசராசன்**

**இள:** [வீட்டில் உலவுகிருள்] சே,சே,! என்றைக்கும் இதுதாஞ'...? இந்த ஆண்களுக்கு என்ன வந்தது? சுடச் சுடச் சோருக்கிப் பக்குவமாகப் பலகாரம் செய்து வைக்கிருேம். இதைக் காலாகாலத்தில் வந்து சாப்பிட்டு விட்டாவது போகக் கூடாதா... அரண்மனை... கோட்டை ..· போர் '..படை... இதே பேச்சு அண்ணனுக்கு ... இன்றைக்குக் கருணுகர அண்ணு வரட்டும். இரண்டிலே ஒன்று கேட்டு விடுகிறேன். [கதவை யாரோ தட்டுகின்றனர்]

வாங்க! வாங்க! நீங்க ஆடி அசைந்து வாங்க. நாங்க உங்களுக்காக உட்கார்ந்துக் கிட்டு இருக் கோம். (சினத்தோடு) உங்களுக்காக எவ்வளவு நேரம் காத்திருப்பது?

[கதவைத் திறக்கிருள் — காலிங்கராயர் — பராக்கிர-மன், சடைமுனிவர்களாக வருகின்றனர்.... ]

**இள:** ஆ..[அலறுகிருள்...]

**காலிங்:** இளவேணி! அஞ்ச வேண்டா! பேயோ, பிசாசோ என்று நினைத்து விடாதே; உன்னைப் பார்க்கத்தான் இந்த உருவத்தில் ஓடோடி வந்திருக் கிறேன்.

**இள:** என்னையா...? யார் நீங்கள்...? எதற்காக இந்த நேரத்தில் வரவேண்டும்?

**காலிங்:** இளவேணி! என்னை இதற்குள்ளாகவா மறந்து விட்டாய்! ...'. உண்மைதான்! நான் மறக்கப்பட வேண்டியவன் தானே.....

[காலிங்கராயர் புனைவடிவத்தைக் கலைகிருர்....]

இள: அண்ணு! ... (அவரைத் தழுவிக் கொள்கிருள்.)

இள: கதவைத் தாள் போட்டுவிட்டுப் பேசுவோம். ஒற்றர்கள் ஓயாமல் நம் வீட்டைச் சுற்றிக்கொண்டிருக்கிருர்கள்...[கதவைத் தாளிட்டுவிட்டு, அவள் அண்ணனையே உற்றுப்பார்க்கிருள்].

காலிங்: என்னம்மா அப்படிப் பார்க்கிருய்? மார்பிலே கவசம் பூண்டு இடையிலே வாளேந்தி நடையிலே மிடுக்குக் காட்டி நான் படைத்தலைவனுக இருந்த நாள் எங்கே? காட்டு வழிகளைக் கடந்து இருட்டு வேளையில் திருட்டுப் பூனைபோல் பதுங்கிப் பதுங்கி வரும் இந்த நாள் எங்கே? என்று நினைக்கிருயா......?

இள: இல்லை, அண்ணு!...... சாப்பிடுவதற்கு ஏதாவது கொண்டு வருகிறேன், அண்ணு!

காலிங்: வேண்டாம்மா; உன்னைப் பார்த்தேனே, அதிலேயே என் பசியெல்லாம் பறந்து விட்டது......

பராக்: [குறுக்கிட்டு] ஐயய்யோ!...... நல்ல காரியம் செய்தீர்கள்......! உங்களுக்குத்தான் பசி அடங்கி விட்டது. எனக்குப் பசி அதிகமாகி விட்டதே! அம்மா இளவேணி! ஏதாகிலும் பழைய கஞ்சி இருந்தாலும் போதும்...... உன்னுடைய கையாலே கொண்டு வந்து ஊற்று......

காலிங்: செங்கோல் செலுத்தும் கை இன்று பழஞ்-சோறு ஏந்தப் போகிறது, அதுவும் உன் புண்ணியம் தான்! [இளவேணி உள்ளே சென்று தின்பண்டங்கள், தண்ணீர் கொண்டு வருகிருள்]

பராக்: இளவேணி இந்த உருவம் உனக்குப் பிடிக்கவில்லை போலும்...! அதனுலென்ன! இப்போதே கலைத்து விடுகிறேன்...[இருவரும் உண்ணுகின்றனர்]

இள: அண்ணு! படைத்தலைவர் பதவியைத்தான் வேண்டாமென்று விட்டுவிட்டீர்களே, நேரே வீட்டுக்கு வர வேண்டியது தானே! இத்தனை காலமாக எங்கே தான் போயிருந்தீர்கள்......?

**காலிங்:** என் மீது விழுந்த இடியின் அதிர்ச்சி நீங்க இத்தனை நாளாகிவிட்டது. மனச்சுமை இறங்கி வகை யான திட்டமாக உருவெடுக்க இவ்வளவு காலம் ஆகி விட்டது. நாடோடியாகத் திரிந்து பனியால் நனைந்து, வெயிலால் உலர்ந்து, பசியால் அலைந்து உன்னை நாடிவர இத்தனை நாளாகி விட்டதம்மா......

**இள:** இல்லை அண்ணா! என்னிடம் மறைக்கிறீர்கள்...! உங்கள் மனம் மாறி எங்களை நாடி இருந்தால் எதற்காக இந்தப் புனைவடிவம் ?

**காலிங்:** இனிச் சோழ நாட்டு மக்கள் என்னை மறக்க வேண்டும். இருந்த உறவையெல்லாம் நெஞ்சத் திலிருந்து எடுத்தெறிந்து விட வேண்டும். இதற்-காகத்தான் இந்த இராப் பயணம்; புனைவடிவம்.. எல்லாம்.....

**இள:** அண்ணா! பாண்டியரின் கொட்டமடக்கிப் பாராட்டுப் பெற்றவர் நீங்கள்... இன்று நீங்களேசோழ நாட்டுக்குத் துரோகம் இழைப் பதாக..

**காலிங்:** உன் சின்ன அண்ணன் செப்பினானுக்கும் ....அவன் ஒரு பைத்தியக்காரன்....

**இள:** இல்லை அண்ணா! அவர் அடிக்கடி உங்களை எண்ணிக் கண்ணீர் விடுகிறார்....

**காலிங்:** கண்ணீர்...! எல்லோரும் சிந்தி விடுகிறார் கள் ... ... ... ...எதற்கென்றுதான் தெரிவதில்லை. சிந்துகின்ற கண்ணீருக்குத் திட்டவட்டமான காரணம் இருக்க வேண்டாமா?கண்ணீர் விடுகிறானும் கண்ணீர்! அண்ணனுக்காக அழும் கருணாகரன், மாய்ந்து ஓய்ந்து போய்விட்ட பல்லவத்திற்காக ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டதுண்டா? அவன், என்று தொண்டை மண்டலத்து மன்னனாகின்றானோ அன்று தான் நம் கண்ணீர் பன்னீராகும். 'தொண்டைமான்

கருணாகரன்' என்று நாடு புகழ வேண்டும். அதுவரை நான் சோழர்க்குப் பகைவன் தான் ... ... சரி ... ...! இந்தப் பொன்னான நேரத்தில் எதற்கு இந்தப் போராட்டப் பேச்சு! மனம் குளிரப் பேசுவோம்! கருணாகரன் காஞ்சிக்கோ, எங்கேயோ போயிருந்தானாமே ... ... வந்து விட்டானா ... ... ?

இள: காலையிலே வந்து விட்டாரே ... ...

பராக்: [துள்ளியெழுந்து] அப்படி யென்றால், மேல் மாடத்தில் தான் இருக்கிறானா ?

இள: இல்லை ... ... அரண்மனைக்குப் போயிருக்கிறார் ... ... எப்போது வருவாரோ ... ... தெரியவில்லை... ... இப்போது கூட ... ...

[கதவை யாரோ தட்டுகின்றனர்...நாய் குரைக்கிறது ... காலிங்கராயர், பராக்கிரமன் விழுந்தடித்துக் கொண்டு சடை முனிகளாக வடிவம் புனைகின்றனர்] [காலிங்கராயர் பராக்கிரமன் காதில் ஏதோ சொல்கிறார்]

பராக்: ஒரு வேளை அப்படியும் இருக்குமோ ... ...

காலிங்: எதற்கும் இப்படிச் செய்து பார்ப்போம் ... ... (இளவேணியை நோக்கி) இளவேணி! நாங்கள் கதவுக்குப் பின்னால் ஒளிந்து கொள்கிறோம். நீ கதவைத் திறந்து விடு. கருணாகரனாக இருந்தால் பேச்சுக் கொடுத்துக் கொண்டே உள்ளே கூட்டிப் போய் விடு. நாங்கள் வெளியேறி விடுகிறோம் ... ...

இள: ஏன் அண்ணா! அண்ணனைச் சந்தித்து விட்டுப் போனால் ... ...

பராக்: வேண்டா தாயே! இந்த உதவி போதும் ... [இளவேணி கதவைத் திறக்க - இராசராசன் வருகிறான்]

இள: யாரய்யா, நீர்? கன்னிப் பெண் தனியாக

இருக்கும் போது கதவைப் போட்டு உடைக்கிறீர் ... ?

இராச: நானு ... நான் தான் ?

பராக்: (வாளில் கை வைத்து) வானளாவும் ...

இராச: மீனக் கொடி ... ... மீனக் கொடி ... ...
[மறைந்த சடை முனிகள் வெளியே வருகின்றனர்]

காலிங்: ஓ... ! இராசராசரா...! எதிர்பார்த்தோம்...!

பராக்: ஏன் இவ்வளவு நேரம்...?

இராச: ஒன்றுமில்லே... வழியில் ஒரு நாய்...

[பராக்கிரமன் சிரிக்கிருன்]

காலிங்: சரி, பேசிக் கொண்டிருங்கள். என் தங்கைக்கு ஆறுதல் சொல்லிவிட்டு வந்து விடுகிறேன்.

[இளவேணி, காலிங்கராயர் உள்ளே போகின்றனர்]

பராக்: இராசராசா...! நீ வருணிக்கும் போது வெறும் வண்டவாளம் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். பார்த்தால் கார்முகிலைக் கிழித்துக் கொண்டு ஓடும் கலைமதிபோல் இருக்கிருளடா...! ஆகா...! என் உயிரைக் கொத்துவது போல் ஓர் உணர்ச்சி...!

இராச: உயிரைக் கொத்துகிருளா ? அவள் மூக்கு அவ்வளவு கூர்மையா...?

பராக்: இல்லே... அவளுடைய கண்கள் வேலினும் கூர்மை உள்ளவை, கொடுமை வாய்ந்தவை. .

இராச: விட்டுத் தள்ளுங்கள், நாம் போர்க்களத்தில் போய் வேலேயும் ஈட்டியையும் பார்க்க வேண்டியிருக்கிறது. இவள் வேறு உங்கள் உயிரைக் கொத்தி விட்டால், எதுவும் உருப்படியாக நடக்காது.

பராக்: இராசராசா! விக்கிரமன் தொலேந்தான்.

இளவேணி என்னுடைய பார்வையில் பட்டுவிட்ட பிறகு விக்கிரமன் உயிரோடு இருப்பதா ?

இராச: எப்போது அவனைத் தீர்த்துக் கட்டலாம்...?

பராக்: பொறு... இளவேணியை மட்டும் நம் வயப் படுத்தி விட்டால் விக்கிரமன், கருணாகரன், காலிங்க ராயன் மூவருமே தொலைந்து விடுவார்கள்...

இராச: ஆகா! ஒரே மாங்காயில் மூன்று கல் ... ...

பராக்: என்ன, உளறல் ... ...

இராச: இல்லை...இல்லை... ஒரே கல்லில் மூன்று மாங்காய்!

பராக்: சரி! போன காரியம் என்ன ஆயிற்று...?

இராச: சாசனம்... வாங்கியாகி விட்டது... இந்நேரம் சாசனம் கலிங்கத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும்.

பராக்: ஆகா! அருள்மொழி அருள்மொழிதான்...ஒன்று முடிந்தது. இன்னொன்று இருக்கிறதே...? அதுதான் முக்கியம்...

இராச: சொல்லுங்கள் ... ...

பராக்: இராசராசா! நீ தான் எல்லாம். சோழ அரண்மனையில் நீதான் தூங்காமல் இருக்கவேண்டும் கருணாகரன் மீது ஏதாவது பழி சுமத்திச் சிறையிலே தள்ளிவிட-வேண்டும். இந்தப் பழியை விக்கிரமனுக்கு முன்னால் சுமத்த வேண்டும்.

இராச: ஊம் ... எப்படிச் செய்வது?... ஒன்றும் புரியவில்லையே !

பராக்: உன்னுடைய மூளைக்கா? ஊம் ... எட்டுமா ? எட்டினால் இளவரசப் பட்டத்தை விக்கிரமன் தட்டியிருப்பானா...? நானே சொல்கிறேன். . . அருள்மொழியைக் கருணாகரன் கற்பழித்து ...

இராச: ஐயய்யோ! ஐயய்யோ! ...

பராக்: ஏன் அலர்றே? அருள்மொழியைக் கருணாகரன் கற்பழிக்க முயன்றதாக அருள்மொழியைச் சொல்ல வைக்க வேண்டும். இதை விக்கிரமன் பார்த்து விட வேண்டும். காரியம் வெற்றி ... என்ன தூண்டி விட முடியுமா ... ?

இராச: ஊம் ... போட்ட முடிச்சை அவிழ்க்கத்தான் தெரியாதே தவிர, முடிச்சுப் போடுகிறதிலே நான் இராசாதி ராசன் ... ...

பராக்: கத்தாதே ... ஆமா! என்ன இந்தக் காலிங்க ராயனை இன்னும் காணோம். அண்ணனும் தங்கையும் ஏதாவது சூழ்ச்சி செய்கிறார்களோ ...

இராச: இருங்கள் (போய்க் கதவருகில் நின்று ஒட்டுக் கேட்கிறான்)

காலிங்கராயரே ... நேரமாகிறது ...

(காலிங்கராயரும், இளவேணியும் வெளியே வருகின்றனர்.)

காலிங்: நல்லது இளவேணி! விதிப்படி நடக்கட்டும் ... விதி விரும்பினால் மீண்டும் சந்திப்போம் ...

இள: உங்கள் கூட வந்தவர் ..

காலிங்: அவரா ? பராக்கிரம பாண்டியர் ..

(இளவேணி வியப்புடன் நிற்கிறாள். மூவரும் போகின்றனர்)

[திரை]

## காட்சி 38

களம்: சோலை — காலம்: காலை

உறுப்பினர்: விக்கிரமன் இளவேணி

இள: என்ன, யாரை நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? என்னைப் பற்றியா ?

விக்: இல்லை · · · ஒரு பெண்ணைப் பற்றி · ·

இள: பெண்ணைப்பற்றியா · · ? (திரும்பி நடக்கிருள்)

விக்: இளவேணி! (சென்று தோளைப் பற்றுகிருன்) பெண்ணைப் பற்றி என்ருல் என் அன்னையைப் பற்றி நினைக்கக் கூடாதா · · · !

இள: உங்கள் அன்னைதான் இறந்து போய் விட்டார்களே !

விக்: ஆனுல் என்றும் சாகாத என் அன்னை உனக்குத் தெரியாதா ?

இள: சாகாத அன்னையா · · ?

விக்: ஆமாம்! அவள் தான் தமிழ் அன்னை · · · !

பாடல்

(அருணகிரி நாதர் திரைப்படப் பாடலின் பண்ணைப் பின்பற்றியது.)

பெண்: நிலவோ அதன் ஒளியோ
மலரோ அதன் மணமோ
எழில் மிகும் பெண்மையுண்டோ ?
என்னினும் மென்மை யுண்டோ
இனி நாளு அவள் தாளு ?

ஆண்: கலையே அவள் நிலையே
உயிரே அதன் உறவே
இலக்கிய மென்மை யுண்டு
இளமையும் என்று முண்டு
இனி நீயோ அவள் தானே ! · · · (கலையே

பெண்: ஊறும் அன்பாலே மூடுவேன்
உம்மையே நினைந்து உருகிநிற்பேன்
காதலின் உறவால் கனிந்திடும் நெஞ்சமே
யாரினி உறவாகும் ... ... ? (நிலவோ)

ஆண்: பாடும் பண்ணுலே நாடுவாள்
பாய்ந்திடும் கதிர்போல் ஒளிநிறைவாள்
பாவலர் உணர்வில் நாவினில் ஆடுவாள்
பகைமையும் உனக்கேனே? (கலையே)

இருவரும்: நிலவே அதன் ஒளியே
மலரே அதன் மணமே
சுவைத்திடும் செந்தமிழ்தான், சுவைதரும்
இந்தமயில்
இனி நாமே மகிழ்வோமோ (நிலவே)

[திரை]

## காட்சி 39

களம்: புதுமாளிகை. காலம்: பகல்

உறுப்பினர்: அருள்மொழி இராசராசன், கருணுகரன் சக்கரயுத்தன்.

அருள்: சுமித்திரை ... ... சுமித்திரை ... ... போனவளை இன்னும் காணேம். கருணுகரரை என்னிடம் வரும் படி கட்டளை இடச் சொல்லுமாறு சக்கரவர்த்தி- யிடம் சொல்லி அனுப்பினேன் . . . .

போனவள் எங்கே போனுளோ ... தெரியவில்லை ...

[உலாவுகிருள்]

வரட்டும் அந்தத் தளபதி! ஒருகை பார்த்து விடு கிறேன். கார்க்கோடகனை வழி மறித்து விட்டார்- களாம்.கருணுகரர் தான் காரணமாக இருக்க வேண்- டும். எனக்குத் தளபதி சரியான விடை சொல்லா விட்டால் ஏதாவது பழி சுமத்திவிட வேண்டியது தான் ... ...

(யாரோ ஒருவன் வந்து நிற்கிருன். அருள்மொழி புதிய மனிதனைக் கண்டு அலறுகிருள்)

சக்கர: அஞ்ச வேண்டா ... ... சோழ தேவி ......

அருள்: யார் நீ!

சக்கர: என்னைத் தெரியவில்லை ... !நான் தான் சக்கரயுத்தன் ......

அருள்: சக்கரயுத்தன் . . . ! உன்னை நான் பார்த்ததே இல்லையே . . . . !

சக்கர: என்னை ஒருவரும் பார்த்திருக்க முடியாது. கலிங்க வேந்தரின் அந்தரங்க ஒற்றன் நான். மிக நெருக்கடியான கட்டத்தில்தான் நான் வெளியே வருவேன்... தேவி! நம் அமைச்சர் எங்கராயருக்கே என்னைத் தெரியாது என்றால் பாருங்களேன். கருணாகரன் கோட்டைகட்டக் கலிங்கம் வந்தது, தங்கலைக் காதலித்தது, சோழன் தங்கலை மணந்தது, இன்று நீங்கள் திட்டம் போட்டுக் கொண்டிருப்பது, எல்லாம் எனக்குத் தெரியும்....சாசனம் கூட . . . வந்து சேர்ந்து விட்டது...

அருள்: சாசனம் கிடைத்து விட்டதா......!

சக்கர: ஆம் தேவி...! அனந்தவர்மர் அகம் பூரித்தார் சாசனத்தைக் கண்டு தேன் குடித்த வண்டு போலானார்......

அருள்: பின், ஏன் கார்க்கோடகனை அனுப்பவில்லை?

சக்கர: கார்க்கோடகன் தொல்லைப்பட்டு வந்து சேர்ந்தான். . . . வழியில் சண்டை . . . . கையில் ஒரு கத்தி வெட்டு. . . அதனால் தான் அவன் வரவில்லை. . . . .

அருள்: சரி. . ! முக்கியமான செய்தி உண்டா, . . . ?

சக்கர: விரைவில் போர் நடக்கப் போகிறது . . அதனால் . . கருணாகரனைத் தொலைத்துவிட வேண்டும் . . இது தான் செய்தி . . .

அருள்: தொலைப்பதா...? இந்தக் கைகளாலா....? அவரை நோக்கி அன்புக்காக நீண்டவை இந்தக் கைகள்...

சக்கர: தேவி...! இனி அதெல்லாம் நினைத்துப் பயன் இல்லை...கருணாகரனை இன்றிரவே தொலைத்து விட வேண்டும்.

அருள்: அவசரம் வேண்டா... முதலில் பராக்கிரம பாண்டியனைப் பார்த்து விட்டு வா. அடுத்ததை நான் முடிப்பேன்...

இராச: [வந்துகொண்டே] பராக்கிரம பாண்டியரைப் பற்றிக் கவலையில்லை. இனி, கருணாகரன் கலிங்கத்-திற்குச் செல்லவிடாமல் தடுத்தால் போதும். (இரு வரும் திரும்பிப் பார்க்கின்றனர்.)

அருள்: ஓ...! இராசராசரா...! யாரோ, எவரோ என்று அஞ்சி விட்டோம்...

இராச: என்ன, இன்று உங்கள் மாளிகையைச் சுற்றி ஒரே காவல் மயம்... சுண்டெலி கூட நுழைய முடியாது போலிருக்கே..!

அருள்: கடுங்காவலா..? யார் செய்திருப்பார்கள்..?

இராச: அதுதான் எனக்கும் புரியவில்லை...

அருள்: ஒரு வேளை இப்படியிருக்கலாம்... கருணாக-ரரை இப்போது அழைத்திருக்கிறேன்...அவர் காவலுக்கு ஏற்பாடு செய்திருக்கலாம்... சரி! நீங்கள் எப்படி நுழைந்து வந்தீர்கள் ...?

இராச: என்னஇருந்தாலும் இராசகுமாரன் அல்லவா? எனக்குத் தான் அனுமதி உண்டே...!

சக்கர: இல்லாவிட்டால் நீங்கள் சக்கரவர்த்திக்கு எதிராக இவ்வளவு சூழ்ச்சி செய்ய முடியுமா...? சாதாரண ஆள் யாராவது செய்தால் தலை உருண்டிருக்-குமே....

இராச: யார் இது ...? பார்க்கவே பயங்கரமாய்...?

அருள்: ஓ...! அறிமுகப்படுத்த வில்லையா? இவர் கலிங்க வேந்தர் அனுப்பிய புதிய தூதுவர் ... பெயர் சக்கரயுத்தன்

இராச: சக்கரயுத்தன்... ... பெயர் வேடிக்கையாக இருக்கிறதே ...

சக்கர: கையில் சக்கரமும் யுத்தத்தில் திறமையும் இருப்பதால் அந்தப் பெயர்......

இராச: ஓ ...... புனை பெயரா ?

சக்கர: வடிவமே புனை வடிவம் தானே! தேவியைச் சந்திப்பதற்காகப் போட்டது...

அருள்: சக்கரயுத்தா? தெரியுமா இவரை? சோழமன்னரின் மூத்த புதல்வர்...

சக்கர: நினைத்தேன் ... உறுதியாகி விட்டது. ......

இராச: அது எப்படி ... ?

சக்கர: அனந்தவர்மர் எல்லாம் சொல்லியிருக்கிறார்.... நீங்கள் நம் ஆள் தான் என்று ...

இராச: ஓ ...! என்னுடைய புகழ் அவ்வளவு தொலைவு பரவியிருக்கிறதா ...?

சக்கர: ஆமாம்! போரில் வெற்றி கிடைத்து விட்டால் சோழப் பேரரசுக்கு நீங்கள் தானே ...

இராச: நான்தான் ... நானே தான்

அருள்: சரி! இது கருணாகரர் வரும் நேரம்...... இருவரும் மறைந்திருந்தால் நல்லது ......
[கருணாகரன் வருகிறான்]

கரு: இளைய தேவியார் அழைத்த காரணம் ......

அருள்: ஏன் இத்தனை கடுகடுப்பு?என்னைச் சந்திப்பது பிடிக்கவில்லையா?

கரு: சக்கரவர்த்தி கட்டளையிட்டார்; அமைச்சர் காலதேவரும் தலையசைத்தார். அதனால் வந்தேன். இல்லாவிட்டால் ஏன் வரப் போகிறேன் ...?

அருள்: உங்களைப் பார்த்தால் ஒரு சோழ மாதேவி-யை மதித்து வந்த படைத்தலைவராகத் தெரிய-வில்லை ...

கரு: வீரனுக்குரிய வீரத்தோற்றம் இது. இதை வேறு வகையாக எடுத்துக்கொண்டால் அது என் குற்ற-மாகாது ...

அருள்: எது வீரத்தன்மை? கோழை போல் கலிங்கம் சென்று கோட்டையைக் கட்டி வைத்து, வழிமுறை களைத் தெரிந்து கொண்டு தப்பித்து வருவதுதான் வீரமோ? நான் உங்களை ஒரு வீரராக மதிக்க மாட்டேன்

கரு: (சினத்துடன்) தேவி!

அருள்: இனி உங்கள் முழக்கம் என் காதுகளில் உறைக்காது. நான் இப்போது உம்முடைய பரம வைரி! ஏன்? இந்தச் சோழ குலத்துக்கே வைரி நான்! போய் வாருங்கள் ...... உங்களுடைய முடிவு என் னுடைய கைகளில்...

கரு: அந்தக் கைகளை நானும் பார்த்திருக்கிறேன். சக்கரவர்த்தியின் தேவியாகப் போய்விட்டீர்கள். இல்லாவிட்டால் சாறு வேறு, சக்கை வேருகப் பிழிந்திருப்பேன்......பார்க்கிறேன்.
(போகிருன்)

(மறைந்திருந்த இருவரும் வெளியே வருகின்றனர்)

இராச: அப்பப்பா! என்ன வேகமாகப் பேசுகிருன்! கருணுகரன் பேச்சைக் கேட்ட போது என்உடம்-பெல்லாம் நடுங்கி விட்டது . ..., 

அருள்: என் முடிவைக் கருணுகரரால் கணித்து விட முடியுமா ... என்ன ...?

சக்கர: நான் இருக்கிறேன் தேவி ...?

அருள்: எதற்கு? எனக்கு முடிவு கட்டவா ...?

சக்கர; சே! சே! உங்களுக்குத் துணைசெய்வதற்கு...!

இராச: இப்படிப் பேசத்தான் கருணாகரனைக் கூப்பிட்டீர்களா?

அருள்: நான் அழைத்தது கார்க்கோடகனைப் பற்றித் தெரிந்து கொள்ள! சக்கரயுத்தன் வந்திருக்காவிட்டால் கேட்டிருப்பேன்... அதனால் பேச்சை வேறு திசையில் திருப்பலாம் என்று நினைத்தேன். அது இப்படி முடிந்து விட்டது...

சக்கர: என்னைக் கூப்பிட்டிருந்தால் உடனே தொலைத்துக் கட்டியிருப்பேன். நல்ல வாய்ப்பு...

அருள்; சரி...! இருக்கட்டும். இன்னும் மூன்றுநாட்களில் காஞ்சியில் மண்ணுமங்கலத் திருநாள் நடக்கப் போகிறது... அதில் கலிங்கப்போர் எப்போது என்று முடிவாகி விடும். அங்கு கவனித்து விடுவோம்.

[திரை]

## காட்சி 40

களம்: அரண்மனைக்கூடம். காலம்: பகல்.

உறுப்பினர்: அனந்தவர்மன்-எங்கராயர்.

எங்க: அரசே! பதினைந்து நாட்களுக்கு முன்பே சோழருக்குத் திறை செலுத்தும்படி நமக்கு ஓலை வந்து விட்டது... சோழரின் மண்ணுமங்கலத் திருநாளுக்கு இன்னும் இரண்டு நாள்தான் இருக்கிறது... உங்கள் முடிவு...?

அனந்: முடிவென்ன? போன ஆண்டைப் போல் புறக்கணித்து விட வேண்டியது தான்.

எங்க: போன ஆண்டு புறக்கணித்தோம். ஆனால் அருள் மொழி திறைப்பொருளாகப் போய், போர் வராமல் தடுத்து விட்டாள், அரண்மனையில் இடம் பிடிக்க நினைத்து, நமக்காகத் திறைப் பொருள்

போல் திட்டம் போட்டுப் புகுந்து, கடைசியில் ஏமாந்து போய் விட்டாள். மானுக்கு விரித்தவலை-யில் தானே விழுந்து விட்டாள், பாவம்...!

அனந்: பாவம், என்ன பாவம்! அவள் தலைவிதி ... பேசாமல் என்னையே கட்டிக் கொண்டிருந்தால் கலிங்கத்தின் பட்டத்தரசி ஆகியிருக்கலாம்!

எங்க: வாழ்க்கையைப் பொறுத்த வரையில் ஒற்றை மாட்டு வண்டிதான் ஒழுங்கு. மேலும் மீசை நரைத்து விட்ட பின்பும் அருள்மொழி மேல் உங்களுக்கு ஆசை பிறப்பது ...

அனந்: ஏன்? எனக்கென்ன குறைச்சல்? இன்றைக்கும் வாள் எடுத்துப் போரிட்டால் எத்தனையோ தலை-களைச் சீவி எறியும் வீரம் இருக்கிறது ......

எங்க: அந்தத் துணிச்சல் இருப்பதனால்தான் இப்-படிப் பேசுகிறீர்கள்; போகட்டும். திறைப்பொருள் அனுப்புவதா ... என்ன? சொல்லுங்கள் ...

அனந்: இல்லை! இந்த முறை இரண்டில் ஒன்று பார்த்து விட வேண்டியது தான்.

எங்க: அமைச்சரின் அறிவுரையை நீங்கள் தட்டக்-கூடாது...ஒழுங்காகத் திறை செலுத்திவிட்டு, உரிய நாட்டை ஆண்டு, மக்களுக்கு உண்மையான தொண்டு செய்வதுதான் நன்மையாகும்.

அனந்: இல்லை அமைச்சரே! தனிமனிதன் ஒருவனுக்கு அடிமை செய்ய இனி முடியாது. குலோத்துங்கனுக்கு மட்டும் இரண்டு கொம்போ...

எங்க: அரசே! சோழப் பேரரசு வலிமை வாய்ந்தது நாமும் நம் வலிமை, நம் துணைவருடைய வலிமை, மாற்றானின் வலிமை எல்லாம் சீர்தூக்கிப் பார்த்துச் செயலில் இறங்குவதுதான் விவேகம். இப்போது நீங்கள் பேசுவது.. வேகம்.,. வேகம் எப்போதுமே நல்லதல்ல அரசே....!

அனங்: அமைச்சரே! இப்போது நமக்குப் போதுமான வலிமை இருக்கிறது. , . பராக்கிரம பாண்டியர், காலிங்கராயர் எல்லோரும் துணை. மேலும் சாளுக்கியர், அவர் தளபதி தாமயன் இவர்களும்உண்டு. . .

எங்க: ஆனல், அங்கே கருணகரன் உண்டு. போர் நடந்தால் நேரே வடகுடக்கு வாயிலுக்கு வந்து இடிப்பான்.

அனங்: கருணகரனை அருள்மொழி தொலைத்து விடுவாள். அல்லது தடுத்து விடுவாள். அவள் முழுமூச்சாக நமக்காகத்தான் பாடுபடுகிருள். . . அதனல்தான் சொல்லுகிறேன்.; திறைப்பொருளை அனுப்ப வேண்டா. போர் தொடங்கட்டும். ....... அந்தப் புலியைக் குத்திப் பாம்புப்புற்றிலே போட்டு விடுகிறேன்.

எங்க: சரி! உங்கள் விருப்பம் ........ இறைவா! எல்லாம் உன் செயல் . . . . நன்றே செய்வாய்; தீது செய்வாய்; நானே இதற்கு நாயகமே! ......

[திரை]

## காட்சி 41

களம்: சோழ அரசவை — காலம் : காலை

உறுப்பினர்: குலோத்துங்கன்- காலதேவன்- கருணகரன் விக்கிரமன்-அருள்மொழி

[இசைக் கலைஞர்களின் இசைக்கேற்ப நடனமாது ஒருத்தி நடனமாடுகிருள். நடனம் முடிந்த பின்பு காலதேவர் எழுகிருர்.]

கால: பெருங்குடி மக்களே! ...... கடந்த ஆண்டு பல முக்கியமான நிகழ்ச்சிகளை நிலைநிறுத்திவிட்டுப் போன மண்ணு மங்கலம் மீண்டும் வந்திருக்கிறது. இந்த

ஆண்டு நாம் எவரும் என்றும் மறக்க முடியாதபடி இனியபல கொண்டாட்டங்களை நடத்தியிருக்கிறோம். இவற்றில் இறுதியாகவும் உச்சமாகவும் இப்போது சிற்றரசர்கள் திறைசெலுத்தும் நிகழ்ச்சிஅமைகிறது.

**காவலன்:** குலோத்துங்க சோழச்சக்கரவர்த்தி திறைப் பொருள் ஏற்கிறார். [முரசு முழங்குகிறது]
[பல சிற்றரசர்கள் திறை செலுத்துகின்றனர்]

குலோ: அமைச்சரே! எல்லாச் சிற்றரசர்களும் திறை செலுத்திவிட்டார்கள் என்று நினைக்கிறேன்:

**கால:** ஆம், மன்னவா! கங்கர், கராளர்-மராடர், விராடர், மயிந்தர், சயிந்தர், சிங்களர், வங்களர், துருக்கர், குருக்கர் ஆகிய எல்லோருமே திறை செலுத்திவிட்டார்கள் ......

குலோ: செலுத்தத் தவறிய எவரேனும் உண்டா?

**கால:** ஒரே ஒருவர் உண்டு.........கலிங்கன் அனந்தவர்மன்...

குலோ: ஆ! கலிங்கன் அனந்தவர்மன்! கடந்த ஆண்டே அவன் கதை முடிந்திருக்கவேண்டும். அருள்மொழியின் உதவியால் அடுத்த ஆண்டுவரை தொடர்ந்து விட்டது.

அமைச்சரே! கலிங்கன் தலை கனத்து விட்டது... அதைக் கிள்ளி எடுக்க இதுதான் நேரம்!

படைத்தலைவரே! கடல் போன்ற நம் படையுடன் சென்று, கலிங்கத்தைத் தூளாக்கி, ஆங்கே புலிக்கொடியைப் பறக்கவிட்டு, அனந்தவர்மனைத் தேர்க்காலில் கட்டி இழுத்து வந்து என் காலடியில் போடுமாறு கட்டளையிடுகிறான் குலோத்துங்கன்...புறப்படலாம்! துணைக்குப் பராந்தக பாண்டியரும், முடிகொண்டானும் வரட்டும்.

[அருள்மொழி விக்கிரமனை நோக்க — விக்கிரமன்

மன்னரை நோக்குகிறன்—மன்னர் கருணுகரனை நோக்கி முகம் மலர்கிறர்]

மக்கள்: கலிங்கம் செல்லும் கருணுகரத் தளபதியார் வெல்க! வாழ்க!!

[திரை]

## காட்சி 42

இடம்: சோலை காலம்: மாலை

உறுப்பினர்: விக்கிரமன், அருள்மொழி, சக்கரயுத்தன்.

(விக்கிரமன் சிந்தனையுடன் அமர்ந்திருக்க-அருள்மொழி வருகிறள்)

அருள்: அதிகமான சிந்தனை உடம்பைக்கெடுக்கும், விக்கிரமா

விக்: ஓ...! நீங்களா...? (தலை கவிழ்கிறன்)

அருள்: விக்கிரமா? ஏன் என்னைப் பார்க்க வெட்கப் படுகிறய்? நான் உன்னுடைய சிற்றன்னை அல்லவா? உன் சினம் எனக்குத் தெரியும்...

என் மகனுக்குக் கிடைக்காத வாய்ப்பு ஒரு மாற்ரு னுக்குக் கிடைத்து விட்டதே என்ற மனத் துடிப்பில் தான் நானும் இங்கு வந்தேன்...

விக்: கருணுகரர் மாற்ருன் இல்லை, படைத்தலைவர் அவர். கலிங்கக் கோட்டையின் ஒவ்வொரு கல்லும் அவருக்குத் தெரியும். அதனுல்தான் தந்தை அவர்க்கு ஆணையிட்டிருக்கிருர்...

அருள்: கலிங்கக் கோட்டை மறைமுகம் எனக்கும் தெரியும். உனக்குக் கூறி அனந்தவர்மனைப் பழி வாங்கத்தான் நான் வஞ்சினம் பூண்டேன். அந்த வாய்ப்பு உனக்கு வரவில்லை...

விக்: வாய்ப்பு எனக்குத் தேவையில்லை...

அருள்: என் வயிற்றில் பிறந்த மகனாக இருந்தால் இப்படிச் சொல்வானா?

விக்: கருணாகரர் போருக்குப் போகத் தகுதி வாய்ந்தவர். மேலும் என் தாயாரின் தத்துப் பிள்ளை அவர்...

அருள்: கருணாகரனை ஓர் உத்தமன் என்று நீ நம்புகிறாயா, மகனே!......

விக்: ஆமாம், நம்புகிறேன்!

அருள்: அப்படியா? சரி! இனி என் வயிற்றில் பிறக்கும் மகன்தான் கருணாகரனையும் பழிவாங்க வேண்டும். அதற்குள் பல்லவர் கை ஓங்கிச் சோழர் கை சோர்ந்து விழுந்துவிடும்.

[அருள்மொழி அழுவது போல் பாசாங்கு செய்கிறாள்]

விக்: கருணாகரனைப் பழிவாங்கும் மனம் தங்களுக்கு ஏன் வந்தது?

அருள்: அதுவா? என் மானத்தில் விழுந்த இடி... அதுவே மனத்தின் சுமை......

விக்: (துள்ளி) என்ன? மானம் ... ...!

தங்கள் மானத்திற்கு என்ன மாசு நேர்ந்து விட்டது...? சொல்லுங்கள் . . . .

அருள்: விக்கிரமா! என் அண்ணனைக் கொன்றவன் அனந்தவர்மன் . . . . . — அவனைப் பழிவாங்கக் கருணாகரன் துணை நாடினேன் ... கருணாகரன் திட்டம் தெரிந்தும் காட்டிக் கொடுக்காமல் இருந்தேன் கடைசியில் என்னை ஏமாற்றி விட்டார். நானும் வருந்தவில்லை ..ஆனால் ... கருணாகரன் என் அந்தப் புரத்துக்கு அடிக்கடி வந்து ... நான் இளைய தேவி என்பதையும் மறந்து ... எப்படிச் சொல்வேன் ... விக்கிரமா ...? என் மானத்தை விலைக்குக் கேட்கிறார் கருணாகரன் ...

(விக்கிரமன் அதிர்ச்சியடைகிறன்)

அருள்: விக்கிரமா ...! நீதான் என் மகன் ... ...
நீ தான் என்னைக் காப்பாற்ற வேண்டும் ... ...

விக்: ஐயோ... என் தலை சுற்றுகிறதே... நான் எதை நம்புவது என்றே தெரியவில்லையே!

அருள்: அப்படியானல் இன்றிரவு முதல் சாமம் முடிந்ததும் என் அந்தப்புரத்துக்கு வா...
நீயே உன் கண்களால் பார்ப்பாய்...

விக்: அப்படியா...!...சரி...!
(இருவரும் போகின்றனர்)

சக்கர: [செடி மறைவிலிருந்து எழுந்து] கதை இப்படியா போகிறது... கவனிப்போம்...! உதவி செய்ய வேண்டியது தான்...

[திரை]

## காட்சி 43

இடம்: புதுமாளிகை காலம்: முதல் யாமப்பொழுது

உறுப்பினர்கள்: அருள்மொழி, விக்கிரமன் கருணுகரன் சக்கரயுத்தன், வீரர்கள், முடிகொண்டான்

அருள்: சக்கரயுத்தன் எப்படியும் கருணுகரனைக் கூட்டிக்கொண்டு வந்து விடுவான் . . . விக்கிரமனும் வீரர்களுடன் வந்துவிடுவான். பிறகு கருணுகரன் கதை முடிந்து விடும். ஐயோ! கலிங்கச் சுவரில் கண்ணுக்கினிய வண்ணங்களால் வரைந்த காதல் ஓவியம், இன்று அழிந்து சிதைந்து விட்டது . . . . கலிங்க நிலத்தில் தலை தூக்கிய காதல் பயிர், இன்று வாடிக் கருகி விட்டது. . . . ஊம் . . . இதுதான் கடைசிச் சந்திப்பாக இருக்கும். கருணுகரன் . . .

சக்கர: (வந்துகொண்டே) வந்து விடுவார் அம்மா!...

அருள்: சரி, நீ போ ...! இளவரசன் விக்கிரமன் வந்-

தால் மட்டும் அனுப்பு. இந்த இருவர் தவிர மன்னரே வந்தாலும் அனுமதிக்காதே!...
(சக்கரயுத்தன் வணங்கி வெளியே செல்கிருன்)
(வாயிற்கதவுகள் திறக்கின்றன. கருணுகரன் உள்ளே வருகிருன்)

அருள்: வருக, கருணுகரரே, வருக! கலிங்கம் நோக்கிச்செல்லும் படைத்தலைவர்க்கு என்னுடைய வாழ்த்தும் தேவையல்லவா? அதனுல் தான் சக்கர-யுத்தனை அனுப்பி வரவழைத்தேன்....

கருணு: ஊம்......ச க் க ர யு த் த ஞ! ... (நெற்றியைத் தடவிக் கொள்கிருன்)

அருள்: கலிங்கத்தை நினைத்ததும் தானைத்தலைவர்க்குத் தலைவலி வருகிறதோ! பயணம் போகும் போது துணிவு வரவேண்டும் தளபதியாரே!

கருணு: இளையதேவி! மதுவைக் குடித்துவிட்டு மயக்-கத்தில் பேசுகிறீர்கள் என்று நினைக்கிறேன். தளபதியிடம் தகாத முறையில் நடக்குமளவுக்கு ... மதுவெறி...

அருள்: மூடும் வாயை; மதுவாம் மது! நானே மதுதானே!

கருணு: இருக்கட்டும் . . . யாரோ சக்கரயுத்தனை அனுப்பியதாகக் கூறினீர்களே! யார் அந்தச் சக்கர யுத்தன்?

அருள்: என்னுடைய புதிய ஆள்!

கருணு: அப்படியா? அவனை நான் பார்க்க வேண்டுமே! அவன் அழைத்திருந்தால் நான் வந்திருக்கவே மாட்டேன்!

அருள்: அவன் அழைக்கவில்லையா?

கருணு: இல்லை, மன்னர் கட்டளையிட்டார். அதனுல் மதியார்தம் வாசலையும் மதித்து, நான் மிதிக்க வேண்டி வந்தது.

அருள்: (கை தட்டி)...சக்கரயுத்தா!

சக்கர: (வந்து கொண்டே) அம்மா! கூப்பிட்டீர்களா? மேயப்போன கிளி கூட்டுக்கு வந்து விட்டது.

அருள்: அது கிடக்கட்டும்...இவரை நீ தானே அழைத்துக் கொண்டு வந்தாய்?

சக்கர: நான்தான் ...இல்லை...சக்கரவர்த்தி ... இல்லை, நான்தான்; நான்தான்.

கருணு: என்னடா? தன்னை மீறி உளறுகிறாய்?

சக்கர: யார் தன்னை மீறுபவன்? நீ தான் கலிங்கம் வந்து காரியத்தைச் சாதித்து விட்டு, இப்போது எங்கள் தேவியின் கற்பையும் சூறையாடப் பார்க்-கிறாய்!

கருணு: என்ன சொன்னாய்? (வாளை உருவுகிறான். இருவருக்கும் வாட்போர் நிகழ்கிறது)

விக்: (வந்து கொண்டே) தளபதியாரே! உம்முடைய உண்மையான உருவம் இப்போது வெளிப்பட்டு விட்டது . . . வாளை உறையில் போடுங்கள். (கை தட்டுகிறான். வீரர்கள் வருகின்றனர்) ஊம் சிறை செய்யுங்கள் . . .

கருணு: இளவரசே! உண்மை தெரியாமல்

விக்: போதும். பேசாதீர்கள் ஊம். நடக்கட்டும்

(கருணாகரனைச் சிறைப்படுத்தி அழைத்துச் செல்லு-கின்றனர். அருள்மொழி முகத்தை மூடிக் கொள்-கிறாள்)

சக்கர: தேவி! தந்திரமாக வேலையை நடத்திவிட்டேன் பார்த்தீர்களா? கருணாகரனைச் சிறையில் தள்ளிவிட வேண்டுமென்று நினைத்தீர்கள்! அதை நிறைவேற்றி விட்டேன் நான்...

அருள்: பாராட்ட வேண்டியதுதான்...அதுசரி! நான் ஒரு கேள்வி கேட்கிறேன்...விடை சொல்...

சக்கர: தேவி! உங்கள் தொண்டன் நான். நீங்கள் நினைத்ததை எல்லாம் நிறைவேற்றுவதுதானே என் கடமை. கேளுங்கள்.

அருள்: கருணாகரரை நீதானே அழைத்து வந்தாய்...?

சக்கர நான் தான்; நானே தான்.

அருள்: சக்கரவர்த்தியின் கட்டளையால்தான் தான் வந்ததாகக் கருணாகரர் சொன்னாரே...

சக்கர: . . ... ... ... ... ...!

அருள்: என்ன பேச்சில்லை ...?

சக்கர: தேவி, வந்து, ... ...

அருள்: (கத்தியை எடுத்துக் கொண்டு) உண்மை-யைச் சொல்... இப்போது உன் மீதே நான் ஐயப் படுகிறேன்...ஊம்... நடந்ததென்ன?

சக்கர: இரண்டுமே உண்மைதான் தேவி.

அருள்: என்ன உளறுகிறாய் ...சக்கரயுத்தன் கூட்டி வந்தானா? சக்கரவர்த்தி கட்டளையிட்டாரா?...

சக்கர: சக்கரவர்த்தி, சக்கரயுத்தன் இரண்டிலுமே 'சக்கர' இருக்கிறது...

அருள்: (அவனைப் பிடித்துக் கொண்டு) ஊம்...சொல். உண்மையை......

சக்கர: சொல்கிறேன்......(குலோத்துங்கன் தன் புனை வடிவத்தைக் கலைகிறான்)

அருள் : ஆ!......நீங்களா!....(அதிர்ச்சியடைந்து விழுகிறாள்)

குலோ: உம்....உம். . . .அருள்மொழி! உன் நாடகம் அம்பலமாகி விட்டதே என்று அதிர்ச்சியா. . . . .! (அருகில் சென்று) அருள்மொழி...! அருள்மொழி... (மூச்சைத் தொட்டுப் பார்க்கிறான்)... ஆ... (அழுகை-யோடு கூடிய அதிர்ச்சி அடைந்து) ஊம் உன்

கதை முடிந்து விட்டது ... ... ... ... கருணுகரனைக் காதலித்தாய் · · அரும்பிய அந்தக் காதல் மலராமலேயே செய்து விட்டேன் · · · கருணுகரனை எப்படியும் அடைந்து விடலாம் என்று சோழநாட்டில் கால் வைத்தாய் · · · · · உன் திட்டத்தையே உடைத்து உருக்குலைத்து விட்டேன் நான். எல்லா வகையிலும் ஏமாந்து போய் விட்டாய் நீ · · வாழ வேண்டியவள் நீ ! என்றாலும் சோழநாட்டின் நன்மைக்காக நான் உனக்குத் தடையாக நின்றேன் · · என்னை மன்னித்து விடு அருள் மொழி · · மன்னித்து விடு. (இந்நேரம் முடிகொண்டான் வருகிறுன்)

முடி: அரசே !

குலோ: உண்மை தெரிந்த அதிர்ச்சியில் உலகை விட்டே போய் விட்டாள் அருள்மொழி. முடிகொண்டவா! இவளை அடக்கம் செய்து விடு. வேறு யாருக்கும் தெரியக் கூடாது · · போ . .

(திரை)

## காட்சி 44

களம்: புதுமாளிகை: காலம்: காலை,

உறுப்பினர்: குலோத்துங்கர், விக்கிரமன், முடிகொண்டான், பராந்தகர்

(குலோத்துங்கர் அமைதியாக இருக்க- விக்கிரமன் போருடை அணிந்து கொண்டிருக்க- படை வீரர்கள் குழுமி நிற்கின்றனர்)

முடி: வேந்தே! நம் தளபதி யல்லவா. கலிங்கத்துக்கு · · ·

குலோ: ஊம் · · ·

முடி: சக்கரவர்த்தி! நேரமாகிறது · · · நம் தளபதி கருணுகரரைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை. இளவரசர் போருக்குப் புறப்படுவதைக் கண்டால் ஏதோ

தவறு நடந்திருக்கிறது போல் தெரிகிறது. மேலும் அமைச்சர் பெருமானையும் இந்த நேரத்தில் காணும் ''காரணத்தைத் தெரிவித்தால், உடன் ஆக-வேண்டியதைக் கவனிக்கலாம்.

விக்: முடிகொண்டவா ... உன் வேலையைப் போய்ப் பார்''

குலோ: முடி கொண்டவா! கருணாகரனை இரவி-லிருந்தே காணவில்லை. ஒரு வேளை எதிரிகளிடம் சேர்ந்து கொண்டிருப்பாரோ ...

முடி: காலைக்கதிரவன் மேற்குத் திசையில் தோன்றி-னாலும் தோன்றலாம்; கருணாகரர் மனம் களங்கம் அடையவே அடையாது ......

விக்: சாதாரண ஒற்றன் நீ; உனக்குக் கருணாகரனைப் பற்றி முற்றிலும் தெரியாது. அருள் மொழிதேவிக்கும், கருணாகரனுக்கும் இடையில் ஒரு பூசல் நடந்தது .. தெரியுமா உனக்கு ... ?

குலோ: இன்றென்று என்னவென்றால், கருணாகரன் காணாமல் போன அந்தநேரம் முதல் அருள் மொழி-யையும் காணவில்லை ... ஒருவேளை ... சே, சே'!... நினைக்கவே கசக்கிறது ... ...

விக்: தந்தையே... இந்த நல்ல நேரத்தில் எதற்கு இதெல்லாம்... நான் புறப்பட வேண்டும் ... அதற்-கானதைச் சொல்லுங்கள் ... ...

முடி: சக்கரவர்த்தி! அப்படியென்றால் இளவரசர் படைக்குத் தலைமை தாங்குகிறாரா?

குலோ: ஆமாம்! நான் தான் ஏற்பாடு செய்தேன் ...

விக்: அப்படி யென்றால் போர் முரசு முழங்கலாமே! நேரம் ஆகிறதே!

குலோ: ஓ!... அப்படியென்றால் போர் முரசம் முழங்-கட்டும் ...படைகள் அணிவகுக்கட்டும். [முரசொலிக் கிறது]

[வீரன் ஒருவன் வந்து விக்கிரமன் காதில் ஏதோ சொல்லுகிருன்]

விக்: அப்படியா? எந்த இடத்தில்?

வீரன்: பாலாற்றங் கரைக்குப்பக்கம் உள்ள சோலையில்!

விக்: சரி! நீபோ! [அவன் போகிருன்] முடிகொண்-டவா படைகள் புறப்படட்டும். எல்லாரும் சென்று தென்பெண்ணை ஆற்றங்கரையில் தங்குங்கள். நான் வந்து சேர்ந்து கொள்கிறேன். தந்தையே! படை-களுக்கு ஆனதைச் சொல்லி அனுப்புங்கள். நான் கொஞ்ச நேரத்தில் திரும்பி வந்து தங்களிடம் விடை பெற்றுக் கொள்கிறேன். [போய்த் திரும்பி] முடி கொண்டவா! நான் வரும் வரை தென்பெண்ணையை விட்டு யாரும் அசையக்கூடாது. ...... [போகிருன்]

முடி: வேந்தே! புறப்படட்டுமா?

குலோ: முடிகொண்டவா!நீ நினைத்தபடியே நடக்கும்; போய்வா!

முடி: படைகளுக்கு ..

குலோ: ஊம்! சோழ நாட்டின் சோறு தின்று, தூய வீரம் கொண்ட துடிப்புள்ளவர்களே! ஆணவம் மிக்க அனந்தவர்மனின் படைகளோடு மோதப்போ-கிறீர்கள். தினவெடுக்கும் உங்கள் தோள்களுக்குத் தீனி கிடைக்கப் போகிறது.

அனந்தவர்மன் தலையைக் கிள்ளி வாருங்கள்; சோழநாட்டுக்கு வெற்றியையும் புகழையும் அள்ளி வாருங்கள்.

[முரசு முழங்குகிறது - முடிகொண்டான் வணங்கி விடைபெறுகிருன்]

[திரை]

## காட்சி 45

இடம்: சோலை காலம்: பகல்

உறுப்பினர்: காலதேவர், இளவேணி, விக்கிரமன்

(இளவேணி நிற்கிருள். விக்கிரமன் வருகிருன்)

விக்: இளவேணி!

இள: இளவரசே! (அவன் மார்பில் கண்ணீரோடு, கதறிக் கொண்டு சாய்கிருள்)

விக்: இளவேணி! என்ன நடந்து விட்டது? ஏன் கதறுகிருய்?

இள: ஒன்றுமில்லை...

விக்: இரவு உன்னுடைய வீட்டுக்கு ஓடோடி வந்தேன். ஆனுல் உன்னைப் பார்க்க முடியவில்லை. புவியாளும் மன்னர்களின் புதல்வர்கள் போர்முனைக்குப் போவதில் புதுமை ஒன்றுமில்லையே! விக்கிரமனின் பட்டத்தரசியாகப் போகும் நீ, வீணே கலங்கலாமா? வேரோடு பகை களையப் போர் மேவிச் செல்லும் எனக்கு, வேல் கொடுத்து, விடை கொடுத்து அனுப்ப வேண்டியதல்லவா உன்கடமை!

இள: இளவரசே! நானும் அரச குடும்பத்தைச் சேர்ந்தவள்தான். எனக்கும் போர்முகத்தின் போக்குத் தெரியும்.

விக்: என்ன! அரச குலத்தில் தோன்றியவளா? அப்படியானுல் நான் கொடுத்து வைத்தவன்தான்...

இள: அது மட்டுமல்ல இளவரசே! நான் குலோத்துங்க சக்கரவர்த்தியே ஒப்புக்கொண்ட சோழர்குல மருமகள்!

விக்: இளவேணி. என்ன புதிர் போடுகிருய்? நான் நம் உறவை அவரிடம் சொல்லி உறுதி செய்யும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். நீ அதற்குள் அவரே ஒப்புக் கொண்டார் என்கிருய்!

இள: எல்லாமே உங்களுக்குப் புதுமைதான். சிறு-குற்றமும் செய்யாத தளபதியைச் சிறையிலடைத்து விட்டுக் கலிங்கம் நோக்கிச் செல்வது கூடப் புதுமைதான்.

விக்: இளவேணி; என்னை வழியனுப்ப வந்தாயா? அல்லது வழி மறிக்க வந்தாயா? உன்னை என்-றுல் புரிந்து கொள்ள முடியவில்லை...

இள: நீங்கள் யாரைத்தான் புரிந்து கொண்டீர்கள்... இளைய தேவி அருள்மொழியார் நடத்திய நாடகத்தையே புரிந்துகொள்ளமுடியாத நீங்கள்...

விக்: இளவேணி! என்னைக்கொல்லாதே!

இள: எதையுமே சொல்லாதே என்று சொல்-லுங்கள் ... போய்விடுகிறேன்...

விக்: இப்போது என்னதான் சொல்ல விரும்புகிருய்...?

இள: அருள்மொழி தேவி நடத்திய நாடகத்தை நம்பித் தளபதி கருணுகரரைச் சிறையிலடைத்தது ஏன்? அருள்மொழி தேவியார் உண்மையானவர் என்ருல் இப்போது அவர் எங்கே?

விக்: ஆமாம், அவர் எங்கே? (குழம்புகிருன்)

இள: இனித் தேடிப் பயனில்லை. எப்படி உங்கள் ஆட்சியோடு இந்தச் சோழ ஆட்சி முடிந்து போகு-மாறு சாசனம் எழுதி அது கலிங்கம் போய்விட்ட-தோ, அப்படியே அருள்மொழி தேவியும் கலிங்கம் போய்விட்டார்.

விக்: ஐயோ! எனக்கு ஒரே குழப்பமாக இருக் கிறதே ...!

இள: குழப்பம் வேண்டா; கலிங்கம் போகும் நீங்கள் சாசனத்தையும் கைப்பற்றி வாருங்கள் ... போதும்.

விக்: இளவேணி! எனக்கே புரியாத மறைமுகங்கள் உனக்கெப்படித் தெரியும் ...?

இள: தளபதி கருணுகரனின் தங்கைக்கு இதுகூடவா தெரியாது?

விக்: [அதிர்ச்சியுடன்] தளபதி ... கருணுகரரின் தங்கையா ...? நீ நம் அமைச்சர் காலதேவர் ...

கால: [மறைவிலிருந்து வெளிவந்து] வளர்த்த பெண்தானே என்று கற்பனை செய்து கொண்டிருந்தாய் ... கருணுகரனும், காலிங்கராயனும், இளவேணியும் நான் வளர்த்த பிள்ளைகள்தான் என்பதை இதுவரை நீ புரிந்து கொள்ளவில்லை ...

விக்: ஐயா, இந்தச் செய்தியை என்னிடம் முன்பே சொல்லியிருக்கக் கூடாதா ... நான் அவ்வளவு சிறுமை படைத்தவனு?

கால: பெருமை படைத்தவன் நீ...ஆனுல் பொறுமையோடு எண்ணிப் பார்க்கத் தெரியாதவன் ... கண்ணுல் கண்டதும் காதால் கேட்பதும் உண்மைகள் தான் என்று நம்பி விடுகிருய்...அவற்றுக்குப் பின்னுல் சூழ்ச்சிகள் நடமாடுவதைப் புரிந்து கொள்வதில்லை நீ ...

கலிங்கத்தில் நேர்ந்த காதல் தோல்விக்காகச் சோழ நாட்டில் வந்து சூதுகள் செய்து கொண்டிருந்த அருள்மொழி தேவியின் மீது உனக்கு ஏற்பட்ட நம்பிக்கை, சோழ நாட்டுக்காகத் தன் உயிரையும் கொடுக்கப் போராடும் கருணுகரன் மீது ஏற்படவில்லை.

கலிங்கத்தில் கோட்டை கட்டும்போது கருணுகரன் சிறிது ஐயப்படும்படி நடந்து கொண்டிருந்தாலும் அன்றே அவன் உயிர் போயிருக்கும். அதை அவன் பொருட்படுத்தவில்லை.

சாசனம் கலிங்கம் போகக் கூடாதே என்று கார்க் கோடகனேடு சண்டையிட்டவன் கருணுகரன் ... இருந்தும் கைமாறி விட்டது ......

விக்: போதும் ஐயா! போதும்!

கால: விக்கிரமா! கருணாகரன் எக்கேடாவது கெடட்டும். ஆனால் கலிங்கத்தில் கால் வைக்கும் போது அவன் மீது கசப்புணர்ச்சி இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் இவ்வளவும் கூறினேன். ...... சரி! நீ புறப்படு ...

விக்: என்னை மன்னித்து விடுங்கள் ஐயா! இந்தக் கைகளால்தான் கருணாகரனைச் சிறைப்படுத்தினேன் ...

கால: அந்தக் கைகளோடு கருணாகரனை ஒரு முறை தொட்டு விடை பெற்றுக் கொண்டால் போதும். அதோடு கலிங்கக் கோட்டை மறைமுகங்களையும் அவனிடமிருந்து தெரிந்து கொள்வதும் வெற்றியை விரைந்து தர வாய்ப்பாக இருக்கும்.

விக்: இல்லை ஐயா! இனிக் கலிங்கப் போருக்குத் தலைமை தாங்கும் அருகதை எனக்கில்லை. கருணாகரரே கலிங்கத்தை அளந்தவர். அவரே போகட்டும்!

கால: விக்கிரமா ...!

விக்: உண்மைதான் ஐயா, என் உள்ளம் தெளிந்து விட்டது.

கால: சரி, நீயேபோய்க் கருணாகரனை விடுதலைசெய்து போருக்கு அனுப்பு.

விக்: என்றால் இனிஅவரைச் சிறையில் சந்திக்கமுடியாது... தளபதி உடையில்தான் பார்ப்பேன்... நீங்களே விடுதலை செய்யுங்கள்.

(காலதேவர் அவனைத் தட்டிக் கொடுத்து விட்டுச் செல்கிறார்)

விக்: இளவேணி! (இருவரும் தழுவிக் கொள்ளுகின்றனர்.)

விக்: இளவேணி! நம்மைச் சுற்றிப் படர்ந்திருந்த

திரைகள் அனைத்தும் விலகின. இனி, நாம் எந்த உலகத்துக்கும் போகலாம். கட்டுப்பாடின்றிப் பறக்கலாம். காற்றைப் போன்று உலவலாம். வா! போவோம்.

இள: நீங்கள் போய்க் கொண்டே இருங்கள்... நான் வீட்டுக்குப் போய்விட்டு ஒரு நொடியில் ஓடோடி வந்து விடுகிறேன்...

(இருவரும் பிரிகின்றனர்... போய்த் திரும்பி இருவரும் பார்த்துக்கொண்டே மீண்டும் பிரிகின்றனர்.)

[திரை]

## காட்சி 46

களம்: இளவேணி வீடு காலம்: பிற்பகல்

உறுப்பினர்: பராக்கிரமன்— இளவேணி

பரா: (கதவு சாத்தப்பட்டுள்ளது - கதவைத் தட்டி) ஐயோ இளவேணி! உன் அண்ணனுக்கு ஆபத்து.

இள: யார் நீ... ...?

பரா: நான் காலிங்கராயரின் நண்பன். இதோ உன் அண்ணனை என் ஆட்கள் தூக்கிவந்திருக்கிறார்கள். (வெளியில் இருப்பவர்களிடம் பேசுவது போல) மெதுவாக இறக்கி வையுங்கள்... ... மெதுவா ... மெதுவா... கதவைத் திற இளவேணி!

(கதவு திறக்க அவன் உள்ளே புகுந்து கதவைத் தாழிடுகிறான்) சிந்திக்க இது நேரமில்லை. உடனே புறப்படு.

இள: உன்னுடைய சலசலப்புக்கு அஞ்சமாட்டேன்... எதற்காக வந்தாய்?

பரா: இளவேணி! உன்னை உன் அண்ணன் காலிங்கராயர் உடனே கூட்டிவரச் சொன்னார். விக்கிரமனை நீ மணப்பது அவருக்குப் பிடிக்கவில்லையாம். நீ

பாண்டிய நாட்டின் பட்டத்தரசி ஆகப் போகிறாய்...

இள: என்ன உளறுகிறாய்?

பரா: இளவேணி! சங்கம் வைத்து மொழி வளர்த்த சான்றோர் எம் முன்னோர். அதில் சக்கரவர்த்தியாகப் போகும் எனக்குச் சரியான துணை நீதான்... புறப்படு.

இள: தமிழ்மரபு அறிந்து பண்பாட்டை வளர்த்தவர்கள் பாண்டியர்கள். அந்த மரபுக்குக் களங்கம் வராமல் உடனே இந்த இடத்தை விட்டுப் போய் விடுவாய் என்று நினைக்கிறேன்.

பரா: (சிரிப்புடன்) இளவேணி! தீர்மானத்தோடுதான் வந்திருக்கிறேன். நீ ஒப்புக் கொண்டால் செல்வாக்காக என்னோடு வாழலாம். மறுத்தால்......விளக்கு அணைந்து விடும்... மலர் உதிர்ந்துவிடும்...மாளிகை மண்மேடாகி விடும்...

விக்கிரமனைப் பழிவாங்க இதுவே நேரம்...... என்ன சொல்கிறாய்?

இள: தீயவனே! என் அண்ணனுக்குத் தெரிந்தால் உன்னை...

பரா: அண்ணன்! அவன் பல்லவப் பித்தம் ஏறி உள்நாட்டுப் போருக்குப் புறப்பட்டுக் கொண்டிருப்பான்...உம்! வா! வந்துவிடு.

இள: அக்கிரமா! இளவேணி சோழ தளபதியின் தங்கை!

பரா: (கையை நீட்டிக் கொண்டே முன்னே சென்று) இனி, எனக்குரிய மங்கை.

இள: சீ, மூடு வாயை...

பரா: என்ன சொன்னாய்...? அகம்பாவம் பிடித்த சிறுமியே! உன்னைத் தீண்டாமல் திரும்பாது இந்தப் பாம்பு...

(அவனுக்கும் அவளுக்கும் சிறிதுநேரம் போராட்டம்......... இறுதியில் அருகில் மாட்டி வைக்கப்பட்டிருந்த வாளை அவள் உருவிக்கொள்ள அவனும் வாளை வீசுகிருன்...... வாள்நுனி இளவேணியின் மார்பில் பட்டு அவள் கீழே சாய்கிருள்...... பராக்கிரமன் ஓடிவிடுகிருன்......)

[திரை]

## காட்சி 47

**களம்:** இளவேணி வீடு **காலம்:** பிற்பகல்

**உறுப்பினர்:** இளவேணி-காலிங்கராயர்

**காலி:** (உள்ளே நுழைந்து கொண்டே) இளவேணி! இளவேணி? (திடுமென இளவேணி முனகிக் கொண்டிருப்பதைப் பார்த்து) இளவேணி! என்னம்மா? என்ன நடந்ததம்மா?

**இள:** (புலம்பலுடன்) உங்களுடைய எதிர்கால வெற்றிகளை இருந்து பார்க்க முடியாமல்...... இடையிலேயே போகிறேன்...

**காலி:** இளவேணி! யாரம்மா உனக்குக் கொடுமை செய்தது...? எறும்பை மிதித்து விட்டால் கூடப் பொறுக்க முடியாத இரக்க மனமம்மா உனக்கு... என்ன நடந்ததம்மா? என்ன நடந்தது?

**இள:** நீங்கள் பசு என்று நம்பிய பராக்கிரம பாண்டியன்... என்னை... உங்கள் தங்கையை...

**காலி:** ஐயோ! தீண்டி விட்டாஞ உன்னை... தீய்ந்து விட்டதா உன் பெருமை!

**இள:** இல்லையண்ணு! உங்கள் தங்கையை எந்த மாசும் அணுக முடியாது... அந்த வெறியன்... உங்களையெல்லாம் ஒழிக்க நினைத்து என்னைப் பெண்டாள முயன்ருன்... அவனுடைய வெறிக்குப் பலி-

யாகாமல்... வாளுக்கு இரையாகி விட்டேன்... அண்ணு!

காலி: இளவேணி! உன்னை நான் காப்பாற்றுவேன் அம்மா!

இள: இல்லையண்ணு! உயிரைக் கையால் பிடித்துக் கொண்டிருக்கிறேன்... சின்ன அண்ணன்... இளவரசர்...இளவரசர்...சொல்லுங்கள்... (தலை சாய்கிருள்)

காலி: இளவேணி...ஆ... (அலறிச் சாய்தல்)

(பின்னணிப் பாடல்)

[எடுப்பு]

**ஆழ்கடலில் சென்றகலம் அடித்தளத்தில் மூழ்குதடா**
**அண்ணன் முகம்மறந்து அரும்பொன்று தூங்குதடா**
**வண்ணக் கனவெல்லாம் மயங்கிச் சிதைந்ததடா...**
**கண்ணைக் குளமாக்கிக் காதவழி சென்றதடா...**

(தொடுப்பு—கண்ணி 1)

**காஞ்சிதனை ஆள்வதற்கே சோழ நாட்டின்**
**காவலனைப் பகை கொண்டாய்; கண்டதென்ன?**

காலி: கண்டதென்ன? மாண்ட பல்லவத்தை மீண்டும் உருவாக்கி, ஆண்டுவிட வேண்டும் என்று துடித்தேன். உறவு பூண்டிருந்த சோழநாட்டின் படைத் தலைவர் பதவியையும் உதறித் தள்ளினேன்.

மதிப்புக் கொடுத்துப் பட்டம் வழங்கிய மன்னவனைப் பகைத்துக் கொண்டேன்.

பார்ப்பவர்கள் பழிக்கும்படி நடந்து கொண்டேன். காடு மலைகளில் திரிந்து, பசியும் உறக்கமும் மறந்து கடமை வெறியென்று அலைந்தேன். இன்று கண்டதென்ன? கண்டதென்ன?

(தொடுப்பு—கண்ணி 2)

**கண்ணிமைபோல் தளபதிகள் இருவர்; தங்கை**
**கருகி விட்டாள்; காப்பாற்றும் கடமை எங்கே?**

காலி! வாட்போர் புரிவதில் வல்லவர்கள்;
வஞ்சம் அறியா நல்லவர்கள்

அன்புக்குப் போட்டியிடும் அண்ணன் இருவர்;

அரசவையில் தளபதிகள் என்று எண்ணியிருந்தாள் தங்கை! கருணாகரா! நாட்டைக் காக்கப் புறப்பட்டவனே! நங்கை முடிவைப் பாரடா...! எங்கே நம் தங்கை? எங்கே இளவேணி? ஊறி வந்த தேனூறு உலர்ந்தது; ஒளிவிளக்கு அணைந்தது; ஓடை மலர் உதிர்ந்தது...... போய்விட்டாளடா...... தங்கை...... நம்மை விட்டுப் போய் விட்டாளடா.

(தொடுப்பு—கண்ணி 3)

பாண்டியனே பாம்பானான்; தீண்டி விட்டான்
பழி முடிக்கப் புறப்படுவாய் தங்கைக்காக...!

காலி: ஆ! பராக்கிரமன் ... பசுத்தோல் போர்த்திய புலி இன்று பாம்பாய் உருவெடுத்தது.

நல்லவன் போல் நடித்து என்னையே நாசமாக்கி விட்ட பராக்கிரமா! பாண்டியர் கலகம் ஒடுக்கிய போது என்னால் உதைபட்டுப் பல்லிழந்து ஓடிய பாண்டியப் பதரே! பழிவாங்கி விட்டாயா என்னை? என் தங்கையின் வாழ்வைப் பறித்து விட்டாயா பராக்கிரமா?

எனக்கு வேண்டும்; ஆத்திரத்தால் அறிவிழந்த எனக்கு வேண்டும்.

ஆனால்! அண்டிக் கெடுத்த அக்கிரமா! உன்னைத் தண்டிக்காமல் இனி எனக்குத் தூக்கமில்லை... உன்னைக் கூறு கூறாகத் துண்டிக்காமல் நான் ஓயப் போவதில்லை...

தங்கையை இழந்த பிறகு நான் தடுமாறி நிற்கிறேன். என் தலையிலேயே இடி விழுந்த பிறகுதான் மனம்மாறி நிற்கிறேன்.

மனமாற்றம்... மனமாற்றம்...!
(வாளை உருவி எடுத்து) பராக்கிரமா! இதோ என் பரிசு...!

[திரை]

## காட்சி 48

களம்: அரண்மனைக் கூடம் காலம்: பிற்பகல்

உறுப்பினர்: குலோத்துங்கன்- காலதேவர் -விக்கிரமன் காலிங்கராயர்- கருணாகரன்- காவலன்- இளவேணி

(குலோத்துங்கன் உலவிக் கொண்டிருக்க... காலதேவரும் கருணாகரனும் வருகின்றனர். கருணாகரன் அரசரை வணங்க, அவர் கருணாகரன் தோளைத்தட்டிக் கொடுக்கிறார்)

குலோ: கருணாகரா!

கருணா: வேந்தே!குற்றம் ஏதும் செய்யாமலேயே நான் சிறைப்பட நேர்ந்தது. என்னை மன்னியுங்கள்.

(குலோத்துங்கன் சிரித்துக் கொள்கிறார்)

கால: கருணாகரா! குலோத்துங்கனுக்குத் தெரியாது என்று நினைக்கிறாயா? சக்கரவர்த்திக்கு எல்லாம் தெரியும் .. ஊம்! நேரமாகிறது. விக்கிரமன் வருவதற்குள் போருக்கான உடைகளை அணிந்து கொள் ... ஊம்.

கருணா: ஐயா! இளவரசருக்குத் தெரியாமல் எதற்காக என்னைக்கலிங்கத்துக்கு அனுப்பவேண்டும்? என்னைச் சிறையில் அடைத்தது இளவரசர் ... ...

ஆனால், அவருக்குத் தெரியாமலே நான் விடுதலையாகி விட்டேன் ... இளவரசருடைய வெறுப்புக்கும் சினத்திற்கும் ஆளாகும்படி ஏன் என்னைக் கலிங்கத்துக்கு அனுப்புகிறீர்கள் ... ...

குலோ: கருணாகரா; நீ கவசத்தை அணிந்து கொள்.... விக்கிரமன் வருவான் ... ...

(கருணாகரன் உடையணிந்து கொள்ள முனைகிறான். மன்னரும் காலதேவரும் சிரித்துக் கொண்டே உட்-கார்ந்திருக்கின்றனர்) (விக்கிரமன் வருகிறான்—கருணாகரன் திரும்பிப் பார்க்கிறான்)

விக்: தளபதி ... ...

கருணா: இளவரசே! (இருவரும் கைகளால் பற்றிக் கொள்ளுகின்றனர்)

விக்: தளபதியே! என்னை மன்னியுங்கள் ... அறியாமல் ஏதோ ... ...

கருணா: இளவரசே! எல்லாம் நன்மைக்குத் தான். தாங்கள் என்னைப் புரிந்து கொண்டீர்களே அதுவே போதும்.

குலோ: (எழுந்து வந்து இருவர் தோளிலும் தட்டி) விக்கிரமனும் கருணாகரனும் ஒற்றுமைப்படும் நாள் ஒன்று வரும் என்றார் நம் அமைச்சர். அந்த நாள் இதுதான். இரு துருவங்கள் இணைந்தன. மதுராந்தகியின் வேண்டுகோள் வெற்றி கண்டது .... ... கருணாகரா! விக்கிரமா! நீங்கள் ஒன்று படும் நிலையைக் கண்டு மண்மகள் மனங்குளிர்ந்தாள்; விண்மகள் மழை பொழிந்தாள்; போர் மகள் பூரித்தாள்; கொற்-றவன் வெற்றி கண்டான் . . .

பிள்ளைகளே! இந்தக் கொற்றவன் வெற்றி கண்-டான்.

கால: அதுமட்டுமல்ல குலோத்துங்கா! இளவரசன் இன்று பெற்றுவிட்டது எல்லாம் புரிந்த மனமாற்றம். இது, தளபதி மேலுள்ள தடுமாற்றம்தனைத் தவிடு பொடியாக்கும் மனமாற்றம் ... ...!

இருள் விலகியது; எழுந்தது ஞாயிறு; பரந்தன கதிர்கள்; மடிந்தன பகைகள்; இது திங்களும் கதிர-வனும் சேர்ந்தது போல் காட்சி; சிதைந்தோடும் தமிழ்க் குலந்தான் சேர்ந்ததற்குச் சாட்சி; இனி

ஒளிரப் போவது குலோத்துங்கன் மாட்சி; உருவாகப் போகிறது காலதேவன் ஆட்சி; அதாவது காலமாகிய தேவனின் ஆட்சி.

குலோ: விக்கிரமா! போருக்குப் புறப்படுங்கள்.

விக்: தந்தையே! முன்வைத்த காலைப் பின்வைத்து விட்டவன் நான். கலிங்கத்துக்குப் போகவேண்டியது...

(இந்நேரம் காலிங்கராயர் இளவேணியைத் தோளில் போட்டுக் கொண்டு வருகிறார்) (நால்வரும் 'ஆ'வென அலறுதல்)

கருணு, விக்: இளவேணி...

விக்: ஏன் இந்த மௌனம்? ஏன் இளவேணி, ஏன்?

கருணு: அண்ணு! என்ன அண்ணு நடந்தது? பொழுது விடிந்தவுடன் புதுமை வரும் என்றிருந்தேன். அழுது புலம்பும்படி அவலம் வந்து சேர்ந்தது ஏன்? சொல்லுங்களண்ணு சொல்லுங்கள்...

கால: இளவேணி! மண்ணிற் பிறந்தது முதல் வளர்த்த என்னைப் பாரம்மா! கண்ணின் மணி இன்று கருகி விட்டது ஏனம்மா? படபடக்கும் இமைகள் இன்று மயங்கி விட்டது ஏன்? மழலை சொல்லும் வாய் இன்று மடிந்து கொண்டதேன்? உன் புன்னகைக்கும் வாய் எங்கே? பூத்த முகம் எங்கே? துள்ளு நடை எங்கே? அண்ணனையும் மன்னனையும் கண்ணனையும் மறந்துவிட்டுப் பெண்ணரசி போனது ஏன்?

கருணு: அண்ணு! வாராத அரண்மனைக்கு வந்துவிட்டீர் என்றிருந்தோம். மன்னவரும் மற்றவரும் மனம் மகிழ்ந்து கொண்டிருந்தோம். கொண்டுவந்தது என்ன அண்ணு? இன்று குன்றம் சரிந்ததண்ணு கோட்டை இடிந்ததண்ணு! நெஞ்சில் இருந்தவளை நீக்கிவிட்டது யார்? ஒட்டிப் பிறந்தவளை வெட்டி விட்டது யாரண்ணு? போர்க்களத்தில் யானையும், குதிரையும், பகைவரும் குருதியில் மிதக்கக் கண்டு

கொக்கரித்தோம் நாம். இன்று தங்கை குருதியில் கிடக்கிருள்; அண்ணு! என்ன சொல்லிப் புலம்பிடு-வேன்? யாரிடத்தில் போய் உரைப்பேன்...?

குலோ: இளவேணியை எனது மருமகளாக ஏற்றுக்-கொள்ள நினைத்தேன். சோழ நாட்டு ஆட்சி பீடத்-தில் வீற்றிருப்பாள் என்று கனவு கண்டேன்'... எல்லாம் பாழானது.....

விக்: கிடைக்காத செல்வம் எனக்குக் கிடைத்தும் அதை இழந்துவிட்டு நிற்கிறேன் நான். இளவேணி யோடு பழகிய பிறகுதான் உலகைப் புரிந்து கொள்ளத் தொடங்கினேன். வாழ்க்கையின் இறுதி வரை என்னேடு இருந்து தன்னேடு என்னையும் வளர்த்துக் காப்பாள் என்றிருந்தேன்.....பாசத்-தால் வளர்த்த கதையைப் பாதியிலேயே முடித்து விட்டுப் போய் விட்டாள் அவள்...பின்னும் உயிரைப் பிரிந்து விட்டுப் பிணமாகி விட்டேன் நான்...

கால: காலிங்கராயா! என்ன நடந்தது?

காலி: சோழ நாட்டைப் பகைத்துக் கொண்டு பாண்-டியனேடு சேர்ந்து கொண்டு அலைந்தேனே அதற்கு எனக்குக் கிடைத்த பரிசு ..'.. இது''.. பராக்கிர-மன் ......! என் தங்கையைப் பெண்டாள நினைத்து விட்டான் சண்டாளன் ... தன் கற்பைக் காத்துக்-கொள்ள முயன்று, பராக்கிரமனுடைய வாளுக்கு இரையாகிவிட்டாள். வாழ்வை முடித்துக் கொண்டு மானத்தைக் காப்பாற்றிக் கொண்டாள். ஐயா, மானத்தைக் காப்பாற்றிக் கொண்டாள்.

கருணு: அண்ணு! இந்த நொடியே புறப்படுகிறேன் நான். கள்ள மனத்தோடுகாட்டில் அலைந்து கொண்-டிருக்கும் அந்தக்காதகனைக் கால்வேறு தலைவேருக்கி விட்டு வந்துவிடுகிறேன்...(வாளில் கைவைக்கிருன்)

காலிங்: (இடை மறித்து) இல்லை; காந்தளூர்ச் சாலையில் நடந்த போரிலேயே என்னிடம் தோற்று ஓடியவன் அந்தப் பராக்கிரமன்; வஞ்சகனைத் தப்பவிட்டு வருந்திக் கொண்டு இருக்கும் இந்தவாளுக்கு வஞ்சம் தீர்க்க இதுதான் வாய்ப்பு...... நானேபுறப்படுகிறேன் அந்த நயவஞ்சக நரியைக் கூறுநூருக்கி விட்டுவந்து விடுகிறேன். (புறப்படத் திரும்புகிருன்)

விக்: நில்லுங்கள்...இதயத்தில் பொங்கும் துயரத்தை எடுத்துச் சொல்ல முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன்...இளவேணியை மணந்து அவளதுஇனிய பேச்சில் என்னை மறந்துஎன்றும் பட்டத்தரசியாகவே என் பக்கத்தில் உட்காரச் செய்யத்தான் இந்தப் பாவிக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. இளவேணியின் முடிவுக்குக் காரணமான அந்த முட்டாள் பராக்கிரமனை முறியடிக்கும் வாய்ப்பாவது எனக்குக் கிடைக்கட்டும்; பெண்ணை மதிக்காத அந்தப் பேயனை மண்ணில் புதைத்துவிட்டுத் திரும்பநான் புறப்படுகிறேன்.

கால: ஆம்!அந்தப் பாண்டிய அக்கிரமனைத்தொலைக்க விக்கிரமனே போகட்டும்......கருணாகரா! நம் படைகள் கலிங்கம் நோக்கிப் புறப்பட்டு விட்டன. தென் பெண்ணை ஆற்றங்கரையில் தளபதியின் வரவுக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன. ...

குலோ: ஆம்! கருணாகரனும்,காலிங்கராயரும் கலிங்கப் போரைக் கவனிக்கட்டும்: புறப்படுங்கள்...

கால: அப்படியானால் ...நம் எதிரிகளைத் தொலைக்க நீங்கள்மூவருமே வஞ்சினம் எடுத்துக்கொள்ளுங்கள்.

விக்: சோழநாட்டின் அமைதியைக் குலைத்து, என் வாழ்க்கையிலும் தலையிட்டுத் தகாது செய்துவரும் அந்தத் தருக்கன் பராக்கிரமனைத் தூள் தூளாக்குவேன். இது என் வஞ்சினம்.

கருணா: கட்டிய கலிங்கக் கோட்டையை இந்தக் கைக-

ளாலேயே தகர்ப்பேன். மதுராந்தகி தேவியாரின் மனத்தேரும், காலதேவபுலவரின் கற்பனைத்தேரும், சக்கரவர்த்தியின் கனவுத் தேரும் வலம் வரச் செய்வேன். கொழுத்துத் திரியும் அனந்தவர்மனைத் தேர்க் காலில்கட்டி இழுத்துவருவேன். இதுஎன் வஞ்சினம்.

காலிங்: பல்லவத்தின் மீது எனக்கிருந்த பற்றால்சோழ நாட்டுக்கே துரோகம் நினைத்துச் சூழ்ச்சியிலும் இறங்கினேன். அப் பாவத்திற்குக் கழுவாய் தேடும் வரை எனக்குஅமைதியில்லை. என் மீதுள்ள வசைதுடைத்து இசையோடு மீள்வதே இளவேணியின் ஆன்மாவிற்கு அமைதி. சோழநாட்டுப் பகைவர்களைப் பந்தாடி வருவேன். இது என் வஞ்சினம்.

குலோ: உங்கள் வஞ்சினம் கேட்டு என்மனம் உவகையால் விம்முகிறது ...... எண்டிசையும் ஒரு திசையில் திரும்பி விட்டதாக இறுமாப்புக் கொள்கிறேன். எவர் வந்து எதிர்த்தாலும் உங்கள்முன் நிற்க முடியாமல் புறமுதுகு காட்டி ஓடியே தீர வேண்டும். புறப்படுங்கள்.

கால: அவர்கள் மட்டுமல்ல குலோத்துங்கா!... காலதேவனும்தான் புறப்படுகிறான் கலிங்கத்தை நோக்கி......

கலிங்கத்தில் முதல் முறை கால் வைத்தபோது முளைத்தது என் வஞ்சினம்- இரண்டாம் முறை கால் வைக்கும் போது இடியப்போகிறது கலிங்கம்; வஞ்சினம் கூறி வந்தவன் நான்; மறுமுறையும் செல்கிறேன் அங்கே.

குலோத்துங்கா! கலிங்கப் போரை இந்த ஊனக் கண்களால் கண்டு கற்பனைக் கண்களால் கவிதையாத்து, இந்த உலகத்தின் கண்களுக்குக் காணிக்கையாக்கப் போகிறேன்......

குலோ: இந்த வில்லேருழவர்கள் வீழ்த்தட்டும் கலிங்கத்தை; இந்தச் சொல்லேருழவர் தொடங்கட்டும் பரணியை.........சென்று வாருங்கள்.

(அனைவரும் வணங்கி விடைபெறுகின்றனர். விக்கிரமன் நிற்கிருன்)

குலோ: விக்கிரமா! புறப்படவில்லை?

விக்: இதோ.....புறப்படப் போகிறேன் ... ... ஆனால் அதற்குள் ஓர் ஐயம்......

குலோ: துணிவாகக் கேள் விக்கிரமா! எதிர்காலச் சக்கரவர்த்தியாகப் போகும் உனக்கு எத்தனை ஐயங்கள் இருக்கின்றனவோ அத்தனையும் கேட்டுவிடு.

விக்: எத்தனையோ கேள்விகள் அல்ல; இரண்டே இரண்டுதான்.

குலோ: ஊம்......கேள்

விக்: கருணாகரரே கலிங்கம் போவதில் எனக்குக் கடுகளவும் வருத்தமில்லை. ஆனால் இளவரசன் என்ற முறையில் எனக்கும் சேர்த்து அந்த வாய்ப்பை ஏன் கொடுத்திருக்கக் கூடாது? அன்று நடந்த மண்ணுமங்கலத் திருநாளில் கருணாகரரை மட்டும் படை திரட்டுமாறு கட்டளையிட்டீர்கள்

இந்த விக்கிரமனையும் கூப்பிட்டு அந்த இளைய தளபதியோடு இணைத்து அனுப்பாதது ஏன்?

(இந்நேரம் சோழ வாயிற்காவலன் வருகிருன்)

வாயில்: வேந்தே! தெருவில் மக்களெல்லாம் திசைக்குத் திசை ஓடிக் கொண்டிருக்கிருர்கள்...பாண்டியர் பராக்கிரமன்......

குலோ படை திரட்டிக் கொண்டு வந்து விட்டான்... அப்படித்தானே! விக்கிரமா! உள்நாட்டுப் போர் தொடங்கி விட்டது. நீ எதிர்பார்த்த வாய்ப்பு உன் இடந்தேடி வந்து விட்டது. உடனே நம் வேளக்காரப் படையையும், தெரிஞ்ச கைக்கோளப் படையையும் திரட்டிக் கொண்டு போய்ப் பராக்கிரமனை முறியடித்து விட்டு வா...

விக்: போய் வருகிறேன் தந்தையே. (புறப்படுகிருன்)

குலோ: நில் விக்கிரமா! உன் முதல் கேள்விக்கு விடை இப்போது புரிகிறதா?

விக்: புரிகிறது தந்தையே, புரிகிறது. உள்நாட்டுப் போர் தொடங்கினுல் உங்களுக்கு உதவியாக இருந்து, பகைவரை ஒடுக்குவதற்கு ... நான்தானே இருக்க வேண்டும். இப்போதே சென்று வெற்றி பெற்று வருகிறேன்...விடை கொடுங்கள்.

குலோ: போய் வா.

(திரை)

## காட்சி 49

களம்: தெரு காலம்: மாலை

உறுப்பினர்: விக்கிரமன், பராக்கிரமன், வீரர்கள்

(விக்கிரமனும் பராக்கிரமனும் எதிரெதிரே வருதல்)

பராக்: வாடா தம்பி வா! வருங்காலச் சோழ சக்கர-வர்த்தியே வா! அந்தக் கிழச் சோழன் வர வில்லையா...?

விக்! இல்லையடா எத்தனே! கற்பு நெறி உணர்ந்து தன் கையைக் குறைத்துக் கொண்ட பொற்கைப் பாண்டியன் பரம்பரைப் புகழையெல்லாம் பாழ் படுத்திய மடையனே! வந்து விட்டேனடா, வந்து விட்டேன்.

பராக்: சின்னப் பயலே, என்ன சொன்னுய்! (வாளை உருவுகிருன்)

விக்: சொல்வதென்னடா! இனி வாய்வீச்சுக்கு இட-மில்லை. வாள்வீச்சு பதில் சொல்லும்.

(வாட்போர் நடக்க, பராக்கிரமன் குத்தப்பட்டு இறக்கிருன்)

விக்: என் நெஞ்சம் கவர்ந்த இளவேணி சிந்திய இரத்தத்துக்கு இரத்தம் ... எடுத்துக் கொண்ட வஞ்சினத்துக்கு ஈடு இணையற்ற வெற்றி!
(பெரிதாகச் சிரிக்கிருன்)

*[திரை]*

## காட்சி 50

களம்: அரண்மனைக் கூடம் காலம்: முற்பகல்
உறுப்பினர்: அனந்தவர்மன், எங்கராயர், அனந்த பாலையன், வீரர்கள்

பாலையன்: (வேகமாக வந்து) அரசே! சோழநாட்டுப் படைகள் நம்நாட்டை நோக்கி வந்துகொண்டு இருக்கின்றன. இன்னும் ஒரு நாழிகை நேரத்தில் நம் தலை நகரத்துக்கே வந்து விடுவார்கள்.

அனந்: இவ்வளவு விரைவில் வந்து விடுவார்கள் என்று நினைக்கவில்லை. அமைச்சரே! இப்போது என்ன செய்யலாம்?

எங்க: வேந்தே! வேடிக்கையாக இருக்கிறது உங்கள் பேச்சு... எதிரிப்படைகள் நம்மிடமே வந்து தாக்கும்போது நாம் குனிந்து கொடுக்க முடியாதே! இனி நாமும் துணிந்து இறங்க வேண்டியதுதான்.

பாலை: அரசே! நம்மிடந்தான் வலிமை வாய்ந்த படையும், கோட்டையும் இருக்கின்றனவே. உடனே எதிரிகளைத் தாக்க வேண்டியதுதான்.

அனந்: தாக்க வேண்டியதுதான். ஆனால் விளைவு அழிவில் முடிந்து விட்டால்...

எங்க: இதை அப்போதே சிந்தித்திருக்க வேண்டும். தலைக்குமேல் வெள்ளம் போய்விட்டபிறகு இனிச் சாண் போனால் என்ன, முழம் போனால் என்ன?... ஊம்... காலதேவர் கலிங்க நாட்டுக்கு வந்தபோதே நான் சொன்னேன். நீங்களோ ஆணவத்தோடு நடந்து கொண்டீர்கள். பலரையும் நம்பி நம்பிக் கடைசியில் இப்படி நிற்கிறோம்......

அனங்: அமைச்சரே! நீங்கள் சொன்னதெல்லாம் உண்மை. ஆனால் இப்போது செய்ய வேண்டியது...

எங்க: இனிமேல் எதுவும் செய்ய முடியாது. உண்மையாகவே எனக்கு இந்தப்போரில் விருப்பம் இல்லை. நம்பிக்கையுமில்லை. இருந்தாலும் உங்கள் உப்பைத் தின்று வளர்ந்து விட்டேன். இனிச் செஞ் சோற்றுக்கடன் கழிப்பதற்காக நானும் என் கடமையைச் செய்கிறேன். வேந்தே! தளபதியாரே! படைகள் தயாராக ஆணையிடுங்கள்.

அனங்: சரி அனந்தபாலையா! படைகளை அணிவகுக்கச் செய் ... ... போ.

மறுகாட்சி

பாலை: வேந்தே! இதோ படைகள் அணிவகுத்து விட்டன. வீரவுரை கூறி அனுப்புங்கள்

அனங்: அமைச்சரே! நீங்கள் சொல்லுங்கள்.

எங்க: இல்லை வேந்தே! நீங்கள் கொஞ்சமாவது சொல்லுங்கள். அப்போதுதான் வீரர்களுக்கு ஊக்கம் பிறக்கும்.

அனங்: (முன்வந்து)

வேற்படைத் தலைவரே! நாற்படையாளரே! காலமெல்லாம் அடிமையாக இருந்தது போதும்! இனியாவது கலிங்கத்தின் கைவிலங்கு உடையட்டும். கலிங்கத் தாயின் காலடியில் வெற்றி மலர்களைக் குவிக்கப் புறப்படுங்கள்:

எங்க: கலிங்க நாட்டின் அடிமை வாழ்வை அகற்றுவோம். வாழ்ந்தால் உரிமையோடு வாழ்வோம் இல்லையேல் எதிரிகளை வீழ்த்தி மாள்வோம்,

இரண்டேமுடிவுதான். எது வென்று முடிவு செய்ய

எழுந்திருங்கள் வீரர்களே! அதோ கலிங்கத்தாய் அறை கூவி அழைக்கிருள். எதிரிகளைத் தூள் தூளாக்கி இரத்த ஆற்றில் எறிந்து விட்டு வருவோம். புறப்படுங்கள் வீரர்களே! புறப்படுங்கள்.

*[திரை]*

## காட்சி 51

**களம்:** **காடு** **நேரம்:** **பகல்**

**உறுப்பினர்!** **காலதேவர், கருணுகரன், காலிங்கராயர், முடிகொண்டான், பராந்தகன், வீரர்கள்.**

**முடி:** அமைச்சர் பெருமானே! படைகளை யெல்லாம் முறைப்படுத்தி வியூகம் வகுத்து நிறுத்தி விட்டோம். ... வீரர்கள் உங்கள் ஆணையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்கள்.

**கால:** தளபதிகளே! சரியான நேரத்தில்தான் தொடங்கப் போகிரேும். பரணி மீன் வானத்தில் தோன்றி விட்டது.

**கருணு:** அப்படியாஞல் படைகளுக்கு ஆணையிட்டு விடலாமே!

**கால:** ஊம்! காலிங்கராயா! நீயே தொடங்கு...

**காலிங்:** கலிங்கரை

அடிப்போம் அடல் கெடுப்போம் முகத்
திடிப்போம் குடல் எடுப்போம் இடுப்
பொடிப்போம் வசை துடைப்போம் உயிர்
குடிப்போம் இனிநடப்போம் நொடி

**கால:** வீரர்களே! நம்மிடம்
பொருதடக்கை வாளுண்டு மணிமார்புண்டு
போர்முகத்தில் எவர்வரினும் புறங்கொடாத
பருவயிரத் தோளுண்டு;

கலிங்க நாட்டை நோக்கி,
எழுந்தது சேனை என்றதும்
இடிந்தது உலகின் முதுகு;
விழுந்தன காடும் மலையும்
வெறுந்தரை யாயின திசைகள்.

அனந்தவர்மன்,
எளியன் என்றிடினும் வலிய நம்படையின்
பெருமை எண்ணும் நிலை இன்மையால்
வலிய வந்து கடும் புலியை மோதினன், அவன்
தலையை வாங்கிடுக வீரர்காள்;

இப்போது நடக்கப் போவது கலிங்கப் போரல்ல; உலகத்தின் கவனத்தைக் கவரும் தன்மானப்போர். கலிங்கத்தில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் எழுப்புவோம் பிணமேடு. இந்தப்போரில் வெற்றி பெருமல் நாம் எவரும் திரும்பக் கூடாது உயிரோடு.

நமக்காகக் காத்திருக்கிறது வரலாற்று ஏடு; நரிகளைக் கூறுபோட, எடுவாளை! தொடுபோரை! அடு பகையை! நடு புகழை!

கருணை: தாவிப்பாய்வது எப்போது என்று தவித்துக் கொண்டிருக்கும் தன்மானத் தமிழர்களே! கட்டுண்டு கிடந்த உங்கள் வீரம் கரையுடைத்துக் கொண்டது; சிறுத்தைப் புலியைச் சிறுநரி எதிர்க்கிறது... வஞ்சினம் எடுத்துக் கொண்டால் அதிலிருந்து பின் வாங்காதது நம் சோழர் குலம்;

சோழ நாட்டின் மானத்தைக் காப்பாற்ற உங்கள் எலும்புகளை நொறுக்கி, நரம்புகளை அறுத்து, உடம்பைத் துண்டுதுண்டாக நறுக்கிக் குருதியைக் குடம் குடமாக வடிக்க வேண்டுமென்றாலும் தயங்கக் கூடாது.

கடலிரண்டு போல் கலக்கட்டும் படைகள்;
மலையிரண்டு போல் மோதட்டும் தலைகள்
கரியும் பரியும் உயிர் சிந்தட்டும்;
கழுகும் நரியும் உடல் தின்னட்டும்;
வருபகைவர் உயிர் போகட்டும் — அவர்
மனைவியர் பிணங்களும் வேகட்டும் ... ... ...
ஊம் ... ... ... புறப்படுங்கள்.

[திரை]

## காட்சி 52

களம்: கலிங்கன் மாளிகை காலம்: மாலை

உறுப்பினர்: காலிங்கராயர், பராந்தகன், முடிகொண்டான், கருணாகரன், அனந்த பாலையன், வீரர்கள், அனந்தவர்மன்

காலி: கருணாகரா! நீ அந்தப்புரத்துக்குச் சென்று அனந்தவர்மனைச் சிறைப்படுத்து......(அனந்தபாலையனும் காலிங்கராயரும் சண்டை போட்டுக் கொண்டிருக்கின்றனர். அனந்தபாலையன் குத்தப்பட்டுக் கீழே விழுகிறான். காலிங்கராயர் அவன் நெஞ்சில் கால் வைத்து நின்று சிரிக்கிறார். அனந்தவர்மன் ஓடி வருகிறான். காலிங்கராயரைப் பார்த்ததும் அலறுகிறான். கருணாகரனும் காலிங்கராயனும் அவனைஅங்கும் இங்குமாகத் தள்ளுகின்றனர்.)

முடி: தளபதி! கலிங்கப்படைகள் தோற்றோடிவிட்டன. போர் முடிந்தது......

கருணா: முடிகொண்டவா! வேற்று நாட்டில் இருந்து கொண்டு வெற்றரவம் எழுப்பிக் கொண்டிருந்த புற்றரவம், இதோ பிடிபட்டு விட்டது. கைகளில் விலங்கு மாட்டி இழுத்துக் கொண்டுபோய்த் தேர்க்காலில் கட்டு.

(முடிகொண்டான் அனந்தவர்மனை இழுத்துப் போகிறான்.)

கருணா: அண்ணா! நம் வஞ்சினம் வென்றது.....

காலி: தம்பி! என் நெஞ்சங் குளிர்ந்தது.....ஊம்! படைகள் சோழநாட்டை நோக்கிப் புறப்படட்டும்; தூளி பரக்கட்டும்.

கருணா: பராந்தகரே! படைகள் தஞ்சையை அடையும் வரை இடையில் எங்கும் நிற்கக்கூடாது...(பராந்தகர் போகிறார்.)
அண்ணா! புறப்படுவோம்.

காலி: (உணர்ச்சியுடன்) தம்பீ! (கட்டித் தழுவிக் கொள்கிறார்.) (காலிங்கராயர் தேம்பித் தேம்பி அழுகிறார்)

கருணா: என்ன அண்ணா, இது! சிறுபிள்ளையைப் போல்...

காலி: தம்பி! நாம் வெற்றி பெற்று விட்டோம். ஆனால் நம்மை ஓடோடி வந்து வரவேற்று ஆரத்தி எடுக்க வேண்டிய உடன் பிறப்பு...... இளவேணி! கொடுத்து வைக்கவில்லையே தம்பி, கொடுத்து வைக்கவில்லையே நாம்...!

கருணா: அண்ணா......

(இருவரும் கலங்கி நிற்கின்றனர்)

*[திரை]*

## காட்சி 53

களம்: அரண்மனைக்கூடம் காலம்: மாலை

உறுப்பினர்: குலோத்துங்கன், விக்கிரமன், அம்மங்கை, கருணாகரன், காலிங்கராயர், காலதேவர், முடிகொண்டான், அனந்தவர்மன், இராசராசன், கார்க்கோடகன்

(குலோத்துங்கன், அம்மங்கை நிற்கின்றனர். விக்கிரமன் வருகிறான்)

விக்: தந்தையே! வெற்றி கண்டுவிட்டேன் என்பது

உண்மையே. அந்த வரையில் ஒரு சிக்கல் தீர்ந்தது.

குலோ: ஊம் . . . . உன்னுடைய வஞ்சினம் நிறைவேறி விட்டது . . . இப்போது மகிழ்ச்சிதானே? ...

விக்: இன்னும் கொஞ்சம் குறை இருக்கிறது ...

குலோ: என்ன விக்கிரமா ? ......

விக்: தந்தையே! நீங்கள் அரச தந்திரம் அறிந்தவர். ஆட்சிமுறையில் வல்லவர் என்றும் சொல்லுகிறார்கள், ஏன், ஆட்சி ஒழுங்கு, எதையும் குறித்த காலத்தில் செய்தல், முன்னேற வேண்டுமென்ற போட்டியுணர்ச்சி இந்த மூன்றையும் உங்களிடம் இருந்து தான் நானே கற்றுக் கொண்டேன் ... ... ஆனால்...

குலோ: ஆனால் ...

விக்: என்னைப் பொறுத்த வரையில் நீங்கள் எனக்குத் துரோகம் செய்து விட்டதாகவே கருதுகிறேன் ... நான் இப்போது கேட்கப் போவது ...

குலோ: உன் இரண்டாவது கேள்வி ... இல்லையா?

விக்: ஆமாம்! எனக்குப் பின்னால் என் அரசைப் பிடுங்கி அருள்மொழி தேவியின் வயிற்றில் பிறப்பவனுக்குக் கொடுக்கச் சாசனம் எழுதிவிட்டீர்கள். ஒரு பெண்ணின் அழகுக்கு முன்னால் ஏன் தான் இப்படி மயங்கி விட்டீர்களோ, தெரியவில்லை.

குலோ: விக்கிரமா!

விக்: விக்கிரமன்தான்; உங்கள் அக்கிரமங்களைப் புரிந்து கொண்ட விக்கிரமன்தான்

குலோ: உன் வெகுளியும், சிறுபிள்ளைத்தனமும் வளர வளர மாறிவிடும் என்றிருந்தேன், இன்னும் உனக்குத் தெளிவு வரவில்லை ...

விக்: தந்தையே, போதும்! அந்தச் சாசனம் எழுதிக் கொடுத்தது நேர்மையா ... விடை சொல்லுங்கள்

(முடிகொண்டான் புலிக்கொடியோடு வருகிறுன்)

முடி: வேந்தே! வெற்றி! வெற்றி

குலோ: முடிகொண்டவா! கலிங்கம் தோற்றதா? கருணுகரன் வஞ்சினம் வென்று விட்டதா ...

முடி: ஆம் வேந்தே! அனந்தவர்மனைத் தேர்க்காலில் கட்டியிழுத்து வருகிருர் நம் இளைய தளபதி. எல்லோரும் பாலாற்றங்கரைக்கு வந்துவிட்டார்கள்.

குலோ: ஆகா! ஒரே நேரத்தில் எல்லாச் சிக்கல்களும் தீர்ந்துவிட்டன.

விக்: இன்னும் என் சிக்கல் தீரவில்லையே!

குலோ: விக்கிரமா! நான் எழுதிக் கொடுத்த சாசனம் தானே வேண்டும். முடிகொண்டவா! கார்க்கோடகனை அழைத்து வா. (முடிகொண்டான் போகிருன்)

(காலதேவர், கருணுகரன், காலிங்கராயர், ஆகியோர் உள்ளே நுழைகின்றனர். காலிங்கராயரும், கருணுகரனும் வேந்தனை வணங்குகின்றனர்.)

குலோ: (இருவரையும் தோளில் தட்டி ...) எனக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை ...

கால: பூரிப்பால் நெஞ்சம் விம்மும்போது யாரால் தான் பேசமுடியும்! விக்கிரமா! என்ன பேசாமலிருக்கிருய்...

(கார்க்கோடகன், முடிகொண்டான் வருகின்றனர்)

குலோ: இனிமேல்தான் விக்கிரமன் பேசுவான். கார்க்கோடகா! நான் அருள்மொழிக்கு எழுதிக்கொடுத்த சாசனத்தை நீ தானே கலிங்கத்துக்கு எடுத்துச் சென்றுய் ... ?

கார்க்: ஆமாம்! நான்தான் எடுத்துச் சென்றேன். ஆனுல் தளபதி கருணுகரர் வழிமறித்து என்னிட-

மிருந்து சாசனத்தைப் பிடுங்கிக் கொண்டார். ஆனால் தளபதியை யாரோ தாக்கி, அவரிடமிருந்துசாசனத்-தைப் பிடுங்கிக் கொண்டார்கள்.

விக்: அப்படியானால் சாசனம்? ஊம்! இப்போது என்ன சொல்கிறீர்கள் வேந்தே!

குலோ: இதோ சாசனம் நீயே வைத்துக்கொள் (அவனிடம் தருகிறார்).

விக்: (பிரித்துப் பார்த்து) ஆ! இது உங்கள் கைக்கு ...

குலோ: எப்படி வந்தது? கருணாகரனை மறித்ததும் பறித்ததும் நானே தான். அருள்மொழிக்குச் சாசனம் எழுதிக் கொடுத்துப் பக்குவமாய்ப் பறித்துக்கொண்-டேன். இதை நீ புரிந்து கொள்ளவில்லை.

முடி: இளவரசே! தளபதி கருணாகரருக்கு ஆபத்து வரக்கூடாது என்பதற்காக நம் மன்னர் எத்தனை-யோ ஆபத்தான செயல்களைச் சந்தித்திருக்கிறார்.

குலோ: விக்கிரமா! அருள்மொழி சூழ்ச்சி செய்து நமக்கே தீங்கு விளைவிக்கத் திட்டமிட்டிருந்ததைக்-காஞ்சிக்குச் சென்றிருந்த போதே கண்டுவிட்டேன். அதன் பிறகு சக்கரயுத்தனாக நடித்து ...

விக்: என்ன ... ! சக்கரயுத்தனாக நடித்தது நீங்களா?

குலோ: ஆம். சக்கரயுத்தனாக நடித்ததும் நானேதான் அப்படிச் செய்ததனால் நீ கருணாகரனைப் புரிந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் பாவம் அருள்மொழி! நான் அவளுடைய எல்லாத் திட்டங்-களையும் தெரிந்துகொண்டேன் என்று அறிந்த அந்த நொடியே ...

விக்: ஓடிப்போய் விட்டார்களா?

குலோ: இல்லை. ஒரேயடியாகப் போய்விட்டாள். நான் உண்மை தெரிந்து கொண்ட அதிர்ச்சியில் உலகை விட்டே போய்விட்டாள் விக்கிரமா!

முடி: ஆம். இளவரசே! எனக்கும் இது தெரியும். நான் தான் தேவியை நல்லடக்கம் செய்தேன்.

குலோ: விக்கிரமா! இந்த நல்ல நேரத்தில் ...

விக்: தந்தையே! என்னை மன்னியுங்கள்... நீங்கள் என் மன வளர்ச்சிக்காக எத்தனையோ செய்திருக்கிறீர்கள். நம் அமைச்சர் பெருமானும் தளபதியும் ஆற்றிய தொண்டுகளையும், உங்களுடைய நல்ல உள்ளத்தையும் புரிந்து கொள்ளாமல் போய்விட்டேன். என் மனம் உண்மையிலேயே தெளிந்து விட்டது ...

கால: சரி விக்கிரமா! எங்கள் திட்டமெல்லாம் வெற்றி கண்டு விட்டன.

குலோ: விக்கிரமா! குலோத்துங்கன் வேலைகள் முடிந்து விட்டன... கலிங்கம் எறிந்த கருணாகரனை வரவேற்க யாரையாவது ஆரத்திஎடுக்கச் சொல்லேன்...

விக்: நம் அம்மங்கையே எடுக்கட்டும்...

(அம்மங்கை ஆரத்தி எடுக்கிறாள். கருணாகரன் வேந்தர் காலில் வணங்குகிறான்.)

கருணா: வேந்தே! எனக்கு இட்ட பணியை முடித்து விட்டேன்.

குலோ: கருணாகரா! என்றால் உனக்கு எத்தனை இடையூறுகள்! என்னுடைய வாக்குறுதிக்காக உன்னைச் சாவோடு விளையாட விட்டேன்... நீ நீரிலும் நெருப்பிலும் நீந்தினாலும் சாக மாட்டாய்... காலிங்கராயரே!...

காலிங்: வேந்தே! கறைபடிந்த என் கைகள் கழுவப் பட்டு விட்டன. குறை உணர்ந்த மனம் இன்று நிறையடைந்து விட்டது.

கால: அது மட்டுமல்ல; குலோத்துங்கா! நீ செயங் கொண்டாய். நானும்...

குலோ: பரணிபாடிச் செயம் கொண்டீர்கள். செயங்-

கொண்ட என்னைச் செயங்கொண்ட புலவர் பாடுவது தானே முறை.

[அனந்தவர்மனைக் கட்டியிழுத்து வருகின்றனர்.]

காலः அனந்தவர்மா! ஆணவம் தலையில் உட்கார்ந்தால் அழிவும் இழிவும்தான் பரிசுகள் என்பது புரிகிறதா? அன்று காலதேவனின் கடுஞ் சினத்துக்கு ஆளானாய். இன்று... ...

குலோ: நான் சொல்லுகிறேன். முடிகொண்டவா! அனந்தவர்மனின் முடியைக் கழற்றி உருக்கி என் காலுக்குக் கழலாகச் செய்து கொண்டு வா. (முடிகொண்டான் கழற்றிப் போக முயல்கிறான்) நில் முடிகொண்டவா! அப்படியே நம் அரண்மனைப் பணிப் பெண்கள் காலில் அணிந்த சிலம்புகளை வாங்கி உருக்கி இந்த ஆணவம் பிடித்த அனந்தவர்மனுக்கு முடி செய்து கொண்டுவா... (முடிகொண்டான் கழற்றிச் செல்கிறான்)

அனங்: சோழச் சக்கரவர்த்தி! எனக்குநேர்ந்த அவமானம் போதும். நான் உங்களைப் பகைத்துக் கொண்டதற்காக என்னை மன்னியுங்கள். மீண்டும் உங்கள் பேரரசின்கீழ் ஆட்சி புரியும் வாய்ப்புக் கொடுங்கள்.

விக்: மன்னிப்பு வேண்டுமாம் மன்னிப்பு...! உன்னிடம் போரிட்டதால் எங்கள் சோழ நாட்டுக்கு எத்தனை இழப்பு! எத்தனை வேலை... உடனே மன்னிப்பு வழங்கி ஒரு நாட்டையும் கொடுத்து விட வேண்டுமோ?

காலः குலோத்துங்கா! அனந்தவர்மன் சரியான பாடம் படித்து விட்டான். இனி அவனை மன்னித்து, அவனது தவறுகளை மறப்பதுதான் நல்லது.

குலோ: நானும் அப்படித்தான் நினைக்கிறேன்

அனந்தவர்மா! உன் மனமாற்றம் தானாக ஏற்-

பட்டிருந்தால் எவ்வளவு நன்ருக இருந்திருக்கு இருந்தாலும் உன்னை விடுதலை செய்து கலிங்கத் ஆளும் வாய்ப்பையும் மீண்டும் தருகிறேன்.

அனங்: சக்கரவர்த்தி! உங்கள் அன்புக்கும் அருளு கும் என் நன்றி உரியது. என்றும் உங்களுக் திறை செலுத்தி ஒழுங்காக ஆண்டு வருவேன்.

குலோ: சரி! விக்கிரமா! எனக்கும் நம் அமைச்சர்க் 'ஓய்வு தேவைப்படுகிறது. நானும் காலதேவ ஆட்சிப் பொறுப்பைவிட்டு நீங்கி, இந்த நா முழுதும் சுற்றி அறிந்து வரலாம் என்று நினைக் ரேும். ஆட்சியை ஒப்புக்கொள்! தளபதிகளே நீங்கள் இருவரும் என்றும் போல் பொறுப்பி இருந்து விக்கிரமனுக்குத் துணையாக......

விக்: வருந்துகிறேன், தந்தையே! இவர்கள் இருவரை யும் இனி நம் சோழ நாட்டுத் தளபதிகளாக ஏற்று கொள்ள முடியாது. இனி இந்த அரசவையிலே இவர்கள் இருவருக்கும் இடமில்லை ... அதனுல்...

குலோ:
கால: } விக்கிரமா ...! ?

விக்: ஆம்! காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு பல்லவ நாட்டைத் தனி நாடாக்கிச் சோழநாட்டுக்கு நிகராக அவர்களிடம் கொடுத்து விடுவோம். காலிங் கராயர் பல்லவ பூமிக்கு மன்னன் ஆகட்டும். நந்திக் கொடி பறக்கட்டும்.

நம் கருணுகரர் இளவரசர் ஆகட்டும். இதோ நம் தங்கை அம்மங்கை, கருணுகரரை ஆளட்டும்.

(அம்மங்கை கையைப் பிடித்து, கருணுகரன் கையில் தருகிருன் - மகிழ்ச்சி ஆரவாரம் பிறக்கிறது... மங்கல இசை முழங்குகிறது—எல்லோரும் செல்கின்-றனர்)

(இராசராசன் ஓடிவருகிருன்)

இரா: ஐயோ! என்னைக் கவனிப்பார் யாருமில்லையா? பாவிகளா ! எல்லோரும் என்னைஅனுதையாக விட்டு விட்டுப் போகிறீர்களா ...!

(தலையில் கைவைத்துக் கொண்டு உட்காருகிருன்)

பின்னணி இசை

(நாடகம் முடிவு பெற்றது)



ஆசிரியர்

**தமிழ்க்குடிமகன்,** எம். ஏ.

முகவை மாவட்டம், சாத்தனூரில் பிறந்தவர். தேவகோட்டை தே பிரித்தோ உயர்நிலைப் பள்ளியில் பயின்று, திருச்சி தூய சூசையப்பர் கல்லூரியில் பி.எசி. (கணக்கு) பட்டமும், சென்னை பச்சையப்பன் கல்லூரி-யில் எம். ஏ. (தமிழ்) பட்டமும் பெற்றவர். கல்வி பெறுங் காலத்திலேயே தனித் தமிழ் இயக்க ஈடுபாடு கொண்டு பட்டம் பெற்ற பின்னர் 'தென்மொழி' இதழில் துணையாசிரியராகவும், தமிழியக்கப் பொதுச் செய-லாளராகவும் இயங்கியவர். 'அறிவு' 'கைகாட்டி' இதழ்களின் ஆசிரியர். ஏற்கனவே மூன்று சமூக நாடகங்களை எழுதி, நடித்து, இயக்கியதால் நாடகத் துறையில் அவர் பெற்றிருந்த தெளிவும் தேக்கி வைத்திருந்த பட்டறிவும் இந்நூல் வடிவாக வெளி வந்துள்ளன. தமிழ் மொழியின் எல்லாத்துறையிலும் ஈடுபாடு கொண்டுள்ள அவரது நூல்கள் தொடர்ந்து வெளிவரவிருக்கின்றன.

**அறிவொளி பதிப்பகம்**
மதுரை-1

அட்டை ❋ கோனார் அச்சகம் ❋ மதுரை.